பத்துப்பாட்டினுள்

பத்தாவதாகிய

# மலைபடுகடாம் மூலமும்

நச்சினார்க்கினியருரையும்.

இவை,

சென்னை

பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப்பண்டிதராகிய

உத்தமதானபுரம்

வே. சாமிநாதையரால்

தாம் நூதனமாக எழுதிய

பலவகையான குறிப்புக்களுடன்

வைஜயந்தியச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றன

விலை ரூபா. 1-4 0

1912

*All rights reserved.*

# நூல்.

---

மலைபடுகடாமென்பது நக்கீரனார்முதலிய கடைச்சங்கப்புலவர்களால் இயற்றப்பட்டு அவர்களால் தொகுக்கப்பெற்ற பத்துப்பாட்டினுள் பத்தாவதாகவுள்ளது.

பத்துப்பாட்டுக்களாவன: திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்பன. இது,

> " முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
> பெருகு வளமதுரைக் காஞ்சி—மருவினிய
> கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
> பாலை கடாத்தொடும் பத்து "

என்னும் பழையவெண்பாவால் விளங்கும். இவற்றை இயற்றிய ஆசிரியர் இன்னாரென்பது முறையே ஒவ்வொருபாட்டின் உரையிறுதியில் நச்சினார்க்கினியரெழுதிய வாக்கியங்களாலும், இப்பாட்டுக்களைத் தொகுத்தோர் சங்கபுலவரென்பது மலைபடுகடாத்தின் ௧௪௫-ஆம் அடியின் விசேடவுரையில் அவர் எழுதிய வினாவிடைகளாகவுள்ள வாக்கியங்களாலும் விளங்கும்.

இப்பாட்டுக்கள் பத்தும், முத்தகம், குளகம், தொகைநிலை, தொடர்நிலையென்னும் நால்வகைச் செய்யுட்களுள், தொகைநிலையின் பாற்படுமென்று கூறுவாருமுளர்.

இவற்றுள்

முதலாவது திருமுருகாற்றுப்படை ௩௱௧௭ - அடிகளையுடையது; முருகக்கடவுண்மீது மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடியது; இதில் முருகக்கடவுளுடைய ஸ்தலங்களுட்சிறந்த திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்), திருவாவினன்குடி (பழனி), திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை யென்னும் ஆறுபடைவீடுகளும், அவற்றில் அவர் எழுந்தருளியிருக்கும் விதமும் முறையே நிரம்பப் பாராட்டிக்கூறப்படும். இது, சைவத் திருமுறைகளில் ௧௧-ஆம் திருமுறைப் பிரபந்தவரிசையிற் சேர்க்கப்

பெற்றுள்ளது. இப்பாட்டு, புலவராற்றுப்படையென்றும் வழங்கப் பெறும்.

இரண்டாவது பொருநராற்றுப்படை உசஅ - அடிகளையுடையது; இளஞ்சேட்சென்னி புதல்வனாகிய சோழன் கரிகாற்பெருவளவனை முடத்தாமக்கண்ணியார் பாடியது; இதில் கரிகாற்பெருவளவன்கொடையும் அவன்வீரமும் அவனாண்ட சோழநாட்டின் வளமும் காவிரி நதியின் சிறப்பும் நன்றாகக் கூறப்படும்.

மூன்றாவது சிறுபாணாற்றுப்படை உ௬௯ - அடிகளையுடையது; ஏறுமாநாட்டு நல்லியக்கோடனென்பவனை இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடியது; இதில் நல்லியக்கோடனது வண்மையும் அவனுடைய நகரங்களாகிய எயிற்பட்டினம் வேலூர் ஆமூர் முதலியவற்றினியல்புகளும், அவற்றிலிருந்த மாந்தர்களது நற்குண நற்செய்கைகளும் தமிழ்நாட்டு மூவேந்தர்களுடைய இராசதானிகளாகிய மதுரை வஞ்சி உறையூரென்னு மூன்று நகரங்களினிலைமைகளும் பேகன் பாரி காரி ஆய் அதிகன் நள்ளி ஓரி யென்னும் வள்ளல்களெழுவரும் இன்ன இன்ன கொடையாற் பெயர்பெற்றார்களென்பதும் கூறப்பட்டுள்ளன. புறநானூற்றில் ௧0௫ - ஆம் செய்யுள் முதலியவற்றிற் கூறப்பெற்றுள்ள பாரியென்பவனும் இங்கே கூறப்பெற்றபாரியும் ஒருவனே.

நான்காவது பெரும்பாணாற்றுப்படை ௫00-அடிகளையுடையது; காஞ்சி நகரத்திருந்த தொண்டைமான் இளந்திரையனைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியது; இதில் அவனது வண்மையும், தொண்டைநாட்டிலேயுள்ள குறிஞ்சி முதலிய ஐந்திணைவளங்களும், அவற்றில்வாழும் மாந்தருடைய தொழில் ஊண் ஒப்புரவு முதலியனவும், காஞ்சி நகரத்தின் சிறப்பும், திருமாலின் நூற்றெட்டுத்திருப்பதிகளுள் ஒன்றாகிய திருவெஃகா வென்பதும் கூறப்பட்டுள்ளன.

ஐந்தாவது முல்லைப்பாட்டு. இது ௧0௩ - அடிகளையுடையது; பகைமேற்சென்ற தலைவன்வருமளவும் தலைவி ஆற்றியிருந்தவிடத்து அவன் வந்ததனைக்கண்டு தோழிமுதலியோராகிய வாயில்கள் தம்முட்கூறியதாகக் காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார் பாடியது; இது தலைவனைப்பிரிந்து தனித்திருக்குந் தலைமகளியல்பையும் கார்காலத்தின் தன்மையையும் படைவீட்டிற் பகைவர் துயரத்தோடிருத்தலையும் தலைவனது சௌரியத்தையும் விளங்கக்கூறும்.

ஆறாவது மதுரைக்காஞ்சி ௭௮௨ - அடிகளையுடையது; தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு வீடுபேறு நிமித்தம் நிலையாமையைச் செவியறிவுறுத்தி மாங்குடிமருதனார் பாடியது; இதில் பாண்டிநாட்டின் ஐந்திணைவளங்களும், மதுரையம்பதியி னழகும், அப்பாண்டியனது வீரமுதலியனவும், சோராசனது நாளோலக்கச் சிறப்பும், அக்காலத்திருந்த பலசிற்றரசர்களுடைய பெருமையும், அருச்சுனனுக்குக் கண்ணன் உபதேசித்த பகவற்கீதையின் மேம்பாடும், இன்னும் பலவும் கூறப்பட்டுள்ளன.

ஏழாவது நெடுநல்வாடை ௧௮௮ - அடிகளையுடையது. பாண்டியன் நெடுஞ்செழியனை நக்கீரனார் பாடியது; இதில் ஐப்பசி கார்த்திகை மாதங்களாகிய கூதிர்க்காலத்தினியல்பும் தனித்திருந்த தலைவியது வருத்தமிகுதியும் படைவீட்டில் தலைவனிருக்கும் வண்ணமும் விளங்கக் கூறப்பட்டுள்ளன.

எட்டாவது குறிஞ்சிப்பாட்டு ௨௬௧ - அடிகளையுடையது; ஆரியவாசன் பிரகத்தனைத் தமிழறிவுறுத்தற்குக் கபிலர் பாடியது; இதில் மலைவளங்களும், இல்லறமுறைமையும், தலைவனும் தலைவியும் தம்முள் வைக்கத்தகுமன்புடைமையும், கற்பின் இன்றியமையாமையும், பல மலர்விசேடங்களும் அழகாகக் கூறப்பட்டுள்ளன; இது பெருங்குறிஞ்சியென்றும் பெயர் பெறும்.

ஒன்பதாவது பட்டினப்பாலை ௩௦௧ - அடிகளையுடையது; சோழன் கரிகாற்பெருவளத்தானைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியது. இதிற் காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பும், சோழநாட்டின் வளமும், காவிரிநதி பயன்படுதலும், அச்சோழனுடைய பராக்கிரமமும், அவனுடைய செங்கோலின் மேன்மையும் நிரம்ப விரித்துக் கூறப்பட்டுள்ளன. இந்நூலைக்கேட்டு அச்சோழன் கடியலூருருத்திரங்கண்ணனார்க்குப் பதினாறுலக்ஷம் பொன் பரிசளித்தானென்று கலிங்கத்துப்பரணியாற் றெரிகின்றது.

மலைபடுகடாத்தின் வரலாற்றிற்கு அங்கமாகத் திருமுருகாற்றுப்படை முதலிய ௯ - பாட்டுக்களின் வரலாறுகள் இதுவரையிற் கூறப்பட்டன.

பத்தாவதாகிய மலைபடுகடாமென்பது *பல்குன்றக் கோட்டத்துச் †செங்கண்மாத்துவேள் நன்னன்சேய் நன்னன்மீது இரணி...

*பல்குன்றக் கோட்டமென்பது நன்னனுடையநாடு.
† செங்கண்மா - அவனுடையநகர்.

முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் பாடிய ஒரு பாட்டு; ௫௮௩ - அடிகளையுடையது; ஆசிரியப்பாக்களுள், இது நேரிசையாசிரியப்பா; [நேரிசைஆசிரியப்பாவாவது ஈற்றயலடி முச்சீரடியாகவும், ஏனையஅடிகள் நாற்சீரடிகளாகவும் வரப்பெறுவது]. இப்பாட்டின் ௫௫௭ - ஆம் அடியின் முதலிலுள்ள, 'அதனால்' என்பது, செய்யுளிலக்கணத்துள் 'கூன்' என்று வழங்கப்படும்.

மலைபடுகடாமென்னும்பெயர்க்காரணம்: இப்பாட்டின் ௩௪௮-ம் அடியில் மலைக்கு யானையை உவமித்து அதனிடத்தே பிறந்த பல வகையான (௨௯௨ - ம் அடி முதலியவற்றைப்பார்க்க) ஓசையைக் கடாம் (மதம்) எனச் சிறப்பித்துப் பாராட்டியிருத்தலால், இப்பாட்டு 'மலைபடுகடாம்' எனப் பெயர்பெற்றதென்பர். இதனை, இப்புத்தகத்தின் ௯௧ - ம் பக்கத்துள்ள உரையாசிரியர் வாக்கியங்களாலறிக. இப்படியே, பதிற்றுப்பத்திலுள்ள பாட்டுக்களெல்லாம் தம்பாலுள்ள தொடர்மொழிகளின் பொருட்சிறப்பால் அத்தொடர்மொழிகளையே தம்பெயர்களாகக்கொண்டு விளங்குதல் இங்கே அறிதற்பாலது.

**உதாரணம்**: பதிற்றுப்பத்தில், 11-வது செய்யுளின்பெயர், புண்ணுமிழ்குருதி; 90-வது செய்யுளின்பெயர் வலிகெழுதடக்கை.

கூத்தராற்றுப்படையென்னும் பெயர்க்காரணம்: ஆற்றுப்படையென்பது, ஒருவர் ஒரு கொடையாளியின்பால் தாம்பெற்ற பெருஞ்செல்வத்தை எதிர்வந்த வறியோர்க்கு அறிவுறுத்தி அவரும் அங்கே சென்று தாம் பெற்றவையெல்லாம் பெறுமாறு வழிப்படுத்தல்; ஆறு-வழி, படை - படுத்தல். ஒவ்வொருவரும் இங்ஙனம் கூறுதற்கு உரியோராயினும், கூத்தர்முதலியோரே எதிர்வந்த கூத்தர் முதலியவர்களுக்குக்கூறி அவர்களை வழிப்படுத்தியதாகச் செய்யுள்செய்தல் மரபு. தொல்காப்பியப் புறத்திணையியலில், ௩௬-ம் சூத்திரத்திலுள்ள, "கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும், ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப், பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச், சென்று பயனெதிரச் சொன்னபக்கமும்" என்பது இதற்குவிதி; 'ஆடன் மாந்தரும் பாடற் பாணரும், கருவிப் பொருநரும் இவருட்பெண்பாலாராகிய விறலியருமென்னும் நாற்பாலாரும் தாம்பெற்ற பெருஞ்செல்வத்தை எதிர்வந்த வறியோர்க்கு அறிவுறுத்தி அவரும் ஆண்டுச் சென்று தாம் பெற்றவையெல்லாம் பெறுமாறு கூறிய கூறுபாடும்' என்பது இதன்பொருள். இங்ஙனம் இயற்றப்பெற்றவைகள்: கூத்தராற்றுப்படை, பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, புலவராற்

றுப்படை, விறலியாற்றுப்படை என ஒவ்வொருவகையிலும் பலபல உள்ளன. பத்துப்பாட்டிலன்றி, புறநானூறு முதலியவற்றிலும் பிற்காலத்து நூல்களாகிய கலம்பகங்களிலும் இவ்வாற்றுப்படைச் செய்யுட்கள் காணப்படுகின்றன. இவை, தனிச்செய்யுளாக ஆக்கப்படும். புறப்பொருள் வெண்பாமாலையில் பாடாண்படலத்தில் வந்துள்ள

[வெண்பா.]

"கொலைவிற் புருவத்துக் கொம்பன்னார் கூத்தின்
றலைவ தவிராது சேறி—சிலைகுலாங்
காரினை வென்ற கவிகையான் கைவளம்
வாரினை கொண்டு வரற்கு".

என்னும் கூத்தராற்றுப்படைச் செய்யுள் முதலியவற்றாலும் இஃது அறியலாகும். கூத்தராற்றுப்படைக்கு இந்நூலையே உதாரணமாக எடுத்துக்காட்டினர் நச்சினார்க்கினியர்; [தொல். பொரு. பக். 212.]

நன்னனென்னும் தலைவன்பாற்சென்று பரிசில்பெற்றுவரும் கூத்தனொருவன் தான்பெற்ற பெருஞ்செல்வத்தை எதிரேவரும் வறியவனாகிய கூத்தனுக்கு அறிவுறுத்தி, "நீயும் அவன்பாற்சென்று பெருஞ்செல்வம் பெற்று வாழ்வாயாக" என்று வழிப்படுத்தியதாக நன்னனுடைய பலவகைப்பெருமைகளும் புலப்படும்படி செய்யப்பெற்றிருத்தலின், இது கூத்தராற்றுப்படையென்று பெயர்பெற்றது. இலக்கணவிளக்கச் செய்யுளியலுரையில் இப்பாட்டுக் கூத்தராற்றுப்படையென்று வழங்கப்பெற்றுள்ளது.

இப்பாட்டினுள், வந்த கூத்தனைநோக்கி, 'கண்ணுளரொக்கற்றலைவ, சுற்றமும் நீயும் நன்னன்பாற் சேறிராயின், நாடுபடர்மின்; விரிந்த விடியல் கழிமின்; மாமறையாக்கழிமின்; ஒருவிரொருவி ரோம்பினிர் கழிமின்; செந்நெறிக்கொண்மின்; குறுகாதுகழிமின்; மென்மெல அகன்மின்; மலைபிற்படக் கழிமின்; கோல்கொண்டு ஊன்றினிர்கழிமின்; கைபிணிவிடாது கழிமின்; மருப்பிகுத்துத் துனைமின்; அஞ்சாது கழிமின்; சேர்ந்தனிர்கழிமின்; வியங்கொண்மின்; ஆடிக் கொண்டனிர் கழிமின்; புள்ளோர்த்துக்கழிமின்; மருதம்பண்ணிக் கழிமின்; ஒருகரைக்கொண்டனிர் கழிமின்; அயிராது புகுமின்' எனவந்த ஒருகூத்தன் கூறியதாக அமைந்திருப்பதும் கூத்தராற்றுப்படையென்னும் பெயர்ப்பொருளை வலியுறுத்தும்.

இதனால், நன்னனென்னும் சிற்றரசனுடைய நாட்டுவளங்களும் நாட்டிலுள்ள குடிகளின் இயல்புகளும் அவனுடைய செங்கண்மா

வென்னும் நகரத்தின்சிறப்பும் அவனுடைய அருமையான குணவிசேடங்களும் நவிரமென்னுமலையிலுள்ள காரியுண்டிக்கடவுளென்று திருநாமம்பெற்ற சிவபெருமானது திருக்கோயிலை அவன் பரிபாலித்ததும் பண்டைக்காலத்து நடையுடைமுதலியனவும் பிறவும் நன்கு வெளியாகும்.

இதில், 'கலப்பையிராய் இருந்த கண்ணுளரொக்கற்றலைவ' எனப் பன்மையும் ஒருமையும் விரவியிருத்தல் வழுவெனின், ஆற்றுப்படைச்செய்யுளில் இங்ஙனம் வருதல் இயல்பென ஆன்றோர் அமைத்திருத்தலால், வழுவன்றென்க; இப்புத்தகத்தின் ௨௫ - ம் பக்கத்தாலும் இது விளங்கும்.

இப்பாட்டினுள், முதலாவது அடிமுதலியவற்றில், நன்னன்பாற் பரிசுபெற்றுக் களிப்புற்றுவரும் கூத்தன், வறுமையால் வாட்டமடைந்து சுற்றத்துடன் கவலையுற்று வழியிலிருந்த கூத்தர் தலைவனை விளித்ததும் ௫௧ - ஆம் அடிமுதலியவற்றில் நீ நன்னன்பாற் செல்வாயாயின், வறுமைநீங்கி வாழ்வையென்று நன்னனுடைய அருமைக் குணங்கள் முதலியவற்றையும் அவனுடைய நகரத்திற்குச்செல்லும் வழியின் இயல்புகளையும் தொகுத்துக்கூறலும் ௯௫-ஆம் அடிமுதலியவற்றில், முன்தொகுத்துக் கூறியவற்றை விரித்துக்கூறலும் அமைந்துள்ளன.

இந்நூலின் இறுதியடி, "குன்றுசூழ் கிடக்கை நாடுகிழ்வோனே" என வந்திருப்பதுபோலத் திருமுருகாற்றுப்படையின் இறுதியடி, "பழமுதிர் சோலை மலைகிழ வோனே" எனவும், பொருநராற்றுப்படையின் இறுதியடி, "காவிரி புரக்கு நாடுகிழ வோனே" எனவும், பெரும்பாணாற்றுப்படையினிறுதியடி, "ஒளிறிலங் கருவிய மலைகிழ வோனே" எனவும், திருத்தணிகையாற்றுப்படையின் இறுதியடி, "நிலைபெறு தணிகை மலைகிழ வோனே" எனவும் வந்திருத்தலை உற்றுநோக்குகையில், ஆற்றுப்படைச்செய்யுள், "கிழவோனே" என முடியவேண்டுமென்று பண்டைக்காலத்தார் எண்ணியிருந்தார்களென்று நினைத்தற்கு இடமுண்டாகின்றது.

# நூலாராய்ச்சி.

இந்நூலில்வந்துள்ள

## (க).—அரும்பதங்கள்.

| | | |
|---|---|---|
| இருத்தல். | ஏத்தம். | புழுகு. |
| இருப்பம். | கவர்தல் (அழைத்தல்). | மருளிபாயாது. |
| இருமினிர். | நிழத்தல். | வருடை (எண்கால்வருடை). |
| உயவை. | நுவறிய. | |

## (உ).—வடமொழிகள்.

| | | | |
|---|---|---|---|
| ஆணி. | கோவலர். | பலம். | வாதி. |
| கலவம். | திசை. | மணி. | |

## (ங).—ஒருபொருட்பன்மொழிகள்.

| | | |
|---|---|---|
| அலகைத்தவிர்த்த எண்ணருந்திறத்த. | எண்ணுமிகப்பல. | பீலியணித்தழை. |
| உயர்ந்தோங்கு. | தெரிந்துணரும். | மீமிசை. |
| | நிவந்தோங்கு. | |

## (ச).—உயிரளபெடைகள்.

| | | | |
|---|---|---|---|
| அசைஇ. | காஅய். | துழைஇ. | மலைபடுகடாஅம். |
| அளைஇ. | குரூஉ. | தூஉய். | மேஎய். |
| ஆஅல். | குழீஇய. | தெருஅ. | வயாஅம். |
| இடூஉம். | கெழீஇ | தேஎத்து. | வழாஅது. |
| இரீஇ. | கைதொழூஉ. | தேஎம். | வழாஅல். |
| இருஅ. | கைபுடையூஉ. | தொலைஇ. | வழீஇ. |
| இருஅல். | கொளீஇ. | படர்ந்தாஅங்கு. | வழூஉம். |
| உணீஇய | சேஎய் | பரூஉ | விடாஅன். |
| உரீஇ. | தரீஇ. | புறந்தரூஉம். | விரைஇ. |
| ஊஉன். | தரூஉம், | பெருஅ | வெரீஇ. |
| ஒரீஇ. | தலைஇய | பொரூஉம் | வெரீஇய. |
| கடாஅம். | தழீஇய | மகாஅர். | வெரூஉம். |
| கவைஇய. | தாஅய். | மராஅ. | |
| கழீஇய. | துதைஇ. | மராஅத்த. | |

இதற்கும் பின்னுள்ளவற்றிற்குமுரிய அடிஎண்களை இப்புத்தகத்தின் பின்னுள்ள அரும்பதஅகராதியால் அறிந்துகொள்க.

### (௫).—ஒற்றைப்பேடைகள்.

கண்ணண்டண்ணென. மரவங்.

### (௬).—இடைச்சொற்கள்.

| | | | |
|---|---|---|---|
| அன்ன. | இன். | கல்லென. | போல. |
| ஆங்கு. | உளி. | ஞெரேரென. | மருள. |
| இகும். | கடுக்கும் | தண்ணென. | மன்ற. |
| இம்மென. | கடுப்ப. | தில்ல. | மார். |

### (௭).—தெய்வவகைகள்.

| | | |
|---|---|---|
| காரியுண்டிக்கடவுள். | தெய்வப்பெண்கள். | யமன். |
| சூரியன். | பேய். | வீரக்கற்கடவுள் |

### (௮)—சாதிகள்.

| | | |
|---|---|---|
| இடையர். | குயவர். | கூத்தர். |
| உழவர் (களமர்). | குறவர் (வேடர்). | யானைப்பாகர். |

### (௯).—விலங்குவகைகள்.

| | | |
|---|---|---|
| ஆட்டுக்கிடாய். | காட்டுப்பசு. | பன்றி. |
| இடபம் (எருது). | காட்டெருமை. | புலி. |
| உடும்பு. | கீரிப்பிள்ளை. | முசுக்கலை |
| எண்கால்வருடை. | குதிரை. | முள்ளம்பன்றி. |
| எருமைக்கடா. | குரங்கு | யானை. |
| கரடி. | செம்மறியாடு. | வேங்கை. |
| கலைமான். | பசு. | |

### (௧௦).—நீர்வாழ்வன.

முதலை. வரால். வாளை.

### (௧௧).—பறவைகள்.

காட்டுக்கோழி. கோழி. பருந்து. பேராந்தை.

### (௧௨).—பண்வகை.

இளி. குறிஞ்சிப்பண். தூக்கத்தைப்போக்கும்பாட்டு. வள்ளைப்பாட்டு

### (௧௩).—வாத்தியங்கள்.

| | | |
|---|---|---|
| உடுக்கை. | கொம்பு. | புல்லாங்குழல். |
| ஒருகண்மாக்கிணை. | சல்லி (சல்லிகை.) | பெருவங்கியம். |
| கரடிகைப்பறை (தட்டை.) | சிறுபறை (ஆகுளி). | பேரியாழ். |
| | சீறியாழ். | முழவு. |
| குறுந்தூம்பு. | தாளம் (பாண்டில்). | |

## (கச).—கூத்து.

குரவைக்கூத்து　　வெறியாட்டு.

## (கரு).—இடவகை.

ஊர்.
கல்லையிடித்துண்டாக்கி னவழி.
கவர்த்தவழி.
காடு.
காவற்காடு.
குறுங்காடு.
சிற்றூர்.
சிறுகாடு.
தோட்டம்.
நல்லவழி.
நியமம் (கடைத்தெரு).
நீர்த்துறை.
நெற்களம்.
பனைநாடு.
புகார் (காவிரி கடலொடு கலக்குமிடம்).
போர்க்களம்.
விளைநிலம். [முதலியன.
வீடு, குடிசை, அரண்மனை
வெறியாடுகளம்

## (கசு).—நீர்நிலை.

அருவி.　கயம்.　சுனை.　மடு.

## (கஎ).—மரம், செடி, கொடி, கிழங்குமுதலியன.

அசோகு.
அவரை.
ஆல்.
இஞ்சி.
ஈரப்பலா.
உயவைக்கொடி.
எள்.
ஐவனநெல்.
கடுமரம்.
கண்பு (கோரை.)
கருப்பூரமரம்.
கரும்பு.
கவலைக்கொடி.
களாச்செடி.
குறிஞ்சிமரம்.
கூவைக்கிழங்கு.
கொறுக்காந்தட்டை.
சந்தனமரம்.
சுரபுன்னை.
சேம்பு.
தினை.
தேமாமரம்.
பலா.
புளி.
பெருமூங்கில்.
மரல்.
மிளகு.
மூங்கில்.
வாழை.
வெண்சிறுகடுகு.

## (கஅ).—பூக்கள்.

கருநெய்தற்பூ.
காட்டுமல்லிகைப்பூ.
குவளைப்பூ.
செங்காந்தட்பூ.
வெண்காந்தட்பூ

## (கக).—மாலைவகை.

கண்ணி.　கோதை.　தார்.

## (உ0).—பாத்திரங்கள்.

கடகப்பெட்டி.　மிடா.　மூங்கிற்குழாய்.

## (உக).—வாகனங்கள்.

குதிரை.　தேர்.　யானை.

## (உஉ).—கருவிகள்.

அம்பு. அரிவாள். கல்யந்திரம். சக்கரம். வில்.
அரம். கத்தி. கவண்கல். தூண்டில். வேல்.

## (உங).—பயிர்த்தொழிலுக்குரியவை.

உழாதுவித்துதல்.
உழுதல்.
ஏர்.
கரும்பாலை [யோட்டல்.
கவண்கல்லால் யானையை
களக்கொட்டை.
களைக்கொட்டு
கிளிகடிதல்.
துடுப்பு.
நெல்லறுத்தல்.
நெற்களம்.
பரண்.
பாத்தி.
வயல்.

## (உச).—கைத்தொழிற்சம்பந்தமானவை.

அரம்.
அருங்கலம்.
ஆட்டுத்தோற்படுக்கை.
ஆடை.
ஆணி.
ஆபரணம்.
கண்ணேணி.
காமரம்.
குயவன்சக்கரம்.
குரம்பை (சிறுகுடில்.)
கொடி (துவசம்.)
தொடி (கையணி.)
நூலிழை.
பரண்.
பன்னியபஞ்சு.
யானைமுகபடாம்.

## (உரு).—பலவகைத்தொழில்கள்.

அவலிடித்தல்.
தினை, நெல் இவற்றைக்குத்துதல்.
நெல்லறுக்கும்பொழுது தண்ணுமைகொட்டல்.
நெல்லறுத்தல்.
பொதிகளைக்காவடியிற்சுமந்துசெல்லல்.
வக்குதல் (வதக்குதல்.)

## (உசா).—உணவுவகைகள்.

அவல்.
எருமைத்தயிர்.
கடமான்தசை.
கரைத்த புளிநீருலையில் அவரைவிதையையும், மூங்கிலரிசியையும், வேறுவேறுவகையான நெல்லரிசியையும் சொரிந்து ஆக்கின புளியங்கூழ்.
கிழங்குகள்.
சோற்றுருண்டை.
தசை.
தினைச்சோறு.
தினைமா.
தேனாலாக்கியகள்.
நெய்யில்வெந்ததசைப்பொரியல்.
நெய்விழுது.
நெய்விழுதுஉள்ளேவைக்கப்பெற்ற தினைச்சோற்றுருண்டை.
நெல்லாலாக்கியகள்.
பலாவிதையின்மாவும், புளியுங்கலந்த மோருலையிற்சமைத்த மூங்கிலரிசிச்சோறு.
பழம்.
மூளையாலாக்கியகள்.
வாளைமீன்தசை.

# மலைபடுகடாத்துள் ஒத்தபகுதிகள்.

| வரி. | மூலம். | வரி. | மூலம். |
|---|---|---|---|
| 1 - 3 | திருமழை தலைஇய ........முழவொடு | 532 | மழையெதிர்படுகண்முழவுகண்ணிருப்ப. |
| 6 | கண்ணிடை விடுக்த களிற்றுயிர்த் தூம்பு | 533 | கழைவளர் தூம்பின்கணணிடமிமிர. |
| 11 - 2 | பலவும் பிறவும், கார்கோட் பலவின் காய்த் துணர் கடுப்ப | 142 - 4 | கார்வாய்த்தெதிரிக் கோடியர்முழவிற்றூங்கி இறைஞ்சின, பலவே |
| 13 | காயகலப்பையிர் | 365 | காஅய்க்கொண்டநும்மியம். |
| 17 | தொடுத்தவாளியர் துணைபுணர்கானவர் | 274 - 5 | இரூஅ வன்சிலையர் மாதேர்பு கொட்குங்குறவர். |
| 36 - 7 | களகனியன்ன.........மருப்பின்.........யாழ் | 534 | கருங்கோட்டுச்சீறியாழ். |
| 47 | கயம்புக்கன்ன... ......தண்ணிழல் | 259,265 | கயங்கண்டன்ன பெருமரக்குழாமும். |
| 50 | கலம்பெறுகண்ணுளரொக்கற்றலைவ | 569 | தலைவன்றுமரைமலைய. |
| 58 | மங்கையர்கணவன் | 424 | கொடியோள்கணவன். |
| 65-6 | எதிர்ந்தபுள்ளினிர் | 448 | புள்ளோர்த்துக்கழிமின். |
| 70 | தொலையாநல்லிசை | 388 | செல்லாநல்லிசை. |
| 72 | புலவோர்க்குச்சுரக்குமவனீகைமாரியும் | 75 - 6 | தூத்துளிபொழிந்த பொய்யாவானின்வீயாதுசுரக்குமவன். |
| | | 580 | மழைசுரந்தன்னவீகைநல்கி. |
| 89 | கொடைக்கடனிறுத்தவவன் | 543 | கொடைக்கடனிறுத்தசெம்மலோய். |
| 100 | அகலிருவிசும்பு | 558 | பரந்திடங்கொடுக்கும்விசும்பு. |

| வரி. | மூலம். | வரி. | மூலம். |
|---|---|---|---|
| 138 - 9 | புண்ணரிந்தரலையுக்கனநெடுந்தாளாசினி | 292 | கலைதொடுபெரும்பழம்புண்கூர்ந்துறலின். |
| 143 | முழவிற்றூங்கியிறைஞ்சினபலவே | 511 | பலவின்முழவுமருள்பெரும்பழம். |
| 145 | தீயினன்னவொண்செங்காந்தள் | 149 | (காந்தள்) நெருப்பினன்னபல்லிதழ்தாஅய். |
| 158 | அசைஇயற்சேர்ந்தல்கி | 256 | அற்சேர்ந்தல்கியசைதலோம்பி. |
| 165 | நம்மில்போலநில்லாதுபுக்கு | 491 | அருங்கடிவாயிலயிராதுபுகுமின். |
| 171 | வேய்ப்பெயல்விளையுட்டேக்கட்டேறல் | 522 | திருந்தமைவிளைந்ததேக்கட்டேறல். |
| 174 | பழஞ்செவைதவெண்காழ் | 337 - 8 | பலவின்சுளைவிளை தீம்பழ முண்டுபெடுமிச்சிற்காழ். |
| 177 | பிணவுநாய்முடுக்கியதடி | 563 | முடுவறந்தபைந்திணத்தடி. |
| 213 | குமிழிசுழலுங்குண்டுகயம் | 474 - 6 | வளைகலத்திகிரியிற்குமிழிசுழலும்ஆறு. |
| 217 | துருவினன்னபுன்றலைமகார் | 253 | புட்கைபோகியபுன்றலைமகார். |
| 238-9 | நெடுவரைநேமியிற்றொடுத்தபிரசம் | 524 - 5 | நெடுவரைநேமியிற்செல்லும் இறால். |
| 240 | ஞெரேரெனநோக்கல் | 579 - 80 | ஞெரேரென நல்கி. |
| 319 | திருந்துவேலண்ணற்குவிருந்திறைசான்மென | 467 | திண்டேர்நன்னற்குமயினிசான்மென. |
| 358 | இறும்பூதுகளுலியவின்குரல்விறலியர் | 536 | கடவதறிந்தவின்குரல்விறலியர். |
| 377 | மழைமருள்பஃறோல் | 530 | வானத்தன்னவளமலியானை. |
| 384 | களிறுமலைந்தன்னகண்கூடுதுறுகல் | 572 | வரைமருள்வேழம். |
| 386 | ஒன்னாத்தெவ்வர் | 397 | ஒட்டாதகன்றவொன்னாத்தெவ்வர். |
| 469 - 70 | நல்யாழ்மருதம்பண்ணி | 534 | மருதம்பண்ணியயாழ். |
| 476 | கட்கின்சேயாற்றின் | 555 | கலுழிக்கட்கின்சேயாற்று. |
| 478 | நிதியந்துஞ்சுநிவந்தோங்குவரைப்பு | 575 | நிலந்தினக்கிடந்தநிதியம். |

# மலைபடுகடாத்திலும் பிறநூல்களிலுமொத்தபகுதிகள்.

| அடியின் எண். | மலைபடுகடாத்தின் மூலம். | பிறநூல்களின்பகுதிகளும், அவைஉள்ளஇடங்களும். |
|---|---|---|
| 1 | திருமழைதலைஇய. | தலைப்பெயறலைஇய—முருகு. 9. |
| | ” | வானந்தண்டளிதலைஇய—பதிற்று. 31. |
| 2-3 | பண்ணமைத்துத திண்வார் விசித்தமுழவ. | பண்ணமை முழவு—பதிற்று. 41. |
| 5 | பீலியணிதழைக்கோடு. | தாழ்பீலிப் பல்லியமும்—பு - வே. காந்தை. 3. |
| 6 | கண்ணிடைவிடுத்த களிற்றுயிர்த்தூம்பு. | கண்விடுதூம்பிற் களிற்றுயிர் தொடுமின்—புறநா. 152. |
| | ” | கண்ணறுத்தியற்றிய தூம்பு—பதிற்று. 41. |
| 9 | அரிக்குரற்றட்டை. | தேரை, தட்டைப்பறையிற் கறங்கும்—குறு. 193. |
| 3-13 | முழவொடாகுளி ...... .. .. சுருக்கிக்காயகலப் பையிர். | ஒருதலைப்பதலை தூங்கவொருதலைத் தூம்பகச் சிறுமுழாத்தூங்கத் தூக்கி, சுவலழுந்தப்பலகாயஇளைஞர்—புறநா. 103, 139. |
| | ” | முழவும் பதலையும் பிறவுங், கண்ணறுத் தியற்றிய தூம்பொடு சுருக்கிக், காவிற்றகைத்த துறைகூடு கலப்பையர். பதிற்று. 41. |
| 16 | எடுத்துநிறுத்தன்ன இட்டருஞ்சிறுநெறி. | விசும்பினுக் கேணி நெறியன்ன சின்னெறி—திருச்சிற். 149. |
| 21 | தொடித்திரிவன்ன தொண்டுபடு திவவின். | குறுந்தொடி யேய்க்கு மெலிந்து வீங்குதிவவின்—பெரும்பா. 13. |
| 22 | கடிப்பகையனைத்தும். | திணையரிசி யவைய லன்ன, வேய்வை போகிய விரலுளர் நரம்பின்—பொருந. 16 - 17. |
| ” | கேள்விபோகா. | கேள்வி போகிய—பொருந. 18. |
| 23 | சுகிர்புரிநரம்பின். | சுகிர்புரி நரம்பும்—சீவக. 728. |

| அடியின் எண். | மலைபடுகடாத்தின் மூலம். | பிறநூல்களின்பகுதிகளும், அவைஉள்ளஇடங்களும். |
|---|---|---|
| 24-5 | வரகின் குரல்வார்ந்தன்ன துளை. | கமுகின்பாளையம்பசும்பூக்கருவிருந்தன்ன துளை—பெரும்பா. 7-8. |
| 27 | துளைசெறிய ஆணிமுடுக்கி. | துளைவாய்தூர்ந்த துரப்பமையாணி—பொருந. 10. |
| 29 | பொன்போற் பச்சை. | விளக்கழலுருவின் விசியுறுபச்சை—பொருந. 5. |
| 30 | வதுவை நாறும் வண்டுகமழைம்பால். | விழவொலி கூந்தல்—ஐங்குறு. 306. |
| | ,, | மணநகமழ்மாதரை மண்ணியன்ன—பொருந. 19. |
| 31-2 | மடந்தை மாண்டநுடங்கெழிலாகத் தடங்கு மயிரொழுகிய வவ்வாய்கடுப்ப. | செய்யோளவ்வயிற்றுஐதுமயிரொழுகியதோற்றம்போல — பொருந. 6 - 7. |
| 36-7 | களங்கனியன்ன மருப்பின்யாழ். | களங்கனி யன்ன கருங்கோட்டுச் சீறியாழ்—புறநா. 127, 145. |
| 37 | வணர்ந்தேந்து மருப்பு. | பாம்பணந் தன்ன வோங்கிரு மருப்பு—பொருந. 13 |
| 41-6 | உயர்ந்தோங்கு பெருமலையூறின்றேறலின்மெலிந்த கல்பொருசீறடி விறலியர் நிற்புறஞ் சுற்ற. | கோடியர் நெடுவரை, யருவிடர்ச் சிறுநெறி யேறலின் வருந்தித், தடவரல் கொண்ட தகைமெல் லொதுக்கின், வளைக்கை விறலி யென் பின்ன ளாக—புறநா. 135. |
| 42-3 | மதந்தபுஞ்மலி நாவினன்ன, துளங்கியன்மெலிந்தகல்பொருசீறடி. | உயங்குநாய் நாவி னல்லெழிலசைஇ, வயங்கிழை யுலறியஅடி—சிறுபா. 17 - 8. |
| | ,, | வருந்துநாய் நாவிற் பெருந்தகு சீறடி—பொருந. 42. |
| | ,, | நாய் நாச்சீறடி—சீவக. 2694. |
| | ,, | வருந்து நாய்நாவிற் சீறடி—கூர்ம - இராமன்வனம். 15. |
| 44 | கணங்கொடோகையிற் கதுப்பிகுத்து. | கதுப்பென மணிவயிற் கலாபம் பரப்பி—சிறுபா. 14 - 5. |
| | ,, | புகை, மாடமாலை மேனலார் மணிக்குழலின் மூழ்கலிற், கோடுயர்ந்த குன்றின்மேற் குழீஇய மஞ்ஞை தஞ்சிற, காடு மஞ்சினுள் விரித்திருந்த வண்ண மன்னரே—சீவக. 71. |
| | ,, | மயிற்குழா, மோடிவளைக்கின்ற தொப்பவே—நீடியநற், பைங்கூந் தல் வல்லியர்கள் பற்றி—நளவெண்பா, சுயம். 25. |
| ,, | கதுப்பிகுத்தசைஇ. | கதுப்பிகுத்தசைஇ—பட். 259. |

| | | |
|---|---|---|
| 45-6 | விலங்கு மலைத்தமர்ந்த சேயரிநாட்டத்து...... விறலியர். | மடமாஞேக்கின் வாணுதல் விறலியர்—சிறுபா. 31. |
| 47 | கயம்புக்கன்ன.........தண்ணிழல். | பொய்கையும் போன்றதே ஈசனெந்தை யிணையடி நீழலே—தேவாரம். |
| | ,, | காவகம், ...... .. நிழல்தேறித் தெண்கயம் புக்கதுபோன்றது—சீவக. 872. |
| | ,, | வெவ்வாறு மெனக்குளிர்ந்து வெயிலியங்கா வகையியங்கும் விரிபூஞ் சோலை—கம்ப. நாடவிட்ட. 22. |
| 48 | புனல்கால்கழீஇய மணல்வார்புறவு. | புனல்கால் கழீஇய பொழில்—பெரும்பா. 380. |
| 52-3 | மீமிசைநல்யாறு கடற்படர்ந்தாங்கு யாமவணின்றும் வருதும் | மலையி னிழிந்து மாக்கட ஞேக்கி, நிலவரை யிழிதரும் பல்யாறு போலப், புலவரெல்லா நின்ஞேக்கினரே—புறநா. 42. |
| | ,, | கல்வீழருவி கடற்படர்ந் தாங்கு—பெரும்பா. 427. |
| | ,, | கடுவரை நீரிற் கடுத்துவர—பு - வெ. வெடசி. 11. |
| | ,, | பெய்பு மாரியாற் பெருகு வெள்ளம்போய், மொய்கொள் வேலைவாய் மடுகு மாறுபோல்—கம்ப. கையடை. 15. |
| 53 | யாமவணின் றும் வருதும்நீயிரும். | யாமவ ணின்றும் வருதுநீ யிருமிவண்—சிறுபா. 143 - 4. |
| | ,, | யாமவ ணின்றும் வருதுநீயிரும் இருநிலம்—பெரும்பா. 28 - 9. |
| 54-5 | கனிபொழி கானங்கிளையொடுணீஇய, துனைபறைநிவக்கும் புள்ளினமான. | பழுமர முள்ளிய பறவையிற் புக்கு—பொருந. 64 - 7. |
| | | பழுமரந் தேரும் பறவைபோலக், கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து திரிதரும் ..பாண—பெரும்பா. 20 - 22. |
| | ,, | வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி—புறநா. 47. |
| 57 | வாங்கமைத்திரடோள். | வாங்கமை மென்ருேள்—பதிற்று. 12. |
| 58 | மங்கையர் கணவன். | தொடுங்குழை கணவ, திருந்திழை கணவ, வாணுதல் கணவ, நன்னுதல் கணவ, ஆன்ருேள் கணவ, நல்லோள் கணவன், சேயிழை கணவ, புரையோள் கணவ, சேயிழை கணவ, ஒண்டொடி கணவ—பதிற்று. 14, 24, 38, 42, 55, 61, 65, 70,88,90. |
| | | செயிர்தீர் கற்பிற் சேயிழை கணவ—புறநா. 3. |
| 59-60 | முழைபாழ்படுக்குந் துன்னருந்துப்பி னிசை. | முனைபாழ் படுக்குந் துன்னருந்துப்பிற் பகை—குறிஞ்சி. 128 - 9. |
| | ,, | |

| அடியின் எண். | மலைபடுகடாத்தின் மூலம். | பிறநூல்களின்பகுதிகளும், அவைஉள்ளஇடங்களும். |
|---|---|---|
| 60 | இசை நுவல்வித்தின் நசையேருழவர். | வித்தியபனுவல்—புறநா. 237. |
| 61 | புதுநிறைவந்த புனலஞ்சாயல். | நீரினு மினியசாயற் பாரி—புறநா. 105. |
| | ,, | வானிநீரினுந் தீந்தண்சாயலன்—பதிற்று. 86. |
| | ,, | வேனிற் புனலன்ன நுந்தை—கலி. |
| 65-6 | பொழுதெதிர்ந்த புள்ளினிர் மன்றவெற்றுக் குறுதவின். | நாளன்று போகிப் புள்ளிடைதட்ப—புறநா. 124. |
| | | ஒருநெறி யெதிர்ப்பா டுற்றது முன்னைப் பெருந்தவப் பயனது போலும்—தணிகையாற்றுப்படை. 169 - 70. |
| 68 | வீற்றுவளஞ் சுரக்குமவனுடு. | நாடென்ப நாடாவளத்தன—திருக். 739. |
| ,, | வளஞ்சுரக்குநாடு. | நிலஞ்சுரக்கு நிறைவளம்—கம்ப. நாட்டு. 38. |
| 70 | தொலையா நல்லிசை. | கெடா நல்லிசைநிலைஇ, நல்லிசை நிலைஇய நனந்தலை யுலகத்து—பதிற்று. 14, 86. |
| ,, | ,, | ஒருவனதிரண்டு யாக்கை யூன்பயி னரம்பின் யாத்த, வுருவமும் புகழு மென்றாங் கவற்றினூழ் காத்துவந்து, மருவிய வுருவ மிங்கே மறைந்துபோ மற்றயாக்கை, திருவமர்ந் துலகமேத்தச் சிறந்துபின் னிற்கு மன்றே; பொன்று மவ்வுடலின் பொருட், டென்று நிற்கு மிரும்புக, ழின்று நீர்கழிந் தீர்களாற், குன் றின் மேற்குடைவேந்திர்காள்—சூளா. 776, 1356. |
| 71-2 | பலர்புறங்கண்டவ ரருங்கலந் தரீஇப், புலவோர்க்குச் சுரக்குமவனீகை மாரியும். | ஒன்னாத் தெவ்வ ருலைவிடத் தொழிந்த, விசும்புசெ லிவுளியொடு பசும்படை தரீஇ—பெரும்பா. 491 - 2. |
| | ,, | யவனர்ப்பிணித்து நன்கலம் வயிரமொடு கொண்டு பிறர்க்குதவி; அமர்கடந்துபெற்ற அரியவென்ஞதோம்பாதுவீசிக், கலஞ்செலச்சுரத்தல்; வென்று கலந்தரீஇயர்—பதிற்று. 20, 44, 53. |
| | ,, | அவ்வெயிற்கொண்ட செய்வுறு நன்கலம், பரிசின் மாக்கட்கு வரிசையினல்கி—புறநா. 6. |

| | | |
|---|---|---|
| | ,, | குறிசி லடையரைக் கொண்டகூட் டெல்லாம் பரிசின் முகந்தன பாண்—பு-வெ. வஞ்சி. 16. |
| 73 | இகழுநர்ப்பிணிக்கு மாற்றலும்புகழுநர்க்கு அரசுமுழுதுகொடுப்பினு மமராநோக்கம். | செற்ற தெவ்வர் கலங்கத் தலைச்சென் றஞ்சுவரத்தட்கு மணங் குடைத் துப்பு—மதுரை. 139 - 40. |
| | ,, | நட்டவர் குடியுயர்க்குவை—மதுரை. 131. |
| 75-6 | தூத்துளிபொழிந்த பொய்யாவானின்வீயாது சுரக்குமவ னுண்மகிழிருக்கையும். | ஆர்கலி வானந் தளிசொரிந்தாஅங்கு உறுவரார நன்கலஞ் சிதறி—பதிற்று. 43. |
| 84-5 | பாயிரு ணீங்கப் பகல்செய்யா வெழுதரும் ஞாயிறன்னவவன் வசையில்சிறப்பும். | பாயிரு ணீங்கப் பல்கதிர் பரப்பி ஞாயிறு குணமுதற் றோன்றி யாங்கு; மாயிரு விசும்பிற்பன்மீனொளிகெட ஞாயிறு தோன்றி யாங்கு மாற்றார் உறுமுரண் சிதைத்தநின் னோன்றாள் வாழ்த்தி—பதிற்று. 59, 64. |
| 89 | கொடைக்கடனிறுத்தவவன். | கொடைக்கட னிறுத்த கூம்பா வுள்ளத்து—பெரும்பா. 446. |
| 90 | கொடுந்தாண் முதலை. | கொடுந்தாண் முதலையு மிடங்கரும்—குறிஞ்சி. 257. |
| 91 | கல்லகழ்கிடங்கு. | கல்லிடித் தியற்றிய விட்டுவாய்க் கிடங்கு—மதுரை. 730. |
| | ,, | பாருடைத்த குண்டகழி—புறநா. 14. |
| | ,, | சுற்றுமுற்றுபா ரெலாம்போழ்ந்த மாகிடங்கு—கம்ப. நகர. 17. |
| 92 | வரைபுரைநிவப்பின் வான்றோயிஞ்சி. | கோடுறழ்ந் தெடுத்த கொடுங்க ணிஞ்சி—பதிற்று. 16 |
| 97-8 | வானமின் னுவசிவுபொழியவாது, திட்டவெல்லாம் பெட்டாங்குவிளைய. | மழை தொழிலுதவ மாதிரங் கொழுக்கத், தொடுப்பின் ஆயிரம் வித்தியது விளைய—மதுரை. 10 - 11. |
| 100 | அகலிருவிசும்பினுஅல். | அகலிரு விசும்பிற் பாயிருள்—பெரும்பா. 1 |
| 102 | நீலத்தன்னவிதைப்புனம். | நீலத்தன்ன பைம்பயிர்—மதுரை. 279. |
| 107-8 | கயமுனி முயங்குகைகடுப்பக் கொய்பதமுற்றன வெனல். | யானை, இறங்கு கைகடுப்ப, வாங்கிய பெருங்குரற் சிறுதினை—குறிஞ்சி. 35 - 8. |
| | ,, | உறங்குபிடித் தடக்கை யொருங்கு நிரைத்தவைபோல், இறங்கு குரலிறடி—பெருங்கதை, குறிஞ்சி நிலங்கடந்தது. |
| 111 | மேதியன்னகல். | எருமை யன்ன கருங்கல்—புறநா. 5. |
| 118-9 | குறையறைவாரநிவப்பிற் கரும்பு-(அறை-பாத்தி.) | கரும்புநடு பாத்தியிற் கலித்த—ஐங்குறு. 65. |
| | | கரும்புநடு பாத்தியன்ன—குறு. 262 |

| அடியின் எண். | மலைபடுகடாத்தின் மூலம். | பிறநூல்களின் பதிகளும், அவைஉள்ளஇடங்களும். |
| --- | --- | --- |
| 118-9 | ,, | கரும்பின் பாத்திப்பூத்த—பதிற்று. 13. |
| ,, | அறையுற்று அலமருங்கரும்ப. | அறைக்கரும்பு - பொருந. 193. |
| | ,, | அறையுறுகரும்பின்—பதிற்று. 75. |
| 121 | தோரையவற்பதங்கொண்டன. | அவலவெலன்கின்ற நெல்—தொல். எச். 26 - ம் சூ உரை. |
| 122 | தொய்யாதுவித்திய. | உழாதுவித்துநவும்—பதிற்று. 13. |
| 124 | மையெனவிரிந்தன நீணறுநெய்தல். | மணிமருணெய்சல்—மதுரை. 282. |
| 125-6 | செய்யாப்பாவை வளர்ந்து கவின்முற்றிக் காயங்கொண்டனவிஞ்சி. | பாவையிஞ்சி—பெருங்கதை. [116. |
| 134 | காலமன்றியுமரம்பயன் கொடுத்தலின். | காலமன்றியு மரம் பயம் பகரும், யாணரரு அவியன்மலை—புறநா. |
| | ,, | தீங்கனி காலமன்றிக் கனிவது காண்டிரால்—கம்ப. நாடவிட்ட. 18 |
| 137 | கூவைதுறெருடுகுழீஇயின. | கூவைநீறுங் கொழுங்கொடிக் கவலையும்—சிலப். காட்சி. 42. |
| | ,, | பாவை யிஞ்சியுங் கூவைச் சுண்ணமும்—பெருங்கதை. |
| 140-41 | ஆகுளிகடுப்பக் குடிஞையிரட்டுமலை. | துடிக்குடிஞை—பொருந. 210. |
| | ,, | துடி குடிஞையோ டிரட்டுமலை—புறநா. 170. |
| 145 | தீயினன்னவொண்செங்காந்தள். | கார்த்திகை நாட்டவர்ட்ட விளக்கிற்பூத்தனதோன்றி—கார். 26. |
| | ,, | தோன்றி வில்விளக்கே பூக்கும்—நளவெ. கலிதொடர். 28. |
| 149-50 | பல்லிதழ்தாஅய் வெறிக்களங் கடுக்கும்வியலறை. | நீலத்தன்ன பைம்பயிர் மிசைதொறும்......மலர வெறிக்களங்கடுப்ப—மதுரை. 279 - 84. |
| | ,, | பூம்போது சிதைய வீழ்ந்தெனக் கூத்த ராடுகளங்கடுக்கும்—புறநா. 28. |
| 152 | ஊனுர்வட்டியர். | வேட்டுவன் மான்றசை சொரிந்த வட்டியும்—புறநா. 33. |
| 159 | கன்றெரியொள்ளிணர்ச்செயலை. | எரியவி ருருவினங் குழைச் செயலை; செந்தீயொண்பூம் பிண்டி—குறிஞ்சி. 105; 118 - 9. |

| | | |
|---|---|---|
| 164 | மானவிறல்வேள்வயிரியம். | மானவிறல்வேளழும்பில்—மதுரை. 344 - 5. |
| 164-9 | மானவிறல்வேள்வயிரியமெனினே......பெறுகுவிர். | செவ்வரைநாடன் சென்னியமெனினே பதமிகப்பெறுகுவிர்—பெரும்பா. 103 - 5. |
| 165 | நும்மில்போலநில்லாதுபுக்கு. | உடையோர்போல இடையின்று குறுகி—புறநா. 54. |
| 171 | வேய்ப்பெயல் விளையுட்டேக்கட்டேறல். | நீடமை விளைந்த தேக்கட்டேறல்—திருமுரு. 195. |
| | ,, | தூம்பகம் பழுனிய தீம்பிழி—பதிற்று. 81. |
| | ,, | வாங்கமைப் பழுனிய தேறல்—புறநா. 129. |
| ,, | தேக்கட்டேறல். | தேம்பிழிதேறல்—குறிஞ்சி. 155. |
| 173 | பழஞ்செருக்குற்றநும். | பழஞ்செருக்காளர்—மதுரை. 669. |
| 174 | அருவிதந்தபழஞ்சிதைவெண்காழ். | ஆசினி முதுசுளை கலாவ விழிதருமருவி—திருமுரு. 301 - 16. |
| 176 | முளவுமாத்தொலைச்சிய பைந்நிணப்பிளவை. | முளவுமாத் தொலைச்சிய ஆடவர்—புறநா. 325. |
| | ,, | முளவுமாவல்சி—ஐங்குறு. 364 |
| 179-83 | இன்புளிகலந்து குறமகளாக்கியவல்சி. | எயிற்றியாட்டவின்புளி வெஞ்சோறு—சிறுபா. 175. |
| 181 | வழையமல்சாரல். | நாகநெடுவழி—சிறுபா. 88. |
| | ,, | வழையமல்வியன்காடு—பதிற்று. 41. |
| 185 | மகமுறைதடுப்பப்பெறுகுவிர். | மகடூஉ மகமுறை தடுப்பப் பெறுகுவிர்—சிறுபா. 192 - 5. |
| 189 | குவளைக்கடிவீ. | சுரும்புமூசாச சுடர்ப்பூங்காந்தள்—திருமுரு. 43. |
| 193 | விளைபுனநிழத்தலின். | இரும்புனநிழத்தலின்—குறிஞ்சி. 157. |
| 194 | புழைதொறுமாட்டிய விருங்கலரும்பொறி. | பொறியறிந்து மாட்டிய பெருங்கலடார்—புறநா. 19. [29. |
| | ,, | தொல்புலிப்படுக்கும் பெருங்கனீடார்—கூர்ம. சப்புத்தீவின். |
| 205-7 | மலைதுவன்றிய யானைப்பகனிலைதளர்க்குங் கவணுமிழ்கடுங்கலீர்ங்கழைதத்தி. | கைம்மாவுளம்புனர் புலங்கடிகவணையிற் பூஞ்சினையுதிர்க்கும்மலை; யானையியக்கங்கேட்ட கானவன் பணவையேறிக் கவணையிற் கல் கைவிடுதல்—கலி. 23, 41. |
| 219 | அழுக்குப்பட்டலமரும். | அழுக்குபட்டிருந்த—மதுரை. 342. |
| 226 | வில்லுமிழ்கடுங்கணை. | விற்பழுத்துமிழ்ந்த பகழி—சீவக. 435. |
| 227 | தாரொடுபொலிந்த வினைநவில்யானை. | ஓடையொடு பொலிந்த வினைநவில்யானை—நெடுநல். 169. |
| 236-7 | கோடியர் மகாரன்ன கடுவன். | மகாரன்னமந்தி—சிறுபா. 56. |
| | ,, | குரங்கன்ன கூளியர்—புறநா. 136. |

| அடியின் எண். | மலைபடுகடாத்தின் மூலம். | பிறநூல்களின்பகுதிகளும், அவைஉள்ளஇடங்களும். |
| --- | --- | --- |
| 238-9 | நெடுவரை நேமியிற்றொடுத்தபிரசம். | நெடுவரைப் பரிதியிற் றொடுத்தஇறால்—திருமுரு. 299-300. |
| 239 | சூர்புகலடுக்கம். | வருடையும் பாயாச் சூருடை யடுக்கம்—நற் 359 |
| 243 | கழுதிற்சேணோன். | சேணோனிழைத்த இதணம்—குறிஞ்சி 40 - 41 |
| 244 | இழுதினன்னவானிணம். | பருத்திப் பெண்டின்பனுவலன்ன நிணம்—புறநா.. 125 |
| 247 | இருடெணிந்தன்னவேனம் | விரியிருளிரண்டுகூறாய--கம்ப நாட்டு. 17. |
| 250 | மணிமருடெண்ணீர் | மணிநீர்வைப்பு—சிறுபா. 152. |
| | ,, | மணிநீர்கிடந்து—மதுரை. 351. |
| 253 | புன்றலைமகார். | முனித்தலைச்சிறார்—சீவக. 2541. |
| 260-61 | களிறுமதனழிக்குமாசுணம் | யானைவிளிபடத் துழவும் அகல்வாய்ப்பாந்தள—அகநா. 68. |
| | ,, | களிறுபாந்தட் பட்டென—குறு 14 |
| | ,, | பரியகளிற்றை யரவுவிழுங்கிமழுங்க—தேவாரம், திருக்கயிலாயம், திருஞான 2. |
| | ,, | குஞ்சரமேகாளிழைக்கும் பாம்பு—திருச்சிற் 21. |
| | ,, | அராவாயின்வாய்ககரிபுகும்—கம்ப தாடகை 11. |
| 262 | சேட்கமழுமபூ | சேணுறு பிடவம்—முல்லை. 25, |
| 268 | கோளியாலத்து | கோளியாலத்துக் கொழுநிழல்—புறநா. 58. |
| 270 | நாடுகாணனந்தலை | நாடுகா ணெடுவரை—பதிற்று 85 |
| 274 | இருவன்சிலையர். | சிலைமான விருப் பிறழும்—பெரும்பா. 269 - 70 |
| | ,, | பூட்டுசிலையிறவு—சீவக. 1788. |
| 275 | குறவருமருளுங்குன்று. | புளிஞருமருளும் போக்கருஞ்சுரம்—தணிகையாற்று. 167. |
| | ,, | குறவரும்மருள குன்றமொன்று—தசேலோ. தசேலர்மேல். 39. |
| 278 | பாடின்னருவிப்பயங கெழுமிமிசை. | பாடினருவிப் பயங்கெழுமாமலை—சீவக 2112. |
| 288-9 | குறியவுநெடியவுமடுக்கம். | குறியவ நெடியவுங் குன்று—சிலப். நீர்ப்படை. 153; மணி சக்கர. 58. |

| | | |
|---|---|---|
| 290 | வரிநிழலசையினிர். | வலைவலந்தன்ன மென்னிழல்—பொருந. 51. |
| „ | | வரிநிழலசைஇ—சிறுபா. 12. |
| 292 | பழம்புண்கூர்ந்தூறலின். | பலாம்பழுத்த பசும்புண்ணரியல்—பதிற்று. 61. |
| 294 | அருவி நுகரும்வானரமகளிர். | அமரர்நாடியர் துன்னியாடிடங்களும்—கம்ப. பிலநீங்கு. 8. |
| 295-6 | குடைதொறும்தெரியிமிழ்கொண்டநும்மியம் போலின்னிசை. | கயங்குடைந் தன்ன வியந்தொடு—மதுரை. 363. தண்ணுமை முழவமொந்தை தருணிச்சம் பிறவுமோசை யாக்கி ஆடி—சீவக. 965. |
| 301 | எய்தெறவிழுக்கியகானவர். | மொய்த்த முட்டன துடற்றலை துளைப்பமுடுகிக் கைத்தலத்தி னிமிரக்கடிது கன்றிவிசிறும் மெய்த்த மெய்ப்பெரிய வேழ லென—கம்ப. விராதன் 33 |
| „ | | மெய்புருவிய வையுறமுனைமுள்ளை எய்யுதறிதன—சீகாளத்தி. கண்ணப்ப. 86. |
| 303-4 | விழுப்புண்தணிமார் காப்பெனக்கொடிச்சியர் பாடல். | காஞ்சி பாடிக் காக்கம் வம்மோ நெடுந்தகை புண்ணே—புறநா. 281. |
| 305 | தலைநாட்பூத்தவேங்கை. | தலைநாட்செருந்தி தமனியமருட்ட—சிறுபா. 147. |
| 305-6 | வேங்கை மலைமாரிடேஉமேமப்பூசல். | வேங்கை நறம்பூக் கொய்யுங் கானவர் பூசல்—மதுரை. 296 - 7. |
| „ | | வேங்கை கொய்குவஞ் சென்றழிப் புலிபுலியென்னும் பூசறோன்ற—அகநா. 48. |
| 311-2 | கருவிரன்மந்திதன் கல்லாப்பார்ப்பிற்கு. | கடியிளகு தின்ற கல்லாமந்தி; கருவிரன்மந்திக் கல்லாவன்பறழ்—ஐங்குறு 272. |
| „ | | மந்திக்காதலன் முறிமேய்கடுவன்—ஐங்குறு. 276. |
| 313 | முறிமேயாக்கைக்கிளையொடு. | மந்தியுமறியா மரம்பயிலடுக்கம்—திருமுரு 42. |
| 315 | கலைசையற்றநெடுவரை. | குரங்கறிவாரா மரம்பயிலிறும்பின்—அகநா. 368. |
| „ | | |
| 315-6 | நெடுவரைநிலைபெய்திட்டமால்பு | மால்புடை நெடுவரைக்கோடு—புறநா. 105. |
| 320-22 | குறவர்தம் பெண்டிரொடயருங்குரவை. | மாயவன்றன் முன்னிஞெடும் வரிவளைக்கைப் பிஞ்ஞையொடும் ஆடுங்குரவை—சிலப். ஆய்ச்சியர்குரவை. |
| „ | | மாமணிவண்ணனுந் தம்முனும் பிஞ்ஞையு மாடிய குரவை—மணி. 19 - காதை, 65 - 6. |

| அடியின் எண். | மலைபடுகடாத்தின் மூலம். | பிறநூல்களின்பகுதிகளும், அவைஉள்ளஇடங்களும். |
|---|---|---|
| 325-7 | (யானையை) வெளிற்பிணிமார் விரவுமொழி பயிற்றும்பாகரோதை. | வடமொழிபயிற்றி இளைஞர் அவணக்கைப்ப—முல்லை. 35 - 6. சீவக. 1834. |
| 328-9 | தட்டைபுடையுநர் புனந்தொறுங் கிளிகடிமகளிர். | தழலுந் தட்டையுங் குளிரும் பிறவுங் கிளிகடிமரபினவாங்கி—குறிஞ்சி 43 - 4. |
| | ,, | அகன்புனங்காவற் பறையெடுத்து—கம்ப சித்திரகூட. 22. நைடதம், நாட்டுப்படலம், கஉ-ம் பாடல் பார்க்க. |
| 333 | கோவலர்குறவரோ டொருங்கியைந்தார்ப்ப | |
| 340 | மழைகண்டன்னவாலை. | சுற்று பாகடு புகையவைகூழ் கருமுகிற்குல மொப்பன—சீகாளத்தி. நக்கீர. 14 |
| 342 | தினைகுறமகளிரிசைபடுவள்ளை. | வெதிர்நெற் குறவாம் நாம் வள்ளையகவுவம்மா—கலி. 42. |
| 344 | குன்றகச்சிலம்பு. | சிலம்பெதிர் கூஉய்—திருச்சிற். 62. |
| 350 | முழவுத்துயிலறியாவியலுள். | முழவங் கண்டுயிலாத முதுநகர்—சீவக. 856. |
| 359 | அகிக்கத்துக்குறிஞ்சிபாடி. | நறும்புகையெடுத்துக் குறிஞ்சிபாடி—திருமுருகு 239. |
| 361-2 | பனுவலிற்பொங்கிக் கைதோய்வன்ன மழைத்தொழுதி. | பனுவல்போலக் கணங்கொளமழை தவழுங்கோடு—நற். 353. பொங்கலாடி விண்டுச் சேர்ந்த வெண்மழை—பதிற்று. 55 |
| | ,, | பொங்கல வெண்மழை—நெடுநல் 19. [16, 17. |
| 377 | மழைமருள்பஃறோல் | மழையுருவினதோல்; மழையெனமருளும் பஃறோல் — புறநா. |
| | ,, | மழையெனமருளுமாயிரும் பஃறோல்—பதிற்று. 62. |
| 384 | களிறுமலைந்தன்னகண்கூடுதுறுகல். | வேழம் துறுகற் பிடிசெத்துததழூஉம்—ஐங்குறு. 239. |
| | ,, | மலையே மலையோடுமலைந்தனபோற் கொலைவேழமொடேற்றன குஞ்சரமே—சூளா. அரசியல். 104. |
| | ,, | யானைமலையென மலைவு—கம்ப. மிதிலை. 3. |
| 386 | ஒன்னுத்தெவ்வருலைவிடத்தார்த்தென. | ஒன்னுத்தெவ்வ ருலைவிடத்தார்த்து—பெரும்பா. 419. |
| 388-9 | செல்லாநல்லிசைப்பெயரொடு நட்டகல். | ஆடவர், பெயரும்பீடு மெழுதியகர் தொறும், பீலிசூட்டியபிறங்குநிலை நடுகல்—அகநா. 131. |

| | | |
|---|---|---|
| | ” | கெடுவி னல்லிசை சூடி நடுகலாயினன் புரவலன் - புறநா. 221. |
| 398 | சுட்டி னும்பணிக்குஞ்சுரம். | நிலையு நெஞ்சமுஞ் சுடுவதோர் சுரம்—கம்ப. வனம்புகு. 38. |
| 399 | தேர்வீசுகவிகை. | தேர்வீசிருக்கை—புறநா. 114. |
| 400 | ஓம்பாவள்ளல். | வரையாவீகை—புறநா. 17. |
| 403 | அசைவுழியசைஇயஞ்சாதுசுழிமின். | அசைவுழியசைஇச்சென்மோ—பெரும்பா. 44-5. |
| 410 | வளையோர் (இடைச்சியர்). | வெள்ளி வள்ளியின் விளங்குதோணலார்—சீவக. 420. |
| 423 | படியோர்த்தேய்த்த பணிவிலாண்மை. | படியோர்த்தேய்த்த வாண்மை—பதிற்று. 79. |
| 429 | உம்பலகைத்தயா. | யானை யொடித்துண் டெஞ்சியயா; வேழம் மென்சினையாஅம் பிளக்கும்; களிறு யாஅந் தொலையக்குத்தி—குறு. 232, 237, 307. |
| 430-31 | கண்ணிதிரங்கு மாஞரிற்பொலியச்சூடி. | மால் வருந்து தொடுத்த செம்பூக்கண்ணி—புறநா. 264. |
| 450-53 | யாழ்பண்ணுப் பெயர்த்தன்னநன்பல. | பண்ணுப் பெயர்த்தாங்கு—பதிற்று. 65. |
| 459 | பகன்றைக்கண்ணி. | பகன்றைப் பாங்குடைத்தெரியல்—பதிற்று. 76. |
| 461 | விலங்கலன்னபோர். | தெரிந்திடுபோர்கள் மேருவாயவே= கந்த. நாட்டு. 22. |
| | ” | போரொடு நிகர்வன பொலன்வரை—கம்ப. நாட்டு 46. |
| | ” | வரைக ளொப்பனபோர்—சீகாளத்தி. நக்கீர. 14. |
| 463 | துளங்குதசும்பு. | தசும்பு துளங்கிருக்கை—பதிற்று. 42. |
| 463-4 | தேறல் இளங்கதிர் ஞாயிற்றுக் களங்கடொறும் பெறுகுவிர். | நாட்கள்ளுண்டு—புறநா. 123. |
| 468 | கண்டோர்மருள. | கண்டோர் மருளும் வண்டுசூழ்நிலையும்—பொருந. 97. |
| 471 | வெண்ணெலரிநர்தண்ணுமைவெரீஇ. | வெண்ணெலரிஞர் தண்ணுமை வெரீஇ—புறநா. 348. |
| 478 | நிதியந்துஞ்சு நிவந்தோங்குவரைப்பு. | துஞ்சுநீணிதியது சரமை—சூளா. நாட்டு. 1 |
| 479 | பதியெழுவறியாப்பழங்குடி. | பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇய—சிலப. மங்கல. |
| 481 | யாறெனக்கிடந்ததெரு. | யாறுகிடந் தன்னவகனெடுந்தெரு—மது. 359; நெடுநல். 30. |
| | ” | நீத்தியாற் றன்ன நெடுங்கண் வீதி—பெருங்கதை. |
| 484 | மழையெனமாடமோங்கி. | மழையென மருளு மகிழ்செய் மாடத்து—பொருந. 84. |
| 491 | அருங்கடிவாயிலயிராதுபுகுமின். | உடையோர் போல விடையின்று குறுகி—புறநா. 54. |
| | ” | தடைஇயவாயி றடையாது நுழைந்து—தணிகையாற்று. 231. |

| அடியின் எண். | மலைபடுகடாத்தின் மூலம். | பிறநூல்களின்பகுதிகளும், அவைஉள்ளஇடங்களும். |
|---|---|---|
| 492 | மன்றில்வதியுநர் சேட்புலப்பரிசிலர். | மன்றபடு பரிசிலர்—புறநா. 135<br>வயிரியமாக்கள் மன்றநண்ணி—பதிற்று 29 |
| 493-4 | பெருவிறலுள்ளி வந்தோர் மன்ற வளியர்தா மெ்ன | அளியன் றானேமுதுவா யிரவலன் வந்தோன் பெருமநின் வண் புகழ் நயந்தெனன— திருமுருகு. 284 - 5. |
| 497 | பரிபுலம்பலைத்த. | பரிபுலம்பினரென—சிலப் நாடு 226;<br>பரிபுலம்பினனிவன்— மணி 16 - ம் காதை, 57 |
| ,, | | அரக்குருக் கன்ன செந்நிலன்—பொருந. 43. |
| 507 | அரக்குவிரித்தன்ன செந்நிலமருங்கின். | அரக்கத்தன்ன நுண்மணற்கோடு—பதிற்று 30. |
| ,, | | வரிவயம் பொருத வயக்களிறு—புறநா. 100. |
| 517 | குருஉப்புலிபொருத புண்கூர்யானை. | யானைமுத்தார்மருப்பு—குறிஞ்சி. 35 - 6. |
| 517-8 | யானைமுத்துடைமருப்பு. | பெருங்களிற்று முத்துடைவான் கோடு—திருமுருகு 304-5 |
| ,, | | முத்துடை மருப்பின் மழகளிறு—பதிற்று. 32. |
| ,, | | உடைவளை கடுப்ப மலர்ந்த காந்தள்—புறநா. 90 |
| 519 | வளையுடைந்தன்னகாந்தள். | கோடல்வீயுகுபவைபோ லிலங்கேரெல்வளை—கலி. 7. |
| ,, | | |
| 524-5 | நீனிறவோரி பாய்ந்தெனச்செல்லும் நெய்க் கணிறால். | அணிநிறவோரி பாய்தலின் மீதழிந்து குன்றம் தேன்சொரியும்— புறநா. 109 |
| ,, | நெடுவரைநேமியற் செல்லுமிறால். | நெடுவரைப் பரிதியிற் றொடுத்த தண்கம ழலரிறால்—திருமுருகு. 299-300. |
| 527 | குடமலைப்பிறந்தகாவிரி | மலைத்தலையகடற்காவிரி—பட்டின. 6. |
| 526-9 | அனைத்தும் காவிரிக்கயவாய்கடுப்ப நெடுங் கடைத்துவன்றி. | அனைத்தும் சங்கையம் பேரியாறு கடற்படர்ந்தாங்கு அளந்து கடையறியாவளம்—மதுரை. 695 - 7. |
| 530 | வானத்தன்னவளமலியானை. | காளமேகமுநாகமுந் தெரிகில—கம்ப சித்திரகூட. 2. |
| 530-31 | யானைத்தாதெருத் ததைந்தமுற்றம். | தாதெரு மறுகிற் பாசறை—புறநா. 33. |
| 532 | முழவுகணிகுப்ப. | முரசுகடிப் பிகுப்பவும்—புறநா. 158. |

| | | |
|---|---|---|
| 534 | கருங்கோட்டுச் சீறியாழ். | களங்கனியன்ன கருங்கோட்டுச் சீறியாழ்—புறநா. 127, 145. |
| 534-6 | யாழ் நரம்புமீதிறவா துடன்புணர்ந்தொன்றிக் கடவதறிந்த இன்குரல்விறலியர். | நரம்பார்த்தன்னவின் குரற்றொகுதி—திருமுருகு. 212. |
| | ,, | சுகிர்புரிநரம்புநம்பி யூழ்மணி மிடறமொன்றாய்ப் பணிசெய்த—சீவக 728 |
| 538 | அருந்திறற்கடவுள். | அருந்திறற்கடவுட் டிருந்துபலி—மணி சக்கர. 60. |
| 538 | கடவுட்பழிச்சியபின்றை. | கடவுட் கடன கழிப்பியபின்றை—பொருந 52. |
| | ,, | கடவட் பழிச்ச—பதிற்று. 41. |
| 541-2 | இன்றிவட்செல்லா துலகமொடுநிற்பப் பெரியோர்மாய்ந்தென. | கொடாஅ நல்லிசை நிலீஇ—பதிற்று 14 |
| | ,, | மன்னுவுலகத்து மன்னுதல் குறித்தோர் தம்புகழ் நிறீஇத் தாமாய்ந்தனரே—புறநா. 165. |
| | | என்றுநிற்த மிரும்புகழ்—தொல். அரசியல் 226. |
| 542 | இடைதெரிந்துணரும்பெரியோர். | இடைதெரிந் துணரு மிருடீர்காட்சி—பெரும்பா. 445. |
| 543 | கொடைக்கடனிறந்த | கொடைக்கட னிறந்த கடும்பா வுள்ளம்—பெரும்பா. 446. |
| 544 | வென்றிப்பலபுகழ். | மறம்வீங்கு பல்புகழ்—பதிற்று. 12. |
| | ,, | பெரியபுராணத்துள்ள திருநீலகண்ட யாழ்ப்பாணநாயனார் புராணத்து, "திரிபுரமெரித்த" என்னும் 4-ம் செய்யுளையும், திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்துள்ள 56-ம் திருவிளையாடலில், 9-ம் செய்யுளையும் பார்க்க. |
| 549 | கல்லெனொக்கல். | கல்லென்சுற்றம்—பெரும்பா. 21. |
| 550 | உருப்பில்சுற்றத்து. | உருப்பில் சுற்றமோடு—பெரும்பா 447. |
| 553 | தம்பெயர்தம்மொடுகொண்டனர் மாய்ந்தோர். | மரையிலைபோல மாய்ந்திசினோர் பலரே—புறநா. 27. |
| 561 | இழைமருங்கறியா நுழைநூற்கலிங்கம். | நோக்கு நுழைகல்லா நுண்மைய அறுவை—பொருந. 82-3. |
| 565-6 | தலைநாளன்னபுகலொடுவழிசிறந்துபலநாணிற்பினும்பெறுகுவிர். | பலநாள பயின்று பலரொடு செல்லினும் தலைநாள் போன்ற விருப்பினன் மாதோ—புறநா 101. |
| 567-8 | செல்வேந் தில்லெவந் தொல்பதிப் பெயர்ந்தென மெல்லெனக்கூறி. | சேறுமென தொல்பதிப் பெயர்ந்தென மெல்லெனக் கிளந்தனம்—பொருந. 121-2. |
| 569-70 | விறலியர் விளங்கிழையணிய. | மாலை முத்தமொடு பாடினியணிய—பொருந 161-2. |

| அடியின் எண். | மலைபடுகடாத்தின் மூலம். | பிறநூல்களின்பகுதிகளும், அவைஉள்ளஇடங்களும். |
|---|---|---|
| 492 | மன்றிலவதியுநர் சேட்புலப்பரிசிலர் | மன்றபடு பரிசிலர்—புறநா 135 |
| | ,, | வயிரியமாககள மனநணணி—பதிற்று 29 |
| 493-4 | பெருவிறலுள்ளி வந்தோர் மன்ற வளியர்தாமென | அளியன ரேனேமுதுவா யிரவலன் வந்தோன பெருமநின் வண்புகழ் நயந்தென—திருமுருகு 284 - 5. |
| 497 | பரிபுலமபலைத்த. | பரிபுலமபினரென—சிலப் நாடு 226; |
| | ,, | பரிபுலமபினனிவன மணி 16 - ம் காதை, 57 |
| 507 | அரக்குவிரித்தன்ன செந்நிலமருங்கின். | அரககுருக கன்ன செந்நிலன்—பொருந 43 |
| | ,, | அரககததன்ன நுண்மணற்கோடு—பதிற்று 30. |
| 517 | குரூஉப்புலிபொருத புண்கூர்யானை. | வரிவயம் பொருத வயககளிறு—புறநா 100 |
| 517-8 | யானைமுத்துடைமருப்பு | யானைமுததார்மருப்பு—குறிஞ்சி 35 - 6. |
| | ,, | பெருஙகளிற்ற முததுடைவான் கோடு—திருமுருகு 304-5 |
| | ,, | முததுடை மருப்பின் மழகளிறு—பதிற்று 32 |
| 519 | வளையுடைந்தன்னகாந்தள். | உடைவளை கடுப்ப மலர்நத காநதள்—புறநா. 90 |
| | ,, | கோடல்வீயுகுபவைபோ லிலங்கேரெல்வளை—கலி. 7 |
| 524-5 | நீனிறவோரி பாய்ந்தெனசசெல்லும் நெய்க்கணிருல். | அணிநிறவோரி பாய்தலின் மீதழிநது குன்றம் தேன்சொரியும்—புறநா. 109 |
| ,, | நெடுவரைநேமியற் செல்லுமிருல். | நெடுவரைப் பரிதியிற் றொடுதத தண்கம ழலரிருல்—திருமுருகு. 299-300. |
| 527 | குடமலைப்பிறந்தகாவிரி | மலைத்தலையகடறகாவிரி—பட்டின. 6. |
| 526-9 | அனைததும் காவிரிக்கயவாய்கடுப்ப நெடுங்கடைததுவன்றி. | அனைத்தும் சங்கையம் பேரியாற கடற்படர்ந்தாங்கு அளந்து கடையறியாவளம்—மதுரை 695 - 7. |
| 530 | வானத்தன்னவளமலியானை. | காளமேகமுனாகமுந தெரிகில—கம்ப சித்திரகூட. 2. |
| 530-31 | யானைத்தாதெருத் ததைந்தமுற்றம். | தாதெரு மறுகிற பாசறை—புறநா. 33. |
| 532 | முழவுகணிகுப்ப. | முரசுகடிப் பிகுப்பவும்—புறநா. 158. |

| | | |
|---|---|---|
| 534 | கருங்கோட்டுச் சீறியாழ். | களங்கனியன்ன கருங்கோட்டுச் சீறியாழ்—புறநா. 127, 145. |
| 534-6 | யாழ் நரம்புமீதிறவா துடன்புணர்ந்தொன்றிக் கடவதறிந்த இன்குரல்விறலியர். | நரம்பார்த்தன்னவின் குரற்சூறுகுதி—திருமுரு. 212. |
| | ” | சுகிர்புரிநரம்புநம்பி யூழ்மணி மிடறமொன்றுய்ப் பணிசெய்த—சீவக 728. |
| 538 | அருந்திறற்கடவுள். | அருந்திறற்கடவுட் டிருந்துபலி—மணி சக்கர. 60. |
| 538 | கடவுட்பழிச்சியபின்றை. | கடவுட் கடன கழிப்பியபின்றை—பொருந. 52. |
| | ” | கடவுட் பழிச்ச—பதிற்று. 41. |
| 541-2 | இன்றிவட்செல்லா துலகமொடுநிற்பப் பெரியோர்மாய்ந்தென. | கொடாஅ நல்லிசை நிலைஇ—பதிற்று 14 |
| | | மன்னுலகத்து மன்னுதல் குறித்தோர் தம்புகழ் நிறீஇத் தாமாய்ந்தனரே—புறநா. 165. |
| | ” | என்றுநிற்கு மிரும்புகழ்—சூளா. அரசியல் 226. |
| 542 | இடைதெரிந்துணரும்பெரியோர். | இடைதெரிந் துணரு மிருஉர்காட்சி—பெரும்பா. 445. |
| 543 | கொடைக்கடனிறுத்த. | கொடைக்கட னிறுத்த கூம்பா வுள்ளம்—பெரும்பா. 446. |
| 544 | வென்றிப்பல்புகழ். | மறம்வீங்கு பல்புகழ்—பதிற்று. 12. |
| | ” | பெரியபுராணத்துள்ள திருநீலகண்ட யாழ்ப்பாணநாயனார் புராணத்து, “திரிபுரமெரித்த” என்னும் 4-ம் செய்யுளையும், திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்துள்ள 56-ம் திருவிளையாடலில், 9-ம் செய்யுளையும் பார்க்க. |
| 549 | கல்லென்னுக்கல். | கல்லென்சுற்றம்—பெரும்பா. 21. |
| 550 | உருப்பில்சுற்றத்து. | உருப்பில் சுற்றமோடு—பெரும்பா. 447. |
| 553 | தம்பெயர்தம்மொடுகொண்டனர் மாய்ந்தோர். | மரையிலைபோல மாய்ந்திசினோர் பலரே—புறநா. 27. |
| 561 | இழைமருங்கறியா நுழைநூற்கலிங்கம். | நோக்கு நுழைகல்லா நுண்மைய அறுவை—பொருந. 82-3. |
| 565-6 | தலைநாளன்னபுகலொடுவழிசிறந்துபலநாணிற்பினும்பெறுகுவிர். | பலநாள் பயின்று பலரொடு செல்லினும் தலைநாள் போன்ற விருப்பினன் மாதோ—புறநா 101. |
| 567-8 | செல்வேந் தில்லவெந் தொல்பதிப் பெயர்ந்தென மெல்லெனக்கூறி. | சேறுமெந் தொல்பதிப் பெயர்ந்தென மெல்லெனக் கிளந்தனம்—பொருந. 121-2. |
| 569-70 | விறலியர் விளங்கிழையணிய. | மாலை முத்தமொடு பாடினியணிய—பொருந. 161-2. |

| அடியின் எண். | மலைபடுகடாத்தின் மூலம். | பிறநூல்களின்பதிகளும், அவைஉள்ளஇடங்களும். |
|---|---|---|
| 569-70 | ,, | மகளிர் வயங்கிழையணிய—பதிற்று 12. [159-78. |
| 569-80 | தலைவன்றாமரைமலைய.........நல்கி. | தாமரை... சூட்டி......சுரவிடைத் தங்க லோவிலனே—பொருந. |
| | ,, | பைம்பொற்றாமரை பாணர்ச்சூட்டி—பதிற்று. 48. |
| 571-2 | தேரையும் யானையையுங்கொடுத்தல். | தேரோடுமாசிதறி—மதுரை. 224. |
| 575 | நிலந்தினக்கிடந்த நிதியம். | நிலந்தினக்கிடந்த நெடுநிதிச் செல்வம்—தணிகையாற்று. 25. |
| 576 | ஏற்றகை. | ஏற்றகை மாற்றாமை—நாலடி. |
| 576-7 | இலம்படுபுலவரேற்றகை நிறையக்கலம்பெயக் கவிழ்ந்தகை. | இலம்படு புலவ ரேற்றகை ஞெமிரப் பொலஞ்சொரி வழுதி—பரி பாடல். |
| 581-2 | மலைநீர்வென்றெழு கொடியிற்றோன்றும். | வரையிழியருவியி னொளிறுகொடிநுடங்க; வரைமிசை யிழிதரு மருவியின் மாடத்துக் கொடி நுடங்குதெரு; வான்றோய் வெல் கொடி வரைமிசை யருவியின் வயின்வயி னுடங்க—பதிற்று. 25, 47, 69. |
| | ,, | விசய வெல்கொடி யுயரி—முல்லை 91. |
| | ,, | விறல்சானன்கொடி அருவியினுடங்க—மதுரை. 371 - 4. |
| | ,, | நெடுங்கோட் டிழிதரு தெண்ணீர் அவிர்துகில் புரையு மவ்வெள ளருவி—குறிஞ்சி. 54 - 5. |
| 583 | குன்றுசூழிருக்கை நாடுகிழவோனே. | பழமுதிர் சோலை மலைகிழ வோனே—திருமுருகு. 317. |
| | ,, | காவிரி புரக்கு நாடுகிழ வோனே—பொருந. 248. |
| | ,, | ஒளிறிலங் கருவிய மலைகிழ வோனே—பெரும்பா. 500. |
| | ,, | நிலைபெறு தணிகைமலை கிழவோனே—தணிகையாற்று. 417. |

# மலைபடுகடாத்தில் வந்துள்ள உவமைகள்.

முழவொலிக்கு மேகத்தின் ஒலி உவமை :—1 - 3.

பெருவங்கியமென்னும் வாச்சியத்தின் ஒலிக்கு யானைத்துதிக்கையின் ஒலி :—6.

முழவுமுதலியவாச்சியங்களின் தொகுதிப் பொதிக்குப் பலாக்காய்க்குலை :—8 - 12. [புறநா. 128.]

ஒத்தபாறைக்குக் கற்படுத்தியஇடம் :—15.

செங்குத்தான மலைவழியின் காட்சிக்கு எடுத்து நிறுத்தியவழி :—16.

யாழிலுள்ள வார்க்கட்டின் உறழ்ச்சிக்கு மகளிர்கையிலுள்ள தொடிகளினுறழ்ச்சி :—21.

யாழிலுள்ள துளைகளின் ஒழுங்கிற்கு வரகம்பயிரின் கதிர்நீட்சி :—24 - 5

யாழிற் போர்த்தப் பெற்றுள்ள தோலின் நிறத்திற்குப் பொன்னினிறம் :—29.

மடந்தையின் கூந்தல் மணத்திற்குக் கல்யாணப்பெண்ணின் மணம் :—30.

யாழுறுப்பாகிய உந்தியின் தையலுக்கு மடந்தைமார்பின் உரோமாவலி :—31 - 4.

யாழுறுப்பாகிய கோட்டினது நிறத்திற்குக் களாப்பழத்தின் நிறம் :—36 - 7.

விறலியின் அடிகளுக்கு ஓடியிளைத்த நாயின் நா :—42 - 3

விறலியர் கூந்தலுக்கு மயிலின் தோகை :—44.

விறலியர் கண்களுக்கு மானின்கண்கள் :—45.

காட்டினது நிழலுக்கு ஆழ்ந்த குளம் :—47 - 8; 259 - 65.

கூத்தன் நன்னனிடம் விரைந்து சென்றதற்கு மலை உச்சியினின்றும் வருகிறஆறு கடலை நோக்கி விரைந்து செல்லுதல் :—52 - 3.

பரிசில்பெறுதற்குச் சுற்றத்தாரோடு நன்னனிடம் செல்லும் கூத்தனுக்குப் பழமுண்ணுதற் பொருட்டு இனத்தோடு காட்டை நோக்கிச் செல்லும் வெளவால் :—54 - 65.

நன்னனுடைய மனைவியரின் தோள்களுக்கு மூங்கில் :—57.

மங்கையர் கண்களுக்குத் தாமரை மலர் ;—58.

நன்னனுடைய மென்மைக்கு புதுப் பெருக்கானநீர் :—61.

நன்னன் வண்மைக்கு மேகம்:—75-6.

பகையைப் போக்கிவிளங்கும் நன்னனுக்கு இருளைப்போக்கி விளங்கும் சூரியன் :—84 - 5.

நன்னன் ஊரைச்சூழ்ந்த மதிலுக்கு மலை .—92.

மின்னலுக்கு வாள் வெட்டுதலாலுண்டாகும் வடு :—97.

முசுண்டைப் பூவிற்குக் கார்த்திகை நாள் :—100 - 101.

எள்ளுப்பயிர்களின் காட்சிக்கு நீலமணி :—102.

சுனைக்கு நீர்ச்சால் :—104.

தினைக்கதிர்களுக்கு யானைக்கன்றுகளின் கைகள் :—107 - 8.

அவரைப் பூவிற்குத். தயிர்க்கட்டிகள் :—109 - 10.

அவரைக்காய்க்கு அரிவாள் :—110.

உருண்டகல்லுக்கு எருமை :—111.

வரகின் கவைக்கதிர்களுக்கு வாதம் செய்பவனுடைய கைவிரல்கள் :—112.

கரும்பின் தொகுதிக்கு வேற்படையாட்கள் : —116 - 9.

கருநெய்தற்பூவிற்கு மை .—124

இஞ்சிக்கிழங்கிற்குப் பாவை :—125.

கவலைக்கிழங்கிற்குப் பெண்யானையின் முழந்தாள் :—127 - 8.

மலையின்முகத்தே சாய்ந்து தோன்றும் வாழைப்பூவிற்கு யானையின்

முகத்தே தைத்த வேல் :—129 - 31.
பேராந்தையின் முழக்கத்திற்குச் சிறு பறையின் முழக்கம் .—140 - 41.
பலாக்காய்க்குக் கூத்தரின் முழவு :— 143 - 4.
செங்காந்தளுக்குத் தீ :—145.
செங்காந்தளின் புதிய அரும்பிற்கு ஊன் :—145 - 6.
செங்காந்தளின் இதழிற்கு நெருப்பு : —149.
காந்தட்பூக்களின் மடல்கள் சிந்தப்பெற்ற பாறைக்கு வெறிக்களம் :— 149 - 50.
பலவகைப் பூக்களும் கமழப்பெற்ற மலைச்சாரலுக்குக் கல்யாணவீடு :— 151.
அசோகம்பூவிற்கு நெருப்பு :—159. [குறிஞ்சி. 105, 115 - 9 ]
கவண்கல்லுக்குக் கூற்றம் :—206 - 9.
இருண்டகாட்டிற்கு இருளையுடைய இராத்திரி :—212.
காட்டாற்று வழியே செல்லுதலுக்கு அகழின்வழியே செல்லுதல் :— 214.
கூத்தரின் பிள்ளைகளுக்குச் செம்மறியாடு :—217.
வில்லுமிழ்கடுங்கணைக்கு மாரி :—226.
யானைக்கு மலை :—225 - 7.
மயிலிறகின் அடிக்குப் பலகறை :— 234.
ஆண்குரங்கிற்குக் கூத்தருடைய பிள்ளைகள் :—236 - 7.
தேனடைக்குச் சக்கரம் :—238 - 9.
திணைத்திற்கு நெய்விழுது : 244.
பன்றிக்கு இருளின் துண்டம் :— 247.
தெளிந்த நீரிற்குப் பளிங்கு —250
குகைக்கு வீடு :—255.
மலைப்பாம்பிற்கு வெட்டிச் சாய்த்த மரம் :—261.
சோலைக்கு ஆழ்ந்த குளம் :—259 - 65.
பலவகைப் பறவைகளின் முழக்கத்திற்குப் பலவகைவாச்சியங்களின் முழக்கம் :—269.
வழிச்சென்று வருந்துவோரைக் காத்தற்பொருட்டு நன்னனுடையமலை வேடர் விரைந்துவருதற்கு நீரில்வீழ்ந்து வருந்துவோரைக் காத்தற்பொருட்டு ஒருவர் விரைந்து வருதல் :—279 - 80.
அருவியாடுவோர் அதனைக் கையாற் குடையுந் தோறும் உண்டாகிற ஓசைக்குப் பலவகை வாச்சியங்களின் ஓசை :—296.
வேங்கைப்பூவிற்குப் பொன் :—305.
யானையின் முழக்கத்திற்கு இடிமுழக்கம் :—307 - 10.
கல்லாற்றின் ஒலிக்குத் தேரொலி :— 323 - 4 ; 571.
காந்தட்பூவின் மடலுக்குத் துடுப்பு :— 336.
கரும்பின் ஆலைப்புகைக்கு மேகம் :— 340.
நன்னனுடைய மலையிலுள்ள அருவியோசை முதலியவற்றிற்கு மதயானையின் ஓசை :—296 - 348.
நன்னனுடையமலைக்காட்சிக்குத் திருவிழாக்காட்சி :—351.
வெள்ளை மேகத்திற்குப் பன்னிய பஞ்சு :—361.
மேகத்தின் அண்மைக்குக் கைசென்று பிடிக்கும் தன்மை :—362.
மேகங்கள் இயல்பாகவே துளிகளைத் துளித்தற்கு அவை வலியத் தூவுதல் :—363.
குகைகளுக்கு ஒருவகைக்கிணறுகள் : —366
கொதித்த கூரியகற்களுக்குக் காய்ந்த வேல் :—373
யானைக்கு மேகங்கள் :—377, 530.
கொடிகளின் இயற்கைப் பின்னலுக்குச் செயற்கைப் பின்னல் : — 379.
உருண்டகற்களின் நெருக்கத்திற்குப் போர்செய்யும் யானைகளின் நெருக்கம் :—384.
பசுவின்பாலுக்குச் சங்கு :—409.
ஆட்டின்தொகுதிக்குப் பலவகைநெல்லின் அரிசிகள் :—413 - 4.
ஆட்டுமந்தையின் ஒலிக்குக் கடலொலி :—415 - 6.
தோற்படுக்கைக்குச்சேணம் :—418 - 9.

அவரைவிதைக்கு வேங்கைப்பூ:—434 - 6
ஒத்த திணையரிசிக்கு நறுக்கியபொன்:—440.
திணைமாவிற்குச் சருக்கரை:-444 - 5.
வேறுவேறாகிய பலவகைப் பொருள்களின் இனியகாட்சிகளுக்கு யாழில் மாறிமாறி வாசிக்கப்படும் வேறுவேறான இராகங்களின் இனிய கேள்விகள்:—450 - 53.
வரால் மீனுக்குப் பெண்யானையின் கை:—457.
வரால் மீனின் துண்டத்திற்கு உடுக்கையின் கண்கள்:—457 - 8.
நெற்போருக்கு மலை:—461.
நீர்க்குமிழியின் சுழற்சிக்குக் குயவன் சக்கரத்தின் சுழற்சி:—474.
தெருவிற்கு நதி:—481.
வீதிக்கூட்டத்திற்குத் திருவிழாக் கூட்டம்:—481 - 3.
மனிதவொலிக்குக் கடலொலியும் மேகவொலியும்:—482 - 3.
மாடத்திற்கு மலையும் மேகமும்:—484.
மராமரத்தின் பூவிற்கு நெருப்பு:—498.
செந்நிலத்திற்குச் சாதிலிங்கத்தின்பரப்பு:—507.
பலாப்பழத்திற்கு முழவு:—511.
மாம்பழத்தின் சாற்றிற்குக் கற்கண்டின்பொடி:—512 - 3.
நூற்றைக்கிழங்கிற்கு நுகத்தடி:—515
காந்தட்பூவின் இதழ்களுக்கு உடைந்தவளைகள்:—519.
தேனிறாலுக்குச் சக்கரம்:—525.
நன்னனுடைய அரண்மனை வாயிலுக்குக் காவிரி கடலொடு கலக்குமிடம்:—527 - 9.
யானைகளுக்கு மேகங்கள்:—530.
முழவின் முழக்கத்திற்கு மேகமுழக்கம்:—532.
புகழின்றி இறந்தபலருக்குச் சேயாற்று மணல்:—556.
பல ஆராய்ச்சிக்கு இடமாகிய மனத்திற்கு நால்வகைப் பூதங்களுக்கும் இடமாகிய ஆகாயம்:—558.
நன்னன் கூத்தர்பால் பின்னுள்ளைத்துள்ள விருப்பத்திற்கு அவன் அவர்கள்பால் முதனுள்ளைத்துள்ளவிருப்பம்:—565.
தேரின் ஓட்டத்திற்கு நீரின் ஓட்டம்:—571; [323 - 4.]
யானைக்கு மலை:—572.
நன்னன்கொடைக்கு மேகம் மழைசொரிதல்:—579 - 80.
அருவிக்கு வென்று உயர்த்திய கொடி:—581 - 2.

# மலைபடுகடாத்தின் பொழிப்பு.

முழவு முதலிய வாத்தியங்களை அடக்கிய பைகளைக் கட்டிய காமரத்தைத் தோளில் தூங்கிக்கொண்டு மலைப்பக்கத்துள்ள அரியவழியில் நடந்துவந்து, இளைப்புற்றுப் பாணரும் விறலியரும் சுற்றப் பாநிழலிலிருந்த கூத்தர் தலைவனே, *யாங்கள், முன்பு *உம்மினும் வறுமையுற்று வாடியிருந்தவர்களே. இப்போது நன்னன்பாற்சென்று பரிசில்பெற்றுக் கவலையற்றுவருகின்றேம்; நீங்களும் அவனை அடைவீராயின் நல்ல பயனை அடைவீர்கள், என்னைச் சந்தித்தமையால், நீங்கள், புறப்பட்டவேளை நல்லவேளையே; நல்ல சகுனத்தையும் நீவிர் பெற்றிருத்தல் கூடுமென்று எண்ணுகிறேன். இனி, அவனூரை அடைதற்குரிய வழியின் நன்மை தீமைகளையும் இடையிடையே தங்கித்தங்கி இளைப்பாறுவதற்கு ஏற்ற இடங்களையும் அவனுடைய மலைநாட்டிலும் காட்டுநாட்டிலும் தண்பணைநாட்டிலுமுள்ள உணவின்வகைகளையும் அவனுடைய மலையின் தன்மையையும் அங்கங்கேயுள்ள சோலைகள் காடுகள் இவற்றின் இயல்புகளையும் அவனுடைய வண்மையையும் அவனது அறிவின் வன்மையையும் அவனுடைய நாளோலக்கச் சிறப்பையும் அவன் சுற்றத்தாரது நல்லொழுக்கத்தினையும் அவனுடைய நவிரமென்னும் மலையில் எழுந்தருளியிருக்கும் 'காரியுண்டிக்கடவுள்' என்று திருநாமம்பெற்ற சிவபெருமானது இயல்பையும் அவனது தலைமையையும் அவன் முன்னோர்களின் பெருமையையும் அவனூரின் இயல்பையும் உள்ளவாறு சொல்லுவேன். அவற்றைக் கேட்டிடுக; அவன் நகரத்துக்குச் செல்லுகின்ற வழி, மற்ற ஊர்களுக்குச் செல்லுகின்ற வழிகள் போன்றதன்று; அது புதுவருவாய்களையுடைய ஊர்கள் நெருங்கப்பெற்று எங்குங்காணப்படாத புதியகாட்சிகளையுடையது; வேண்டியகாலத்தில் மழைபெய்கையினாலே அங்கங்கேயுள்ளவர்கள் விரும்பியபடியே பயிர்கள் விளைந்துவிளங்கும் கொல்லைகளில் முசுட்டைக்கொடிகள் கார்த்திகைநக்ஷத்திரம்போன்ற பூக்களைப்பெற்று விளங்கும்; எள்ளுப்பயிர்கள் ஒரு கைப்பிடியில் ஏழுகாய்களே அடங்கும்படி நெய்யொழுகக் காய்த்து வளர்ந்திருக்கும்; விளையாட்டுச்சண்டைசெய்கின்ற யானைக்கன்றுகளின் துதிக்கைகளை ஒன்றோடொன்று பிணை

* யாங்களென்பதும் உம்மினென்பதும் இவைபோற் பின்வருவனவும் உளப்பாட்டுப்பன்மை.

ந்தாற்போலவே இலைக்கதிர் ஒன்றோடொன்றுநெருங்கி அறுத்தற்
குரியபருவத்தைப்பெற்றுத் தோன்றாநிற்கும்; இளையையறுத்தகொல்
லைகளில் அரிதாள்தோறும் அவரைகள் தயிர்க்கட்டிகளைப்போற் பூக்
களைக்கீழே உதிர்த்து அரிவாள்போன்ற காய்களையுடையனவாய்த்
தோன்றும்; வரகம்பயிர்கள், எருமைகள்கிடந்தாற்போலக் கற்கள்
மிக்கவழியிடத்தில் தருக்கம்பேசுவோனுடைய இணைந்துதோன்றும்
கைவிரல்களைப்போன்று இரட்டித்தகதிர்கள் முற்றி அரிவாளாலே
அரிதலுறாநிற்கும்; ஐவனநெல்லும் வெண்ணெல்லும் பால்கட்டிச்
சிறிதுமுற்றி நாற்றிசைக்காற்றுக்களாலும் ஊடறுக்கப்பட்டு நன்றாக
விளைந்துகாணப்படும்; கரும்புகள் மிகவளர்ந்து வேற்படைகளையுடைய
சேனைகள் ஓடுதல்போலவே காற்றாலே ஒருபக்கமாகச்சாய்ந்து அசை
யாநிற்கும்; காட்டிலே மூங்கில்காய்த்தநெல் அவலிடிக்கும்பதத்தைக்
கொண்டு தோன்றும்; வெண்சிறுகடுகுகள், உழாமல் களைக்கொட்
டால் அடிவரைந்துகொத்தும்தோட்டங்களில் விதைக்கப்பட்டு நெரு
ங்கி விளைந்திருக்கும்; கருநெய்தல்கள் கருமையென்பதே வடிவுகொ
ண்டதென்னும்படி மலர்ந்துவிளங்கும்; இஞ்சிகள் பாவைபோன்ற
கிழங்குகளையுடையனவாய் உறைப்புச்சுவையைப்பெற்றுத் தோன்
றும்; கவலைக்கிழங்குகள் குழிகள்தோறும் பெண்யானையின் மடித்த
முழந்தாளைப்போலச் சிறந்து வளர்ந்திருக்கும்; யானையை வேல்குத்
தினாற்போலச் சிறுமலையின்மேலே தம்முடைய பூக்கள்படும்படிநிற்
கும் வாழைகளின்காய்க்குலைகள் பழுத்து விளங்காநிற்கும்; பெரு
மூங்கில்கள் காய்த்து முற்றியநெல்லுடன்கூடி அசையாநிற்கும்; அகா
லங்களிலும் நிலவிசேடத்தால் மரங்கள்பலனைக்கொடுத்தலால் நாவ
லின்பழங்கள் காற்றாலே உதிர்ந்து பாறைகளிலே பரந்துகிடக்கும்;
விடாய்த்தகாலத்தில் வாயில்நீரூறுதற்குக்காரணமான உயவைக்கொடி
கள் எங்கும் படர்ந்துதோன்றும்; கூவைக்கிழங்குகள் முற்றிக்கிடக்
கும்; தேமாம்பழங்கள் சாறுமிகுந்து உண்பாரை வேறொன்றிற்செல்
லாதபடி தடுத்துவிளங்காநிற்கும்; ஈரப்பலாக்களின்பழங்கள் தாமே
வெடித்து உள்ளேயுள்ளவிதைகளைச் சிந்தாநிற்கும்; பலாமரங்கள்
வழிப்போக்கர்களான கூத்தர்களுடையமத்தளங்கள்போலவே கீழும்
மேலும் காய்த்து முற்றி விளைந்துதோன்றாநிற்கும்.

இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டுசென்று பாறைகள்தோ
றுமுள்ள வேடர்களுடையசிறிய ஊர்களிலே தங்குவீராயின், அவர்
களால் நல்லஉணவுகளைப்பெறுவீர்; பெற்றஅன்று அங்கே அவர்க
ளுடன்தங்கி இளைப்பாறி நெருப்புப்போன்ற அசோகம்பூக்களைச் சூற்

றத்துடன் கூடிக்கொண்டு அம்மரங்களுள்ளசெவ்வியவழியிற்போய்ப் பின்பு மூங்கில்கள் ஒன்றோடொன்றுஉரிஞ்சி ஒலிக்கும் மலையிலுள்ள அரியவழியில் இறங்கிச்சென்று அதன்பக்கத்துள்ளசிற்றூர்களை அடைந்து, "யாங்கள் நன்னனுடையகூத்தரேம்" என்றுசொல்லுவீராயின், நீங்கள் அவ்வூராரால்அழைக்கப்பெற்று, நெடுந்தூரம்நடந்துவந்த உம்முடையவருத்தம்தீரும்படி இனியமொழிகளைக்கூறிப் பின் அவர்கள், நெய்யில்வெந்தபொரியலையும் அழகியதினைச்சோற்றையும் கொடுக்க உண்டு மகிழ்வீர்; நன்னனுடைய மலைமேலுள்ளநாடு மிகச்சிறந்தது. அங்கேசெல்லுவீராயின், நீர்பெறுவனவற்றைச்சொல்லுவேன்; கேட்பீராக: உடும்பின்தசையோடு கடமானுடையகொழுத்தஇறைச்சியையும் முள்ளம்பன்றியின் இறைச்சியையும் கலந்துதின்று இடையிடையே தேனாற்செய்த கள்ளின்தெளிவை மிகப்பருகிப் பின்பு நெல்லாற் சமைத்தகள்ளினையும்உண்டு களிப்புற்றுத் துயின்று விடியற்காலத்துள்ள உம்முடைய மயக்கம்தீரும்படி பலாவிதையின்மாவையும் புளியையும் கலந்துவைத்தமோருலையில் மூங்கிலரிசியைச்சொரிந்து ஆக்கியசோற்றைக் குறமங்கையர், தங்கள்தங்கள்பிள்ளைகளைக்கொண்டு, அண்ணன், அம்மான் என்றாற்போன்ற முறைப்பெயர்களைக்கூறுவித்து உங்களைத்தடுத்து அழைத்துஉண்பிக்க அவ்வுணவையும் மலையுச்சியிலிருந்துகொண்டுவந்த சந்தனம், அகில், பொன், மணிமுதலியவற்றையும் அவர்களுடையமனைகள்தோறும் பெற்று மகிழ்வீர்; இங்ஙனம்பெறுதலினாலே தாமதித்து நன்னனிடம்சென்று பெறக்கருதிய பரிசிலை நீவிர் மறக்கவும்கூடும்; அன்றியும் தெய்வங்கள் விரும்பும்பூக்களைக் கிட்டினாலும் அங்கேயுள்ள வரையரமகளிர் இருத்தலைக்கண்டாலும் உயிர்போம்படி வெதும்பி நடுங்குதற்கும் உரியீராவீர்; ஆகையினாலே அம்மலையிடங்களிற் பலநாள்நில்லாது இறங்கி நிலத்திலுள்ள நாட்டிற்செல்லுமின்; தினைப்புனத்தை அழிக்கும் பன்றிகளைப்பிடித்தற்கு நுழைவழிகள்தோறும் பொருத்திவைக்கப்பட்ட கற்பொறிகள் அவ்வழிகளிலுண்டு; ஆதலால் அவ்வழியிற்போகஎண்ணுவீராயின், இராத்திரியில் மிகுந்தஇருட்டுவேளையிற்செல்லாமற் பொழுதுவிடிந்தபின் செல்லுவீராக; சிறுவழிகளிற் பருக்கைக்கற்களாலாகிய மேட்டுநிலத்தில் வெடிப்புக்கள்உண்டு; அவ்வெடிப்புக்களில் பாம்புகள்மறைந்து ஒடுங்கிக்கிடக்கும் குழிகளும் உள்ளன. அக்குழிகளை மரங்களின்மேலே ஏறிக் கையைக்கொட்டிப்பார்த்துவிட்டு, அப்பாம்புகள் மகிழும்படி விறலியர் அஞ்சலிசெய்து வாழ்த்தாநிற்க மிருகங்கள் கிடக்கும்வழியினின்றும் சிறிதுகடக்கப்போய் வலப்பக்கத்துவழியை

உமக்குவழியாகக்கொண்டுபோவீராக; விளைந்த தினைக்கொல்லையைக் காத்தற்குவந்து அதனைச்சூழ்ந்தகுறவர் யானைகளால் அஃது அழிந்துபோவதற்குவருந்தி மிகஉயர்ந்தபரணிமேலேறி, பக்கத்துள்ளகுறுங்காட்டிடத்தேநின்ற அந்தயானைகள் பகற்காலத்தில் அங்கேநின்றும் வேறிடங்களுக்குப்போய்விடும்படி அவர்கள்வீசியகவண்கற்கள் குரங்குகள் தம்குட்டிகளோடு அஞ்சியோடும்படி இடையேயுள்ளமூங்கில்களைக்கடந்து தவறாமல்வரும்; அவை யமன்போன்றவை ஆதலால், அக்கற்கள் உங்கள்மேலேபடாதபடி மரங்களிலே மறைந்துசெல்லுவீராக. இராக்காலத்தையொத்த காவற்காட்டினையும் யானைகளைவிழுங்கும் முதலைகள் தங்கப்பெற்று, குமிழிகள்சுழன்றுவரும் மடுக்களையும் நீர்குத்தினஇடங்களையும் உடையவாய் ஏறுதற்கும் இறங்குதற்கும் அரியனவாயிருத்தலினாலே அகழியிலே இறங்கிச்சென்றாற்போலும் காட்டாற்றுவழிகள் கால்வழுக்கும் இடங்களையுடையன. அவ்விடத்திற் பெரியமரங்களிற்சுற்றிக்கிடக்கின்ற பெருங்கொடிகளைப் பிடித்துக்கொண்டும் ஒருவரையொருவர் பாதுகாத்துக்கொண்டும் பிள்ளைகளோடே போவீராக; பக்கமலையில் விழுந்தவர்களை மறைத்துவிடும்படியானஆழமுள்ள குளங்களுக்குஅருகில் இடத்தைமறைத்துக்கொண்டிருக்கும் நுண்ணியபாசி ஊன்றியிட்டஅடியை ஒடப்பண்ணும்; அன்றியும் அவ்விடங்கள் செல்லுதற்குஅருமையையுமுடைய; அதற்குப்பரிகாரமாக வழிகளின்இருபுறத்தும் பின்னிவளர்ந்த சிறுமூங்கில்களின்கோல்களையும் கொறுக்காந்தட்டைகளின் கோல்களையும் பற்றுக்கோடாகப்பிடித்துக்கொண்டுபோமின். முகபடாத்தாற் பொலிவுபெற்றனவும், மலைபோன்றனவும், போர்த்தொழிலிலே பயின்றனவுமாகிய யானைகளையும் வில்லிலிருந்து மழைபோலத்தாழ்ந்து விழும் வேகமானஅம்புகளையுமுடைய முன்படையால்அழகுபெற்றதும், பூக்களையுடையமடுக்களுள்ள ஆற்றங்கரையிலுள்ளதும், மதிலையுடையதுமான *திருப்பதியையடைந்து,கோயிலிலுள்ளவரும் துதித்தற்கரியவருமாகிய காரியுண்டிக்கடவுளைத்தரிசிக்கும்பொழுது அவரை நீவிர் வணங்கிவிட்டு உடனேசெல்லுக; அங்ஙனம் செல்லுதலைத்தவிர்த்து உங்களுடையவாத்தியங்களை வாசிக்கவேண்டா; வாசிப்பீராயின், அம்மலையில் இடைவிடாமற்பெய்துகொண்டிருக்கும் மழையால் உங்களுடையவாத்தியங்களெல்லாம் நனைந்துபோய்விடும். அல்லாமல் நீங்கள் போதலும்அரிது. அன்றியும் அந்தக்காட்டிற் †பலகறைபோன்ற வெள்ளிய வேர்கள்பொருந்திய பீலியையுடையமயில்கள் ஆடி இளை

* காரியுண்டிக்கடவுளெழுந்தருளிய ஸ்தலம். † சோழி.

த்துநின்றாலும் கூத்தருடையபிள்ளைகள்போன்ற ஆண்குரங்குகள் நீண்டமூங்கிற்கிளைகளின்மேலே பாய்ந்தாலும் செங்குத்தான மலையின்பக்கத்துள்ள தெய்வங்கள்விரும்பியமலையில் தேருருள்போல வைக்கப்பட்டுள்ள தேனடைதோற்றினாலும் அவற்றை விரைவாக நீங்கள்பார்க்கவேண்டா. பார்த்தால் வழி தப்பிவிடும். அங்ஙனம்போய் மலைவழியிலேயுள்ள காட்டிற் செல்லுவீராயின், உயர்ந்த பரணின்மேலேயிருந்து கொல்லையைக்காப்பவன் எய்தஅம்பால் தன்மார்பில் புண்ணிருந்து அந்தஅம்போடேஓடிப்போய் வழியிற்கிடப்பதாகிய கொழுத்தபன்றியைக் காண்பீர்; கண்டால், இழைந்த மூங்கிலிலிருந்து உண்டாகியதீயினாலே கெட்டநாற்றம்உண்டாகாதபடி அதனைவதக்கி மயிர்போகச்சீவித் தின்று சுனையிலே கலக்கமறத்தெளிந்து பளிங்குபோன்றநீரை வழிவந்த இளைப்புத்தீரும்படிகுடித்து மிகுந்ததசையைப் பொதியாகக்கட்டிக் கைக்கொண்டு அவ்விடத்தே இராத்திரிவேளையில் அப்பாற்போவதைநிறுத்திவிட்டு உம்முடையவீடுபோன்ற குகைகளிலே பிள்ளைகளோடே தங்குங்கள்; இங்ஙனம்தங்கி இளைப்பாறிவிட்டு விடியற்காலத்திலேஎழுந்து செவ்வியவழியிற்செல்லுவீராக; செல்லுங்கால் யானையைவிழுங்குவதும் வெட்டிய பெருமரம் கிடந்தாற்போல்வதுமாகிய பெரும்பாம்பு விழுந்துகிடக்கும்வழியைவிட்டு விலகிச்செல்லுக; செல்லுகையில் தெய்வங்களன்றி மானிடரால் விரும்பப்படாதனவாய் அங்கேயுள்ளபூக்களையும், பழங்களையும், குளங்களைக்கண்டாற்போலும் குளிர்ச்சியையுடைய மரங்களின் தொகுதிகளையும் இடப்பக்கத்தும் வலப்பக்கத்தும் பார்த்துக்கொண்டே யான் கூறிய அடையாளங்களைநினைந்து அவற்றை அணுகாமற்செல்லுவீராக; செல்லுங்கால், நாடுகளையெல்லாம் காணுதற்குரிய அகன்றஇடத்தையுடைய உச்சிமலையில் மெல்லமெல்லப் போவீராக; அங்ஙனம் போகையில் மிகுந்தநிழலையுடைய மரங்கள்நெருங்கின குறுங்காட்டாலே வெயில்வெப்பம்இல்லாததும் திசைமயக்கம்உண்டாகும் இராக்காலத்திலும் வலியவில்லையுடையவர்களாய் மிருகங்களை ஆராய்ந்துகொண்டு சுழன்றுதிரியும் குறவர்கள்கூட்டம் பகலிலும் மயங்குதற்குரியதுமான குன்றத்தை அடைவீர்; அடைந்தால் அதனிடத்தே செல்லுதலை ஒழிக. சென்றால் திசைமயக்கத்தால்வருந்துவீர், ஆதலால் அதனருகிலுள்ள விசாலமானபாறையிற் சேர்ந்துநின்று கல்லென்னும் ஓசையுண்டாகும்படி நும்முடையவாத்தியங்களைக் கொட்டுவீராக; கொட்டினால், நன்னனுடையகட்டளையால் காட்டைக்காத்துக்கொண்டு உச்சிமலையில்இருக்கும் வேடர்கள்பலர், அப்பொழுது

அவ்வாத்தியவோசையைக்கேட்டு, வெள்ளத்தில் அகப்பட்டுவருந்தும்
மனிதர்களின் துன்பத்தைக்கண்டு ஓடிவந்து விரைந்துஎடுப்பாரைப்
போலே, உங்கள்வருத்தம்தீரும்படி மிகவிரைந்துவந்து நறியபூக்களை
யும் இனியபழங்களையும் உங்களுக்குக்கொடுப்பார். நீங்கள் அம்மலர்
களைச்சூடி அப்பழங்களைஉண்டபின், இடையூறுமிகுந்தவழியில் அவர்
கள் உங்களுக்குமுற்படச்செல்லுவர். நீங்கள் அவர்கள்பின்னேசெ
ன்று சுற்றத்தோடு மனமகிழ்ச்சியை அடைவீர். அடைந்து அவர்
கூறியதிசையைஉட்கொண்டு, புதியராய்வந்தோர் பார்த்தாலும் அவர்
கள்தலைகளைச் சுற்றச்செய்யும் பக்கமலையில் குறியனவும் நெடியனவு
மாகிய குவடுகளினின்றும் முறைமைப்பட இறங்கிப் பூக்கள்பரந்தநிழ
லிலே இளைத்திருப்பின், அப்பொழுது திசைகடோறும் அருவியாடும்
தெய்வமகளிர் அவ்வருவியைக் கையாற்குடையுந்தோறும் உங்கள்
வாத்தியத்தைப்போல உண்டாகிற இனியஓசையையும், மலைமேவிட்ட
பாணிலுள்ளவேடர்கள் தினைப்புனத்திற்புகுந்து தின்னும்யானைத்
தலைவனைப் பிடித்தற்குச்செய்யும் ஆரவாரத்தையும், குகையில் தங்கி
யிருக்கும் முள்ளம்பன்றி தனது கூரியமுள்ளால் எய்து வருத்துகையி
னாலே வீழ்ந்தவேடர்கள் அழும் முழக்கத்தையும், தம் கணவர்மார்
பில் புலிபாய்ந்தமையாலுண்டாகிய விழுப்புண்ணை ஆற்றுதற்கு இது
தக்கதென்று எண்ணிக் குறத்தியர்பாடும் பாட்டாலெழுந்தஓசையை
யும், முதனாளிலேபூத்த வேங்கைமரத்தின்பூக்களைச் சூடக்கருதி,
தாம்பாடினால் அது தாழ்ந்துகொடுக்குமென்றுநினைந்து மகளிர் புலி
புலியென்றுகூப்பிடும்ஒலியையும், கருவுற்ற பெண்யானைக்கு அது
வேண்டியஉணவுகளைக்கொடுத்து ஆண்யானை பாதுகாத்துவிட்டுப்
போகும்போது புலி ஒளித்திருந்து பாய்ந்து அதனைவருத்த, அது
கண்டபெண்யானை தன்னுடையசுற்றத்தோடே வருந்திக்கூப்பிடும்
இடிபோன்றகுரலையும், எடுத்தற்குஅரியவெடிப்பில் தன்கையினின்
றும் வீழ்ந்துஇறந்த தன்குட்டியின்பொருட்டுச் சுற்றங்களோடுகூடிக்
கத்தும் மந்தியின் ஆரவாரத்தையும், முசுக்கலை ஏறமுடியாதென்று
எண்ணும்படி உயர்ந்தமலையிலே அசையாதபடிநட்ட கண்ணேணி
வழியாகச்சென்று தேனீக்கள்சேர்த்துவைத்த தேனடையைஅழித்
துத் தேன்கொள்வோர்செய்யும் ஆரவாரத்தையும், இவற்றிற்கைக்
கொண்டபொருள்கள் நன்னனுக்குத் திறைகொடுத்தற்குச் சாலுமெ
ன்று சிற்றரண்களைஅழித்தவேடர் மகிழ்வுற்றுச்செய்யும் ஆரவாரத்
தையும், நறவைக் காலையிற்குடித்தவேடர் மான்றோல்போர்த்த சிறு
பறைமுழங்க உச்சிமலையில் தம்மனைவியரோடுஆடும் குரவைக்கூத்தின்

ஒலியையும், கல்லின்மேல்வரும் ஆறுகள் வெடிப்புக்களில்வீழ்ந்து தேர்கள்வந்தாற்போல இடைவிடாமல்ஒலிக்கும் ஆரவாரத்தையும், குழியில் அகப்பட்டயானைகளைக் கோபந்தணிவித்துத் தறியிற்கட்டுதற்குச் செய்யும் பாகருடையபறைசையையும், மூங்கிலாற்செய்ததட்டைப்பறையைப் புடைத்துக்கொண்டு தினைப்புனத்திற்கிளியையோட்டுகின்ற மகளிருடையஆரவாரத்தையும், இடையரும் குறவரும் வென்றதன்வெற்றி தோன்ற ஆரவாரிக்கும்படி காளையும் மரையானேறும் முதுகிடாத வலியுடனே புண்ணுண்டாம்படி ஒன்றோடொன்றுமுட்டிப் பொரும் கல்லென்கின்றஆரவாரத்தையும், எருமைக்கடாக்கள் தம்மிற்பொரும் ஆரவாரத்தையும், எல்லாரும்உண்டபின்பு மிஞ்சிக்கிடக்கும் பலாப் பழத்தின்சுளையிலிருந்து விதையைக்கொள்ளுதற்கு யானைக்கன்றுகளைப்பிணைத்துக் காந்தள்மடலாலேஅடித்து அவற்றைக் கடாவிடும் பிள்ளைகளின் ஆரவாரத்தையும், ஆலைகளிற் கரும்பினின்று சாறுகொள்ளும்ஒலியையும், தினையைக்குற்றும்மகளிர்பாடும்உலக்கைப்பாட்டின் ஒலியையும், சேம்பையும் மஞ்சளையும் பன்றிகள்தோண்டிவிடாதபடி காப்பவர்கள்கொட்டும் பன்றிப்பறையின் ஓசையையும், இந்தஓசைகளால் மலையினிடத்தில்எழும் எதிரொலியையும் கேட்பீர். நன்னனுடையமலை, மகளிர்ஆடுதற்குஏற்ற மத்தளங்கள்இடைவிடாமல் ஒலித்துக்கொண்டிருக்கும் ஊர்களினுள்ள திருநாளை ஒத்து உங்களுக்குச் சிறந்துதோன்றும். அங்கே காணுதற்கு இனியவற்றைக் கண்குளிரக்கண்டும் கேட்பதற்குஇனியவற்றைச் செவிகுளிரக்கேட்டும் உண்பதற்குஇனியஉணவுகளைப் பாராட்டியுண்டும் இந்நுகர்ச்சி இன்னும்உண்டாவதாகவென்று பழையஉறவினரைப்போன்ற முறைமையினையுடையீராய்ச் சிலநாள்தங்கி அம்மலை உமக்குப்பின்னாகும்படி செல்லுமின். சென்று பக்கமலையிலே விறலியர் குறிஞ்சிப்பண்ணைப்பாட அங்கேயுள்ளதெய்வங்களைக் கையால்தொழுது, 'எம்குறைமுடித்தால் உமக்கு இவைதருவேம்' என்று துதித்துவேண்டிக்கொண்டு அப்பாற் போவீராக; போய்க் கார்காலம்வருமளவும் பன்னியபஞ்சுபோல மேகங்கள்கிடக்கும் பெரியமலையிடத்தில் மிகவும் சமீபமானஇடத்தினுள்ள கரியமேகக்கூட்டம் திவலைகளைத் தூவுகையினாலே திசையறியாமல்மயங்கும் சுற்றத்தோடே காவியவாத்தியங்கள்நனையாதபடி கிணறுகள்போன்றகுகையிலேபுகுந்துகொள்ளுக. பின்பு பெரியகல்லுகளில் முறிந்துநிற்கும் மலைகளை அடையாமல் தன் அழகால் பார்ப்போருடைய கண்ணொளியை வாங்கிக்கொள்ளும் மலையிலுள்ளனவாகிய சூழிகளாலுண்டாகுந் துன்பங்களை மாற்றிக்கொள்ளுதற்குக் காம

த்தை ஊன்றுகோலாகக்கொண்டு செல்லுவீராக. செல்லுகையில்
வேல்காய்ந்தாற்போன்ற குடுமிக்கூர்ங்கற்களையுடையபாறையில் வெய்
யில்வேளையிற்செல்லாமல் அந்திப்பொழுதிற் போவீராக. அவ்வழிக
ளில் நன்னனுடையசேனைத்தலைவரோடே யானைக்கூட்டங்களையுடை
யனவும் போர்செய்யவந்த அரசர்களுடைய நிலைமையைக்கெடுப்பனவு
மாகிய அரண்கள் பலவுள்ளன. அந்த அரண்களில் பின்னிவைத்தாற்
போலக் கொடிகள் பிணங்கியிருக்குஞ்சிறுகாட்டையுடைய வழிக
டோறும் உங்களுள்ளே முன்னேபோகிறவர் தம்முகத்தில்அடியாத
படி வாங்கிவிட்டகோல்கள் யாழின்பத்தரையும் முழவின்கண்ணையும்
கெடுத்துவிடாமல் காத்துக்கொண்டு பின்னேபோகிறவர் தவறாமல்
அவர்கையைப்பிடித்துக்கொண்டு மெல்லமெல்லச் செல்லுக. சென்
றால், யானையொன்றோடொன்று மலைந்தாற்போல நெருங்கியிருக்கும் கற்
களினிடத்தே காடுகள் மிகப்பலஉள்ளன. தாம் புறங்கொடுத்து ஓடிய
விடத்துப் பகைவர்சிரித்தொலிக்க, அதுபொறாமல் நாம்உயிர்விடுதற்கு
இது நல்லசமயமென்று மீண்டுவந்து பொருது தம்முடையஉயிரை
விட்ட மறவருடையபெயர்களை எழுதி நட்டகற்கள் முதுகிட்டுப்போன
வரைஇகழும் கவர்த்தவழிகள் மிகப்பலவாயிருக்கும்; உம்முடைய
இசை அந்நடுகல்லிலுள்ள தெய்வத்திற்கு விருப்பமுண்டாகும்படி
யாழைவாசித்துவிட்டு விரைந்துபோவீராக. உங்களுள் வழியறியா
மற்போய் மீண்டுவந்தபுதியவர்கள், பின்வருகிறவர்களும் அவ்வாறு
போய்மீளாதபடி பலவழிகளுங்கூடினசந்தியைக் கையாலேதுடை
த்து அடையாளமாக ஊகம்புல்லை முடிந்துவைத்திடுக. நீங்கள்போ
கும்இடத்தில் மராமரத்தின்நிழலிலே இவ்வாறு பொருதுபட்ட இன்
னொன்று உலகம்அறிவதற்குப் பொருதுபட்ட வீரர்பெயர்களை எழுதி
நடப்பட்டனவாகியகற்கள் தெய்வத்தன்மையிருந்து பிறகாடுகளைஇக
ழும் கவர்த்தவழிகளில், நன்னனுடையபகைவரிருக்கும் அருநிலங்
கள் பலவுள்ளன; அவை, தத்தம்ஊர்களிலிருந்து மனிதர்நினைத்தா
லும் நடுங்குதற்குக்காரணமானவை. 'நன்னனைநினைந்து செல்லுகின்
றோம்' என்று அவர்களிடம்கூறுவீராயின், அவர்களுடையஊர்கள்
உங்களுக்கு நன்னனுடையபழையஊர்களையொக்கும்; ஆதலால், அங்கே
இளைத்தஇடத்தே இளைப்பாறி அஞ்சாமற்போவீராக; தன்பிணையைப்
புலிபாய்ந்து கொல்லுகையினாலே கலைமான் மனம்வருந்தி அதனைக்
கூப்பிடுங்காடுகளில் முறைமையேபோய், வில்லோசைக்குஅஞ்சின மரை
யேறுகள் விரைந்தோடும்காட்டில் வேறிடத்திற்சென்று மேய்ந்து
வந்த பசுக்களின்இனியபாலை இடையர்கொண்டுவந்து சொரிகையி

னாலே அவர்களுக்கு விருந்தினராவீர்; பண்டங்களைவிற்றுவாங்கின
பலவகைநெல்லின் அரிசியையொத்து நிறம்வேறுபட்ட பலவகைஆடு
களின்திரள்களிலே இராக்காலத்திற்செல்லுவீராயின், அங்கேயுள்
ளார் சமைத்துவைத்திருந்த பாற்சோற்றையும் பாலையும் பெறு
வீர். அவற்றைஉண்டு சேணமிட்ட படுக்கையைஒத்த மென்மையை
யுடைய ஆட்டுத்தோலிலே கொடியவிலங்குகள்வாராமல் இடையர்
வைத்துள்ளநெருப்பைத் துணையாகக்கொண்டுதங்கி அப்பாற்செல்லு
வீராக; செல்லும்பொழுது நாடுகாக்கும் வேடர்களைக்காண்பீர்;
காண்பீராயின், அவர்களுக்கு ‘நன்னன்பாற்செல்லுகின்றோம்’ என்று
கூறுமின்; கூறின், அவர்கள் தசைகளையும் கிழங்குகளையும்கொடுத்து
உங்களை நலிந்துதின்னப்பண்ணிப் பாதுகாப்பார்களேயன்றி வருத்த
மாட்டார்கள்; அவற்றையுண்டு அவ்விடத்தில் அவர்கள்போகச்சொ
ன்னவழியையே வழியாகக்கைக்கொண்டுபோமின்; அக்காடு அத்
தன்மையது; அப்பண்பைக்கண்டுமகிழ்ந்து மராமரத்தினது பூங்கொத்
தும் யாமரத்தின்பூவும் ஆகியஇவற்றைத் தளிர்களோடேசேர்த்து
மரல்நாராற்கட்டின கண்ணியைச்சூடி மழைபெய்யப்பெற்றுக் குளிர்ந்
திருக்கும் வழியிலுள்ளநீரைக்குடித்துக் குளித்து, அதனை வழிக்
கும்முகந்துகொண்டுபோமின்; போனால், புல்வேய்ந்த குடிசைகடோ
றுமுள்ள குடிகளிடத்தே, புளிக்கரைத்தஉலையிலே அவரைவிதை,
மூங்கிலரிசி, நெல்லரிசி இவற்றைச் சொரிந்துஆக்கின புளியங்
கூழைப் பகலில் வழிவந்தவருத்தந்தீரும்படி இராத்திரி உணவாகப்
பெறுவீர்; பெற்று இளைப்பாறி அவ்விடத்தே சிலநாள்தங்குவீ
ராயின், இனமாவோடு சோற்றுருண்டையை உள்ளீடாக நெய்விழு
தைக்கொண்டு உண்ணும்படி அவர்கள்கொடுக்க நாடோறும்பெறு
வீர்; அவற்றைப்பெற்று உண்டு, பனிநீங்கும்படி விறகுகளைஎரித்
துக் குளிர்காய்ந்து நன்றாகத்தூங்கிவிட்டு விடியற்காலத்தில் நிமித்
தம் பார்த்துக்கொண்டு போவீராக; போனால், காஞ்சிமரத்தினையும்
நீர்வந்துபொருகின்ற அறுகம்புல்பரந்த இடங்களையும் விளைநிலங்களை
யும் சோலைகளையும் இடைச்சேரிகளையுமுடைய நன்னனது தண்பணை
நாடு, நீங்கள் பலநாள்தங்கினாலும் ஒருநாள்நின்றாலும் யாழின்
பண்ணை மாறிவாசித்தாற்போன்ற நுகர்தற்கு நன்றாகிய பலபொ
ருள்களை ஊர்கடோறும்உடையது. அந்நாட்டையடைந்தால், காலை
யில் உழவர் நெல்லைமுகந்துதராநிற்பர். கள்விற்கும்வலையருடைய
மகளிர் வாளைமீனின்தசையை வரான்மீனின்தசையோடே கலந்து
கொடுத்து நெல்முளையாலாக்கின கள்ளின்தெளிவையும் கொடுப்பக்

களங்கடோறும் அவற்றைப்பெறுகுவிர்; அவற்றைப்பெற்றபின்பு,
இவை நன்னனுக்கும் உணவாதற்குஅமையுமென்று கண்டோர்மய
ங்கும்படி அங்கங்கேயுள்ளவர்களிட்ட இறைச்சிகளோடுகலந்துஆக்
கினசோற்றைச் சுற்றங்களோடு உண்டு மருதப்பண்ணைவாசித்து இளை
ப்பாறிவிட்டுப்போமின்; போய், நெல்லறுப்பார்கொட்டும்தண்ணுமை
க்குஅஞ்சிய எருமைக்கடா நும்மேல்வாராதபடி பாதுகாத்துக்கொ
ண்டு சேயாற்றின்கரைவழியேசெல்லுமின்; சென்றால், சோலைகளை
யும் மதிலையும் திருநாளென்றுகூறும்படி சனங்கள்அடர்ந்து இடம்
பெறாத கடைவீதியையும் பலகவர்த்தன்மையையுடைய குறுந்தெருக்
களையும் பழங்குடிகளையுடையனவாய் மிகவுயர்ந்தமாடங்களை இருபுற
த்திலும்பெற்று ஆறுபோலத்தோன்றும் பெருந்தெருக்களையுமுடைய
தாய்ப் பொருட்டிரள்நிலைபெற்ற அவனுடையபழையவூர் மிகவும்
தூரியதன்று. அவ்வூரிற்சென்று பகைவரைவெல்லும்வீரர்கள் வேலை
ச்சாத்திவைத்திருக்கும் பலதெற்றுவாசல்களையுடைய கோபுரவாயி
லில் ஐயமின்றிப்புகுவீராக; புகுந்துசென்றால், அம்பலங்களில் அய
லூரிலிருந்துவந்து தங்குவோராகிய கூத்தர்முதலியோர் உங்களைக்
கண்டு, "இவர்கள் நன்னனைப்பார்த்தற்குவருபவர்கள்" என்றுகருதி,
தனியேஇருந்த தங்கள்வருத்தம்போம்படி உங்களை விருந்தினராக
எண்ணி எதிர்கொள்ளுவார்கள்; நீங்கள் அவர்களோடு அளவளாவி
யிருந்துவிட்டு, பின், ஆமான்கன்றும் காடிக்குட்டியும் முதுகிடத்தே
கால்களையுடைய எண்கால்வருடைக்கிடாயும் பாம்பின்வலியைக்கெடு
த்த கீரிப்பிள்ளையும் மரையான்குழவியும் ஆண்உடும்பும் மயிலும் காட்
டுக்கோழிச்சேவலும் பலாப்பழமும் மாம்பழமும் நறைக்கொடியும்
நூற்றைக்கிழங்கும் கற்பூரமும் மிக்கவிலையுள்ளமாணிக்கமும் யானைக்
கொம்புகளும் காந்தட்பூவும் புன்னைப்பூவும் மஞ்சாடிப்பூவும் சந்தன
மும் மிளகின்காய்க்குலையும் மூங்கிற்குழாயிலே முற்றினதேனாற்செ
ய்த கள்ளின்தெளிவும் மூங்கிற்குழாயிலேதோய்த்த எருமைத்தயிரும்
தேனடையும் ஈரப்பலாவின்பழமும் ஆகியஇவைகள், வருபவர்களால்
நன்னனுக்குக் கையுறையாகவைக்கப்பெற்றிருத்தலின், காவிரிநதி
கடலொடுகலக்கும் புகாரைப்போன்ற அரண்மனைவாயிலை அடைந்து,
பின் அரண்மனைமுற்றத்தைஅணுகி, முழவுஒலிப்பப் பெருவங்கிய
முழங்க யாழ்நரம்பின்ஓசையுடனே ஒத்துப்பாடுபவரும் தலைவனைக்
கண்டாற் செய்யக்கடவதனை அறிந்தவரும் பழையமுறைமையினின்
றும் தப்பாதவருமாகியவிறலியர், முதலில் கடவுளைவாழ்த்தினபின்பு,
நீங்கள் பாடவேண்டியபுதியபாட்டினைப் பாடிமுடித்துவிட்டு நன்னனை

நோக்கி, "உலகமுள்ளளவளவும்கீர்த்திநிற்கும்படிகொடுப்பதாகிய கடப்பாட்டைமுடித்த தலைமையையுடையோனே" என்றுசொல்லி, பின்பு வெற்றியாலுண்டாகும் பலவகைப்புகழ்களையும் ஐம்பொறிகளையும் தன்வயமாக்கிய அவன்வெற்றியையும்புகழ்ந்து, உங்களுடையமனத்திலுள்ள மற்றப்புகழ்களையும்பாடுமின்; அவற்றை முற்றக்கேட்டற்கும் உடன்பாடில்லாதவனாகி அவன் உங்களைநோக்கி, "என்மீதுள்ள விருப்பத்தால் நீவிர் இங்குவந்ததே அமையும்; வழிவந்தவருத்தம் நுமக்கு மிகுதியாகவுள்ளது" எனமுகமன்கூறி, பின் சான்றோர்பலருடன் சமயமிருக்குமண்டபத்தே தான் இருந்து, "உயர்ந்தஅரசவுரிமையையும் நல்ல அமைச்சர்முதலியோரையும் பரந்தநாட்டினையும் நுண்ணிய அறிவினையுமுடையராயிருந்தும், இரந்தோர்க்கு, 'யாம்வறுமையையுடையேம்' என்றுகூறி மறித்தகையினையுடையராய்த் தம் பெயரைத் தம்மொடுகொண்டு முற்றக்கெட்ட அரசர், சேயாற்றுமணலினும்பலர்; அதனால், நம்முடையவாழ்நாள் புகழோடேகழிவதாக" என்றுகருதிக் கொடுத்தற்றொழிலிலே விரிந்தஉள்ளத்தோடே பரிசில்பெறுதற்குவிரும்பிச்சென்ற உம்மைக்காட்டிலும் தான்மிகமகிழ்ந்து இனிமையாக உங்களைப்பார்த்து நூலின்போக்குவரவுதெரியாத நுண்ணிய உடைகளை உங்களுடையஇடையிலே உடுக்கச்செய்து அவ்விடத்தே நீங்கள் பலநாள் தங்குவீராயினும் இனியதசைகளையும் வெண்ணெல்அரிசிகளையும் முட்டில்லாமல் முதனாள்போன்றவிருப்பத்தோடேதரப் பெறுகுவீர்; பெற்று அவ்விடத்தில், 'எம்முடையவூர்க்குப்போகக்கருதுகின்றேம்' என்று அவன்பொறுக்கும்படி மெல்லெனச்சொல்லி விடைகேட்பீராயின், அவன் இயல்பாகியகொடைத்தொழிலாலே வளம்பிழைப்பறியாதபடி நிதியத்தோடே தேர்கள் யானைகள் பசுத்திரள்கள் குதிரைகள் ஆகிய இவற்றையெல்லாம், உங்களிலே தலைவனாகூடதன் பொற்றாமரையைச்சூட, விறலியர் பேரணிகலங்களைப்பூண, பரிசிலாகக்கொடுத்துப் போகச்சொல்லுவன்; ஆதலால், விரைந்துசென்று அவன்பாற் பரிசில்பெற்று வாழ்வீராக.

# *மலைபடுகடாம்.

## நச்சினார்க்கினியருரையும் விசேடக்குறிப்பும்.

திருமழை தலைஇய விருணிற விசும்பின்
விண்ணதி ரிமிழிசை கடுப்பப் பண்ணமைத்துத்
திண்வார் விசித்த முழவொ டாகுளி
நுண்ணுருக் குற்ற விளங்கடர்ப் பாண்டில்
மின்னிரும் பீலி யணித்தழைக் கோட்டொடு
கண்ணிடை விடுத்த களிற்றுயிர்த் தூம்பி
னிளிப்பயி ரிமிருங் குறும்பரந் தூம்பொடு
விளிப்பது கவருந் தீங்குழ லுதைஇ
நடுவுநின் றிசைக்கு மரிக்குரற் றட்டை
கடிகவர் பொலிக்கும் வல்வா யெல்லரி
நொடிதரு பாணிய பதலையும் பிறவுங்
கார்கோட் பலவின் காய்த்துணர் கடுப்ப
நேர்சீர் சுருக்கிக் காய கலப்பையிர்
கடுக்கலித் தெழுந்த கண்ணகன் சிலம்பிற்
படுத்துவைத் தன்ன பாறை மருங்கி
னெடுத்துநிறுத் தன்ன விட்டருஞ் சிறுநெறி
தொடுத்த வாளியர் துணைபுணர் கானவ
ரிடுக்கண் செய்யா தியங்குந ரியக்கு
மடுக்கன் மீமிசை யருப்பம் பேணா
திடிச்சுர நிவப்பி னியவுக்கொண் டொழுகித்
தொடித்திரி வன்ன தொண்டுபடு திவவிற்
கடிப்பகை யனைத்துங் †கேள்வி போகாக்
குரலோர்த்துத் தொடுத்த சுகிர்புரி நரம்பி
னரலை தீர வுரீஇ வரகின்
குரல்வார்ந் தன்ன நுண்டுளை யிரீஇச்
சிலம்பமை பத்தல் பசையொடு சேர்த்தி
யிலங்குதுளை செறிய வாணி முடுக்கிப்

இந்நூலுக்குக் கூத்தராற்றுப்படையெனவும் பெயருண்டு.
கேள்விபோகாதெனவும் பாடம்.

புதுவது புனைந்த வெண்கை யாப்பமைத்துப்
புதுவது போர்த்த பொன்போற் பச்சை
வதுவை நாறும் வண்டுகம ழைம்பான்
மடந்தை மாண்ட நுடங்கெழி லாகத்
தடங்குமயி ரொழுகிய வவ்வாய் கடுப்ப
வகடுசேர்பு பொருந்தி யளவினிற் றிரியாது
கவடுபடக் கவைஇய சென்றுவாங் குந்தி
நுணங்கர நுவறிய நுண்ணீர் மாமைக்
களங்கனி யன்ன கதழ்ந்துகிள ருருவின்
வணர்ந்தேந்து மருப்பின் வள்ளுயிர்ப் பேரியா
ழுமைவரப் பண்ணி யருநெறி திரியா
திசைபெறு திருவின் வேந்தவை யேற்பத்
துறைபல முற்றிய பைதீர் பாணரொ
டுயர்ந்தோங்கு பெருமலை யூறின் றேறலின்
மதந்தபு ஞமலி நாவி னன்ன
துளங்கியன் மெலிந்த கல்பொரு சீறடிக்
கணங்கொ ளோகையிற் கதுப்பிகுத் தசைஇ
விலங்குமலைத் தமர்ந்த சேயரி நாட்டத்
திலங்குவளை விறலியர் நிற்புறஞ் சுற்றக்
கயம்புக் கன்ன பயம்படு தண்ணிழற்
புனல்கால் கழீஇய மணல்வார் புறவிற்
புலம்புவிட் டிருந்த புனிறில் காட்சிக்
கலம்பெறு கண்ணுளர் ஒக்கற் றலைவ
தூமலர் துவன்றிய கரைபொரு நிவப்பின்
மீமிசை நல்யாறு கடற்படர்ந் தாஅங்
கியாமவ ணின்றும் வருது நீயிருங்
கனிபொழி கானங் கிளையொ டுணீஇய
துனைபறை நிவக்கும் புள்ளின மானப்
புனைதார் பொலிந்த வண்டுபடு மார்பின்
வனைபுனை யெழில் ... வாங்கமைத் திரடோண்
மலர்போன் மழைக்கண் மங்கையர் கணவன்
முனைபாழ் படுக்குந் துன்னருந் துப்பி
னிசைநுவல் வித்தி னசையே ருழவர்க்குப்
புதுநிறை வந்த புனலஞ் சாயன்
மதிமா றோரா நன்றுணர் சூழ்ச்சி

வின்னவி றடக்கை மேவரும் பெரும்பூ
ணன்னன்சேய் நன்னற் படர்ந்த கொள்கையொ
டுள்ளினிர் சேறி ராயிற் பொழுதெதிர்ந்த
புள்ளினிர் மன்ற வெற்றாக் குறுதலி
னாற்றி னளவு மசையுநற் புலமும்
வீற்றுவளஞ் சுரக்குமவ னாடுபடு வல்சிய
மலையுஞ் சோலையு மாபுகல் கானமுந்
தொலையா நல்லிசை யுலகமொடு நிற்பப்
பலர்புறங் கண்டவ ரருங்கலந் தரீஇப்
புலவோர்க்குச் சுரக்குமவ னீகை மாரியு
மிகழுநர்ப் பிணிக்கு மாற்றலும் புகழுநர்க்
கரசுமுழு துகொடுப்பினு மமரா நோக்கமொடு
தூத்துளி பொழிந்த பொய்யா வானின்
வீயாது சுரக்குமவ னாண்மகி ழிருக்கையு
நல்லோர் குழீஇய நாநவி லவையத்து
வல்லா ராயினும் புறமறைத்துச் சென்றோரைச்
சொல்லிக் காட்டிச் சோர்வின்றி விளக்கி
நல்லிதி னியக்குமவன் சுற்றத் தொழுக்கமு
நீரகம் பனிக்கு மஞ்சுவரு கடுந்திறற்
பேரிசை நவிர மேஎ யுறையுங்
காரி யுண்டிக் கடவுள தியற்கையும்
பாயிரு ணீங்கப் பகல்செய்யா வெழுதரு
ஞாயி றன்னவவன் வசையில் சிறப்பு
மிகந்தன வாயினுந் தெவ்வர் தேஎ
நுகம்படக் கடந்து நூழி லாட்டிப்
புரைதோல் வரைப்பின வேனிழற் புலவோர்க்குக்
கொடைக்கட னிறுத்தவவன் றொல்லோர் வரவு
மிரைதேர்ந் திவருங் கொடுந்தாண் முதலையொடு
திரைபடக் குழிந்த கல்லகழ் கிடங்கின்
வரைபுரை நிவப்பின் வான்றோ யிஞ்சி
யுரைசெல வெறுத்தவவன் மூதூர மாலையுங்
கேளினி வேளைநீ முன்னிய திசையே
மிகுவளம் பழுநிய யாணர் வைப்பிற்
புதுவது வந்தன் றிதுவதன் பண்பே
வான மின்னு வசிவுபொழிய வானா

திட்ட மெல்லாம் பெயர்ந்தாங்கு விளையப்
பெயலொடு வைகிய வியன்க ணிரும்புனத்
தகலிரு விசும்பி னாஅல் போல
வாலிதின் விரிந்த புன்கொடி முசுண்டை
நீலத் தன்ன விதைப்புன மருங்கின்
மகுளி பாயாது மலிதுளி தழாலி
னகளத் தன்ன நிறைசுனைப் புறவிற்
கௌவை போகிய கருங்காய்ப் பிடியேழ்
நெய்கொள வொழுகின பல்கவ ரீரெண்
பொய்பொரு கயமுனி முயங்குகை கடுப்பக்
கொய்பத முற்றன *குலவுக்குர லேனல்
விளைதயிர்ப் பிதிர்வின் வீயக ருவிதொறுங்
குளிர்புரை கொடுங்காய் கொண்டன வவரை
மேதி யன்ன கல்பிறங் கியவின்
வாதிகை யன்ன கவைக்கதி ரிறைஞ்சி
யிரும்பு கவர்வுற்றன பெரும்புன வரகே
பால்வார்பு கெழீஇப் பல்கவர் வளிபோழ்பு
வாலிதின் விளைந்தன வைவனம் வெண்ணெல்
வேலீண்டு தொழுதி யிரிவுற் றென்னக்
காலுறு துவைப்பிற் கவிழ்க்கனைத் திறைஞ்சிக்
குறையறை வாரா நிவப்பி னறையுற்
றாலைக் கலமருந் தீங்கழைக் கரும்பே
புயற்புனிறு போகிய பூமலி புறவி
னவற்பதங் கொண்டன வம்பொரிந் தோரை
தொய்யாது வித்திய துளர்படு துடவை
யையவி யமன்ற வெண்காற் செறுவின்
மையென விரிந்தன நீணறு நெய்தல்
செய்யாப் பாவை வளர்ந்துகவின் முற்றிக்
காயங் கொண்டன விஞ்சி மாவிருந்து
வயவுப்பிடி முழந்தாள் கடுப்பக் குழிதொறும்
விழுமிதின் வீழ்ந்தன கொழுங்கொடிக் கவலை
காழ்மண் டெஃகங் களிறுமுகம் பாய்ந்தென
வாழ்மல ரொழிமுகை யுயாமுகந் தோயத்
துறுகல் சுற்றிய சோலை வாழை

* குலவுக்குரலெனவும் பாடம்.

யிறங்குகுலை முறுகப் பழுத்த பயம்புக்
கூழுற் றலமரு முந்தூ ழகலறைக்
கால மன்றியு மரம்பயன் கொடுத்தலிற்
காலி னுதிர்ந்தன கருங்கனி நாவன்
மாறுகொள வொழுகின ஊறுநீ ருயவை
நூறொடு குழீஇயின கூவை சேறுசிறந்
துண்ணுநர்த் தடுத்தன தேமாப் புண்ணரிந்
தரலை யுக்கன நெடுந்தா ளாசினி
விரலூன்று படுக ணாகுளி கடுப்பக்
குடிஞை யிரட்டு நெடுமலை யடுக்கத்துக்
கீழு மேலுங் கார்வாய்த் தெதிரிச்
சுரஞ்செல் கோடியர் முழவிற் றூங்கி
முரஞ்சுகொண் டிறைஞ்சின வலங்குசினைப் பலவே
தீயி னன்ன வொண்செங் காந்தட்
டுவற கலித்த புதுமுகை யூன்செத்
தறியா தெடுத்த புன்புறச் சேவ
லூஉ னன்மையி னுண்ணா துகுத்தென
நெருப்பி னன்ன பல்லிதழ் தாஅய்
வெறிக்களங் கடுக்கும் வியலறை தோறு
மணவில கமழு மாமலைச் சாரற்
றேனினர் கிழங்கின ரூனார் வட்டியர்
சிறுகட் பன்றிப் பழுதுளி போக்கிப்
பொருதுதொலை யானைக் கோடுசீ ராகத்
தூவொடு மலிந்த காய கானவர்
செழும்பல யாணர்ச் சிறுகுடிப் படினே
யிரும்பே ரொக்கலொடு பதமிகப் பெறுகுவி
ரன்றவ ணசைஇ யற்சேர்ந் தல்கிக்
கன்றெரி யொள்ளிணர் கடும்பொடு மலைந்து
சேந்த செயலைச் செப்பம் போகி
யலங்குகழை நரலு மாரிப் படுகர்ச்
சிலம்படைந் திருந்த பாக்க மெய்தி
நோனாச் செருவின் வலம்படு நோன்றாண்
மான விறல்வேள் வயிரிய மெனினே
நும்மில் போல நில்லாது புக்குக்
கிழவிர் போலக் கேளாது கெழீஇச்

சேட்புலம் பகல வினிய கூறிப்
பருஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு
குருஉக்க ணிறடிப் பொம்மல் பெறுகுவிர்
ஏறித் தருஉ மிலங்குமலைத் தாரமொடு
வேய்ப்பெயல் விளையுட் டேக்கட் டேறல்
குறைவின்று பருகி நறவுமகிழ்ந்து வைகறைப்
பழஞ்செருக் குற்றநு மனந்த றீர
வருவி தந்த பழஞ்சிதை வெண்காழ்
வருவிசை தவிர்த்த கடமான் கொழுங்குறை
முளவுமாத் தொலைச்சிய பைந்நிணப் பிளவை
பிணவுநாய் முடுக்கிய தடியொடு விரைஇ
வெண்புடைக் கொண்ட துய்த்தலைப் பழனி
னின்புளிக் கலந்து மாமோ ராகக்
கழைவளர் நெல்லி னரியுலை யூழ்த்து
வழையமை சாரல் கமழத் துழைஇ
நறுமல ரணிந்த நாறிரு முச்சிக்
குறமக ளாக்கிய வாலவிழ் வல்சி
யகமலி யுவகை யார்வமொ டளைஇ
மகமுறை தடுப்ப மனைதொறும் பெறுகுவிர்
செருச்செய் முன்பிற் குரிசின் முன்னிய
பரிசின் மறப்ப நீடலு முரியிர்
ரனைய தன்றவன் மலைமிசை நாடே
நிரையிதழ்க் குவளைக் கடிவீ தொடினும்
வரையா மகளி ரிருக்கை காணினு
முயிர்செல வெம்பிப் பனித்தலு முரியிர்
பலநா ணில்லாது *நிலனொடு படர்மின்
விளைபுன நிழத்தலிற் கேழ லஞ்சிப்
புழைதொறு மாட்டிய விருங்க லரும்பொறி
யுடைய வாறே நள்ளிரு ளலரி
விரிந்த விடியல் வைகினிர் கழிமி
னளிந்து பலர் வழங்காச் செப்பந் துணியின்
முரம்புகண் ணுடைந்த பரலவற் போழ்விற்
காந்துபாம் பொடுங்கும் பயம்புமா ருளவே
குறிக்கொண்டு மரங் கொட்டி நோக்கிச்

* நிலனொடுபடாமையெனவும் பாடம்.

செறிதொடி விறலியர் கைதொழூஉப் பழிச்ச
வறிது நெறியொரீஇ வலஞ்செயாக் கழிமின்
புலந்துபுனிறு போகிய புனஞ்சூழ் குறவ
ருயர்நிலை யிதண மேறிக் கைபுடையூஉ
வகன்மலை யிறும்பிற் றுவன்றிய யானைப்
பகனிலை தளர்க்கும் கவணுமிழ் கடுங்க
லிருவெதி ரீர்ங்கழை தத்திக் கல்லெனக்
கருவிர லூகம் பார்ப்பொ டிரிய
வுயிர்செகு மரபிற் கூற்றத் தன்ன
வரும்விசை தவிராது மரமறையாக் கழிமி
னுரவுக்களிறு கரக்கு மிடங்க ரொடுங்கி
யிரவி னன்ன விருடூங்கு வரைப்பிற்
குமிழி சுழலுங் குண்டுகய முடுக்க
ரகழிழிந் தன்ன கான்யாற்று நடவை
வழூஉ மருங்குடைய வழாஅ லோம்பிப்
பரூஉக்கொடி வலந்த மதலை பற்றித்
துருவி னன்ன புன்றலை மகாரோ
டொருவி ரொருவி ரோம்பினிர் கழிமி
னழுந்துபட் டலமரும் புழகமல் சாரல்
விழுந்தோர் மாய்க்குங் குண்டுகயத் தருகா
வழும்புகண் புதைத்த நுண்ணீர்ப் பாசி
யடிநிலை தளர்க்கு மருப்பமு முடைய
முழுநெறி யணங்கிய நுணங்கோல் வேரலோ
டெருவை மென்கோல் கொண்டனிர் கழிமி
னுயாநலை மாக்கற் புகர்முகம் புதைய
மாரியி னிகுதரு வில்லுமிழ் கடுங்கணைத்
தாமொடு பொலிந்த வினைநவில் யானைச்
சூழியிற் பொலிந்த சுடர்ப்பூ விலஞ்சி
யோர்யாற் றியவின் மூத்த புரிசைப்
பராவரு மரபிற் கடவுட் காணிற்
றொழாநிர் கழியி னல்லது வறிது
நும்மியந் தொடுக லோம்புமின் மயங்குதுளி
மாரி கலையுமவன் மல்லல் வெற்பே
யலகை யன்ன வெள்வேர்ப் பீலிக்
கலவ மஞ்ஞை கட்சியிற் றளரினுங்

கடும்பறைக் கோடியர் மகாஅ ரன்ன
நெடுங்கழைக் கொம்பர்க் கடுவ னுகளினும்
நேர்கொ ணெடுவரை நேமியிற் றொடுத்த
சூர்புக லடுக்கத்துப் பிரசங் காணினு
ஞெரேரென நோக்க லோம்புமி னுரித்தன்
நிரைசெலன் மெல்லடி நெறிமாறு படுகுவிர்
வரைசேர் வகுந்திற் கானத்துப் படினே
கழுதிற் சேணோ னேவொடு போகி
யிழுதி னன்ன வானிணஞ் செருக்கி
நிறப்புண் கூர்ந்த நிலந்தின் மருப்பி
னெறிகெடக் கிடந்த விரும்பிண ரெருத்தி
னிருடுணிந் தன்ன வேனங் காணின்
முளிகழை யிழைந்த காடுபடு தீயி
னளிபுகை கமழா திறாயினிர் மிசைந்து
துகளறத் துணிந்த மணிமரு டெண்ணீர்க்
குவளையம் பைஞ்சுனை யசைவிடப் பருகி
மிகுத்துப பதங்கொண்ட பரூஉக்கட் பொதியினிர்
புட்கை போகிய புன்றலை மகாரோ
டற்கிடை கழித லோம்பி யாற்றறு
மில்புக் கன்ன கல்லளை வதிமி
னற்சேர்ந் தல்கி யசைத லோம்பி
வான்கண் விரிந்த விடிய லேற்றெழுந்து
கானகப் பட்ட செந்நெறிக் கொண்மின்
கயங்கண் டன்ன வகன்பை யங்கண்
மைந்துமலி சினத்த களிறுமத னழிக்குந்
துஞ்சுமரங் கடுக்கு மாசுணம் விலங்கி
யிகந்துசேட் கமழும் பூவு முண்டோர்
மறந்தமை கல்லாப் பழனுமூ ழிறந்து
பெரும்பயங் கழியினு மாந்தர் துன்னா
ரிருங்கால் வீயும் பெருமரக் குழாமு
மிடனும் வலனு நினையினிர் நோக்கிக்
குறியறிந் தவையவை குறுகாது கழிமின்
கோடுபல முரஞ்சிய கோளி யாலத்துக்
கூடியத் தன்ன குரல்புணர் புள்ளி
னாடுகா ணனந்தலை மென்மெல வகன்மின்

மாநிழற் பட்ட மரம்பயி லிறும்பின்
ஞாயிறு தெரியா மாக நனந்தலைத்
தேஎ மருளு மமைய மாயினு
மிறாஅ வன்சிலையர் மாதேர்பு கொட்குங்
குறவரு மருளுங் குன்றத்துப் படினே
யகன்கட் பாறைத் துவன்றிக் கல்லென
வியங்க லோம்பிநு மியங்க டொடுமின்
பாடி னருவிப் பயங்கெழு மீமிசைக்
காடுகாத் துறையுங் கானவ ருளரே
நிலைத்துறை வழீஇய மதனழி மாக்கள்
புனற்படு பூசலின் விரைந்துவல் லெய்தி
யுண்டற் கினிய பழனுங் கண்டோர்
மலைதற் கினிய பூவுங் காட்டி
யூறு நிரம்பிய வாறவர் முந்துற
நும்மி னெஞ்சத் தவலம் வீட
விம்மென் கடும்போ டினியி ராகுவி
ரறிஞர் கூறிய மாதிரங் கைக்கொள்பு
குறியவு நெடியவுங் குழீஇப் புதுவோர்
நோக்கினும் பனிக்கு நோய்கூ ரடுக்கத்
தலர்தாய வரிநிழ லசையினி ரிருப்பிற்
பலதிறம் பெயர்பவை கேட்குவிர் மாதோ
கலைதொடு பெரும்பழம் புண்கூர்ந் தூறலின்
மலைமுழுதுங் கமழு மாதிரந் தோறு
மருவி *நுகரும் வானர மகளிர்
வருவிசை தவிராது வாங்குபு குடைதொறுந்
தெரிஇமிழ் கொண்டநு மியம்போ லின்னிசை
யிலங்கேந்து மருப்பி னினம்பிரி யொருத்தல்
விலங்கன் மீமிசைப் பணவைக் கானவர்
புலம்புக் குண்ணும் புரிவளைப் பூசல்
சேயளைப் பள்ளி யெஃகுறு முள்ளி
னெய்தெற விழுக்கிய கானவ ரழுகை
கொடுவரி பாய்ந்தெனக் கொழுநர் மார்பி
னெடுவசி விழுப்புண் டணிமார் காப்பென
வறல்வாழ் கூந்தற் கொடிச்சியர் பாட

* நுகக்குமென்றும் பாடம்.

றலைநாட் பூத்த பொன்னிணர் வேங்கை
மலைமா ரிடூஉ மேமப் பூசல்
கன்றரைப் பட்ட கயந்தலை மடப்பிடி
வலிக்குவரம் பாகிய கணவ னோம்பலி
னொண்கேழ் வயப்புலி பாய்ந்தெனக் கிளையொடு
நெடுவரை யியம்பு மிடியுமிழ் தழங்குகுரல்
கைக்கோண் மறந்த கருவிரன் மந்தி
யருவிடர் வீழ்ந்ததன் கல்லாப் பார்ப்பிற்கு
முறிமே யாக்கைக் கிளையொடு துவன்றிச்
சிறுமை யுற்ற களையாப் பூசல்
கலைகை யற்ற காண்பி னெடுவரை
†நிலைபெய் திட்ட மால்புநெறி யாகப்
பெரும்பயன் றொகுத்த தேங்கொள் கொள்ளை
யருங்குறும் பெறிந்த கானவ ருவகை
திருந்துவே லண்ணற்கு விருந்திறை சான்மென
நறவுநாட் செய்த குறவர்தம் பெண்டிரொடு
மான்றோற் சிறுபறை கறங்கக் கல்லென
வான்றோய் மீமிசை யயருங் குரவை
நல்லெழி னெடுந்தே ரியவுவந் தன்ன
கல்யா றொலிக்கும் விடர்முழங் கிரங்கிசை
நெடுஞ்சுழிப் பட்ட கடுங்கண் வேழத்
துரவுச்சினந் தணித்துப் பெருவெளிற் பிணிமார்
விரவுமொழி பயிற்றும் பாக ரோதை
யொலிகழைத் தட்டை புடையுநர் புனந்தொறுங்
கிளிகடி மகளிர் விளிபடு பூச
லினத்திற் றீர்ந்த துளங்கிமி னல்லேறு
மலைத்தலை வந்த மரையான் கதழ்விடை
மாறா மைந்தி னூறுபடத் தாக்கிக்
கோவலர் குறவரோ டொருங்கியைந் தார்ப்ப
வள்ளிதழ்க் குளவியுங் குறிஞ்சியுங் குழைய
நல்லேறு பொருஉங் கல்லென் கம்பலை
காந்தட் டுடுப்பிற் கமழ்மட லோச்சி
வண்கோட் பலவின் சுளைவிளை தீம்பழ
முண்டுபடு மிச்சிற் காழ் பயன்கொண்மார் கன்று

† நிலைபுணர்ந்திட்டவென்றும் பாடம்.

கடாஅ வுறுக்கு மகாஅ ரோதை
மழைகண் டன்ன வாலைதொறு ஞெரேரெனக்
கழைகண் ணுடைக்குங் கரும்பி னேத்தமுந்
தினைகுறு மகளி ரிசைபடு வள்ளையுஞ்
சேம்பு மஞ்சளு மோம்பினர் காப்போர்
பன்றிப் பறையுங் குன்றகச் சிலம்பு
மென்றிவ் வனைத்து மியைந்தொருங் கீண்டி
யவலவு மிசையவுந் துவன்றிப் பலவுட
னலகைத் தவிர்த்த வெண்ணருந் திறத்த
மலைபடு கடாஅ மாதிரத் தியம்பக்
குரூஉக்கட் பிணையற் கோதை மகளிர்
முழவுத்துயி லறியா வியலு ளாங்கண்
விழவி னற்றவ ணனையன் கண் வெற்ப
கண்ணண் டண்ணெனக் கண்டுங் கேட்டு
முண்டற் கினிய பலபா ராட்டியு
மின்னும் வருவ தாக நமக்கெனத்
தொன்முறை மரபினி ராகிப் பன்மாண்
செருமிக்குப் புகலுந் திருவார் மார்ப
னுருமுரா றுகருவிய பெருமலை பிற்பட
விறும்பூது கஞலிய வின்குரல் விறலியர்
நறுங்கா ரடுக்கத்துக் குறிஞ்சி பாடிக்
கைதொழூஉப் பரவிப் பழிச்சினிர் கழிமின்
மைபடு மாமலை பனுவலிற் பொங்கிக்
கைதோய் வன்ன கார்மழைத் தொழுதி
தூஉ யன்ன துவலை துவற்றலிற்
றேஎந் தேறாக் கடும்பரிக் கடும்பொடு
காஅய்க் கொண்டநம் மியந்தொய் படாமற்
கூவ லன்ன விடரகம் புகுமி
னிருங்க விகுப்பத் திறுவரை சேரா து
குன்றிடம் பட்ட வாரிட ரழுவத்து
நின்று நோக்கினுங் கண்வாள் வெளவு
மண்கணை முழவின் றலைக்கோல் கொண்டு
தண்டு காலாகத் தளர்த லோம்பி
யூன்றினிர் கழிமி னூறுதவப் பலவே
யயில்காய்ந் தன்ன கூர்ங்கற் பாறை

வெயில்புறந் தரூஉ மின்னா வியக்கத்துக்
கதிர்சினந் தணிந்த வமையத்துக் கழிமி
னுரைசெல வெறுத்தவவ னீங்காச் சுற்றமொடு
புரைதவ வுயரிய மழைமருள் பஃறோ
லரசுநிலை தளர்க்கு மருப்பமு முடைய
பின்னி யன்ன பிணங்கரி னுழைதொறு
முன்னோன் வாங்கிய கடுவிசைக் கணைக்கோ
லின்னிசை நல்யாழ்ப் பத்தரும் விசிபிணி
மண்ணார் முழவின் கண்ணு மோம்பிக்
கைபிணி விடாது பைபயக் கழிமின்
களிறுமலைந் தன்ன கண்கூடு துறுகற்
றளிபொழி கானந் தலைதவப் பலவே
யொன்னாத் தெவ்வ ருலைவிடத் தார்த்தென
நல்வழிக் கொடுத்த நாணுடை மறவர்
செல்லா நல்லிசைப் பெயரொடு நட்ட
கல்லேசு கவலை யெண்ணுமிகப் பலவே
யின்புறு முரற்கை நும்பாட் டயிருப் பாகத்
தொன்றொழுகு மரபினு மருப்பிகுத்துத் துனைமின்
பண்டுநற் கறியாப் புலம்பெயர் புதுவிர்
சந்து நீவிப் புன்முடிந் திடுமின்
செல்லுந் தேஎத்துப் பெயர்மருங் கறிமார்
கல்லெறிந் தெழுதிய நல்லரை மராஅத்த
கடவு ளோங்கிய காடேசு கவலை
யொட்டா தகன்ற வொன்னாத் தெவ்வர்
சுட்டினும் பனிக்குஞ் சுரந்தவப் பலவே
தேம்பாய் கண்ணித் தேர்வீசு கவிகை
யோம்பா வள்ளற் படர்ந்திகு மெனினே
மேம்பட வெறுத்தவன் றொஃறிணை மூதா
ராங்கண மற்றே நம்ம னோர்க்கே
யசைவுழி யசைஇ யஞ்சாது கழிமின்
புலியுற வெறுத்ததன் வீழ்பிணை யுள்ளிக்
கலைநின்று விளிக்குங் கான மூழிறந்து
சிலையொலி வெரீஇய செங்கண் மரைவிடை
தலைபிறழ்ந்து கதழு நாறுகொடிப் புறவின்
வேறுபுலம் படர்ந்த வேறுடை யினத்த

வளையான் றீம்பான் மிளைசூழ் கோவலர்
வளையோ ருவப்பத் தருவனர் சொரிதலிற்
பலம்பெறு நசையொடு பதிவயிற் றீர்ந்தநும்
புலம்புசே ணகலப் புதுவி ராகுவிர்
பகர்விரவு நெல்லின் பலவரி யன்ன
தகர்விரவு துருவை வெள்ளையொடு விரைஇக்
கல்லென் கடத்திடைக் கடலி னிரைக்கும்
பல்யாட் டினநிரை யெல்லினிர் புகினே
பாலு மிதவையும் பண்ணாது பெறுகுவிர்
துய்ம்மயி ரடக்கிய சேக்கை யன்ன
மெய்யுரித் தியற்றிய மிதியதட் பள்ளித்
தீத்துணை யாகச் சேந்தனிர் கழிமின்
கூப்பிடு கடக்குங் கூர்நல் லம்பிற்
கொடுவிற் கூளியர் கூவை காணிற்
படியோர்த் தேய்த்த பணிவி லாண்மைக்
கொடியோள் கணவற் படர்ந்திகு மெனினே
தடியுங் கிழங்குந் தண்டினர் தரீஇ
யோம்புந ரல்ல துடற்றுந ரில்லை
யாங்குவியங் கொண்மி னதுவதன் பண்பே
தேம்பட மலர்ந்த மராஅ மெல்லிணரு
மும்ப லகைத்த வொண்முறி யாவுந்
தளிரொடு மிடைந்த காமர் கண்ணி
திரங்குமர நாரிற் பொலியச் சூடி
முரம்பு கண்ணுடைந்த நடவை தண்ணென
வுண்டனி ராடிக் கொண்டனிர் கழிமின்
செவ்வீ வேங்கைப் பூவி னன்ன
வேய்கொ ளரிசி மிதவை சொரிந்த
சுவல்விளை நெல்லி னவரையம் புளிங்கூ
ழற்கிடை யுழந்தநும் வருத்தம் வீட
வகலு ளாங்கட் கழிமிடைந் தியற்றிய
புல்வேய் குரம்பைக் குடிதொறும் பெறுகுவிர்
பொன்னறைந் தன்ன நுண்ணே ரரிசி
வெண்ணெறிந் தியற்றிய மாக்க ணமலை
தண்ணெ னுண்ணிழு துள்ளீ டாக
வசையினிர் சேப்பி னல்கலும் பெறுகுவிர்

விசையங் கொழித்த பூழி யன்ன
வுண்ணுநர்த் தடுத்த நுண்ணிடி நுவணை
நொய்ம்மா விறகி னுஞ்கிழி மாட்டிப்
பனிசே ணீங்க வினிதுடன் றுஞ்சிப்
புலரி விடியற் புள்ளோர்த்துக் கழிமின்
புல்லரைக் காஞ்சிப் புனல்பொரு புதவின்
மெல்லவ லிருந்த வூர்தொறு நல்லியாழ்ப்
பண்ணுப்பெயர்த் தன்ன காவும் பள்ளியும்
பன்னா ளிற்பினுஞ் சேந்தனிர் செலினு
நன்பல வுடைத்தவன் றண்பணை நாடே
*கண்புமலி பழனங் கமழத் துழைஇ
வலையோர் தந்த விருஞ்சுவல் வாளை
நிலையோ ரிட்ட நெடுநாண் டூண்டிற்
பிடிக்கை யன்ன செங்கண் வராஅற்
றுடிக்க ணன்ன குறையொடு விரைஇப்
பகன்றைக் கண்ணிப் பழையர் மகளிர்
ஞெண்டாடு செறுவிற் றாய்க்கண் வைத்த
விலங்க லன்ன போர்முதற் றொலைஇ
வளஞ்செய் வினைஞர் வல்சி நல்கத்
துளங்குதசும்பு வாக்கிய பசும்பொதித் தேற
லிளங்கதிர் ஞாயிற்றுக் களங்கடொறும் பெறுகுவிர்
முள்ளரித் தியற்றிய வெள்ளரி வெண்சோறு
வண்டுபடக் கமழுந் தேம்பாய் கண்ணித்
திண்டேர் நன்னற்கு மயினி சான்மெனக்
கண்டோர் மருளக் கடும்புட னருந்தி
யெருதெறி களம ரோதையொடு நல்யாழ்
மருதம் பண்ணி யசையினிர் கழிமின்
வெண்ணெ லரிநர் தண்ணுமை வெரீஇச்
செங்க ணெருமை யினம்பிரி யொருத்தல்
கணைசெலன் முன்பொடு கதழ்ந்துவால் போற்றி
வணைகலத் திகிரியிற் குமிழி சுழலுந்
துணைசெலற் றலைவா யோவிறந்து †வரிக்குங்
காணுநர் வயாஅங் கட்கின் சேயாற்றின்

* கண்புமலி, காண்புமலியென்றும் பாடம்.
† பனிக்குமென்றும் பாடம்.

# மலைபடுகடாம்.

யாண ரொருகரைக் கொண்டனிர் கழிய
னிதியந் துஞ்சு நிவந்தோங்கு வரைப்பிற்
பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇ
வியலிடம் பெறாஅ விழுப்பெரு நியமத்
தியாறெனக் கிடந்த தெருவிற் சாறென
விகழுநர் வெரூஉங் கவலை மறுகிற்
கடலெனக் காரென வொலிக்குஞ் சும்மையொடு
மலையென மழையென மாட மோங்கித்
துனிதீர் காதலி னினிதமர்ந் துறையும்
பனிவார் காவிற் பல்வண் டிமிரு
நனிசேய்த் தன்றவன் பழவிறன் மூதூர்
பொருந்தாத் தெவ்வ ரிருந்தலை துமியப்
பருந்துபடக் கடக்கு மொள்வாண் மறவர்
கருங்கடை யெஃகஞ் சாத்திய புதவி
னருங்கடி வாயி லயிரா து புகுமின்
மன்றில் வதியுநர் சேட்புலப் பரிசிலர்
வெல்போர்ச் சேஎய் பெருவிற லுள்ளி
வந்தோர் மன்ற வளியர் தாமெனக்
கண்டோ ரெல்லா மமர்ந்தினிது நோக்கி
விருந்திறை யவரவ ரெதிர்கொளக் குறுகிப்
பரிபுலம் பலைத்தநும் வருத்தம் வீட
வெரிகான் றன்ன பூஞ்சினை மராஅத்த
தொழுதி போக வலிந்தகப் பட்ட
மடநடை யாமான் கயமுனிக் குழவி
யூமை யெண்கின் குடாவடிக் குருளை
மீமிசைக் கொண்ட கவர்பரிக் கொடுந்தாள்
வரைவாழ் வருடை வன்றலை மாத்தக
ரரவுக்குறும் பெறிந்த சிறுகட் டீர்வை
யளைச்செறி யுழுவை கோளுற வெறுத்த
மடக்கண் மரையான் பெருஞ்செவிக் குழவி
யரக்குவிரித் தன்ன செந்நில மருங்கிற்
பரற்றவ ழுடும்பின் கொடுந்தா ளேற்றை
வரைப்பொலிந் தியலு மடக்கண் மஞ்ஞை
கானக் கோழிக் கவர்குரற் சேவல்
கானப் பலவின் முழவுமருள் பெரும்பழ

மிடிக்கலப் பன்ன நறுவடி மாவின்
வடிச்சேறு விளைந்த தீம்பழத் தாரந்
தூவற் கலித்த விவர்நனை வளர்கொடி
காஅய்க் கொண்ட நுகமரு ணூறை
பருஉப்பளிங் குதிர்த்த பலவுறு திருமணி
குரூஉப்புலி பொருத புண்கூர் யானை
முத்துடை மருப்பின் முழுவலி மிகுதிரள்
வளையுடைந் தன்ன வள்ளிதழ்க் காந்த
ணாகந் திலக நறுங்கா ழாரங்
கருங்கொடி மிளகின் காய்த்துணர்ப் பசுங்கறி
திருந்தமை விளைந்த தேக்கட் டேறல்
கானிலை யெருமைக் கழைபெய் தீந்தயிர்
நீனிற வோரி பாய்ந்தென நெடுவரை
நேமியிற் செல்லு நெய்க்க ணிறாஅ
லுடம்புணர்பு தழீஇய வாசினி யனைத்துங்
குடமலைப் பிறந்த தண்பெருங் காவிரி
கடன்மண் டழுவத்துக் கயவாய் கடுப்ப
நோனாச் செருவி னெடுங்கடைத் துவன்றி
வானத் தன்ன வளமலி யானைத்
தாதெருத் ததைந்த முற்ற முன்னி
மழையெதிர் படுகண் முழவுக ணிகுப்பக்
கழைவளர் தூம்பின் கண்ணிட மிமிர
மருதம் பண்ணிய கருங்கோட்டுச் சீறியாழ்
நரம்புமீ திறவா துடன்புணர்ந் தொன்றிக்
கடவ தறிந்த வின்குரல் விறலியர்
தொன்றொழுகு மரபிற் றம்மியல்பு வழாஅ
தருந்திறற் கடவுட் பழிச்சிய பின்றை
விருந்திற் பாணி கழிப்பி நீண்மொழிக்
குன்றா நல்லிசைச் சென்றோ ரும்ப
லின்றிவட் செல்லா துலகமொடு நிற்ப
விடைத்தெரிந் துணரும் பெரியோர் மாய்ந்தெனக்
கொடைக்கட னிறுத்த செம்ம லோயென
வென்றிப் பல்புகழ் விறலோ டேத்திச்
சென்றது நொடியவும் விடாஅ தாசைதர
வந்தது சாலும் வருத்தமும் பெரிதெனப்

பொருமுர ணெதிரிய வயவரொடு பொலிந்து
திருநகர் முற்ற மணுகல் வேண்டிக்
கல்லெ னொக்க னல்வலத் திரீஇ
யுயர்ந்த கட்டி லுருப்பில் சுற்றத்
தகன்ற தாயத் தஃகிய நுட்பத்
திலமென மலர்ந்த கைய ராகித்
தம்பெயர் தம்மொடு கொண்டனர் மாய்ந்தோர்
நெடுவரை யிழிதரு நீத்தஞ்சா லருவிக்
கடவாற் கலுழிக் கட்கின் சேயாற்று
வடுவா ழெக்கர் மணலினும் பலரே
அதனால், புகழொடுங் கழிகநம் வரைந்த நாளெனப்
பரந்திடங் கொடுக்கும் விசும்புதோ யுள்ளமொடு
நயந்தனிர் சென்ற நும்மினுந் தான்பெரி
துவந்த வுள்ளமொ டமர்ந்தினிது நோக்கி
யிழைமருங் கறியா நுழைநூற் கலிங்க
மெள்ளறு சிறப்பின் வெள்ளரைக் கொளீஇ
முடுவ றந்த பைந்நிணத் தடியொடு
நெடுநெ ணெல்லி னரிசி முட்டாது
தலைநா ளன்ன புகலொடு வழிசிறந்து
பலநா ணிற்பினும் பெறுகுவிர் நில்லாது
செல்வேந் தில்லவெந் தொல்பதிப் பெயர்ந்தென
மெல்லெனக் கூறி விடுப்பி னும்முட்
டலைவன் றாமரை மலைய விறலியர்
சீர்கெழு சிறப்பின் விளங்கிழை யணிய
நீரியக் கன்ன நிரைசெல னெடுந்தேர்
வாரிக் கொள்ளா வரைமருள் வேழங்
கறங்குமணி துவைக்கு மேறுடைப் பெருநிரை
பொலம்படைப் பொலிந்த கொய்சுவற் புரவி
நிலந்தினக் கிடந்த நிதியமொ டனைத்து
மிலம்படு புலவ ரேற்றகைந் நிறையக்
கலம்பெயக் கவிழ்ந்த கழறொடித் தடக்கையின்
வளம்பிழைப் பறியாது வாய்வளம் பழுநிக்
கழைவளர் நவிரத்து மீமிசை ஞெரேரென
மழைசுரந் தன்ன வீகை நல்கித்
தலைநாள் விடுக்கும் பரிசின் மலைநீர்
வென்றெழு கொடியிற் றோன்றுங்
குன்றுசூ ழிருக்கை நாடுகிழ வோனே.

## இதன் பொருள்.

1 - 2. *திரு மழை தலைஇய இருள் நிற விசும்பின் விண் அதிர் இமிழ் இசை கடுப்ப*—செல்வத்தையுண்டாக்கும் மழையைப்பெய்த இருண்டநிறத்தையுடைய மேகத்தினது ஆகாயத்திடத்திலேநின்று முழங்குமோசையையொப்ப,

நடுக்கங்கூறவே மிக்கவொலியென்றாயிற்று.

**விசேடக்குறிப்பு.** திரு - செல்வம்; “கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே, யெடுப்பதூஉ மெல்லா மழை” என்பது இங்கே அறியற்பாலது. தலையல் - மழைபெய்துவிடுதல்; “தலைய லென்பது மழை பெய்து விடுதல்”—திவாகரம்; “தலைப்பெய றலைஇய தண்ணறுங் கானம்” (திருமுருகு. க) அதிர்தல் - நடுங்குதல். இவற்றுள் முதலாவதடி, ஆசிரியப்பாவில் நாற்சீரடிவருமென்பதற்கும் அளவடியில் முடுகியலடிவருமென்பதற்கும் உதாரணமாக எடுத்துக்காட்டப்பெற்றது; (தொல். செய். ருஉ, சுஎ - ம் சூ - உரை.)

2 - 3. *பண் அமைத்து திண் வார் விசித்த முழவொடு*—பண்களைத் தன் கண்களிலே உண்டாக்கப்பட்டுத் திண்ணிய வாராலே இறுகவலித்த மத்தளத்தோடே,

“இடக்க ணிளியா வலக்கண் குரலா - நடப்பது தோலியற் கருவியாகும்” என்பதனாற் பண்ணமைத்தென்றார்.

**வி - பு.** கண் - அடிக்கும்பக்கம். விசித்தல், வலித்தல் - இழுத்து இறுகக் கட்டுதல். முழவொலிக்கு மேகத்தினொலி உவமையாதல், இந்நூலிற் பின்வந்துள்ள, “மழையெதிர் படுகண் முழவுகண் ணிகுப்ப” (532) என்பதனாலும் விளங்கும். இளி பஞ்சமமென்றும், குரல் ஷட்ஜமென்றும் வழங்கும்.

3. *ஆகுளி*—சிறுபறையும்,

4. *நுண் உருக்குற்ற விளங்கு அடர் பாண்டில்*—கரைய உருக்குதலுற்ற விளங்கின தகடாகத்தட்டின கஞ்சதாளமும்,

**வி - பு.** அடர் - தகடு. பாண்டில் - வட்டம்; தாளத்திற்கு ஆகுபெயர். “பாண்டில்பண்ணிய” சீவக. (3138.) கஞ்சதாளம் - வெண்கலத்தாளம்.

5. *மின் இரு பீலி அணி தழை கோட்டொடு*—விளங்குகின்ற கரிய பீலியாகிய அழகினையுடைய தழையைக்கட்டின கொம்போடே,

**வி - பு.** பீலியைத் தழையென்று வழங்குவதுமுண்டு. கோடு - கொம்பென்னும் வாத்தியம்.

6. *கண் இடை விடுத்த களிற்று உயிர் தூம்பின்*—கண்களினூடே வெளியாகத்திறந்த யானையின்கைபோலும் நெடுவங்கியத்தோடே,

உயிர் - ஆகுபெயர்; இனி யானை நெட்டுயிர்ப்புக்கொண்டாற்போலும் ஓசையையுடையவென்றுமாம்.

**வி - பு.** கண் - கணு; “கண்விடு தூம்பிற் களிற்றுயிர் தொடுமின்” என்பது (புறநா. 152.) தூம்பு - துளையையுடையவாத்தியம். உயிர்த்தலை

யுடைய மூக்காக இருத்தலின், யானைக்கை உயிரெனப்பட்டது; யானைக்கை மூக்கென்றும் வழங்கும், "நெடுமூக்கிற கரியினுரி மூடிக் கொண்டார்" (தேவாரம்). நெடுவங்கியம் பெருவங்கியமென்றும் வழங்கும் 'களிற்றுயிர்ப் புத்தூம்பின்' எனவும் பாடம்.

7. இளி பயிர் இமிரும் குறு பரம் தூம்பொடு—இளியென்னும்நரம்பி னுடைய ஓசையைத் தானொலிக்கும் குறிய மேலாகிய தூம்போடே,

இது குறுந்தூம்பு. பயிர் - தழைத்தல்.

**வி - பு.** நரம்பு - யாழ்நரம்பு. பயிர் - தழைத்த ஓசைக்காயிற்று. குறுந் தூம்பு - ஒருவகைவாத்தியம்.

8. விளிப்பது கவரும் தீங்குழல் துதைஇ—பாட்டைச் சுருதிகுன்று மற் கைக்கொண்டுநிற்கும் இனிய குழலும் நெருங்கப்பட்டு,

**வி - பு.** விளிப்பது - பாடுவது; "கொம்ப ரிருங்குயில் விளிப்பது காணாய்" (மணிமேகலை, ச - ம காதை, கஙு); "விளியாதான் கூத்தாட்டு" (திரிகடுகம்.) குழல் - புல்லாங்குழல்.

9. நடுவு நின்று இசைக்கும் அரி குரல் தட்டை—கண்களுக்குநடுவே நின்றுஒலிக்கும் நரம்பின்ஓசையையுடைய கரடிகையும்,

இனித் தாளமானத்திடையே நின்றுஒலிக்கும் அரித்தெழுகின்ற ஓசை யையுடையவென்றுமாம்.

**வி - பு.** அரி - நரம்பு. 'கரடிகத்தினொற்போலும் ஓசையையுடைத்தாத லின், இது கரடிகையென்று பெயர்பெறறது' என்பர், அடியார்க்குநல்லார். கண்கள் - கணுக்கள்; இவ்வாத்தியம் மூங்கிலாற்செய்யப்படுவதாதலாற் கண் களுக்கு நடுவென்றார். தாளமானம் - தாளஅளவு.

10 கடி கவர்பு ஒலிக்கும் வல் வாய் எல்லரி—விளக்கத்தையுடைத் தாகிய தாளத்தைக் கைக்கொண்டு ஒலிக்கும் வலிய வாயையுடைய சல்லியும்,

**வி - பு.** கடி - விளக்கம்; ஆகுபெயரால் தாளத்திற்குப் பெயராயிற்று. கவர்பு - கவர்ந்து. சலலி - சல்லிகையெனவும் வழங்கும்.

11 நொடி தரு பாணிய பதலையும்—மாத்திரையைச்சொல்லும் தாளத் தையுடைய ஒருகண்மாக்கிணையும்,

11. பிறவும்—கூறாதவாச்சியங்களும்,

**வி - பு.** நொடி - மாத்திரை. பாணி - தாளம். தருதல் - ஈண்டு, தெரி வித்தல். பதலை, ஒருகண்மாக்கிணையென்பன ஒருபொருட்சொற்கள்; அப் பறை ஒருகண்ணுடைமையை, "பதலை யொருகண் பையென வியக்குமின்" (புறநா. 152.) என்பதனாலுணர்க. கூறாதவாச்சியங்களாவன: பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, திமிலை, குடமுழா, தக்கை, கணப்பறை, தடாரி, அந்தரி, சந்திரவளையம், மொந்தை, நிசாளம், துடுமை, தகுணிச்சம், விரலேறு, பாகம், உபாங்கம், நாழிகைப்பறை, பெரும்பறை, துடி என்பன.

12. கார் கோள் பலவின் காய் துணர் கடுப்ப—கார்காலத்தாலே பழுத் தலையுடைய பலாவினது காயை மிகவுடைய தொத்தையொப்ப,

**வி - பு.** துணர், தொத்து - கொத்து.

13. நேர் சீர் சுருக்கி காய கலப்பையிர்—தம்மிலொத்த கனத்தை யுடையவாகக் கட்டிக் காவின வாச்சியமுட்டுக்களையுடைய பையையுடையிராய்,

வி - பு. சீர் - கனம். காய, காவின - தோளிற்சுமந்த; கா - தோட் சுமை. கலப்பை, கலத்தையுடையபை; கலம் - வாச்சியங்கள்; "காவினெங் கலனே சுருக்கினெங் கலப்பை" (புறநா. 206.) வாத்தியத்தொகுதிகளை மூட்டென்றல் மரபு. இந்நூலாசிரியர், பலாக்காய்க்குலைக்கு முழவின் தொகுதிகளை உவமைகூறுவர்பின்; ௧௪௩ - ௪ - ம் அடிகளைப்பார்க்க.

முழவோடே ஆகுளியும் (௩) பாண்டிலும் (௪) கோட்டொடும் (௫) தூம்பொடும் (௬) குறுந்தூம்பொடும் (௭) தட்டையும் (௯) எல்லரியும் (௧௦) பதலையும் பிறவும் (௧௧) நீங்குழலும் நெருங்கப்பட்டு (௮) அவற்றைச் சுருக்கிக் காயகலப்பையி (௧௩) ரென்க.

14. கடு கலித்து எழுந்த கண் அகல் சிலம்பில்—கடுமரம் மிக்கு வளர்ந்த இடமகன்ற பக்கமலையில்,

வி - பு. கடுமரத்தின்காய், கடுக்காய்.

15. படுத்து வைத்தன்ன பாறை மருங்கில்—படுத்துவைத்தாற்போன்ற ஒத்தநிலமாகிய கற்பாறையின்பக்கத்தில்,

வி - பு. படுத்தல், தளவரிசையென இக்காலத்து வழங்கும்.

16. எடுத்து நிறுத்தன்ன இட்டு அரு சிறுநெறி—நிலத்தே கிடக்கின்றவழியை எடுத்துநிறுத்தினாற்போன்ற இட்டிய அரிய சிறியவழியை,

வி - பு. இட்டிய - நுண்ணிய. இப்படியே மலையில் செந்தூக்கான இடத்தில் தோன்றும் சிறுவழியை, "செல்வர் மனத்திறீங்கி,.... சிறியார் கொண்ட தொடர்பிற் செலலச்செல்ல வஃகுநெறி" என்றார் சிந்தாமணியிலும்; 1416.

17. தொடுத்த வாளியர் துணை புணர் கானவர்—தொடுத்த அம்பினையுடையராய்த் தம்மனைவியரோடு கூடியிருக்கின்ற கானவர்,

வி - பு. துணை - மனைவி; 'துணை புணர்கானவர்' என்பதில் துணையென்பது, "எவ் விளையர்தாய்" என்பதுபோனின்றது.

18 [இடுக்கண் செய்யா தியங்குந ரியக்கும்:] இயங்குநர் இடுக்கண் செய்யாது இயக்கும்—வழிபோவாரை வருத்துதலைச்செய்யாமல் வழிபோக்கும்,

வி - பு. வழிச்செல்வோருக்கு இடுக்கண்செய்வோராகிய கானவரும் இடுக்கண்செய்யாமல் வழிகாட்டியனுப்புகின்றார்களென்றதனால், நன்னனுடைய நீதிபுலப்படுகின்றது; இதனுடன், "அத்தஞ் செல்வோ ரலறத் தாக்கிக், கைப்பொருள் வௌவுங் களவேர் வாழ்க்கைக், கொடியோ ரின்றவன் கடி

* இந்த இலையப்லிசைக்குறிக்கு உட்பட்டஎண்ணும் இப்படியே ஆங்காங்குள்ள எண்களும் தத்தம் முன்புள்ளமொழிகளையேனும் அம்மொழிகளைப் பொருளாகப்பெற்ற மொழிகளையேனுமுடைய மூலத்தின்வரியைப் புலப்படுத்தும்.

யுடை வியன்புலம்" (பெரும்பாணாறு, ௩௧ - ௪௧) என்பது ஒப்புநோக்கற்பாலது.

19 - 20. [அடுக்கன் மீமிசை யருப்பம் பேணா, திடிச்சுர நிவப்பி னியவுக்கொண் டொழுகி :] அடுக்கல் மீமிசை இடி சுரம் நிவப்பின் இயவு அருப்பம் பேணாது கொண்டொழுகி—மலையிடத்து மிக்கவுயர்ச்சியிற் கல்லையிடித்த அருநிலத்தில் உயர்ந்தவழியைப் போதற்கரிதாகக்கருதாதே போகக்கடவேமென்று நெஞ்சாலேகொண்டுநடந்து,

கல்லையிடித்து ஆக்கியவழி.

**வி - பு.** அருப்பம் - அருமையையுடையது ; இயவு - வழி.

14 - 20 சிலம்பிற பாறைமருங்கிற் சிறுநெறியைக் கானவர்போக்குஞ் சுரத்தில இயவுக்கொண்டொழுகியென்க.

21. தொடி திரிவு அன்ன தொண்டு படு திவவின்—தொடியினது உறழ்ச்சியையொத்த உறழ்ச்சியையுடைய ஒன்பதென்னுமெண்ணுண்டான வார்க்கட்டினையும்,

வலித்தல் மெலித்தல் செய்யவேண்டுதலின், உறழ்ச்சிகூறினார்.

**வி - பு.** தொடி - மகளிர் அணிந்துகொள்ளும் ஒருவகைவளை ; நெகிழவேண்டியவிடத்து நெகிழ்தலும் இறுகவேண்டியவிடத்து இறுகியுமுள்ளதாதலின், தொடிக்குத் திரிவுகூறினார் ; "மடந்தை முன்கைக் குறுந்தொடி யேய்க்கு, மெலிந்து வீங்கு திவவு" (பெரும்பாணாறு - ௧௨ - ௩.) "மாயோண் முன்கை யாய்தொடி கடுக்குங், கண்கூ டிருக்கைத் திண்பிணித் திவவு" (பொருநராறு ௧௪ - ௫.) தொண்டு - ஒன்பது. உறழ்ச்சி - மாறுபாடு.

22 - 4. [கடிப்பகை யனைத்துங் கேள்வி போகாக, குரலோர்த்துத் தொடுத்த சுகிர்புரி நரம்பி, னரலை தீர வுரீஇ ]

22. கேள்வி அனைத்தும் போகா—நூற்கேள்வி அடைய முற்றுப்பெற்று,

22, 24. கடிப்பகை அனைத்தும் அரலை தீர உரீஇ—வெண்சிறுகடுகளவும் கொடும்பில்லையாம்படி தீற்றி,

முடங்கிப் பாற்றன்மையாயிருத்தலிற் கொடுமையை அரலையென்றார்.

அரலை - குற்றமுமாம். இனி வெண்சிறுகடுகளவும் கேள்விதப்பாதென்பாருமுளர் ; அது வடிவிற்குவமையாதலிற் பொருந்தாது.

23. குரல் ஓர்த்து தொடுத்த சுகிர் புரி நரம்பின்—ஓசையை ஓர்ந்து பார்த்துக் கட்டின வடித்துமுறுக்கின நரம்பினையும்,

கேள்விபோகா உரீஇத் தொடுத்த நரம்பெனக.

**வி - பு.** பேய்க்குப்பகையாதலின் ; வெண்சிறு கடுகு கடிப்பகையெனப்பட்டது அனைத்துமென்பது கடிப்பகையோடும் கேள்வியோடும் இயையும். சுகிர்தல் - வடித்தல். கொடும்பு - கொடுமுறுக்கு. அரலை - சிறியகல் உரீஇ, தீற்றி - உருவி.

24 - 5. வரகின குரல் வார்ந்தன்ன நுண் துளை இரீஇ—வரகின்கதிர் ஒழுகின தன்மைத்தாக நெருங்கின நுண்ணிய துளைகளையிருத்தி,

இது, பொல்லம்பொத்துமிடத்திற்றுளை. *"பரியரைக் கமுகின் பாளையம் பசும்பூக், கருவிருந் தன்ன கண்கூடு செறிதுளை" என்றார் பிறரும்.

வி - பு. வரகு - ஒருவகைப்பயிர். குரல் - கதிர். வார்தல், ஒழுகுதல் - நீளுதல். பொல்லம் பொத்தல் - இரண்டுதலையையுங்கூட்டித்தைத்தல். "பரியரை.........துளை" என்பதன்பொருள். பரியரை கமுகின் - பரிய தாளினையுடைய கமுகினது, பாளை அம் பசு பூ - பாளையாகிய அழகினையுடைய பசியபூ, கரு இருந்தன்ன - விரியாமற் கருவாயிருந்தாலொத்த, கண்கூடு செறி துளை - இரண்டுகண்ணுங்கூடின செறிந்ததுளை.

26 - 9. [சிலம்பமை பத்தல் பசையொடு சேர்த்தி, யிலங்குதுளை செறிய வாணி முடுக்கிப், புதுவது புனைந்த வெண்கை யாப்பமைத்துப், புதுவது போர்த்த பொன்போற் பச்சை :]

27. இலங்கு துளை செறிய ஆணி முடுக்கி—விளங்குகின்ற துளைகணிரம்பும்படி சுள்ளாணிகளை இறுகத்தைத்து,

28. புதுவது வெண்கை புனைந்த யாப்பு அமைத்து—புதிதாக யானைக் கொம்பாற் செய்த யாப்பை அமையப்பண்ணி,

யாப்பு - பத்தலிற் குறுக்கே வலிபெற ஓட்டுவது.

வி - பு. இவ்வடி, வினையெச்சம் அகர ஈறன்றிப் பிற ஈறுகளால் முடிக்குஞ்சொல்லை விசேடித்துவருதற்குக் காட்டிய மேற்கோள்களுள் ஒன்று; (தொல். வினை. ௩௧ - ம் சூ. ௩ - உரை.)

26, 29. சிலம்பு அமை பத்தல் பசையொடு சேர்த்திப் புதுவது போர்த்த பொன்போல் பச்சை—ஒலித்தலமைந்த பத்தலிலே பற்றோடேகூட்டிப் புதிதாகப்போர்த்த பொன்னிறம்போலும் நிறத்தையுடைய தோலினையும்,

வி - பு. சுள்ளாணி - மெல்லிய ஆணி. கை - ஒருறுப்பு. 'வெண்கை' என்றதனால், யானைக்கொம்பென்றாயிற்று. பத்தல் - யாழின் ஒருறுப்பு. சிலம்பு, முதனிலைத்தொழிற்பெயர். பசை, பற்று - பிசின்.

24 - 9. இரீஇ முடுக்கி அமைத்துச் சிலம்புதலமைந்த பத்தலிலே போர்த்த பச்சையென்க.

30 - 31. [வதுவை நாறும் வண்டுகம ழைம்பான், மடந்தை :]

30, 31. வண்டு வதுவை நாறும் ஐம்பால் மடந்தை—தன்னிடத்திருந்த வண்டு கலியாணம்செய்தமகளுடைய நாற்றத்தைநாறுதற்குக் காரணமான மயிரினையுடைய மடந்தை,

வதுவைக்கு எல்லாமணமும் உளவாதல்பற்றி வதுவைநாறுமென்றார்.

வி - பு. உத்தமசாதி மகளிர்கூந்தலுக்கு இயல்பான மணமுண்டென்பதை, "அரிவை கூந்தலி, னறியவு முளவோநீ யறியும் பூவே" (குறுந்தொகை, ௨) என்பதனாலும் அறிக. ஐம்பால் - ஐந்துவகையாக முடித்தற்குரியது.

30. கமழ் ஐம்பால்—இயல்பான மணத்தையுடைய ஐம்பால்,

31 - 2. [மாண்ட நுடங்கெழி லாகத், தடங்குமயி ரொழுகிய வவ்வாய் கடுப்ப :] எழில் நுடங்கு மடந்தை மாண்ட ஆகத்து அடங்கு மயிர் ஒழுகிய

* பெரும்பாணாற்றுப்படை, ௭ - அ.

அவ்வாய் கடுப்ப—அழகு கட்புலனாகின்றவையும் மடந்தையது மாட்சிமைப் பட்ட மார்பிடத்தே சென்று பின்பில்லையான மயிர் ஒழுங்குபட்டுக்கிடக்கின்ற அழகிய வயிற்றிடத்தையொக்க,

**வி - பு.** எழிலை - இலாவணியமென்பர். வாய் - இடம்.

33 - 4. அகடு சேர்பு பொருந்தி அளவினில் திரியாது கவடு பட கவைஇய சென்று வாங்கு உந்தி—பொல்லம்பொத்துதல் நடுவே சேரப்பட்டுக் கட்கினிதாய்த் தனக்குக் கூறுகின்ற அளவிலே வேறுபடாமற் பகுத்தலுண்டாக அகத்திட்ட உயர்ந்துவளைந்த உந்தியினையும்,

உந்தி - யாழுகத்து ஒருறுப்பு.

**வி - பு.** அகடு - நடு. கவைஇய - உட்கொண்ட. வாங்குதல் - வளைதல்.

35 - 7. நுணங்கு அரம் நுவறிய நுண் நீர் மாமை களங்கனி அன்ன கதழ்ந்து கிளர் உருவின் வணர்ந்து எந்து மருப்பின் வள் உயிர் பேரியாழ்—நுண்ணிய அரத்தாலே அராவின நுண்ணியநீர்மையினையுடைய கரியநிறத்தாலே களம்பழத்தினிறத்தை ஒத்தனவாய்க் கடுகித்தோன்றுகின்ற நிறத்தையுடைய வளைந்தேந்தின கோட்டினையுமுடைய பெரிய ஓசையினையுடைய பேரியாழ்,

**வி - பு.** மாமை - கரியநிறம். களம்பழம் இயல்பாகவே மிகவும் கருநிறமுடையதென்பதை, "களங்கனியைக் காரெனச் செய்தாரு மில்", 'காக்கையிற் கரிது களம்பழம்' என்பவற்றாலும் அறிக. "களங்கனி யன்ன கருங்கோட்டுச் சீறியாழ்" (புறநானூறு, ௧௨௭, ௧௪௫.) வணர்தல் - வளைதல். உயிர் - ஒலி; "வள்ளுயிர்த் தெள்விளி" (100) என்னும் குறிஞ்சிப்பாட்டும், 'பெரிய ஓசையினையுடைய தெளிந்தசொல்' என்னும் அதனுரையும் இங்கே அறிதற்பாலன. பேரியாழ், நால்வகையாழினுள் ஒன்று.

திவவினையும் (௨௧) நரம்பினையும் (௨௩) பச்சையினையும் (௨௪) உந்தியினையும் (௩௪) மருப்பினையுமுடைய பேரியாழ் (௩௭) என்க.

38. [அமைவரப் பண்ணி யருணெறி திரியாது:] பேரியாழ் (௩௭) அருள் நெறி திரியாது அமைவர பண்ணி—பேரியாழைத் தனக்கு நூலிற் கூறிய வழிகளைத் தப்பாதபடி பொருந்துதல்வரச் சமைத்து,

**வி - பு.** அருளுதல் - கூறுதல்; 'திருவாய்மலர்ந்தருளிய' என்னும் வழக்காலுமுணர்க. அமை, முதனிலைத்தொழிற்பெயர்; பொருந்துதல்.

39 - 40. இசை பெறு திருவின் வேந்தவை ஏற்ப துறைபல முற்றிய—இசையை எக்காலமுங்கேட்கின்ற செல்வத்தினையுடைய அரசர்களுடைய அவைக்களத்தே அவர்கள் செவிகொள்ளும்படி சாம்வாசிக்குந்துறைகள் பலவற்றையும் வாசித்துமுடித்த,

40. பை தீர் பாணரொடு—பசுமையற்ற பாணரோடே,

என்றது:— கல்வி முதிர்ந்தமையின், இளமையற்ற பாணரென்றவாறு.

**வி - பு.** இசைபெறுவேந்து, திருவின்வேந்து என இயைத்துப் பொருள் கொள்க; இசைகேட்டலாகிய செல்வத்தையுடைய வேந்தெனக்கொள்ளினும் பொருந்தும். 'துறைபல' என்றது வலிவு, மெலிவு, சமமென்னும் மூன்று

தானத்திலும் ஒவ்வொன்றில் எழுதானமுடித்துப்பாடும் இருபத்தொருபாடற் றுறைகளை; இதனை "மூவேழ் துறையு முறையுளிக் கழிப்பி" என்னும் புறநானூற்றாலும் (152) அதனுரையாலுமறிக. பசுமை இளமை. கல்வி முதிர்ந்தமையின் இளமையற்றபாணரென்றது ஆண்டினிளைஞராயினும் அறிவின்முதியரென்றபடி; இஃது, "ஒருகுடியிற், கல்லாத மூத்தோனைக் கைவிட்டுக் கற்றா, னிளமைபா ராட்டு முலகு" (நான்மணி. சுரு.) "ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும், மூத்தோன் வருக வென்னா தவரு, ளறிவுடை யோனா றரசுஞ் செல்லும்" (புறநா. கஅங) என்பவற்றைத் தழுவி விளங்குகின்றது.

41. உயர்ந்து ஓங்கு பெருமலை ஊறு இன்று ஏறலின்—உயர்ந்துவளர்ந்த கற்கள் தம்மிற்றொடரும் பெரியமலைகள் வேறொரிடையூறின்றாக ஏறிவருகையினாலே,

42-3. [மதந்தபு ஞமலி நாவி னன்ன, துளங்கியன் மெலிந்த கல்பொரு சீறடி:] துளங்கு இயல் மெலிந்த மதம் தபு ஞமலி நாவின் அன்ன கல் பொரு சீறடி—அசைகின்ற இயல்பினான் இளைத்த வலிகெட்ட நாயினது நாவினையொத்த கல்லுப்பொருகின்ற சிறிய அடியினையும்,

ஏறலின் மெலிந்த அடியென்க.

வி-பு. தபுதல் - கெடுதல். நாவின் - இன்சாரியை. மாதர் அடிக்கு ஒடியிளைத்த நாயின்நா உவமையாதலை, "வருந்துநாய் நாவிற் பெருந்தகு சீறடி" (பொருந. 42), "உயங்குநாய் நாவி னல்லெழி லசைஇ, வயங்கிழை யுலறியவடி" (சிறுபா. 17-8), "வருந்துநாய் நாவி னன்ன மலரடி" (கூர்மபுராணம், இராமன் வைகுந்தமடைந்தவத்தியாயம், 28) என்பவற்றிலும் காண்க.

44-6. [கணங்கொ டோகையிற் கதுப்பிருத் தசைஇ, விலங்குமலைத் தமர்ந்த சேயரி நாட்டத், திலங்குவளை விறலியர் நிற்புறஞ் சுற்ற:]

45. விலங்கு மலைத்து அமர்ந்த சேயரி நாட்டத்து—மானோடு மாறுபட்டுப் பொருந்தின செவ்வரியையுடைய கண்ணினையும்,

46. இலங்கு வளை விறலியர்—விளங்குகின்ற வளையினையுமுடைய விறல்படப்பாடியாடுவார்,

44, 46. கணம் கொள் தோகையின் கதுப்பு இருத்து அசைஇ நின்புறம் சுற்ற—திரட்சியைக்கொண்ட மயில்போலே மயிரைத்தாழ்த்து இளைத்து நின்னைப் புறத்தே சூழ,

வி-பு. விலங்கு - மிருகம்; கண்ணுக்கு உவமையாகவருதலின்மானாயிற்று. மலைத்தல் - மாறுபடுதல்; "சிலைத்தா ரகல மலைக்குந ருளரெனின்" (புற. 61.) விறல் - சத்துவம்; அஃதாவது மெய்ப்பாடு. கணம், திரட்சி - கூட்டம். கதுப்பு - கூந்தல். இருத்தல் - தாழ்த்தல். "இருத்த கண்ணீர்" (புற. 143.) மகளிர்கூந்தற்கு மயிற்றோகை உவமையாதலை. "கதுப்பென, மணிவயிற் கலாபம் பரப்பிப் பலவுடன், மயின்மயிற் குளிக்கும்" (சிறுபா. 14-6.) என்பதனாலும், சிந்தாமணி எக-ம் செய்யுளாலும் உணர்க. இந்தப்

பகுதியைப் பொருளானந்தத்திற்கு உதாரணமாகக்காட்டினர், யாப்பருங்கல விருத்தி உரையாசிரியர்.

அடியினையும் (௪௩) நாட்டத்தினையும், (௪௫) வளையினையுமுடைய விறலியர் (௪௬) கதுப்பிகுத்து அசைஇச் (௪௪) சுற்ற (௪௬) மென்க.

**47 - 8.** [கயம்புக் கன்ன பயம்படு தண்ணிழற், புனல்கால் கழீஇய மணல்வார் புறவில் :

**48.** புனல் கால்கழீஇய மணல் வார் புறவில்—பெருகுநீர் தூராலை வாரிக்கொண்டுபோன மணல் ஒழுங்கு பட்ட சிறுகாட்டிடத்தில்,

**47.** கயம் புக்கன்ன பயம் படு தண் நிழல்—குளத்திலே புகுந்தாலொத்த பயனைத்தருகின்ற குளிர்ந்த நிழலிலே,

**வி - பு.** இப்படியே மரநிழலுக்குக் கயம், "கயங்கண் டன்ன......பெருமரக் குழாமும்" (௨௬௯ - ௫௫) என இந்நூலுள்ளே பின்னும் வருதல்காண்க. தூரால் - குப்பை. வார்தல் - ஒழுங்குபடுதல்.

**49 - 50.** [புலம்புவிட் டிருந்த புனிறில் காட்சிக், கலம்பெறு கண்ணுளரொக்கற் றலைவ :]

**49, 50.** புலம்பு விட்டிருந்த காட்சி கலம் பெறு கண்ணுளர் ஒக்கல் தலைவ—வழிவந்தவருத்தத்தைக் கைவிட்டிருந்த அறிவினையுடைய பேரணிகலங்களைப்பெறுங் கூத்தருடைய சுற்றத்திற்குத் தலைவனே,

**49 - 50.** புனிறு இல் ஒக்கல்—ஈன்றணிமையில்லாத சுற்றம், என்றது பிள்ளையைப்பெற்றவர்கள் பிள்ளையைக்கொண்டு கூடவந்திலர்களென்றவாறு.

**வி - பு** புலம்பு-வருத்தம். காட்சி-அறிவு. கண்ணுளர்-கூத்தர்; 569-ம் அடிமுதலியனபார்க்க 'புனிறில் ஒக்கல' என்றது இங்கே விறலியரை.

கலப்பையிராய் (௧௩) இயவுக்கொண்டொழுகி (௨௦) யாழைப் (௩௭) பண்ணித் (௩௮) துறைபலமுற்றிய பாணரொடு (௪௦) விறலியர் புறஞ்சுற்றத் (௪௬) தண்ணிழலிலே (௪௭) யிருந்த (௪௯) கண்ணுளரொக்கற்றலைவனே (௫௦) யென வினைமுடிக்க.

கலப்பையிரென்னும் பன்மை தலைவனென்னுமொருமையோடு முடிந்தது; * "ஒருமை சுட்டிய" என்னுஞ் சூத்திரத்தால

**வி - பு.** "ஒருமை சுட்டிய பெயர்நிலைக் கிளவி, பன்மைக் காகு மிடனுமா ருண்டே" என்பதன்பொருள் : 'ஒருமையைக்கருதிய பெயராகிய நிலைமையையுடையசொல், பன்மைக்குப் பொருந்திநிற்கும் இடமுமுண்டு' என்பது.

**51 - 3.** தூ மலர் துவன்றிய கரை பொரு நிவப்பின் மீமிசை நல் யாறு கடல் படர்ந்தாஅங்கு யாம் அவண் நின்றும் வருதும்—தூய பூக்களெருங்கின கரையைப்பொருகின்ற ஒக்கத்தினையுடைய மலையுச்சியினின்றுமிழிந்த நல்லயாறு கடலைநோக்கிப்போனாற்போல யாம் அவனைநோக்கிச்சென்று சில பெற்றுவருகின்றேம்;

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், எச்சவியல், ௬௫.

இனி மலையிற்பொருள்களை வாரிக்கொண்டு யாறு கடலைநோக்கிப் போனாற்போல அவ்விடத்துள்ள பொருள்களை வாரிக்கொண்டு வருகின்றே மெனறுமாம்.

**வி - பு.** நிவப்பு, ஒக்கம் - உயர்ச்சி. யாறு கடலைநோக்கிச்சேறலைக் கூத்தன் நன்னன்பாற் சென்றதற்கு உவமையாகக் கூறியது, "மலையி னிழிந்து மாக்கட னோக்கி, நிலவரை யிழிதரும் பல்யாறு போலப், புலவ ரெல்லா நின்னோக் கினரே" (புறநா. ௪௨.) என்பதை ஒத்துநின்றது. "யாமவ ணின்றும் வருதும் நீயிரும்' என்பது, பெரும்பாணாற்றுப்படையின், ௨௮ - வது அடியாகவும் வந்துள்ளது.

53 - 5. [நீயிருங், கனிபொழி கானங் கிளையொ டுணீஇய, துனை பறை நிவக்கும் புள்ளின மான :

54 - 5. கனி பொழி கானம் கிளையொடு உணீஇய துனை பறை நிவக்கும் புள்ளினம் மான—பழங்களைச்சொரிகின்ற காட்டிற் பழங்களைச் சுற்றத்தோடே சென்றுதின்றற்கு விரைந்த பறத்தற்றொழிலிலேயோங்கும் பறவைத்திரளை யொக்க,

**வி - பு.** பறவையென்றது, வௌவால்களை; இவ்வுவமை, "பழுமரந் தேரும் பறவை போல" (௨௦) எனப் பெரும்பாணாற்றுப்படையிலும் வந்துள்ளது.

53. நீயிருமென்பது மேலே (௯௩) கூட்டுதும்.

56 புனை தார் பொலிந்த வண்டு படு மார்பின்—கைசெய்த மாலையாற் பொலிவுபெற்ற வண்டுகளையுண்டாக்குகின்ற மார்பினையுடைய, கணவன் (௫௮) என்க.

**வி - பு.** தார் - மார்பின்மாலை; "வண்ண மார்பிற் றாருங் கொன்றை" (புறநா. கடவுள்.)

57. வனை புனை எழில் .... ... — ஓவியங்களிலே ........ பண்ணின கைசெய்த அழகைத் தன்னிடத்தேயுடைய .........யும்,

57. வாங்கு அமை திரள் தோள்—வளைந்த மூங்கிலையொத்த திரண்ட தோளினையும்,

58. மலர் போல் மழை கண் மங்கையர் கணவன்—பூப்போலும் குளிர்ச்சியையுடைய கண்ணினையுமுடைய கற்புடைமகளிர்க்குக் கணவன்,

**வி - பு.** குணமிகுதிபற்றித் தலைவன் மனைவியரைப்புகழக்கருதிய ஆசிரியர், மனிதருட் பெண்பாலாரைப்பாடுதல் சிறப்பன்றென்னும் விதிபற்றி, அவனோடு சார்த்தி, 'மங்கையர் கணவன்' என்றார்; இந்நூலுள், "கொடியோள் கணவன்" (௪௨௪) என வருவதும் அது. இதனை, 'மக்களுட் பெண்பால் பாடுதல் சிறப்பின்மையின், "செயிர்தீர் கற்பிற் சேயிழை கணவ" (புறநா - ௩) என்றாற்போலச் சிறுபான்மை ஆண்மக்களோடு படுத்துப்பாடுப' (தொல். பொரு. புறத். சூ. ௨௯ - ந) என்பதனாலுணர்க; "ஒடுங்கீ ரோதிக் கொடுங்குழை கணவ", "பாவை யன்ன நல்லோள் கணவன்" (பதிற். ௧௪, ௬௧) என்பனவும் அதைத்தழுவிவந்தவை.

59. முனை பாழ் படுக்கும் துன்னரு துப்பின்—பகைப்புலத்தைப் பாழுண்டாக்கும் கிட்டுதற்கரிய வலியினையும்,

வி - பு. இவ்வடி, குறிஞ்சிப்பாட்டில், கஉஅ - ம் அடியாகவும் வந்துள்ளது

60. [இசைநுவல் வித்தி னசையே ருழவர்க்கு :] நுவல் இசை வித்தின் நசை ஏர் உழவர்க்கு—தாம் பிறரைக்கூறும் புகழாகிய விதையாலே பிறர்பொருள்களை நச்சுதலாகிய ஏருழவினையுடைய பரிசிலர்க்கு,

என்றது புகழைவித்திப் பொருளை யெடுப்பரென்றவாறு.

வி - பு. இவ்வடியின்பொருள், "உரவோன் செவிமுதல், வித்திய பனுவல் விளைந்தன்று நன்று" (உ௩எ) எனப் புறநானூற்றிலும் ஒருவகையாக அமைந்திருக்கின்றது.

61. புது நிறை வந்த புனல் அம் சாயல்—புதுப்பெருக்காய்வந்த நீர் போலும் அழகையுடைய மென்மையினையும்,

என்றது - தண்ணீர் அரியகாலத்தேவந்து பயன்றருமாறுபோல இவனும் பயன்றருவனென்றவாறு

வி - பு. "நீரினு மினிய சாயற், பாரி வேள்" என்பது புறநானூறு, க0ரு.

62 மதி மாறு ஓரா நன்று உணர் சூழ்ச்சி—தனதறிவு ஆக்கத்திற்கு மாறுகிய கேட்டை நினையாது ஆக்கத்தினையேயுணரும் நினைவினையும்,

வி - பு. ஆகம் - பெருகுதல்.

63. வில் நவில் தடக்கை – விற்றொழிலிலே பயின்ற பெரிய கையினையும்,

63. மே வரும் பெரும்பூண்—பொருந்துதல்வரும் பேரணிகலங்களையுமுடைய,

வி - பு. மே - பொருந்துதல்; முதனிலைத்தொழிற்பெயர்.

64 நன்னன் சேய் நன்னன் படர்ந்த கொள்கையொடு—நன்னன்மகனாகிய நன்னனை நினைத்த கோட்பாட்டுடனே,

துப்பினையும் (ருக) சாயலினையும் (சுக) சூழ்ச்சியினையும் (சுஉ) கையினையும் பூணினையு (சுந) முடைய நன்னனென்க.

65. உள்ளினிர் சேறிர் ஆயின்—அவன்றரும் பரிசில்கள் இவையென்று அப்பரிசில்களை உள்ளினிராய்ச் செல்வீராயின்,

வி - பு. உள்ளினிராய் - நினைத்தீராய்.

65 - 6. [பொழுதெதிர்ந்த, புள்ளினிர் மன்ற வெற்றாக் குறுதலின் :] என் தாக்குறுதலின் எதிர்ந்த பொழுது புள்ளினிர் மன்ற—என்னை எதிர்ப்படுகையினாலே நீர் புறப்படுகின்றபொழுது நுமக்குவரும் ஆக்கத்தை எதிர்கொண்டுநின்ற நன்முகூர்த்தத்தோமேட நன்னிமித்தத்தையும் உடையிராயிருந்தீர்; அறுதியாக,

வி - பு. நற்காலத்தையும் நன்னிமித்தத்தையும் உடையீரென்றபடி. மன்ற, அறுதியாக - நிச்சயமாக,

67 ஆற்றின் அளவும்—வழியினது நன்மையினுள்ளவும் தீமையினுள்ளவும்,

67. அசையும் நல் புலமும்—நீர் தங்கும் நன்றாகிய இடங்களும்,

வி - பு. அசைதல் - தங்கல்

68 வீற்று வளம் சுரக்கும் அவன் நாடு படு நன்கலமும்—பிறநாட்டுக் கில்லாத செல்வத்தை மாறாமற்கொடுக்கும் அவன் நாட்டில் விளைகின்ற உணவு களும்,

நாடென்றே மலைநாடும், காட்டுநாடும், தண்பணைநாடுங்கூறினார்; அது மேற்காண்க

வி - பு. வீறு - வேறொன்றற்கில்லாத அழகு மேற்காண்க - பின் னே காண்க

69 மலையும்—அவனுடைய மலைகளின் றன்மையும்,

69 சோலையும்—அவனுடைய சோலைகளின் றன்மையும்,

69 மா புகல் கானமும்—விலங்குகள் விரும்பித்திரியுங் காட்டின் றன் மையும்,

ஆற்றினது அளவு முதலிய நான்கினையும் இக்கூறியமுறைமையே கூறுமல் மயங்கக்கூறினார், கூறும்வழிக்கண் ஆண்டுள்ளனவே கூறவேண்டுதலின்

வி - பு. புகலுதல் விரும்புதல் ஆண்டு உள்ளனவே - அந்தவழியில் உள்ளவற்றையே

70 - 72 தொலையா நல் இசை உலகமொடு நிற்ப பலர் புறம் கண்டு அவர் அருங்கலம் புலவோர்க்குத் தரீஇ சுரக்கும் அவன் ஈகை மாரியும்—கெடாத நல்லபுகழ் உலகமுள்ளளவுநிற்கும்படியாகப் பகைவர்பலரினையும் முதுகுகண்டு அவர் திறையாகத் தந்த பெறுதற்கரிய பேரணிகலங்களை முற்பட அறிவுடையோர்க்குக் கொடுத்துப் பின் அவர்க்குச்சொரியும் அவன் பொன் மழையும்,

வி - பு. பகைவருடைய ஆபரணங்களை அரசர் தாம் கைக்கொள்ளா மல் பரிசிலராகிய புலவோர்க்குக் கொடுத்தல் மரபு, அவ்வெயிற் கொண்ட செய்வுறு நன்கலம், பரிசின் மாக்கட்கு வரிசையி னல்கி" (புறநா. ௬), "குரிசி லடையாரைக் கொண்டகூட் டெல்லாம், பரிசின் முகந்தன பாண" (பு - வெ. வஞ்சி. ௧௬) என்பவற்றாலுமுணர்க

73 இகழுநர் பிணிக்கும் ஆற்றலும்—தன்னை இகழ்ந்திருக்கும் பகை வரை அரசுகொடாமற் சுருக்கும் அறிவினவலியும்,

வி - பு. பிணித்தல் - கட்டுதல்

73 - 6 புகழுநர்க்கு அரசு முழுது கொடுப்பினும் அமரா நோக்கமொடு தூ துளி பொழிந்த பொய்யா வானின் வீயாது சுரக்கும் அவன் நாண்மகி ழிருக்கையும்—கூத்தர் மாகதர் பாணர் கூத்தர் முதலியோர்க்குத் தான்புறங் கண்ட பகைவரரசை முற்றுங்கொடுப்பினும் அமைதிபிறவாத அறிவுடனே தூயதுளியைப் பெருகச்சொரிந்த பருவம்பொய்யாத மேகம் பின்னரும்

பெய்யுமாறுபோலப் பின்னரும் மாறாமற்சொரியும் அவனுடைய நாளோலக்கமும்,

நோக்கு - நோக்கமெனுக்கம். "வீயாவீண்டும்" என அகரச்சுமேற்று.

வி - பு. சூதர் - நின்றேத்துவார். மாகதர் - இருந்தேத்துவார்; "சூதர் வாழ்த்த மாகதர் நுவல" —(மதுரைக்காஞ்சி. 670) பாணர் பாடுவோர். நோக்கு அல் நோக்கம் - கண்ணாலே நோக்கும்நோக்கமின்றி மனத்தால் நோக்கும் நோக்கம்; அஃதாவது கருதுதல் வீயாது - மாறாமல்.

77 - 80. [நலலோர் குழீஇய நாநவில் அவையத்து, வல்லா ராயினும் புறமறைத்துச் சென்றோரைச், சொல்லிக் காட்டிச் சோர்வின்றி விளக்கி, நல்லிதி னியக்குமவன் சுற்றத் தொழுக்கமும] நா நவில் நல்லோர் குழீஇய அவையத்து சென்றோரை வல்லாராயினும் புறம் மறைத்து சொல்லிக் காட்டிச் சோர்வு இன்றி விளக்கி நல்லிதின் இயக்கும் அவன் சுற்றத்து ஒழுக்கமும்— தாம் கற்றவை நாவிடத்தே பயின்ற நல்ல அறிவினையுடையோர் திரண்ட தன் அவைக்களத்திடத்தே சென்ற அறிவுடையோரைத் தாம் கற்றவற்றை மனங்கொள்ளக் கூறமாட்டாராயினும் மாட்டாமையை மறைத்துத் தாம் பொருளைச்சொல்லிக்காட்டி அதனைத் தப்பின்றாக எல்லார்மனமுங் கொள்ளும்படி அறிவித்து நன்றாக நடத்தும் அவனுடைய சுற்றத்தாருடைய பேரொழுக்கமும்,

நவிலுதல் - கூறியடிப்படுதல். சுற்றம் - கல்வியுடையோர்.

வி - பு. 'நல்லோர் குழீஇய அவை' என்றதனால், நல்லவையும் நிறையவையும் கொள்ளப்பட்டன, அவற்றின் இலக்கணங்களை, "புகழ்ந் தரும நெறி நின்றோர்பொய் காமம், மிகழ்ந் தினஞ்செற்ற மில்லோர் - நிகழ்கலைகள், எல்லா முணர்ந்தோ ரிருந்த விடமன்றே, நல்லோ ரவைக்கு நலம்", "நலனடக் கஞ் செம்மை நடுவுநிலை ஞானம், குலமென் றிவையுடையோர் கோதில் - புலனில்லோர், சென்று மொழிந்தனவுங் கேட்போர் செறிந்தவிட, மன்றோ நிறைந்த வவை" (வெண்பாப்பாட். பொது ௬, ௧0), "ஆறுட் பகைசெற் றருங்கலை யோர்ந்து, பாரிற கீர்த்தி படைத்தோர் வைகுதல், நல்லவை யடக்கம் வாய்மை நடுநிலை, சொல்லு நன்மை யுடையோர் தொகைஇ, வல்லார் மொழியினும் வல்லுந ராக்கிக, கேட்போ ருறையவை நிறையவை யாகும்" (இலக்கணவி. ௬ ௬௨௬ எனபவற்றால் அறிந்துகொள்க மாட்டாமையை - வன்மையில்லாமையை. அரசர்க்குரிய உறுதிச் சுற்றவகைகளுள் கல்வியுடையோர்களும் ஒருவகையினர். நவிலுதல் - கூறி அடிப்படுதலென்பதை, "நவி றொறு நூனயம் போலும்" என்னும் திருக்குறளாலுணர்க அருகிலுள்ளார் தலைவனுக்குச் சொல்லிக்காட்டுதல், "அளியன் றானே முதுவா யிரவலன், வந்தோன் பெருமநின் வண்புகழ் நயந்து" (திருமுருகு. உஅச - ரு) என்பதனாலும் அறியலாகும்

81 - 3 நீர் அகம் பனிக்கும் அஞ்சு வரு கடுந்திறல் பேர் இசை நவிரம் மேஎய் உறையும் காரி உண்டி கடவுளது இயற்கையும்— கடல்சூழ்ந்த உலகு நடுங்கும் அஞ்சத்தோன்றுங் கடியவலியையுடைய பெரிய புகழினையுடைய

நவிரமென்னுமலையைப் பொருந்தியிருக்கும் நஞ்சை ஊணாகவுடைய இறைவனதியல்பும்,

பனிக்குங்காரி; திறலினையுடையகாரி.

வி - பு. நவிரமென்னுமலை. இக்காலத்துத் திரிசூலகிரியென்று வழங்கப்படுமென்பர், சிலாசாதனபரிசோதகருள் ஒருசாரார். "நம்பு மேவு நசையாகும்மே" (தொல். உரி. ௩௧.) என்பதற்கு 'பேரிசை நவிரமேஎய்' என்னும் இப்பகுதி உதாரணமாகக் காட்டப்பெற்றது.

84-5. பாய் இருள் நீங்க பகல் செய்யா எழுதரு ஞாயிறு அன்ன அவன் வசை இல் சிறப்பும்—பரந்த இருணீங்கும்படி பகற்பொழுதைச்செய்து தோன்றும் ஞாயிற்றையொத்த அவனுடைய பகையாகிய இருளைக்கடிந்த குற்றமில்லாத தலைமையும்,

வி - பு. பகைவரும் வறுமையுமாகிய இருளைப்போக்குந் தலைவர்களுக்குச் சூரியனை உவமைகூறுதல் நூல்களிற் பரக்கக்காணலாகும்.

86-9. [இகந்தன வாயினுந் தெவ்வர் தேஎ, நுகம்படக் கடந்து நூழி லாட்டிப், புரைதோல் வரைப்பின் வேனிழற் புலவோர்க்குக், கொடைக்கட னிறுத்தவவன் றொல்லோர் வரவும்:] தெவ்வர் தேம் இகந்தன ஆயினும் நூழிலாட்டி நுகம் பட கடந்து புரை தோல் வரைப்பின் வேல் நிழல் புலவோர்க்கு கொடைக் கடன் இறுத்த அவன் தொல்லோர் வரவும்—பகைவர்தேயம் சேணிகந்தனவாயினும் ஆண்டுச்சென்று தூசிப்படையைக் கொன்றுகுவித்து வலியுண்டாகவென்று பின்னர் உயர்ச்சியையுடைய யானையணிந்துநிற்கின்ற அணியிலே சென்றுபொருத வேற்போரின்விளக்கத்தையுடைய அறிவுடையோர்க்குக் கொடுத்தற்குரிய நாடும் ஊருமுதலியவற்றைக்கொடுத்த அவனுடைய குடியிலுள்ளோர் தோற்றரவும்,

காஞ்சி சான்ற வயவராதலின், அவரைப் புலவரென்றார்.

வி - பு. இகந்தன, சேண் இகந்தன - நெடுந்தூரத்தைக் கடந்தன. தூசிப்படை - முன்படை. நுகம் - வலி. தோல் - யானை. வரைப்பு - எல்லை; இங்கே சேனை. நிழல் - விளக்கம். காஞ்சிசான்றவயவர் - நிலையாமையை எப்பொழுதும் உள்ளத்திற் கொண்டிருத்தலமைந்தவீரர்; இவவீரர் நூலுணர்ச்சியை உடையராதலின், புலவரெனப்பட்டார்; "காஞ்சி சான்ற வயவர் பெரும" என்பது பதிற்றுப்பத்து, ௬௫, ௧0. 'கொடைக்கட னிறுத்த செம்மலோய்' என்பர் பின்; ௫௪௩.

90-91. இரை தேர்ந்து இவரும் கொடுதாள் முதலையொடு திரை பட குழிந்த கல் அகழ் கிடங்கின்—இரையைத் தேடியுலாவும் வளைந்த காலினையுடைய முதலைகளோடே திரையுண்டாக ஆழ்ந்த கல்லையகழ்ந்த கிடங்கினையும்,

வி - பு. படுதல - உண்டாதல். கிடங்கு - அகழி.

92 வரை புரை நிவப்பின் வான் தோய் இஞ்சி—மலையையொத்த உயர்ச்சியையுடைய வானைத்தீண்டுமதிலினையுமுடைய,

93-4. உரை செல வெறுத்த அவன் மூதூர் மாலையும் கேள்—புகழ் எங்கும்பரக்கும்படி செறிந்த அவனுடைய பழைய ஊரினதியல்பும் இருக்கும்படி கேட்பாயாக;

ஆற்றினதளவு முதலியவற்றையெண்ணி இன்னதும் இன்னதும் இருக்கும்படி கேட்பாயாகவெனமுடிக்க.

வி-பு. வெறுத்த - நெருங்கிய; "வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்" (புறநா. ௫௩.)

94. [இனி வேளைநீ முன்னிய திசையே :] இனி நீ வேளை முன்னிய திசையே கேள்—அவற்றில் இப்பொழுது நீ நன்னனைக் கருதிச்செல்கின்ற திசையைக் கேள்;

திசை - ஆற்றினளவையுணர்த்திநிற்றலின், ஆகுபெயராயிற்று. ஏகாரம் - பிரிநிலை.

95-6. மிகு வளம் பழுநிய யாணர் வைப்பிற் புதுவது வந்தன்று—மிகுகின்ற செல்வம் முற்றுப்பெற்ற புதுவருவாயையுடைய ஊர்களாலே புதிதாகிய தன்மை வந்தது;

வி-பு. புதுவருவாய் - புதுவரும்படி. புதுவது - புதியதன்மை.

96. [இதுவதன் பண்பே :] அதன் பண்பு இது—அவ்வழியின் செய்தி இத்தன்மைத்து;

97-8. [வானமின்னு வசிவுபொழிய வானு, திட்ட வெல்லாம் பெட்டாங்கு விளைய :] ஆனது இட்ட எல்லாம் பெட்டாங்கு விளைய வானம் மின்னு வசிவு பொழிய—அமையாதே நிலத்தேயிட்ட விதைகளெல்லாம் இன்னவாறே விளையவேண்டுமென்று ஆண்டுள்ளார் விரும்பினாற்போலே விளையும்படியாக மேகம் மின்னுகிய பிளந்துவடுப்படுதலோடே பெய்கையினாலே,

வி-பு. வசிதல் - பிளத்தல். மின்னல் பிளந்துவடுப்பட்டாற்போன்றிருத்தலின், மின்னுவசிவென்றார்.

99. பெயலொடு வைகிய வியன் கண் இரு புனத்து—அம்மழையோடேதங்கின அகன்ற இடங்களையுடைய பெரிய கொல்லைநிலத்தே,

100-101. [அகலிரு விசும்பி னாஅல் போல, வாலிதின் விரிந்த புன்கொடி முசுண்டை :] புல் கொடி முசுண்டை அகல் இரு விசும்பின் அல் போல வாலிதின் விரிந்த—புல்லிய கொடியினையுடைய முசுண்டை ஏனைப் பூதங்கள் தோன்றுதற்குக்காரணமான பெரிய ஆகாயத்திற் கார்த்திகையாகிய மீன்போல வெள்ளிதாக மலர்ந்தன;

ஆல் - ஆலெனவிகாரம்.

வி-பு. முசுண்டை - ஒருகொடி; இக்காலத்து முசுட்டையென வழங்குகின்றது. "மழையில் வான மீனணிந் தன்ன, குழையமன் முசுண்டை வாலிய மலர" என்பது, அகநானூறு, உசுரு. ஆகாயம் ஏனைப்பூதங்கள் தோன்றுதற்குக் காரணமென்றது, அதினின்று காற்றும், அதினின்று தீயும், அதினின்று நீரும், அதினின்று நிலமும் உண்டாயினவென்னும்

முறைபற்றியதாம். "பரந்திடங் கொடுக்கும் விசும்புதோ யுள்ளம்" (௫௩௮) என இந்நூலுட்பின்னும் வருதல்காண்க. இந்த இரண்டடிகளும் யாப்பருங் கலவிருத்தியுரையில், உவமக்காட்சியுள் ஊனந்தோன்றிய ஆனந்தவுவமத் திற்கு உதாரணமாகக் காட்டப்பெற்றன.

102 - 6. [நீலத் தன்ன விதைப்புன மருங்கின், மகுளிபா யாது மலி துளி தழாலின், அகளத் தன்ன நிறைசுனைப் புறவிற், கவ்வை போகிய கருங் காய் பிடியேழ், நெய்கொள வொழுகின பல்கவ ரீரெண் :] பல் கவர் ஈர் எண் நீலத்து அன்ன விதை புனம் மருங்கின் அகளத்தன்ன நிறை சுனை புறவின் மகுளி பாயாது மலி துளி தழாலின் கவ்வை போகிய கரு காய் பிடி எழ் நெய் கொள ஒழுகின—பலவாகக் கிளைத்த பசிய எள்ளுத்தோடுகளெல்லாம் நீலமணியையொத்த நிறத்தையுடையவாயெழும்படி அவற்றைவிதைத்த கொல்லையின்பக்கத்தில் நீர்ச்சாலையொத்த நிறைந்த சுனைகளையுடைய காட்டிடத்தே அரக்குப்பாயாமல் மிக்கதுளிதழுவுகையினாலே இளங்காயாகிய தன்மைபோன கரியகாய் ஒருபிடியிலே எழ்காயாக நெய் உள்ளேகொள்ளும்படியாக வளர்ந்தன;

வி - பு. ஈர் எண் என்பதிலுள்ள 'ஈர்' என்பதை ஈரமென்னும் சொல்லின்சிதைவென்றாவது இருமையென்னும் பண்புச்சொல்லின் விகாரமென்றாவது கொள்க. 'எண்' என்பதும் எள்ளுக்கு ஒருபெயர். இங்கு எள்ளுத் தொகுதிக்கு நீலமணி ஒப்பிடப்பட்டதுபோலவே "நீலத்தன்ன பைம்பயிர்" எனப் பயிருக்கு ஒப்பிடப்பட்டது; (மது. ௨௭௧) அகளம் - நீர்ச்சால். மகுளி பாய்தல் - அரக்குப்பாய்தல். கவ்வை - எள்ளிளங்காய்; "கவ்வை கறுப்ப" (மது. 271.)

107 - 8. [பொய்பொரு கயமுனி முயங்குகை கடுப்பக், கொய்பத முற்றன குவவுக்குர லேனல் :] பொய் பொரு கயமுனி முயங்கு கை கடுப்ப குவவு குரல் ஏனல் கொய் பதம் உற்றன—தம்மில் விளையாடிப்பொருகின்ற யானைக்கன்றுகளின் ஒன்றோடொன்று சேர்ந்த கைகளையொப்பத் தம்மிற் பிணையுங்கதிர்களையுடைய தினை அறக்குஞ் செவ்வியாகமுற்றின;

வி பு. 'பொய்பொரு' என்றதனால் விளையாடிப்பொருகின்றவென்றார். கயமுனி - யானைக்கன்று இப்படியே 'தினைக்கதிருக்கு' யானைக் கையை, "யானை, முதசாா மருப்பி னிறங்குகை கடுப்பத், துய்த்தலை வாங்கிய புனிறுதீர் பெருங்குர, னற்கோட் சிறுதினை" என உவமித்தார், கபிலரும்; (குறிஞ்சி. 35 - 8.)

109 - 110. [விளைதயிர்ப் பிதிர்வின் வீயுக் கிருவிதொறுங், குளிர்புரை கொடுங்காய் கொண்டன வவரை :] அவரை இருவிதொறும் விளை தயிர்ப் பிதிர்வின் வீ உக்கு குளிர்புரை கொடுங்காய் கொண்டன—அவரைகள் தினையரிதாடோறும் முற்றினதயிரினது பிதிர்ச்சிபோலும் பூக்களுதிர்ந்து அடியிலே அரிவாளையொக்கும் வளைந்த காயைக்கொண்டன;

குளிர் - கிளிகடிகருவியுமென்ப.

வி - பு. இருவி - தினையரிந்த தாள். வீ - பூ. குளிர் - அரிவாள். கொமைமை - வளைவு

111 - 13 [மேதி யன்ன கல்பிறங் கியவின், வாதிகை யன்ன கவைக்கதி ரிறைஞ்சி, யிரும்புகவர் வுற்றன பெரும்புன வரகே :] பெரும்புனம் வரகு மேதி அன்ன கல் பிறங்கு இயவின் வாதிகை அன்ன கவை கதிர் இறைஞ்சி இரும்பு கவர்வுற்றன—பெரியபுனத்தில் வரகுகள் எருமைகிடந்தாற் போன்ற கற்பொருந்த வழியிடத்திலே தருக்கங்கூறுகின்றவன் கையிடத்து இணைந்த விரல்களையொத்த இரட்டித்த கதிர்கள் முற்றி வளைந்து அரிவாளாலே அரிதலுற்றன ;

வி - பு. "மேதியன்ன கருங்கல்"—(புறநா. ௫). பிறங்குதல் - பெருத்தல். இயவு - வழி வாதி - வாதம் சொல்லுவோன் ; "சிதைந்தன வரினுமியைந்தன வரையார்" (தொல். எச்ச - ம் சூ ௬.) என்பதற்கு இதிலுள்ள 'வாதி' என்பது உதாரணமாகக் காட்டப்பெற்றது. வாதுசெய்வோர்களுட் சிலருடைய கைவிரல்களுள்ளே சுட்டுவிரலும் அதன் அடுத்தவிரலுமே இணைந்து அசைந்துதோன்றுதலை இக்காலத்தும் காணலாகும். வரகின்கதிர் இரட்டித்துள்ளனவென்பதை, "கவைக்கதிர் வரகுங் காய்பயி லெள்ளும்" (பெருங்கதை என்பதனாலும் அறியலாகும். இரும்பு, ஆகுபெயர்.

114 - 144 [பால்வார்பு கெழீஇப் பல்கவர் வளிபோழ்ப, வாலிதின் விளைந்தன வைவனம் வெண்ணெல், வேலீண்டு தொழுதி யிரிவுற் றென்னக், காலுறு துவைப்பிற் கவிழ்க்கனைத் திறைஞ்சிக், குறையறை வாரா நிவப்பி னறையுற், றாலைக் கலமருந் தீங்கழைக் கரும்பே, புயற் புனிறு போகிய பூமலி புறவி, னவற்பதங் கொண்டன வம்பொதித் தோரை, தொய்யாது வித்திய துளர்படு துடவை, யையவி யமன்ற வெண்காற் செறுவின், மையென விரிந்தன நீணறு நெய்தல், செய்யாப் பாவை வளர்ந்துகவின் முற்றிக், காயங்கொண்டன விஞ்சி மாவிருந்து, வயவுப்பிடி முழந்தாள் கடுப்பக் குழிதொறும், விழுமிதின் வீழ்ந்தன கொழுங்கொடிக் கவலை, காழ்மண் டெஃகங் களிறுமுகம் பாய்ந்தென, வூழ்மலர் மொழிமுகை யுயர்முகந் தோயத், துறுகல் சுற்றிய சோலை வாழை, யிறுகு குலை முறுகப் பழுத்த பயம்புக், கூழ்ற் றலமரு முந்தூழ் பகலறைக், காலமன்றி புமரம்பயன் கொடுச்சலிற், காலி னுதிர்ந்தன கருங்கனி நாவன், மாறுகொள வொழுகின யூறநீ ருயவை, நூலொடு குழீஇயின கூவை சேறுசிறந், தண்ணுநர்த கடுத்தன தேமாப் புண்ணரிந், தாலை யுக்கன நெடுந்தா ளாசினி, விரலூன்று படுக ணுதளி கடுப்பக், குடிஞை யிரட்டு நெடுமலை யடுக்கத்துக், கீழு மேலுங் கார்வாய்த் தெதிரிச், சுரஞ்செல்கோடியர் முழவிற் றூங்கி, முரஞ்சுகொண் டிறைஞ்சின வலங்குசினைப் பலவே :]

120, 21. பூமலி புறவின் புயல் புனிறு போகிய அம்பொதி தோரை அவல் பதம் கொண்டன—பூமிக்க காட்டிடத்தே மழையால் ஈனறணிமை தீர்ந்து முற்றிய அழகிய குலையினையுடைய மூங்கில் அவலிடிக்குஞ் செவ்வியைக்கொண்டன ;

இது மூங்கில்.

**வி - பு.** புறவு - காடு. போகிய - நீர்ந்த. பொதி - குலை; "பொன்னிறச் செந்நெல் பொதியொடு பீள்வாட" என்பது நாலடியார்; தோரையென்பது மூங்கிலையும் ஒருவகைநெல்லையும் உணர்த்தும்; அவற்றுள், மூங்கிலையுணர்த்திற் றென்பார், 'இது மூங்கில்' என்றார்; "குறுங்கதிர்த் தோரை நெடுங்கா லையவி" (மது. ௨அ௭), "நீள்கழை, நெல்லு நீர்விளை கேழலுந் தோரையும்" (சீவக. ௧௬௨௨) என்பவற்றால் தோரை ஒருவகைநெல்லாதலறிக. 'அவற்பதங்கொண்டன' என்பதை, 'அவலவலென்கின்ற நெல்' (தொல். சொல். எச். சூ ௨௧-ம் ச ந. உரை) என்பது விளங்கச்செய்கின்றது.

123, 122. ஐயவி தொய்யாது துளர் படு துடவை வித்திய அமன்ற வெண்சிறுகடுகு உழாதே களைக்கொட்டால் அடிவரைந்து கொத்தும் தோட்டங்களிலே விதைக்கப்பட்டனவாய் நெருங்கி விளைந்தன;

**வி - பு.** தொய்யாது - உழாமல். துளர் - களைக்கொட்டு; "துளர்படு துடவை" (பெரும்பா. ௨0௧.) துடவை - தோட்டம். அமலுதல் - நெருங்குதல்

126, 125. இஞ்சி செய்யா பாவை வளர்ந்து கவின் முற்றி காயம் கொண்டன—இஞ்சிமுதல் ஒருவாற் பண்ணப்படாத பாவைகள் வளரப்பட்டு அழகுமுதிர்ந்து காழ்ப்பைக்கொண்டன;

இஞ்சிக்கிழங்கைப் பாவையென்றல் மரபு.

**வி - பு.** முதல் - வேர். "பாவை யிஞ்சியுங் கூவைச் சுண்ணமும்" (பெருங்கதை) என்பதனாலும் இஞ்சிக்கிழங்கைப்பாவையென்றல் அறியலாகும். காயம், காழ்ப்பு - உறைப்புச்சுவை.

128, 127. கொழுங்கொடி கவலை குழிதொறும் வயவு பிடி முழந்தாள் கடுப்ப விழுமிதின் வீழ்ந்தன—கொழுவிய கொடியினையுடைய கவலை குழிகடோறும் வலியபிடியின் மடித்த முழந்தாளையொக்கும்படி சீரிதாகக் கீழே வளர்ந்தன;

**வி - பு.** வயவு - வலி. பிடி - பெண்யானை. விழுமிது, சீரிது - சிறப்பையுடையது. கிழங்குவளர்தலை வீழ்தலென்றசொல்லும்வழக்கை, புறநானூறு, ௧0௯ - ம் செய்யுளின் விசேடக்குறிப்பாலுணர்க.

126. மா இருந்து வீழ்ந்தன—முற்றி மாவாந்தன்மை தம்மிடத்தேயுளவாய் வீழ்ந்தன;

129. காழ் மண்டு எஃகம் களிறு முகம் பாய்ந்தென—காம்பிலேல்லைத்தவேல் யானையைக் குத்திற்றென்னும்படியாக,

**வி - பு.** காழ் - காம்பு. எஃகம் - வேல். பாய்ந்தென, பாய்ந்ததென என்பதன்விகாரம்.

130 - 31. ஊழ் மலர் ஒழி முகை உயர் முகம் தோய துறு கல் சுற்றிய சோலை வாழை—முறைப்பட மலர்தலையொழிந்த முகைகளினுடைய உயர்ந்த முகங்கள் சென்றுதீண்டும்படியாக நெருங்கினமலைகளைச் சூழ்ந்துநின்ற சோலையாகியவாழை,

வேல் யானையைக்குத்தினாற்போல வாழைப்பூ மலையைத்தீண்டி நின்றதென்றுணர்க; வாழைப்பூ உதிர்ந்த பின்பு உலராது நிற்றல் இயல்பு.

132. இறுகு குலை முறுக்க பழுத்த—காய்நெருங்கின குலை மிகவுநெகிழும்படி பழுத்தன;

வி - பு. ஊழ் - முறை. துறுதல் - நெருங்குதல். கல் - மலை; "பொலிகயிலைக், கல்லின் விருக்கக் கடனுனலை" எனபது திலலைக்கலம்பகம், ௨. போரில் யானையை வேலாற்குத்தல் மரபெனபதை "கைவேல் களிற்றொடுபோக்கி வருபவன்" என்னும் திருக்குறளா லுணர்க

132 - 3 மூங்தூழ் முறறு பயம் புகக அலமரும்—பெருமூங்கில் நெல்லுமுற்றுதலுற்றுப் பயன்படுந்தன்மையிலே புகுந்து அசையாநிற்கும்;

வி - பு. மூங்தூழ் - பெருமூங்கில். ஊழ் - முறை; முற்றுதல். அலமருதல் - அசைதல்.

134. மரம் காலம் அன்றியும் பயன கொடுத்தலின—ஆணடுள்ள மரங்கள்தாம் காலமன்றியும நிலவிசேடத்தாற பயனைக்கொடுத்தலின்,

வி - பு. இவ்வடியோடு, "கால மன்றியும் மரமபயம பகரும், யாணர் அறாஅ வியன்மலை" என்னும (புறநா. ககசு.) பகுதி ஒப்புநோக்கற்பாலது.

135, 133. நாவல காலிற் கருங்கனி அகல் அறை உதிர்ந்தன—நாவல் காற்றாலே கரியபழம் அகன்ற பாறையிலே உதிர்ந்தன;

இது சினைவினை முதலொடுமுடிந்தது

வி - பு. கால - காற்று அறை - பாறை. சினைவினை, கனியின் உதிர்தல்; முதல - நாவல.

136 நீர் வேட்டு உயவை மாறு கொள ஒழுகின—விடாய்த்தகாலத்தில் வாய் நீருறுதறகுக்காரணமான உயவைக்கொடி நீரோடே மாறுபாடுகொள்ளும்படி படர்ந்தன;

என்றது - தண்ணீர் தேடவேண்டாவென்றவாறு.

வி - பு. உயவைக்கொடியின் இலை நாவில் நீரூறசசெய்யுமென்பர்.

137. கூவை நூறொடு குழீஇயின — கூவைக்கிழங்கு நீறுந்தன்மையோடே முற்றித்திரண்டன;

வி - பு. நூறு. நீறு ஒருபொருட்சொற்கள். இக்கிழங்கு 'கூவைநீறு' என்றும், 'கூவைச்சுண்ணம்' என்றும் வழங்குவதுண்டு. "கூவை நீறுங் கொழுங்கொடிக் கவலையும்" (சிலப். காட்சி. ௬௨), "பாவையிஞ்சியுங் கூவைச் சுண்ணமும" (பெருங்கதை) எனபவற்றாலறிக. இக்கிழங்கு குற்றாலமலை முதலியவற்றிற்காணலாகும். மலைநாட்டிலவாழ்பவர்கள் இதன் இலையில் உணபதுண்டு; "கூவை துற்ற நாற்காற் பந்தர்" (புறநா. உ௯.) கூவை - ஒருமரமென்பர் கல்லாடவுரையாசிரியர் (மயிலேறும்பெருமாள்பிள்ளை.)

137 - 8. தேமா சேறு சிறந்து உணணுநர் தடுத்தன—பழமாக்கள் சாறு மிகக உண்பாரை வேறொன்றிற் செல்லவொட்டாமற் றடுத்துக்கொண்டன;

வி - பு. தேம மா - இனியமாமரம. சேறு - சார

138, 9 நெடுந்தாள் ஆசினி புண்ணரிந்து அரலை உக்கன—நெடிய அடியையுடைய ஆசினிப்பலாப் புண்ணுறும்படி வெடித்து உள்ளுள்ள விதைகள் சிந்தின;

வி - பு. ஆசினி - ஒருவகைப்பலா; இஃது ஈரப்பலாவெனவும் வழங்கும்; இம்மரம் வேரிற்காய்த்துப்பழுப்பது; "படிக்கு வேரப் பலாப்பழுத்தது"- (பிரபுலிங்க. மாயையுற்பத்தி. எ.) புண்போலே தோன்றலின், பழத்தின் வெடிப்பைப் புண்ணென்றார்; 'பெரும்பழம் புண்கூர்ந்து' என்பர் பின்; உகூஉ.

140-41 விரல் ஊன்று படு கண் ஆகுளி கடுப்ப குடிஞை இரட்டும் நெடுமலை அடுக்கத்து—விரல்தீண்டுகின்ற முழங்குகின்ற கண்ணையுடைய சிறுபறையையொக்கப் பேராந்தை மேன்மேலும் மாறிக்கூப்பிடும் நெடிய மலைப்பக்கத்தே,

வி - பு. படுதல் - ஒலித்தல்; குடிஞை, பேராந்தை - ஒருவகை ஆந்தை. இரட்டு - இரங்கக் கூப்பிடுதல்; "வணங்கட் கடுந்துடி, புலிதுஞ்சு நெடுவரைக் குடிஞையோ டிரட்டும்" (புறநா. கஎ0)

141-3. அலங்கு சினை பலவு கார் வாய்த்து எதிரி சுரம் செல் கோடியர் முழவின் தூங்கும் மேலும் தூங்கு முரசு கொண்டு இறைஞ்சின—அசைகின்ற கொம்பினையுடைய பலாக்களின் பழைய பருவத்தே பெய்யப்பட்டு அதனைத் தாம் ஏற்றுக்கொண்டு வழிப்போகின்ற கூத்தருடைய மத்தளங்கள்போலே கீழும் மேலும் தூங்கி முற்ற நல்கொண்டு தாழ்ந்தன;

வி - பு. பலவு - பலாமரம்; சுரம் - வழி; கோடியர் - கூத்தர்; முழவு - முற்றல்; "முழவுசன் முதிர்பு" (மதுரை. ௧௮ ௨௫) அரிதாள அரிந்ததாளங்கள். பலாப்பழங்களுக்கு மத்தளங்கள் உவமை. இந்நூலின் முதலில் (க - க ), வாத்தியங்களுக்குப் பலாப்பழங்களை உவமைகூறினார்.

123 வெள்ளகால் செறுவில்—வெளிறிய அரிதாளங்களையுடைய செய்யிலே,

114-5. வெண்மை வெண்ணெல் பால் வார்பு கெழீஇ பல் கவர் வளி போழ்பு வாலிதின் விளைந்தன—வெண்ணெல்லும் வெண்ணெல்லும் பால்கட்டிச் சிறிதுமுற்றப் பலவாய்க் கவர்த்த காற்று ஊடறுக்கப்பட்டு நன்றாக விளைந்தன;

வார்தல் - ஒழுகுதல்; அதனிற் கட்டுதலையுணர்த்திற்று. கெழுமுதல் ஈண்டு முற்றுதலையுணர்த்திற்று. பலகவர்வளியென்ப நாலுகாற்றுமடித்து முற்றுதல்கூறிற்று

வி - பு. வெண்மை - துணையாகச்சாத்து விளைவிப்பதாகிய ஒருவகை நெல்; "வெண்மை விதைத்த மையுறக் கவினி, ஏனல் செல்லா வேனல்" (புறநா கருக.)

119, 117 தீங்கழை கரும்பு கவிழ் கனைத்து—இனிய கோலாகிய கரும்பு தோடுகவிழ்த்தலோடே திரண்டு,

வி - பு. கழைக்கரும்பு - ஒருவகைக்கரும்பென்பாருமுளர்.

118 கூறற நுழைவாரா நிவப்பின்—பாதி குறைபடுதலுண்டாகாத வளர்ச்சியோடே,

வி - பு. அறை - பாத்தி.

116 - 7. மேல் எண்டு தொழுதி இரிவுற்றென்ன கால் உறு துவைப்பின் இறைஞ்சி—வேற்படை திரண்டதானை கெட்டுப்போதலை உற்றதென்னும்படி காற்று மிகப் படுகின்ற ஆரவாரத்தாலே சாய்ந்து,

118 - 9 அறையுற்று ஆலைக்கு அலமரும் — வெட்டுதலுற்று ஆலையிலே சென்று பயன்படுதற்கு அசையாநிற்கும்;

கரும்பு—திரண்டு நிவப்போங்கி இறைஞ்சி அலமருமென்க

வி - பு. தொழுதி - கூட்டமாதலிற் சேனைக்காயிற்று. அறை - அறுத்தல்; "அறைக்கரும்பு (பொரு. ௧௯௩) கரும்புகள் காற்றலைத்தற்கு வேற்படையையுடைய சேனை கெட்டோடுதல் உவமை

124. நீள் நறு நெய்தல் மை என விரிந்தன—நீண்ட நறியநெய்தல் கருமைதான் வடிவுகொண்டதென்னும்படியாக அலர்ந்தன;

வி - பு. "மணிமருள் நெய்தல்" (பெரும்பா. ௨௮௨.)

முனைப்பதிசேக்கையைச் சேர்க்கள் (௯), வானம்பொழிகையினாலே (௯௭) பெயலொடு வைகிய புனத்து (௯௯) முசுண்டை மலர்ந்தன (௧0௧); எண் ஒழுகின (௧0௯); ஏனல் கொய்யப்படும் முற்றன (௧0௫); அவரை கொண்டன (௧௧0), வாது கவாவுற்றன (௧௧௨); புறவிலே (௧௨0) கோரை கொண்டன (௧௨௧); மயவி அமன்றன (௧௨௭); இஞ்சி காய்கொண்டன (௧௨௯); கவலை வீழ்ந்தன (௧௨௮); வாழை (௧௩௧) பழுத்தன (௧௩௨); முந்தூழ் அலமரும் (௧௩௩); பாயல் உதிர்ந்தன (௧௩௫); உயவை ஒழுகின (௧௩௯); கூவை தழீஇயின (௧௩௭); தேமாத் தீந்தன (௧௩௮), ஆசினி உக்கன (௧௩௯); பாவு திணை இறைஞ்சின (௧௪௪), வெண்காற்செறுவிலே (௧௨௩) வெண்ணெல்லும் விளைந்தன (௧௧௫), கரும்பு அலமரும் (௧௧௯); நெய்தல் விரிந்தன (௧௨௪); இவ்வாற்றால் மிக்கவெல்லாம் முற்றுப்பெற்ற புதுவருவாயையுடைய ஊர்களாலே (௯௫) புதிதாகிய தன்மையவாகத்து; அவ்வழியின் பண்பு ஆதனைத்து (௯௯) எனவினைமுடிக்க

ஆங்கு ஆற்றினது நன்மையினளவு கூறிற்று.

வி - பு 'ஆற்றினது (நன்மையினை) அளவென்றது, ௯௭ - ம் அடியிலுள்ளதை

145 தீயின் அன்ன ஒள் செங்காந்தள்—நெருப்பினையொத்த ஒள்ளிய செங்காந்தளினது,

இதற்கு நன்னனென்னும்பெயர் சேயொடுத்த தன்மையின், ஆனந்தமாய், பாடினரும் பாட்டுண்டாரும் இறந்தாரென்று ஆளவந்தபிள்ளையாசிரியர் குற்றங்கூறினாரெனின், அவர் அறியாது கூறினார்; செய்யுட்செய்த கௌசிகனார் ஆனந்தக்குற்றமென்னுங் குற்றமறியாமற் செய்யுட்செய்தாரேல், இவர் நல்லிசைப்புலவராகார்; இவர்செய்தசெய்யுளை நல்லிசைப்புலவர்செய்த ஏனைச்செய்யுட்களுடன் சங்கத்தார் கோவாமல் நீக்குவர்; அங்ஙனநீக்காது கோத்தற்குக்காரணம் ஆனந்தக்குற்றமென்பதோர் குற்றம் இச்செய்யுட் கூறாமையானென்றுணர்க.

இச்சொன்னிலை நோக்குமிடத்து ஓர்குற்றமுமின்று; என்னை? அன்னவென்னும் அகரவீற்றுப் பெயரெச்சவுவமவுருபு தீயென்னும்பெயரைச்சேர்ந்தாநின்று இன்சாரியை இடையேயடுத்துநிற்றலின். நன்னனென ககரமுதலும் னகரவொற்றீறுமாய்நிற்குஞ் சொல்லாயினன்றே அக்குற்றமுளதாவதெனமறுக்க. நன்னனென அண்மைவிளியாய்நின்ற முன்னிலைப்பெயரென்று குற்றங்கூறுவார்க்கு இப்பாட்டுப் படர்க்கையேயாய்நிற்றலிற் குற்றமின்றென்க.

நூற்குற்றங்கூறுகின்ற பத்துவகைக்குற்றத்தே "தன்னானொருபொருள் கருதிக்கூறல்" என்னுங்குற்றத்தைப் பின்னுள்ளோர் ஆனந்தக்குற்றமென்பதோர் குற்றமென்று நூல்செய்ததன்றி அகத்தியனாரும் தொல்காப்பியனாரும் இக்குற்றங்கூறாமையிற் சான்றோர்செய்யுட்கு இக்குற்றமுண்டாயினும் கொள்ளாரெனமறுக்க.

வி - பு. ஆனந்தமாய் - ஆனந்தக்குற்றமாகி; ஆனந்தக்குற்றமென்பது எழுத்தானந்தம், சொல்லானந்தம், பொருளானந்தம், யாப்பானந்தம், தூக்கானந்தம், தொடையானந்தமென ஆறுவகைப்படும்; அவற்றுள், இங்கேசொல்லியது சொல்லானந்தத்திலடங்குமென்பர்; "இயற்பெயர் மருங்கின் மங்கலமொழியத், தொழிற்சொல் புணர்ப்பது சொல்லா னந்தம்" என்பதனானுணர்க. ஆனந்தக்குற்றம் - மரணத்தைத்தரும் குற்றம். ஆளவந்த பிள்ளையாசிரியராவார் இன்னாரென்று தெரியவில்லை. சங்கப்புலவர்களுக்கு நல்லிசைப்புலவரென்பது சிறப்புப்பெயர். தொல்காப்பியம், எச்சவியலில், ௬௭ - ம் சூத்திரத்தின் விசேடவுரையில் இரண்டாம்வேற்றுமையுருபு அன்னவென்பதையும் கொண்டு முடியுமென்பதற்கு இந்தஅடியையே மேற்கோளாக நச்சினார்க்கினியர் எடுத்துக்காட்டியிருத்தல் ஆராய்தற்பாலது.

146 - 7. தூவற் கலித்த புது முளை ஊன் செத்து அறியாது எடுத்த புல் புறம் சேவல்—மழையாலே செருக்கிவளர்ந்த புதிய முளையைத் தசையாகக்கருதி முளையென்றறியாதேயெடுத்த புற்கென்ற முதுகினையுடைய பருந்து,

வி - பு. செத்து - அறிந்து; "பண்பில சொல்லுந் தேறுதல் செத்தே" (ஐங்குறு. ௨௬௭). முளை - அரும்பு

148. ஊன் அன்மையின் உண்ணாது உகுத்தென — தசையல்லாதபடியாலே தின்னாமல் அவற்றையுஞ் சிந்திப்போகட்டதாக,

149 - 50. நெருப்பின் அன்ன பல் இதழ் தாஅய் வெறி களம் கடுக்கும் வியல் அறைதோறும்—நெருப்பினையொத்த பலவிதழ்கள்பரந்து வெறியாடுகின்ற களத்தையொக்கும் அகன்ற பாறைகடோறும்,

* பத்துவகைக் குற்றங்களாவன :— 'சிதைவெனப் படுபவை வசையற நாடிற், கூறியது கூறன் மாறுகொளக் கூறல், குன்றக் கூறன் மிகைபடக் கூறல், பொருளில மொழிதன் மயங்கக் கூறல், கேட்போர்க் கின்னா யாப்பிற் றாதல், பழித்த மொழியா னிழுக்கங் கூற, றன்னா னொருபொருள் கருதிக் கூற, லென்ன வகையினு மனங்கோ ளின்மை, யன்ன பிறவு மவற்றுவிரி யாகும்" என்பன; தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், சூ. ௧௦௮.

வி - பு. வெறி - தெய்வத்திற்குச்செய்யும் கடன்; வேலன் சூடிய கார்தன் மலர்கள் சிந்திக் கிடக்குமாதலின், வெறிக்களம் உவமையாயிற்று; "வெறியயர் சிறப்பின் வெவ்வாய் வேலன், வெறியாட் டயர்ந்த காந்தள்" (தொல். புறத். ௫.) பலசிறப்பூக்களும் சிந்திக்கிடத்தல்பற்றி வெறிக்களத்திற்கு "நீலத் தன்ன பைம்பயிர் மிசைதொறும், வெள்ளி யன்ன வொள்வீ யுதிர்ந்து, சுரிமுகிழ் முசுண்டையொடு முல்லை தாஅய், மணிமரு ளைய்த வுறழக் காமர், துணிநீர் மெல்லவற் றொய்யிலொடு மலர, வல்லோன் றைஇய வெறிக்களங் கடுப்ப, முல்லை சான்ற புறவணிந்து" (மது. ௨௭௧ - ௮௫.) என முல்லைநிலத்தை உவமைகூறினர், மாங்குடிமருதனார்.

151. மண இல் கமழும் மா மலை சாரல்—மணஞ்செய்த மனைபோல மணக்கும் பெரிய மலைப்பக்கத்திற் சிறுகுடி (௧௫௯) யென்க.

152. தேனினர் கிழங்கினர் ஊன் ஆர் வட்டியர்—தேனினையுடையராய்க் கிழங்கினையுடையராய்த் தசைநிறைந்த கடகத்தையுடையராய்,

வி - பு. மண இல் - கல்யாண வீடு. வட்டி, கடகம் - கடகப்பெட்டி; "முள்ளெயிற்றுப் பாண்மக ளின்கெடிறு சொரிந்த, வகன்பெரு வட்டி" (ஐங்குறு. ௪௭.)

153 சிறு கண் பன்றி பழுதுளி போக்கி—சிறிய கண்ணையுடைய பன்றியிற் பழுதானவற்றைப்போக்கி, அதன் தசையையும்,

பழுதுளி, உளி - பகுதிப்பொருள்விகுதி.

வி - பு. பகுதிப்பொருள் விகுதி, தனக்கென ஒருபொருளின்றிப் பகுதியின் பொருளையே பொருளாகவுடையது; "இடனுடைப் பேரியாழ் முறையுளிக் கழிப்பி" (பெரும்பா. ௪௬௨) என்பதில், உளி, பகுதிப்பொருள் விகுதியென்று எழுதியிருத்தல்காண்க.

154 - 5. [பொருதுதொலை யானைக் கோடு சீராகத், தூவொடு மலிந்த காய கானவர்:] தூவொடு மலிந்த பொருது தொலை யானை கோடு சீராக காய கானவர்—மற்றுள்ள தசைகளோடேநிறைந்த வட்டிகளையும் தம்மிற் பொருதுபட்ட யானையினது கொம்புகள் காவுமரமாகக் காவிக்கொண்டுவந்த கானவருடைய,

வி - பு. தூ - தசை. மலிந்த, வினையாலணையும் பெயர். காவமரம்-தோளிற்சுமக்குமரம். காவி - சுமந்து. கானவர் - வேடர்; காட்டிலுள்ளவர்.

156 - 7. செழு பல் யாணர் சிறுகுடி படினே இரு பேர் ஒக்கலொடு பதம் மிக பெறுகுவிர்—வளவிய பல புதுவருவாயினையுடைய சிறிய ஊரிலே தங்கிற் கரிய பெரிய சுற்றத்தோடே அவ்வுணவுகளை மிகவும் பெறுகுவிர்;

வி - பு. "முன்னிலை சுட்டிய வொருமைக் கிளவி, பன்மையொடு முடியினும் வரைநிலை யின்றே, யாற்றுப்படை மருங்கிற் போற்றல் வேண்டும்" (தொல். எச்ச. ௬௬) என்னுஞ் சூத்திரத்தின் விசேடவுரையில், ஒருமைச்சொல் பன்மையோடுமுடிவதற்கு, 'கலம்பெறு கண்ணுள ரொக்கற் றலைவ. (௫0)...... இரும்பேரொக்கலொடு பதமிகப்பெறுகுவிர்' என்னும் இந்தப்பகுதியே உதாரணமாகக்காட்டப்பெற்றது. பொருநராற்றுப்படையில்,

பொருந (௩), தொழுது முன்னிற்குவிராயின் (௧௫0) எனவும், சிறுபாணாற்றுப்படையில், முதுவாயிரவல (௪0), செல்குவிராயின் (௧௪௩) எனவும், பெரும்பாணாற்றுப்படையில், புலவுவாய்ப்பாண (௨௨), நிரையப்படர்குவிராயின் (௩௭) எனவும் வருபவைகளை நோக்கி அறியற்பாலன. இருபேரொக்கல் - வறுமையிற் றுகியாவுடம்பு கரிந்த பெரிய சுற்றமெனினும் பொருந்தும். சுற்றத்தாரையும் உளப்படுத்தினமையின், 'பெறுகுவிர்' என்றார்.

158. [அன்றவ ணசைஇ யல்சேர்ந் தல்கி] அசைஇ அன்று அல் சேர்ந்து அவண் அல்கி — அவற்றைப்பெற்று இளைப்பாறி அற்றைநாளிராப் பொழுதும் அவர்களுடனே பொருந்தி அவ்விடத்தே தங்கி,

159 - 60 கன்று எரி ஒள் இணர் கடும்பொடு மலைந்து சேந்த செயலை செப்பம் போகி — கன்றின நெருப்புப்போன்ற ஒள்ளிய பூங்கொத்துக்களைச் சுற்றத்தோடேசூடிச் சிவந்த அசோகமரத்தையுடைய செவ்விய வழியைப் போய்,

வி - மு. அசோகம்பூச் சிவக்கநிறமுடையதாகலின், நெருப்பு உவமையாயிற்று "அளிமுரலணிமலரசோகம் பூத்தன, .. அழற்கணை சொரிந்த போன்றவே" (நைடதம். அன்னத்தைக் கண்ணுற்ற ௩௬) என்பதனாலும் அது விளங்கும். கடும்பு - சுற்றம். செயலை - அசோகமரம்.

161 - 2 அலங்கு கழை நரலும் ஆரி படுகர் சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி — அசைகின்ற மூங்கிலொலிக்கும் அரிதாயிழியும் வழிகளையுடைய சிலம்பைச்சேர்ந்திருந்த சீறூர்களைச்சேர்ந்து,

வி - மு. ஆரி - அருமையையுடையது. மலைவழி வருந்த ஏற்றிழிவை யுடையதாதலின், அரிதாயிழியும் வழியென்றார். பாக்கம் - பக்கத்திலுள்ளது.

163 - 4. நோனா செருவின் வலம்படு நோன்றாள் மான விறல் வேள் வயிரியம் எனினே — பகைவரைப் பொறாமற்பொரும் போரினையும் வெற்றியுண்டாதற்கு வலியமுயற்சியினையும் மானத்தையும் வெற்றியையுமுடைய நன்னனுடைய கூத்தரேமென்று கூறுவீராயின்,

வி - மு. நோனாமை - பொறாமை. வலம் - வெற்றி. வயிரியர் - கூத்தர். மானவிறல்வேளென்றது "விராஅது பெருந்திருவின் மான விறல்வேள்" என மதுரைக்காஞ்சியிலும் வந்துள்ளது

165 நும இல் போல நில்லாது புக்கு — நும்முடைய மனைபோல வாசலில்நில்லாதே உள்ளேசென்று,

166. கிழவிர் போலக் கேளாது கெழீஇ — முன்பே கிழமையுடையீர் போலே அவரைக்கேளாதே உறவுகொள்ளுகையினாலே,

167. சேண் புலம்பு அகல இனிய கூறி — சேணிடைவந்த நுமது வருத்தந்தீரும்படி இனியமொழிகள் அவர்கூறி,

168. [பரூஉக் குறைபொழிந்த நெய்க்கண் வேவையொடு] பொழிந்த நெய்க்கண் பரூஉக்குறை வேவையொடு — நெய்சொரிந்த நெய்யிடத்தே பருத்த தசைகிடந்து வெந்த பொரியலோடே,

169. குரூஉக் கண் இறடி பொம்மல் பெறுகுவிர்—நிறவிய வடிவினையுடைய தினைச்சோற்றைப் பெறுகுவிர்;

வி - பு. 'நும்மில்.........புக்கு' என்றதனால் நாட்டினர்க்கு வந்தோர்பாலுள்ள அன்பின் மிகுதி கூறினார்; "பொருநர்க் காயினும் புலவர்க் காயினும், அருமறை நாவி னந்தணர்க் காயினும், .. ..அடையா வாயில்" (சிறுபா. ௨0௩ - ௬), "எங்கோ னிருந்த கம்பலை மூதூர், உடையோர் போல விடையின்று குறுகி" (புறநா. ௬௪) என்பவையும் இக்கருத்துடையன; "அடையாத பொற்கதவு மஞ்சலென்ற சொல்லும் உடையான்" என்பதும் இங்கே யறியத்தக்கது. கிழமை - உரிமை. சேண் இடை - நெடுந்தூரமான இடம். குறை - குறைக்கப்பெற்ற தசை. வேவை - வெந்தது. இறடிப் பொம்மல் - தினைச்சோறு. 'மானவிறல் வேள் (௧௬௪)........பெறுகுவிர்' என்னும் இவ்வடிகளின் பொருளுடன், "செவ்வரை நாடன் சென்னிய மெனினே, தெய்வமடையிற் றேக்கிலைக் குவைஇ நும், பைதீர் கடும்பொடு பதமிகப் பெறுகுவிர்" (பெரும்பா. ௧0௩ - ௫) என்பது ஒத்துவிளங்குதல்காண்க.

170 - 188. [எறித் தரூஉ மிலங்குமலைத் தாரமொடு, வேய்ப்பெயல் விளையுட் டே                    —றல், குறைவின்று பருகி நறவுமகிழ்ந்து வைகறைப், பழஞ்செருக் குற்றநும் மனங்க நீர, வருவி தந்த பழஞ்சிதை வெண்காழ், வருவிசை தவிர்த்த கடமான் கொழுங்குறை, முளவுமாத் தொலைச்சிய பைந்நிணப் பிளவை, பிணவுநாய் முடுக்கிய தடியொடு விரைஇ, வெண்புடைக் கொண்ட துய்த்தலைப் பழனி, னின்புளிக் கலந்து மாமோ ராகக், கழைவளர் நெல்லி னரியுலை யூழ்த்து, வழையமை சாரல் கமழத் துழைஇ, நறுமலரணிந்த நாறிரு முச்சிக், குறமக ளாக்கிய வாலவிழ் வல்சி, யகமலி யுவகை யார்வமொ டளைஇ, மகமுறை தடுப்ப மனைதொறும் பெறுகுவிர், செருச்செய் முன்பிற் குரிசின் முன்னிய, பரிசின் மறப்ப நீடலு முரியி, ரனைய தன்றவன் மலைமிசை நாடே:]

188. அவன் மலை மிசை நாடு அனையதன்று—அந்நன்னனுடைய மலையினது உச்சியினுடு யான்முற்கூறிய தன்மைத்தன்று; மிகவுஞ்சிறப்புடைத்து; ஆண்டுப் பெறுவனவற்றைக் கேட்பீராக;

177, 5. பிணவு நாய் முடுக்கிய தடியொடு வருவிசை தவிர்த்த கடமான் கொழுங்குறை முளவுமா தொலைச்சிய பைந்நிணம் பிளவை விரைஇ—பெண்ணாகியநாய் ஒடிககடித்த உடம்பின் தடிகளோடே ஓடிவருகின்ற விசையைக் கெடுத்துக்கொன்ற கடமானின் கொழுவியதசையையும் எய்ப்பன்றியைக் கொன்ற பசுத்தநிணத்தையுடைய பிளக்கப்பட்டதசைகளையும் கலந்து,

வி - பு. தடி - மாம்ஸம். முளவுமா, எய்ப்பன்றி - முள்ளம்பன்றி. பிளவை - பிளக்கப்பட்டது. ஆகாரவீறு அல்வழிக்கண் அம்முப்பெறாது முடிபுபெற்றதற்கு, 'பிணவுநாய்முடுக்கிய' என்னும் இந்தப்பகுதி உதாரணம்; (தொல். குற்றியலுகரப். சூ. எ௮. ந. உரை.) குறியதன்கீழ் ஆகாரம் குறுகி உகரமேற்றதற்கு 'முளவுமா', 'பிணவுநாய்' என்பவற்றை எடுத்துக் காட்டினர், இலக்கணவிளக்கமுடையார்.

171 - 2 வேய் பெயல் விளையுள் தேக்கள் தேறல் குறைவு இன்று பருகி—மூங்கிற்குழாய்க்குள்ளே பெய்தலையுடைய முற்றிய தேனாற்செய்த கட்டெளிவைக் குறைவின்றாக நிரம்பவுண்டு,

வி - பு. விளையுள் - விளைதல். ' திருந்தமை விளைந்த தேக்கட் டேறல் என்பர் பின்னும்; ௫௨௨ கள் மூங்கிற்குழாய்க்குள் வைக்கப்பெற்று முற்று மென்பதை, " காரணி யாணர்த், தூம்பகம் பழுனிய தீம்பிழி மாந்தி " (பதிற். அக), " வாங்கமைப் பழுனிய தேறல் " (புறநா. ௧௨௯) என்பவற்றாலும் அவற்றினுரைகளாலுமறிக.

172. நறவு மகிழ்ந்து—பின்னர் நெல்லாற்சமைத்த கள்ளை உண்டு மகிழ்ந்து,

முற்படக் கூறியதசைகளை இடையேயிடுகின்ற தேறலைப்பருகி நறவு மகிழ்ந்தென்க.

வி - பு. சிந்தாமணியில், ௧௨௬௬ - ம் கவியில்வந்துள்ள ' தொண்டிக் கள் ' என்பதற்கு ' நெல்லாலாக்கின கள் ' என்று பொருள்செய்திருப்பது அறியற்பாலது. மகிழ்ந்து - கள்ளையுண்டு; " வாங்கமைப் பழுனிய தேறன் மகிழ்ந்து " (புறநா. ௧௨௯.) என்பதனாலறிக.

172 - 3 வைகறை பழஞ்செருக்கு உற்ற நும் அனந்தல் தீர—விடியற்காலத்துக் கள்ளுண்டுமகிழ்ச்சியுற்ற நும்முடைய மதம்தீரும்படி,

வைகறையனந்தலென்க.

வி - பு. அனந்தல், மதம் - மயக்கம்.

174. அருவி தந்த பழம் சூழ்கத்து (௧௭0) சிதை வெண் காழ் மா (௧௭௯)—நீர் கொண்டுவந்த பலாப்பழம் செவ்வியழிந்து உதிர்ந்த வெள்ளிய விதையின் மாவையும்,

வி - பு. செவ்வி - பக்குவம். வெண்காழ்மா - பலாவிதையாலாகியமா.

178 - 9 வெண் புடை கொண்ட துய் சுலை பழனின் இன் புளி உலை மோர் ஆக கலந்து — வெள்ளியபுறத்தைக்கொண்ட ஆரத்தை இடத்தேயுடைய புளியம்பழத்தின் இனியபுளிப்பையும் உலையாகவாரத மோருக்கு அளவாகக் கலந்து,

வி - பு. புளிச்சுவை - கள்மயக்கத்தைத் தீர்க்குமென்பர்.

180 - 81. கழை வளர் நெல்லின் அரி வமை அமை சாரல் கமழ துழைஇ ஆக்கிய—மூங்கிலிலேநின்று முற்றிய நெல்லின அரிசியைச் சுரபுன்னைநெருங்கிய மலைச்சாரலெல்லாம் நாறும்படியாகத் துழாவியாக்கிய,

வி - பு. கழைவளர்நெல்லின் அரி - மூங்கிலரிசி; " அவற்பதங் கொண்டன வம்பொதித் தீதாரை " (௧௨௧) என மூங்கில்நெல் முன்பும் கூறப்பெற்றுள்ளது.

183. வால் அவிழ் வல்சி—வெள்ளிய சோறாகிய உணவை,

182 - 3. நறுமலர் அணிந்த நாறு இரு மச்சி குறமகள்—நறியமலரைச் சூடின நாறுகின்ற கரிய மயிர்முடியினையுடைய குறச்சாதியின்மகள், ஆக்கிய,

கள்ளுண்டபின்பு அனாதற்ாச சோற்றைப்பெறுகுவிரென்க.

184. அகம் மலி உவகை ஆர்வமொடு அளை இ—நெஞ்சுநிறைந்த மகிழ்ச்சியையுடையராய் விருந்தினரைப்பெற்றேமென்னும் ஆசையோடே நெஞ்சு கலந்து.

185. மக முறை தடுப்ப மனைதொறும் பெறுகுவிர்—தத்தம்பிள்ளைகளைக்கொண்டு முறைசொல்லித் தடுக்கையினாலே மனைகடோறும் பெறுகுவிர்;

அண்ணன், அம்மானென்றாற்போல்வன முறை.

வி - பு. "தொடிக்கை மகடூஉ மகமுறை தடுப்ப" என்றார், சிறுபாணாற்றிலும்; கசுஉ. வல்சியைப்பெறுகுவிரென்க.

170. ஏறி தரூஉம் இலங்கு மலை தாரமொடு—தாங்கள் உச்சிமலையிலே ஏறிக் கொண்டுவரும் விளங்குகின்ற மலையிற் பண்டங்களோடே.

அவை: சந்தனம், அகில், பொன், மணிமுதலியன.

வி - பு. தாரம் - பலபண்டம்.

தடுப்ப மனைதொறும தாரத்தோடே வல்சியைப்பெறுகுவிரென்க.

186 - 7. செரு செய் முன்பின் குரிசில் முன்னிய பரிசில் மறப்ப நீடலும் உரியிர்—ஆண்டுப்பெற்றவற்றாலே, போரைச்செய்கின்ற வலியையுடைய நன்னனிடத்துப் பெறக்கருதிய பரிசிலை மறக்கும்படி நீட்டித்திருத்தலுமுரியிர்;

வி - பு. முன்பு வலி.

189 - 91. நிரை இதழ் குவளை கடி வீ தொடினும் வரை அரமகளிர் இருக்கை காணினும் உயிர் செல வெம்பி பனித்தலும் உரியிர்—நிரைத்த இதழையுடைய குவளையில் தெய்வம்விரும்புதலிற் கடியவாகிய பூக்களைக் கிட்டினும் ஆண்டை வரையரமகளிருடைய இருப்பைக்காணினும் உயிர் போம்படி வெதும்பி நடுங்குதலுமுரியிர்; ஆகையினாலே பலநாணில்லாது நிலனுடு படர்மின் (கசுஉ) எனவினைமுடிக்க.

வி - பு. நிரைத்த - வரிசையுற்ற. குவளையென்பதற்குக் கருங்குவளை, செங்குவளையெனப் பொருள்கொண்டு அம்மலர்களிலிருக்குந் தெய்வங்கள் முறையே உமாதேவியாரும் சூரியனுமெனக்கொள்க; மலர்களுள் இன்னதில் இன்னதெய்வம் வாழுமென்பதைப் பழையநூல்களிற் காண்க. வீ - மலர். வரையரமகளிர் - மலையிலுறையும் தெய்வப்பெண்கள். ஆண்டை - அவ்விடம்.

இத்துணையும் அசையுநற்புலமும், வல்சியும் சேரக்கூறினார்.

வி - பு. அசையு நற்புலம், சுஎ - ம் அடியிலும், வல்சி, சுஅ - ம் அடியிலுமுள்ளன.

192. [பலநா ணில்லாது நிலனுடு படர்மின் :]

வி - பு. பல நாள் நில்லாது - பலதினங்கள் தாமதித்து நில்லாமல், நிலன் நாடு படர்மின் - நிலத்திலுள்ள நாட்டுவழியே செல்லுமினென்க; 'நிலனுடு' என்றபாடத்திற்குப் பூமிவழியேயென்க

இதற்குரைகிடைக்கவில்லை.

193-5. [விளைபுன நிழத்தலிற் கேழ லஞ்சிப், புழைதொறு மாட்டிய விருங்க லரும்பொறி, யுடைய வாறே :] ஆறே கேழல் விளை புனம் நிழத்தலின் அஞ்சி புழைதொறும் மாட்டிய இருங்கல் அரும்பொறி உடைய—வழிகள், பன்றி முற்றின தினைப்புனத்தை நொக்குகையினாலே இதற்கஞ்சிச் சில்வழிக ளோறும் கொளுத்திவைத்த பெரிய கற்பொறிகளையுடைய ; ஆகையினாலே,

வி-பு. நிழத்தல், நொக்கல் - குறையச்செய்தல் ; " ஒய்தலாய்த லிழத் தல் சாஅய், ஆவயி னான்கு முள்ளத னுணுக்கம் " (தொல். உரிச். சூ. ௩௨.) புழை - சிறுவழி. கொளுத்திவைத்த - பொருத்திவைத்த. கற்பொறி - கல்யந் திரம் ; " இரும்புலி வேட்டுவன் பொறியறிந்து மாட்டிய, பெருங்க லடாரும் போன்ம் " (புறநா. ௧௯.) என்பதனாலறிக. இங்கே கூறியது, பன்றியை அகப்படுத்தும் யந்திரம்.

195-6 [நள்ளிரு ளலரி, விரிந்த விடியல் வைகினிர் கழிமின் :] நள் ளிருள் வைகினிர் அலரி விரிந்த விடியல் கழிமின்—செறிந்த இருட்காலத்தே தங்கினிராய் ஞாயிற்றின்கதிர்விரிந்த விடியற்பொழுதிலே போவீர் ;

197. நளிந்து பலர் வழங்கா செப்பம் துணியின்—செறிந்து பலரும் போகாதவழியைப் போகத்துணிவீராயின், அவ்விடம்,

வி-பு. செப்பம், வழியென்னும்பொருளில் இடுகுறிமாத்திரையாய் வந்தது.

198-9. [முரம்பு கண்ணுடைந்த பரலவற் போழ்விற், கரந்துபாம் பொடுங்கும் பயம்புமா ருளவே :] முரம்பு கண்ணுடைந்த பரல் அவல் போழ் வில் பாம்பு கரந்து ஒடுங்கும் பயம்பும் உளவே—மேட்டுநிலம் தன்னிடத்திலே விண்ட பரலையுடைய பள்ளநிலத்திற் பிளப்பிலே பாம்பு மறைந்துகிடக்கும் குழிகளுமுள ;

உம்மையாற் புலிமுதலியனவுமுள. மார் - அசை.

வி-பு. முரம்பு - பருக்கைக்கல்லாலாகிய மேடு. பரல் - பருக்கைக் கல். அவல் - பள்ளம். போழ்வு - பிளப்பு.

200. குறிக்கொண்டு மரம் கொட்டி நோக்கி—அப்பயம்பை மனத் தாலே குறித்தல்கொண்டு விலங்கிற்கு மரங்களிலேயேறிக் கொட்டிப்பார்த்து,

201. செறி தொடி விறலியர் கைதொழூஉ பழிச்ச—செறிந்த வளை யினையுடைய விறலியர் அப்பாம்பு மனமகிழும்படி கையிற்றொழுதுவாழ்த்த,

வி-பு. இதனால், மகளிர் பாம்பை வழிபட்டுவந்தமை தெரிகின்றது.

202. [வறிது நெறியொரீஇ வலஞ்செயாக் கழிமின் :] நெறி வறிது ஒரீஇ வலம் செயாக் கழிமின்—விலங்குகிடக்கும்வழியைச் சிறிது அகலப் போய் வலப்பக்கத்துவழியை நுமக்குவழியாகச்செய்துகொண்டு போவீராக ;

வலம், ஆகுபெயர்.

வி-பு. வறிது - சிறிது ; " வறிது சிறிதாகும் " (தொல். உரிச். ௩௮.)

203. [புலந்துபுனிறு போகிய புனஞ்சூழ் குறவர் :] புனிறு போகிய புனம் சூழ் குறவர் புலந்து—ஈன்றணிமைதீர்ந்துமுற்றின தினைப்புனத்தைக் காத்தற்குச்சூழ்ந்த குறவர் தினையழிகின்றதற்கு வெறுத்து,

புலர்ந்தென்பது பாடமாயின், முற்றியென்க.

வி - பு. புலர்தல் உலர்தலாதலின், முற்றியென்றார்.

204. உயர் நிலை இதணம் ஏறி கை புடையூஉ—உயர்ந்த நிலையினை யுடைய பரணிலேயேறிக் கையைக்கொட்டி,

205. அகன் மலை இறும்பில் துவன்றிய யானை—அகன்றமலையிற் குறுங்காட்டிடத்தே நிறைந்த யானைகளினுடைய,

206. பகல் நிலை தளர்க்கும் கவண் உமிழ் கடுங்கல்—பகற்பொழுதே நிற்கின்றநிலையைக்கெடுக்குங் கவண் காலுகின்ற கடிய கற்கள்,

பகைநிலைதளர்க்குமென்று பாடமாயின், பகைத்த நிலையென்க

வி - பு. காலுகின்ற - தூக்குகின்ற. கற்கள் கூற்றத்தன்ன.

207 - 10. [இருவெதிர் ஈர்ங்கழை தத்திக் கல்லெனக், கருவிர லூகம் பார்ப்போ டிரிய, வுயிர் செகு மாபிற கூற்றத் தன்ன, வரும்விசை தவிராது.]

209. உயிர் செகு மாபின் கூற்றத்தன்ன—உயிர்களைப் போக்குமுறைமையாலே கூற்றத்தையொக்கும்; அவைதாம்,

208. கருவிரல் ஊகம் பார்ப்போடு கல்லென (207) இரிய—கரியவிரலையுடைய குரங்குகள் பார்ப்போடே கல்லென்னுமோசைபடக் கெடும்படியாக,

வி - பு. பார்ப்பு - குட்டி; " பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற் றிளமை ", " தவழ்பவை தாமு மவற்றோ ரன்ன " (தொல். மர. சூ. ௪, ௫.) என்பவற்றின் உரையில், 'தாமும்' என்றதனால் ஊர்வன, நடப்பனவற்றுள்ளும் சிறுபான்மை இப்பெயர்களுக்கு உரியன கொள்க என்றது இங்கேகருதற்பாலது.

207, 210. இரு வெதிர் ஈர்ங்கழை தத்தி விசை தவிராது வரும்—பெரியமூங்கிலினது பசிய கோலைக்கடந்து வருகின்றவிசை மாறாதுவரும்;

210. மாம் மறையா கழிமின்—அதற்கு மரங்களிலேயொதுங்கிநின்று போவீராக;

குறவர் (௨௦௩) எறிக் கைபுடையூஉத் (௨௦௪) தளர்க்குங்கல் (௨௦௬) கூற்றத்தன்ன (௨௦௯); அலைய இரியத் (௨௦௮) தத்தி (௨௦௭) விசைதவிராது வரும்; அதற்கு மாமறையாக் கழிமின் (௨௧௦) என்க.

211 - 2. உரவு களிறு கரக்கும் இடங்கர் ஒடுங்கி இரவின் அன்ன இருள் தூங்கு வரைப்பின்—வலியயானையை விழுங்குமுதலைகள் தங்கப்பட்டு இராக்காலத்தையொத்த இருள்செறியுமிளைகளையும்,

வி - பு. கரக்கும் - ஒளிக்கும். மிளை - காவற்காடு.

213. குமிழி சுழலும் குண்டு கயம் முடுக்கர்—குமிழிகள் சுழன்றுவரும் ஆழ்ந்த நீருநிறைமடுக்களையுடைய முடுக்கரையுமுடைய,

முடுக்கர் - நீர்சூழ்கின்ற இடங்கள். முடுக்கரையுடைய யாறு (௨௧௪).

214. அகழ இழிந்தன்ன கான் யாற்று நடவை—ஏறுதற்கும் இறங்குதற்கும் அரியவாகையினாலே அகழிலே இழிந்தாற்போன்ற காட்டாற்றுவழி,

215. வழூஉம் மருங்கு உடைய—கால் ஓடுமிடங்களையுடைய, அவ்விடத்திற்கு,

வி - பு. வழூஉம் - வழுக்கும்.

215 - 8. [வழாஅ லோம்பிப், பரூஉக்கொடி வலந்த மதலை பற்றித், துருவி னன்ன புன்றலை மகாரோ, டொருவி ரொருவி ரோம்பினிர் கழிமின்.]

217 துருவின் அன்ன புன்றலை மகாரோடு—செம்மறியாட்டினை யொத்த புற்கென்ற தலையினையுடைய பிள்ளைகளோடே,

216, 215.* வலந்த பரூஉக் கொடி மதலை பற்றி வழாஅல் ஓம்பி—மரங்களிற்சுற்றிக்கிடக்கின்ற பரிய கொடியாகிய பெரிய பற்றுக்கோட்டைப் பிடித்துக் கால் வழுதலைப் பரிகரித்து,

வி - பு. புற்கென்ற - சிவந்த. மதலை - பற்றுக்கோடு. வழாஅல் - வழுவுதல், வழுக்குதல்.

218. ஒருவிர் ஒருவிர் ஓம்பினிர் கழிமின்—ஒருவரையொருவர் பாதுகாத்துப் போவீராக;

219. அழுந்து பட்டு அலமரும் புழகு அமல் சாரல்—கிழங்கு தாழவீழ்ந்து அசையும் மலையெருக்குநெருங்கின பக்கமலையில்,

வி - பு. அழுந்து - பள்ளம்; இது கிழங்கிற்கு ஆகுபெயர். "பகன்றையும் பலாசு மகன்றலைப் புழகும்" என்பது, பெருங்கதை. அலமரும் சாரலென்க.

220 - 21. [விழுந்தோர் மாய்க்குங் குண்டுகயத் தருகா, வழும்புகண் புதைத்த நுண்ணீர்ப் பாசி:] விழுந்தோர் மாய்க்கும் குண்டு கயத்து அருகா கண் புதைத்த நுண்ணீர் பாசி வழும்பு—வீழ்ந்தோரைமறைக்கும் ஆழத்தையுடைய குளங்களுக்கு அருகாக இடமறைதற்குக்காரணமாகிய நுணுகிய நீர்மையையுடைய பாசியினது குற்றம்,

* "வழும்பறுக்க கில்லாவாந் தேரை - வழும்பில்சீர்" என்றார் பிறரும்.

வி - பு. மாய்த்தல் - மறைத்தல்.

222. அடி நிலை தளர்க்கும் அருப்பமும் உடைய - அடி ஊன்றியிட்ட நிலையை ஓடப்பண்ணும்; அதுவுமன்றி அவ்விடம் போதற்கருமையையுமுடைய; அதற்குப் பரிகாரமாக,

வி - பு. அருப்பம் - அருமை.

223 - 4. முழுமுதல் அணங்கிய நுண் கோல் வேரலொடு எருவை மென் கோல் கொண்டனிர் கழிமின்—வழிமுழுதும் பின்னிவளர்ந்த நுணுகிய கோல்களையுடைய சிறுமூங்கிலோடே வேழத்தினது மெல்லிய கோல்களையும் பற்றுக்கோடாகப் பிடித்துப்போவீர்;

வி - பு. எருவை, வேழம் - கொறுக்காங்கட்டை

இத்துணையும் ஆற்றினது தீமையளவு (௩எ) கூறினார்.

225 - 8. [உயர்நிலை மாக்கற் புகர்முகம் புதைய, மாரியி னிகுதரு வில்லுமிழ் கடுங்கணைத், தாரொடு பொலிந்த வினைநவில் யானைச், சூழியிற் பொலிந்த :]

புகர் முகம் புதைய (௨௨௫) சூழியிற் பொலிந்த (௨௨௮) உயர் நிலை மாக்கல் (௨௨௫) வினை நவில் யானை (௨௨எ)—புகரையுடைய முகமறையும்படி

* நாலடியார், கயமை, ௨.

முகபடாத்தாற்பொலிவுபெற்ற உயர்ந்த நிலையினையுடைய பெருமையை யுடைய மலைபோலும் போர்த்தொழிலிலே பயின்ற யானையினையும்,

வி - பு. புகர் - புள்ளி. பொலிந்த - அழகுபெற்ற, சூழி, முகபடாம் - யானையின்முகத்தில் அணியும் ஒருவகை ஆடை. கல் - மலை. வினை - தொழில்.

226. மாரியின் இகுதரு வில் உமிழ் கடுங்கணை—மழைபோலத் தாழ்ந்துவிழும் வில்லுக்கான்ற கடிய அம்பினையுமுடைய,

வி - பு. இகுத்தல் - சொரிதல்; "இகுத்தகண்ணீர்" (புறநா. கசா.) 'வில் உமிழ்கடுங்கணை' என்பது, "விற்பழுச் துமிழ்ந்த வெய்ய வெந்நுனைப் பகழி" (சீவக. ஈகூரு) என்பதில் அமைந்துள்ளது.

227. தாரொடு பொலிந்த மூத்த புரிசை (உஉக)—தூசிப்படையோடே பொலிவுபெற்ற பழைய மதில்,

மதில் - ஆகுபெயராய்த் திருப்பதியையுணர்த்திற்று. என்றது காரியுண்டிக் கடவுளுடைய படைமிகுதிகூறிற்று. அன்றிப் பகைப்புலத்தை அழித்தற்கும் அந்நிலத்தைக்காத்தற்கும் நன்னனன் வைத்த படையுமாம்.

வி - பு. தார், தூசிப்படை - முன்படை. திருப்பதி - காரியுண்டிக் கடவுள் எழுந்தருளிய தலம். 'காரியுண்டிக்கடவுளுடைய படைமிகுதி' என்றது, 'தார்' என்றதை நோக்கி. பகைப்புலம் - பகைவரிடம்.

228 - 9. [சுடர்ப்பூ விலஞ்சி, யோர்யாற் றியவின் மூத்த புரிசை :] சுடர்ப்பூ இலஞ்சி யாற்று ஓர் இயவின் மூத்த புரிசை—ஒளியையுடைய பூக்களையுடைய மடுவினையுடைய யாற்றுக்கரையில் ஒருவழியினையுடையவூர்,

ஓராற்றியவுபாடமாயின், ஒருப்பட்டவழியென்க.

இனி அம்மையையுடைய தூசிப்படையோடுபொலிந்த யானையென்று யானைக்கடையாக்கி அவ்வியானையினுடைய பூக்கனெழுதின முகபடாம் போலே உயர்நிலைமாக்கற் புகர்முகம்புதையப்பொலிந்த சுடர்ப்பூவையுடைய புரிசையென்றுமாம்; இன்னும் யானையின்மத்தகம்போலேபொலிந்த சுடர்ப்பூவையுடைய புரிசையென்றுமாம்; இன்னும் யானையின் மத்தகம்போலே பொலிந்த சுடர்ப்பூவிலஞ்சியையுடைய உயர்நிலைமாக்கலையுடைய புரிசையென்பாருமுளர். அவர் சுனையிடத்து மேலெழுந்த குவளைமுதலியவற்றினரும்புகள் தலைசாய்ந்து கற்புதையக்கிடந்ததற்கு யானையின்மத்தகத்துப் புகரை உவமையென்றுகொண்டார்.

வி - பு. மடு - இயல்பாகவேஉண்டான நீர்நிலை. யாறு - நதி; கரைக்கு ஆனமையின், ஆகுபெயர்; இது விட்ட ஆகுபெயரின்பாற்படும்.

230. [பராவரு மரபிற் கடவுட் காணின் :] புரிசைப் (உஉக) பரா அரு மரபிற் கடவுள் காணின்—கோயிலிற் பராவுதற்கரிய முறைமையினையுடைய கடவுளைக் கண்டீராயின்,

வி - பு. பராவுதல் - துதித்தல்; திரிகரணங்களால் வழிபாடுசெய்தலென்றுமாம். கடவுள், பராவுதற்கரியவரென்பது, கந்தபுராணம், திருவவதாரப்படலம், நூஉ - ம் பாடலாலும் விளங்கும்.

231. [தொழாஅிர் கழியி னல்லது :] நீர் தொழா கழியின் அல்லது—நீர் வணங்கிப்போம் அத்தனையல்லது,

நீரென்பது குறுகின்றது இனித் தொழாஅிரென்பது மறையன்றித் தொழுதென்று பொருடருமெனுமுணர்க.

வி - பு. மறையன்றி - எதிர்மறையன்றி.

231 - 32. வறிது நும் இயம் தொடுதல் ஓம்புமின்—சிறிது நும்முடைய வாச்சியங்களைத் தீண்டுதலைக் காப்பீராக ; அதற்குக் காரணமென்னையெனின்,

வி பு. வறிது, சிறிதென்பது,முன்வந்துள்ள, ' வறிது நெறியொரீஇ ' (உ0உ) என்பதனாலும் விளங்கும்.

232 - 3. [மயங்குதுளி, மாரி தலையுமவன் மல்லல் வெற்பே :] அவன் மல்லல் வெற்ப மயஙகு துளி மாரி தலையும்—அவனது வளவிய நவிரமென்னு மலை மயங்கின துளியையுடைய மழையை இடைவிடாமற்பெய்யாநிற்கும் ;

என்றசுனுற்பயன் ' வாச்சியங்களுநும்மைநேர்ந்து நமக்கும் போதலரிதெனப தாம்.

வி - பு. ' மல்லல்வளனே ' (தொல். உரிச். எ) மயங்கின - கலந்த.

234 - 5. [அலகை யன்ன வெள்வேர்ப் பீலிக், கலவ மஞ்ஞை கட்சி யிற் றளரினும் :]

234 - 5. அலகை அன்ன வெள் வேர்ப் பீலி மஞ்ஞை—பலகறையை யொத்த வெள்ளிய வேரினையுடைய பீலியையுடைய மயில.

வி - பு. அலகு - பலகறை: சோரி. பறையலகெனபகு பலகறை யெனமருவிற்றென்பர் மேவா - முருகமேதனவழுமதும. பீலி - மயிலின கலாபம் ; தோகை.

235. கட்சியில் கலவம் தளரினும்—அக்காட்டிடத்தே ஆடுதற்குவிரித்த கலாபத்தினது பாரத்தாலே ஆடியிளைத்து நிற்பினும்,

236 - 7. [கடும்பறைக் கோடியர் மகாஅ ரன்ன, நெடுங்கழைக் கொம் பர்க் கடுவ னுகளினும் :]

237. நெடுங்கழை கொம்பர்—நெடிய மூங்கிலின் கவடுகளிலே,

236 - 7. கடும்பறை கோடியர் மகாஅர் அன்ன கடுவன் உகளினும்—கடிய பறையினையுடைய கூத்தருடைய பிள்ளைகளையொதத கடுவன்பாயினும்,

வி - பு. கவடு - கிளை. கடுவன் - ஆண்குரங்கு. இங்கே ' கடும்பறைக் கோடியர் மகாஅன்னமந்தி ' என்றது, " உமணர்ஒா மூகையொடுவந்த, மகாஅ ரன்னமந்தி " (சிறுபா. ருரு - ரு) என்றதை நினைப்பிக்கின்றது.

238 - 9. [நேர்கொ ணெடுவரை நேமியிற் றொடுத்த, சூர்புக லடுக்கத் துப் பிரசங் காணினும் :]

238 - 9. நேர் கொள் நெடுவரை சூர் புகல் அடுக்கத்து — செவ்வையைத் தன்னிடத்தேகொண்ட நெடியமலையில் தெய்வம் விரும்பின பக்கமலையிலே,

238 - 9. நேமியின் தொடுத்த பிரசம் காணினும்—தேருருள்போல் வைத்த தேனிறாலைக் காணினும்,

**வி - பு.** சேர் கொள் நெடுவரை - செங்குத்தானமலை. சூர் - தெய்வம்; அச்சத்தைத் தருவது. புகலுதல் - விரும்புதல். பிரசம் - தேன். தேனிறால் - தேனடை; நேமி - தேருருள்; வட்டவடிவமுடையது; நேமி - வட்டம்.

240 - 41. [ஞெரேரென நோக்க லோம்புமி னுரித்தன்று, நிரைசெலன் மெல்லடி நெறிமாறு படுகுவிர் :]

240. ஞெரேரென நோக்கல் உரித்தன்று—கடுகப்பார்த்தல் நுமக்குரிய தொழிலன்று; அதற்குக் காரணமென்னையெனின்,

**வி - பு.** ஞெரேரென - விரைவுக்குறிப்பை உணர்த்தும் இடைச்சொல்.

241. மெல்லடி நிரை செலல் நெறி மாறுபடுகுவிர்—மெல்லிய அடியாலே நிரைத்துச் செல்லுதலையுடைய வழிதப்புவீர்;

**வி - பு.** நிரைத்து - வரிசையுற்று.

240. ஓம்புமின்—ஆதலால் அங்ஙனம் நோக்குதலைப் பாதுகாப்பீர்; இதுவும் ஆற்றினது அருமைகூறிற்று.

242. வரை சேர் வகுந்தின் கானத்து படினே—மலையைச்சேர்ந்த வழியினையுடைய காட்டிடத்தேசெல்லின்,

வி - பு. வகுந்து - வழி.

243 - 9. [கழுதிற் சேணோ னேவொடு போகி, யிழுதி னன்ன வானி ணஞ் செருக்கி, நிறப்புண் கூர்ந்த நிலந்தின் மருப்பி, னெறிகெடக் கிடந்த விரும்பிணர் யெருத்தி, னிருடுணிந் தன்ன வேனங் காணின், முளிகழை யிழைந்த காடுபடு தீயி, னளிபுகை கமழா திறையினிர் மிசைந்து :]

கழுதில் சேணோன் (உ௪௩) நிறம் புண் கூர்ந்த (உ௪௫) ஏவொடு போகி (உ௪௩) நெறிகெட கிடந்த (உ௪௬) ஏனம் (உ௪௭)—பரணின்மேலிருந்து யானைமுதலியவற்றிற்கு எட்டாதவன் எய்த மருமத்திற் புண்மிகுதற்குக்காரணமான அம்போடேபோகி நெறிகெடக்கிடந்த பன்றி.

**வி - பு.** கழுது, பரணென்பதை, “பணவை யிதணங் கழுது பரணே” என்னும் பிங்கலந்தையாலுணர்க. சேணோன் - நெடுந்தூரத்திலுள்ளவன்; சேண் - நெடுந்தூரம்; “கலிகெழு மீமிசைச் சேணோ னிழைத்த, புலியஞ் சிதண மேறி” (குறிஞ்சி. ௪௦ - ௧) என்பதனாலுணர்க. நிறம் - மருமம் - மார்பு. ஏ - அம்பு, எத்தொழிலையுடையது; “ஏமாறில்லா விந்திரன்”, “ஏத்தருங்கொடியனோ” (சீவக. ௧௬௫௫, உ௮௦௪) என்பவற்றாலும், அவற்றின் உரைகளாலும் உணர்க. நெறிகெட - வழிசிதைய. ஏனம் - பன்றி. தொல்காப்பியம், மரபியலில், முதற்சூத்திரத்தின் விசேடவுரையில், ‘மாற்றருஞ் சிறப்பின்’ என்றதனாற் போந்தபொருளாகிய, ‘இவை ஒருதலையாகத் தத்தம் மரபிற் பிறழாமற் செய்யுள்செய்யப்படுமென்பதூஉம், ஈண்டுக்கூறு தனவாயின வழக்கொடுபட்ட மரபு பிறழவும் செய்யுளின்பம்படின் அவ்வாறு செய்யவென்பதூவும் கூறியவாறாயிற்று’ என்பதற்குக் காட்டியவுதாரணங்களுள், ‘இருடுணிந்தன்னவேனம்’ என்பது ஒன்று.

நிலம் தின் மருப்பின் (உ௪௫) இழுதின் அன்ன வால் நிணம் செருக்கி (உ௪௪) இரும்பிணர் எருத்தின் (உ௪௬) இருள் துணிந்தன்ன ஏனம் (உ௪௭)—

கிழங்குகளை அகழ்ந்து தின்கையினாலே மண்டின்று தேய்ந்த கொம்பினையும் நெய்விழுதினையொத்த வெள்ளியநிணம் செருக்கும்படி கரியசருச்சரையை யுடைத்தாகிய கழுத்தினையுமுடைய இருள் அற்றுக்கிடந்தாற்போன்ற ஏனம்,

செருக்கவெனத் திரிக்க.

வி - பு. * நிலம் தின் - நிலத்தால் தின்னப்பட்ட. நிணம் - கொழுப்பு. சருச்சரை - சரசரப்பு. பன்றியைப் பிடிப்போர் அதுவரும்வழியில் குழியை வெட்டிவைத்து அதனை மறைத்துவிட்டுத் தாம் பரணின்மேல் இருப்பார்; இதனை, "சேணோ னகழ்ந்த மடிவாய்ப் பயம்பின், வீழ்முகக் கேழ லட்ட பூசல்" (மது. ௨௯௪ - ௫) என்பதனாலறிக

248 - 9. ஏனம் காணின் முளி கழை இழைந்த காடு படு தீயின் நளி புகை கமழாது இறாயினிர் மிசைந்து—பன்றியைக்கண்டீராயின் உலர்ந்தமூங்கில் தம்மில்இழைந்ததனாற் பிறந்த காடெங்குமுண்டாகியதீயினாலே செறிந்த புகைநாறாமல் வக்கி மயிர்போகச்சீவித் தின்று,

வி - பு. முளிதல் - உலர்தல். இழைதல் - உராஞ்சுதல். நளி - செறிவு. இறாவுதல் - நெருப்பில்வாட்டி மயிர்போகச் சீவுதல். வக்குதல் - வாட்டுதல். "வன்பெரும் பன்றி தன்னை யெரியினில் வக்கி", "கொழுப்பரிந்து, வந்தனகொண் டெழுந்தழலில் வக்குவன வக்குவித்து" (பெரிய. கண்ணப்ப. ௧௧௭, ௧௪௫) என்பவை ஈண்டு அறியத்தக்கவை.

250 - 251 [துகளறத் துணிந்த மணிமருள் தெண்ணீர்க், குவளையம் பைஞ்சுனை யசைவிடப் பருகி :] குவளை அம் பைஞ்சுனை துகள் அற துணிந்த மணி மருள் தெண்ணீர் அசைவிட பருகி—குவளையால் அழகிய பசிய நிறத்தவாகிய சுனையில் கலக்கமறத்தெளிந்த பளிங்கென்றுமருளும் தெளிந்த நீரை வழியில் இளைப்புத்தீரும்படி குடித்து,

அசைவு, விகாரம்.

வி - பு. துணிதல், தெளிதலென்பதை, "துணிநீர் மெல்லவல்" (மது. ௬௮௯) என்பதன் பொருளாலும் தெளிக.

252. [மிகுத்துப் பதங்கொண்ட பருஉக்கட் பொதியினிர் :] பருஉக்கண் பதம் மிகுத்து கொண்ட பொதியினிர்—பருத்த இடத்தையுடைய தசையாகியவுணவை முழுதுந்தின்னாமல் மிகுத்துவைத்துக்கட்டிக்கொண்ட பொதியின்சுமையினையுடையிராய்,

வி - பு. பதம் - உணவு. பொதி - மூடை; பொதிதலையுடையது.

253. புள் கை போகிய புன்றலை மகாரோடு—வளை கையினின்றும் போதற்குக்காரணமான சிவந்த தலையினையுடைய பிள்ளைகளோடே,

பிள்ளைப்பேற்றால் வளையிடாராகலின், வளைபோதற்குப் பிள்ளைகள்காரணமாயினார்.

வி - பு. புள், வளை யென்பது, "புள்ளும் யாழுங் குழலு மேங்க" (சீவக. ௨௬௧௧) என்பதனாலும் விளங்கும். போகிய, காரியப்பொருளில் வந்தது. புன்றலைமகார், "துருவி னன்ன புன்றலை மகார்" (௨௧௭) என இந்நூலில் முன்பும் வந்துள்ளது.

254 - 5. [அற்கிடை கழித லோம்பி யாற்றநு, மில்புக் கன்ன கல்லளை வதிமின் :] இடை கழிதல் ஓம்பி ஆற்ற நும் இல் புக்கன்ன கல் அளை அற்கு வதிமின்--அவ்விடத்துப் போதலைப்பரிகரித்து வழியிடத்தன்வாகிய நும இல்லிலே புக்காலொத்த கல்முழைஞ்சுகளிலே இராக்காலத்துத் தங்குவீர் ;

வி - பு. அளை, முழைஞ்சு - குகை.

இஃது அசையுநற்புலமும் வல்சியும் சேரக்கூறிற்று.

கானத்துப்படின் (௨௪௨) மிசைந்து (௨௪௯) பருகிப் (௨௫௧) பொதியினிராய் (௨௫௨) மகாரோடே (௨௫௩) கழிதலோம்பி அற்கு (௨௫௪) வதிமின் (௨௫௫) என்க.

256. அல் சேர்ந்து அல்கி அசைதல் ஓம்பி—இராக்காலத்திற்கு எல்லாருங்கூடித் தங்கி இளைப்பாறி,

257. வான் கண் விரிந்த விடியல் எற்றெழுந்து—வானிடத்தே ஞாயிற்றின்கதிர்விரிந்த விடியற்காலத்தே துயிலுணர்ந்தெழுந்து,

வி - பு. உலகிற்குக் கண்ணாதலின், சூரியனைக் கண்ணென்றார்; இது, "வான்கண் விழியா வைகறை யாமத்து" (சிலப். நாடுகாண். ௧) என்பதனாலும், 'உலகிற்குக் கண்ணாகிய ஆதித்தன் தோன்றி விளங்காத வைகறையென்னும் யாமத்திடத்து' என்னும் அதன் உரையாலும் விளங்கும்; "எண்ணுக்கு வரும்புவனம் யாவினுக்கும கண்ணவா னிவனே யன்றோ" (பாரதம், அருச்சுனன். ௪௩) என வில்லிபுத்தூராழ்வாரும் சூரியனை உலகின்கண்ணாகக் கூறியிருத்தல் காண்க.

258. கான் அகப்பட்ட செந்நெறி கொண்மின்—காட்டிடத்தே கிடந்த செவ்விய நெறியைப் போவீராக ;

வி - பு. செந்நெறி - செம்மையாகியவழி.

259 - 65. [அகன்கண் டன்ன வகன்பை யங்கண், மைந்துமலி சினத்த களிறுமத னழிக்குந், துஞ்சுமரங் கடுக்கு மாசுணம் விலங்கி, யிகந்துசேட் கமழும் பூவு முண்டோர், மறந்தமை கல்லாப் பழனு மூழிறந்து, பெரும்பயங் கழியினு மாந்தர் துன்னு, ரிருங்கால் வீயும் பெருமரக் குழாமும் :]

259 - 61. அகன் பை அம் கண் மைந்து மலி சினத்த களிறு மதன் அழிக்கும் துஞ்சு மரம் கடுக்கும் மாசுணம் விலங்கி— அகன்றபடத்தினையும் அழகியகண்ணினையுமுடைய வலிமிகுகின்ற சினத்தவாகிய யானைவலியைக் கெடுத்துவிழுங்கும் விழுந்துகிடக்கின்ற பெருமரங்களையொக்கும் பெரும்பாம்புகிடக்கின்ற வழியைவிலங்கி,

வி - பு. பை - படம். மைந்து - வலிமை. மதன் - வலி. துஞ்சுதல் தூங்குதலாதலின், விழுந்துகிடத்தற்காயிற்று. அழிக்கும மாசுணமென்க; பெரும்பாம்பு களிற்றை விழுங்குமென்பது, "வெண்கோட் டியானை விளிபடத் தழவு, மகல்வாய்ப் பாந்தள்" (அகநா. ௬௮,) "குஞ்சரங் கோளிழைக்கும் பாம்பை" (திருச்சிற்றம்பல. ௨௧) "புழுங்குவெம் பசியொடு புராணும் பேரா, விழுங்கவுந் தெதிரெதிர் விரித்த வாயின்வாய், முழங்குவெங் கரி புகும்" (கம்ப. தாடகை. ௧௧) என்பவற்றாலும் விளங்கும்.

பெரும்பயம் கழியினும் (௨௬௪) வாய் இறந்து (௨௬௫) இகந்து சேண் கமழும் பூவும் உண்டோர் (௨௬௨) மறந்து அமைகல்லா பழனும் (௨௬௩) மாந்தர் துன்னார் (௨௬௪)—அவற்றாற்கொள்ளும் பெரியபயன் கொள்ளாமற் போகிலும் முற்காலம்அடிப்பட்டுப்போந்த முறைமையைக்கடந்து, தாம்நிற்கின்ற இடத்தைக்கடந்து தூரியநிலத்தே சென்றுநாறும் பூவையும் நுகர்ந்தவர் மறந்து உயிர்வாழ்தலாற்றாத பழங்களையும் தெய்வங்களன்றி மானிடர் அணுகாராகையினாலே,

வாய்இறந்து துன்னாரெனக.

இரு கால் வீயும் (௨௬௫) பழனும் ௨௬௩) கயம் கண்டன்ன (௨௬௬) பெரு மரக்குழாமும் (௨௬௫)—நீருங்காம்பையுடைய அப்பூக்களையும் பழத்தையும் குளத்தைக்கண்டாற்போலுங் குளிர்ச்சியையுடைய பெரியமரக்குழாத்தினையும்,

266 - 7. [இடனும் வலனும் நினையினிர் நோக்கிக், குறியறிந் தவையவை குறுகாது கழிமின் :] நினையினிர் குறியறிந்து இடனும் வலனும் நோக்கி அவையவை குறுகாது கழிமின்—யானகூறியதனை நினைத்து அவற்றின்குறிகளையறிந்து இடத்திலும்வலத்திலும்பார்த்து அவையிற்றை அவையிற்றை அணுகாமற் போவீர்;

வி - பு. அவையிற்றை - அவற்றை; 'உண்டற் கினிய பழனுங் கண்டோர், மலைதற் கினிய பூவுங் காட்டி' (௪௨ - ௩) என இந்நூலிற் பின்னர் வரும் பகுதி இங்கே அறிதற்பாலது.

விலங்கி நோக்கிக குறுகாது கழியுமெனக.

இது சோலை (௬௬) கூறிற்று

268 - 9. கோடு பல முரஞ்சிய கோளி ஆலத்து கூடு இயத்தன்ன குரல் புணர் புள்ளின—கொம்புகள்பலவுமுற்றிய பழத்தைத் தன்னிடத்தே கொண்டாகிய ஆலமரத்திடத்தே கூடின பலவாச்சியங்களையொத்த பல ஓசையுங்கூடின பறவைத்திரளையுடைய நாடுகா (௨௭0) ணெனக.

வி - பு. கோடு, கொம்பு - கிளைகள்; "முரஞ்சன் முதிர்வே" (தொல். உரிச. ௯௫) என்னும் சூத்திரத்திற்கு இந்தப்பகுதியே மேற்கோளாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. கோளி - கொள்ளுதலையுடையது; இச்சொல்லுக்குப் பூவாது காய்க்குமரமென்றுபொருள்கூறுவது முண்டு. ஆலமரத்திற் பலவகைப்பறவைகள் கூடிமுழங்குதல் பலவகைமுழக்கங்களின் தொகுதிக்கு உவமையாக, "முட்டிலா மூவறு பாடை மாக்களார், புட்பயில் பழுமரப் பொலிவிற் றாகிய, மட்டிலா வளநகர்". "மாசனம், . ......பழுமரப் பறவை யொத்தவே" சீவக. ௬௩, ௮௨௮,) "பாய தொன்மரப் பறவைபோற் பயன்கொள வான் பதினெண், டேய மாந்தருங் கிளந்தசொற் றிரட்சிதான்" (திருவிளை. ௩௧௧. ௬௭.) என வேறுசிலராலும் கூறப்பெற்றுள்ளது.

270. நாடு காண் நனந்தலை மென்மெல அகன்மின்—நாடுகளையெல்லாம் காணலாயிருக்கின்ற அகன்ற இடத்தையுடைய மலையை மெல்லமெல்லப் போவீர்;

நனந்தலை - ஆகுபெயர்.

**வி - பு.** நன - அகலம்; இஃது அகரவீற்று உரிச்சொல்; "நனவே களனு மகலமுஞ் செய்யும்" (தொல். உரிச். எஅ) மலையுச்சி இங்கே 'நாடு காணனந்தலை' எனக்கூறப்பட்டாற்போலவே, "கோடுபல விரிந்த நாடுகாணெடுவரை" (அ௫) எனப் பதிற்றுப்பத்திலும் கூறப்பெற்றுள்ளது. திருக்குறுங்குடியின் பக்கத்துள்ள ஒரு மலையின் உச்சி மிகவும் உயர்ந்து நாடுகாணியென இன்னும் வழங்கப்படுகின்றது.

271. மா நிழல் பட்ட மரம் பயில் இறும்பின்—பெரியநிழலுண்டான மரம்நெருங்கின குறுங்காட்டாலே,

272. [ஞாயிறு தெரிஅ மாக நனந்தலை: மாகம் ஞாயிறு தெரிஅ நனந்தலை—ஆகாயத்திற்றிரியும் ஞாயிறு சுடப்படாத அகன்ற இடத்தை யுடைய குன்றம் (உஎ௫),

273 - 5. தேஎம் மருளும் அமையமாயினும் இறுஅ வன்சிலையர் மா தேர்பு கொட்கும் குறவரும் மருளும குன்றத்து படினே—திசைதெரியாமல் மயங்கும் இராக்காலமாயினும் முறியாத வலியவில்லையுடையராய் விலங்கு தேர்ந்துநின்று சுழன்றுதிரியும் குறவருமுட்படமயங்கும் குன்றத்தே நீங்கள் செல்லின்,

**வி - பு.** தேம் - திசை. சிந்தாமணியில், "பூட்டுசிலை யிறவினொடு" என்றவிடத்து இருமீனுக்கு வில்லை உவமை கூறியிருத்தலால், இங்கேயுள்ள 'இறுவன் சிலையர்' என்பதற்கு இறாமீனைப்போன்ற வலிய வில்லையுடையவ ரென்று பொருள்கூறினும் பொருந்தும். விலங்கு தேர்ந்து - மிருகங்களைத் தேடிக்கொண்டு. 'குறவரு மருளுங் குன்றம்' என்பது, உம்மை உயர்வுசிறப் புப் பொருளில்வந்ததற்கு மேற்கோளாகக் காட்டப்பெற்றுள்ளது; (தொல். இடைச். சூ. எ. க உரை) இந்தவாக்கியத்தை இப்படியே "அக்கானிடைக், குறவரும்மருள் குன்றமொன்றுண்டரோ" எனக் (சூளாமணி, மேல்கடல். ௩௧) சுசேலோபாக்கியானத்தில் அமைத்திருக்கின்றனர்.

276 - 7. [அகன்கட் பாறைத் துவன்றிக் கல்லென, வியங்க லோம்பிநு மியங்க டொடுமின்:] இயங்கல் ஓம்பி அகன் கண் பாறை துவன்றி கல்லென நும் இயங்கள் தொடுமின்—அவ்வழியைப் போதலைப் பரிகரித்து அகன்ற இடத்தையுடைய பாறையிலே குவிந்து கல்லென்னுமோசைபட நும்முடையவாச்சியங்களை வாசிப்பீராக;

278 - 9. பாடு இன் அருவி பயம் கெழு மீமிசை காடு காத்துறையும் கானவர் உளரே—ஓசையினிதாகிய அருவியின்பயன்பொருந்திய உச்சிமலையிலே காட்டைக்காத்திருக்குங் கானவர் பலருமுளர்;

ஏகாரம் - ஈற்றசை.

**வி - பு.** பாடு - ஓசை. இதனை, "பாடின் படுமணி யிரட்ட" என்பதனு லுமுணர்க; (திருமு. ௧௬.) இவ்வடி, "பாடி னருவிப் பயங்கெழு மாமலை" (௨௧௧௨) எனச் சீவகசிந்தாமணியில் அமைக்கப்பெற்றுள்ளது.

280 - 81. *நிலை துறை வழீஇய மதன் அழி மாக்கள் புனல் படு பூசலின்*—நிலையாய்ப்போந் துறையைத்தப்பி ஆழத்திலேபுக்க வலியழிந்தமாக்கள் புனலிலேயழுந்துகின்ற வருத்தங்கண்டு விரைந்தெடுப்பாரைப்போல,

வி - பு. மாக்கள் - ஐயறிவினையுடையார்.

281 - 6. [*விரைந்துவல் லெய்தி, யுண்டற் கினிய பழனுங் கண்டோர் மலைதற் கினிய பூவுங் காட்டி, யூறு நிரம்பிய வாறவர் முந்துற, நும்மி னெஞ்சத் தவலம் வீட, விம்மென் கடும்போ டினியி ராகுவிர் :*]

*நெஞ்சத்து அவலம் வீட* (உஅரு) *விரைந்து வல்லெய்தி* (உஅக)—(திசை மயக்கத்தாற்கலங்கி அறிவழிந்த)நெஞ்சிற் கேடு போம்படி ஓடிக் கடுகவந்து சேர்ந்து,

282 - 3. *உண்டற்கு இனிய பழனும் கண்டோர் மலைதற்கு இனிய பூவும் காட்டி*—எல்லாரும் உண்டற்கினியவாகிய பழங்களையும் கண்டவர்கள் சூடுதற்கினியவாகிய பூக்களையும் நுமக்குக்காட்டி, நீர் அவற்றைநுகர்ந்தபின்பு,

வி - பு. 'உண்டற்கினிய' என்பது இந்நூல், ௩௫௩ - ம் அடியிலும் வந்துள்ளது.

284. *அவர் ஊறு நிரம்பிய ஆறு முந்துற*—அக்கானவர் இடையூறு மிக்கவழியை நுமக்குமுற்படப் போகையினாலே,

285 - 6. *நும்மின் இம்மென் கடும்போடு இனியிராகுவிர்*—நும்முடைய இம்மென்னும் ஓசையையுடைய சுற்றத்தோடே மனமகிழ்வீர்;

வி - பு. சுற்றத்தார் இசைப்புலவராதலால், "இம்மென்கடும்பு" என்றார்.

287. *அறிஞர் கூறிய மாதிரம் கைக்கொள்பு*—திசைமயக்கநாடியறிவார் கூறியதிசையையுட்கொண்டு,

288 - 9. [*குறியவு நெடியவு மூழிழிபு புதுவோர், நோக்கினும் பனிக்கு நோய்கூ ரடுக்கத்து :*]

*புதுவோர் நோக்கினும் பனிக்கும் நோய் கூர் அடுக்கத்து*—புதியமாந்தர் கண்ணாலேநோக்கினும் நடுங்கும் நோய்மிக்க பக்கமலையிடத்து,

*குறியவும் நெடியவும் ஊழ் இழிபு*—குறியனவும் நெடியனவுமாகிய குவடுகளை முறைமைப்பட இழிந்து,

வி - பு. குறிய, நெடிய - அஃறிணைப்பன்மைப்பெயர். ஊழ் - முறை.

290. *அலர் தாய வரி நிழல் அசையினிர் இருப்பின்*—பூப்பரந்த பலவரிகளையுடையவாகிய நிழலிலே இளைத்திருப்பின்,

வி - பு. இடையிடையே வெய்யிலும் கலந்திருத்தலின், 'வரிநிழல்' என்றார்; "சுரன்முதன் மராஅத்த வரிநிழ லசைஇ" (௧௨) என்னும் சிறுபாணாற்றுப்படையில் வரிநிழலென்பதற்குச் செறியாத நிழலென்று பொருள் செய்யப்பெற்றிருக்கிறது.

291. *பல திறம் பெயர்பவை கேட்குவிர்*—பலகூறுபாடுகளையுடையவாய் எழுகின்ற ஓசைகளைக் கேட்பீர்;

மாதோ - அசை.

292. கலை தொடு பெரும்பழம் புண்கூர்ந்து ஊறலின்—முசுக்கலை தோண்டின பெரியபலாப்பழம் புண்மிக்குத் தேனூறுகையினாலே,

**வி - பு.** பலாப்பழம் இங்ஙனமே "புண்ணரிந், தாலை யுக்கன கெடுந்தா ளாசினி" என முன்னும் கூறப்பெற்றுள்ளது; ௧௮௭ - ௯ முசு - குரங்கின் சாதியுள் ஒன்று கலை - அதன் ஆண்.

293. மலைமுழுதும கமழும மாதிரந்தோறும்—மலைமுழுதும் அத்தேனூறுந் திசைகடோறும்,

294 - 6. [அருவி நுகரும் வானர மகளிர், வருவிசை தவிராது வாங்குபு குடைதொறுந், தெரியிமிழ் கொண்ட நும்மியம்போ லின்னிசை :] வாங்குபு வருவிசை தவிராது இமிழ் கொண்ட அருவி நுகரும் வான் அரமகளிர் குடைதொறும் நும் இயம் போல் தெரி இன்னிசை—உள்ளபண்டங்களை வாங்கிக் கொண்டு வருகின்ற விசைதவிராது ஒலித்தலைக்கொண்ட அருவியையாடும் தெய்வமகளிர் அதனைக் கையாற்குடையுந்தோறும் நும்முடைய வாச்சியங்களைப்போல் தாளந்தெரிகின்ற இனியவோசையும்,

**வி - பு.** வாங்குதல், அருவியின் தொழில். நீராடுவோர், அதில் கையால் பலவகையான வாச்சியவோசையைப் பிறப்பித்தலுண்டென்பது, "கயங் குடைந்தன்ன வியக்கொட்டு" (மதுரைக்காஞ்சி, ௩௬௩), "தண்ணுமை முழவ மொந்தை தகுணிச்சம் பிறவு மோசை, யெண்ணிய விரலோ டங்கை புறங்கையி னிசைய வாக்கித், திண்ணிதிற் றெறித்து மோவார் கொட்டியுங் குடைந்து மாடி, யொண்ணுதன் மகளிர் தம்மோ டியர்மிசை யவர்க ளொத்தார்" (சீவக. ௯௫) என்பதனாலும் விளங்குகின்றது.

297 - 9. [இலங்கேந்து மருப்பி னினம்பிரி யொருத்தல், விலங்கன் மீமிசைப் பணவைக் கானவர், புலம்புக் குண்ணும் புரிவளைப் பூசல் :]

298 - 9. விலங்கல் மீமிசை பணவை கானவர் புலம் புக்கு உண்ணும்—மலையின்மேலிட்டபரணிற் கானவர் தினைப்புனத்தைப் புகுந்துதின்னும்,

297, 299. இலங்கு ஏந்து மருப்பின் இனம் பிரி ஒருத்தல் புரி வளை பூசல்—விளங்குகின்ற ஏந்தின கொம்பையுடைய தன்னினத்தைப்பிரிந்த யானைத்தலைவனைப் பிடித்தற்குவிரும்பின வளைத்தலையுடைய ஆரவாரமும்,

**வி - பு.** பணவை - பரண். அது மிகவும் உயரமான இடத்தில் அமைக்கப்படுமென்பதை, "கானவர், விண்டோய் பணவைமிசை ஞெகிழி பொத்த" என்பதனாலும் அறிக; (குறிஞ்சி. ௨௨௫ - ௬.) தலைமைவாய்ந்த ஆண்யானையை யானைத்தலைவனென உயர்திணைவாய்பாட்டாற் கூறுவது மரபு. "ஊதத், தலைவனே யொத்துப் பொலிந்தது சந்திர சைலம்" (கம்ப. வரைக்காட்சி. ௭.) என்பதனாலும் அது விளங்குகின்றது.

300 - 301. சேயளைப் பள்ளி யெஃகுறு முள்ளி, னெய்தெற விழுக்கிய கானவ ரழுகை :] சேய் அளை பள்ளி எய் எஃகு உறு முள்ளின் தெற இழுக்கிய கானவர் அழுகை—நெடிய முழையாகிய இருப்பிடத்தில்தங்கும் எய்ப்

பன்றி தனது கூர்மையுறுகின்றமுள்ளால் எய்துகொல்லுகையினாலே பட்ட கானவரழுகின்ற அழுகையும்,

வி - பு. அளை, முழை - குகை. எய்ப்பன்றி - முள்ளம்பன்றி. இது தன்னுடம்பிலுள்ள முள்ளைவீசிப் பிறரைக்கொல்லுமென்பதை, "வையுறு முனைமுள்ளை, யெய்புதறின வொய்யெனவெதி ரெய்யடுகணை யென்ன" (சீகாளத்திபு. கண்ணப்ப. ௮௬, என்பதனாலும் அறிக

302 - 4. [கொடுவரி பாய்ந்தெனக் கொழுநர் மார்பின், நெடுவசி விழுப்புண் டணிமார் காப்பென, வறல்வாழ் கூந்தற் கொடிச்சியர் பாடல்.] கொழுநர் மார்பில் கொடுவரி பாய்ந்தென நெடுவசி விழுப்புண் தணிமார் காப்பென அறல் வாழ் கூந்தல் கொடிச்சியர் பாடல்—தம்கணவர்மார்பிலே புலிபாய்ந்ததாகப் பட்ட நெடிய பிளத்தலையுடைய சீரியபுண்ணை ஆற்றுதற்குக் காவலென்றுகருதி அறல்வீற்றிருந்த மயிரினையுடைய கொடிச்சியர்பாடும் பாட்டாலெழுந்த ஓசையும்,

வி - பு. கொடுவரி - வளைந்தகோடுகளையுடையது; புலி; அன்மொழித்தொகை. வசி - பிளப்பு. "விழுப்புண் படாத நாளெல்லாம்" என்னும் திருக்குறளின் விசேடவுரையில், 'விழுப்புண் - முகத்தினும் மார்பினும் பட்ட புண்' என்றார், பரிமேலழகர். புண்ணையாற்றுதற்கு ஓசைபாடுதல் பாதுகாப்பென்பதை, "ஆம்பலூதி, இசைமணி யெறிந்து காஞ்சி பாடி .. , காக்கம் வம்மோ காதலந்தோழி........நெடுந்தகை புண்ணே" (புறநா. ௨௮௧) என்னும் செய்யுட்பகுதியும் விளக்குகின்றது.

305 - 6. தலைநாள் பூத்த பொன் இணர் வேங்கை மலைமார் இடூஉம் ஏமம் பூசல்—முதனாளிலேபூத்த பொன்போலுங்கொத்தினையுடைய வேங்கைப்பூவைச்சூடுதற்கு மகளிர் புலிபுலியென்றுகூப்பிடும் ஏமத்தையுடைய ஆரவாரமும்,

வேங்கைவளைந்து பூவைக்கொடுத்தலின், அச்சந்தீர்ந்த பூசலென்றார்.

வி - பு. வேங்கைப்பூவைப்பறிக்குங் குறமகளிர், 'அம்மரக்கிளை தாழ்ந்துகொடுக்குமென்று நினைந்து, 'புலிபுலி' என்றுகூவி மலர்பறித்தல் மரபென்று தெரிகின்றது; "கருங்கால் வேங்கை யிருஞ்சினைப் பொங்கர், நறும்பூக் கொய்யுங் கானவர் பூசல்" (மது. ௨௯௬ - ௭) என்பதனுரையாகிய, 'கரியதாளினையுடைய வேங்கையிடத்துப் பெரிய கவடுகளிற்றோன்றிய சிறியகொம்புகளிற்பூத்த நறியபூவைப்பறிக்குமகளிர் புலிபுலியென்றுகூறும் ஆரவாரம்' என்பதனாலும், "ஒலிசினை வேங்கை கொய்குவஞ் சென்றுழிப், புலிபுலியென்னும் பூசறோன்ற", "கிளர்ந்த வேங்கைச் சேணெடும் பொங்கர்ப், பொன்னேர் புதுமலர் வேண்டிய குறவர், மன்று விசைய பூசல் பயிற்றலின்" (அகநா. ௪௮, ௫௨) என்பவற்றாலும் இவற்றின்குறிப்புரைகளாலும் அது விளங்குகின்றது.

307. கன்று அரை பட்ட கயந்தலை மடப்பிடி—கன்று வயிற்றிலே யுண்டான மெல்லியதலையினையுடைய மடப்பத்தையுடைய பிடியை,

வி - பு. படுதல் - உண்டாதல். கய - மென்மை: "கயவென் கிளவி மென்மையுஞ் செய்யும்" (தொல். உரிச். ௨௪.) என்பதனுரையில், "கயந் தலை மடப்பிடி" என்னும் இந்தப்பகுதியே மேற்கோளாகக் காட்டப்பெற் றுள்ளது.

308. வலிக்கு வரம்பாகிய கணவன் ஓம்பலின்—வலிக்கு ஓரெல்லையா கிய களிறு கவழந்தேடிக்கொடுத்துப் பாதுகாத்துப் போகையினாலே,

வி - பு. கணவனென்பது சில அஃறிணைப் பொருளின் ஆண்பாற் பெயராகவும் வழங்குகிறது; "மாயா வேட்டம் போகிய கணவன், பொய்யா மரபிற் பிணவுநினைந் திரங்கும்" (நற். ௧௦௫), "வங்காக் கடந்த செங்காற் பேடை, யெழாலுற வீழ்ந்தெனக் கணவற் காணாது (குறுந். ௧௫௧) என்பவற்றால் அறிக.

309. ஒண் கேழ் வயம் புலி பாய்ந்தென—அப்போக்கினைக்குறித்து ஒளித்திருந்து ஒள்ளிய நிறத்தையுடைய வலியபுலி பாய்ந்ததாக,

309 - 10 கிளையொடு நெடு வரை இயம்பும் இடி உமிழ் தழங்கு குரல்—அப்பிடி தன்சுற்றத்தொடே நெடியமலையிடத்தே கூப்பிடும் இடியோசைபோலும் முழங்குங்குரலும்,

இடியுமிழ்ந்த ஓசையை ஆகுபெயரான் உமிழ் என்றார்.

311. கை கோள் மறந்த கருவிரல் மந்தி—பார்ப்பைத் தன்கையால் தழுவிக் கோடலைமறந்த கரியவிரலையுடையமந்தி,

312. அரு விடர் வீழ்ந்த தன் கல்லா பார்ப்பிற்கு—எடுத்தற்கரிய ஆழ்ந்த முழையிலேவீழ்ந்திறந்த தன்குட்டிக்கு,

கல்லாமை - தனக்குரியதொழிலைக் கல்லாமை.

வி - பு. தனக்குரியதொழிலைக் கல்லாமையாவது, தாயின் மார்பை இறுகப்பற்றிக்கொள்ள அறியாமை. குரங்கின்குட்டியைப் பார்ப்பென்று வழங்குதல் "பார்ப்புடை மந்திய மலையிறந் தோரே" (குறுந். ௨௭௮) என் பதனாலும் விளங்கும்.

313 - 4. முறி மேய் யாக்கை கிளையொடு துவன்றி சிறுமை உற்ற களையா பூசல்—தளிரைமேய்ந்துவளர்ந்த வடிவினையுடைய சுற்றத்தோடே நெருங்கி நோய்மிக்க விலக்கப்படாத ஆரவாரமும்,

மந்தி பார்ப்பிற்குத் துவன்றிச் சிறுமையுற்ற பூசலென்க.

315 - 6. கலை கை அற்ற காண்பு இன் நெடு வரை நிலை பெய்து இட்ட மால்பு நெறியாக—முசுக்கலை ஏறமுடியாதென்று செயலற்ற காட்சியினிய உயர்ந்தவரையிலே நிலைபேறுண்டாகக் கூட்டிநட்ட கண்ணேணியே வழியாகச் சென்று,

வி - பு. கை - செயல். கண்ணேணியாவது கணுக்களிலேயே அடி வைத்து ஏறிச்செல்லும்படி அமைத்துள்ளமூங்கில். மலையினுச்சியிலுள்ள தேனிறாலையழிக்கும் பொருட்டுச் செங்குத்தான மலையில் ஏறிச்செல்வதற்கு அதன் அயலில் இவ்விரண்டுமூங்கில்களைக்கூட்டி நடுவது வழக்கம். கண் - கணு. "மால்புடை நெடுவரைக் கோடு" என்றார் புறநானூற்றிலும்; ௧௦௫.

317. பெரும்பயன் தொகுத்த தேம் கொள் கொள்ளை—பெரியபயனுண்டாகத் தேனீத் திரட்டிவைத்த தேனையழித்துக்கொண்ட கொள்ளையாலுண்டான ஆரவாரமும்,

318-9. [அருங்குறும் பெறிந்த கானவ ருவகை, திருந்துவே லண்ணற்கு விருந்திறை சான்மென :]

319. திருந்து வேல் அண்ணற்கு விருந்து இறை சான்மென—திருந்தும்வேலினையுடைய நன்னனுக்குப் புதிதாகக்கொடுத்தற்கு இவற்றிற்கைக்கொண்டபொருள்கள் அமையுமெனக் கருதிச்சென்று,

318. அரு குறும்பு எறிந்த கானவர் உவகை—அழித்தற்கரிய குறும்புகளையழித்த கானவர் மகிழ்ச்சியிலுண்டான ஆரவாரமும்,

வி - பு. இவற்றிற் கைக்கொண்ட - இந்தச் சிற்றரண்களிலிருந்து யாம் கைக்கொண்ட. குறும்பு - பகைவர்தங்கும் சிற்றரண்.

320-22. நறவு நாட்செய்த குறவர் தம் பெண்டிரொடு மான் தோல் சிறுபறை கல்லென கறங்க வான் தோய் மீமிசை அயரும் குரவை—நறவை நாட்காலத்தேகுடித்தகுறவர் தம்பெண்டிரோடேகூடி மான்றோல்போர்த்த சிறுபறை கல்லென்னும்ஓசைபடவொலிப்ப வானைத்தீண்டும் உச்சிமலையிலேயாடுங் குரவைக்கூத்தின் ஆரவாரமும்,

வி - பு. நாட்காலம் - விடியற்காலம். குரவை - குரவைக்கூத்து; எழுவர் கைகோத்து மண்டலமாக ஆடுவது; இருபாலாரும் விரவியாடுதல் உண்மையின், குறவர் தம் பெண்டிரொடு அயரும குரவையென்றார். இதனை, "மாமணி வண்ணனுந் தம்முனும் பின்னையும், ஆடிய குரவையிஃது" (மணி. ௧௯-ம் காதை, ௬௫-௬.) என்பதனாலும், "மாயவன் றன் முன்னினொடும் வரிவளைக்கைப் பின்னையொடும்........ தாதெருமன் றத்தாடும் குரவையோ தகவுடைத்தே" (சில. ஆய்ச்சியர்குரவை) என்பதனாலும் அறிக. இங்கே கூறியகுரவை முருகக்கடவுளைநோக்கி ஆடும் குன்றக் குரவையின்பாற்படும்.

323-4. [நல்லெழி னெடுந்தே ரியவுவந் தன்ன, கல்யா றொலிக்கும் விடர்முழங் கிரங்கிசை :] நல் எழில் நெடு தேர் இயவு வந்தன்ன ஒலிக்கும் கல் யாறு விடர் முழங்கு இரங்கு இசை—நல்ல அழகினையுடைய நெடியதேர்கள் வழியிலே ஓடிவந்ததன்மையவாக ஒலிக்கும் கல்லின்மேல்வரும் யாறுகள் முழைஞ்சுகளிலேவீழ்ந்து மாறாது ஒலிக்கும் ஓசையும்,

325-7. நெடுசுழி பட்ட கடுங்கண் வேழத்து உரவு சினம் தணித்து பெரு வெளில் பிணிமார் விரவு மொழி பயிற்றும் பாகர் ஓதை—காட்டாற்றின் நெடியசுழியிலேவீழ்ந்து அகப்பட்ட தறுகண்மையையுடைய யானையினது வலிய சினத்தைத் தணியப்பண்ணிப் பெரியகம்பத்திலே சேர்த்தற்குத் தமதுஏவற்றொழிலைச்செய்தற்குக்காரணமான பேச்சுக்களைப்பேசி அவற்றிலே பயிலப்பண்ணும் பாகருடைய ஆரவாரமும்,

வி - பு. தறுகண்மை - அஞ்சாமை. வெளில் - யானைக்கம்பம். பிணிமார், வினையெச்சம். விரவுமொழி - கலக்குமொழி; அவை அப்புது அப்புது, ஆது ஆது, ஐ ஐ என்பன, "கவைமுட் கருவியின் வடமொழி பயிற்றிக்,

கல்லா விளைஞர் கவளங் கைப்ப" (முல்லை. ௩௫ - ௬), "அம்கையங் தலத் திறு வப்பு தாதையெனக், கொங்கலர்க் கண்ணியான் கொம்மைதான் கொட் டலின்" (சீவக. ௧௮௩௪) என்பவற்றாலும் அவற்றினுரைகளாலும் அறியப் படும்.

328 - 9. ஒலி கழை தட்டை புடையுநர் புனந்தொறும் கிளி கடி மகளிர் விளி படு பூசல்—ஒலிக்கும் மூங்கிலாற்செய்த தட்டையைப்புடைத்துப் புன ங்கடோறும் கிளியையோட்டுகின்ற மகளிர்கூப்பிடுதலாற்பிறந்த ஆரவாரமும்,

வி - பு. தட்டையாவது மூங்கிலைக் குறுக்கேநறுக்கிப் பலவாகப்பிள ந்து ஓசையுண்டாகும்படி ஒன்றிலேதட்டுங்கருவி. இதனால் கிளிகடிதலுண் டென்பதை, "தழலுந் தட்டையுங் குளிரும் பிறவுங், கிளிகடி மரபின வூழூழ் வாங்கி" (குறிஞ்சி. ௪௩ - ௪) என்பதனாலும் இதனுரையாலும் அறிந்து கொள்க. மகளிர்கூப்பிடுதலாவது - 'ஆயோ' என ஒலித்தல். இது, "வெஞ் சொற்பேசும் வேடர்மடவா ரிதணம்மதுவேறி, அஞ்சொற் கிளிகளாயோ வென்னும்", "மடமொழியாள் புனங்காக்கச், செவ்வே திரிந்தாயோவென" என்னும் தேவாரங்களாலும், "வேயோங்கு சாரல் விளைபுனங்காவல்கொண், டாயோ வெனமொழியு மம்மழலை யின்னிசையால்" (சுயம். ௧௦௪) என்னும் சூளாமணியாலும் விளங்குகின்றது.

330. இனத்தின் தீர்ந்த துளங்கு இமில் நல்லேறு—நிரையினின்றும் பெயர்ந்த அசையும் குட்டேற்றினையுடைய இடபமும,

வி - பு. இமில், குட்டேறு - இடபத்தினுடைய முன்முதுகில் உரு ண்டு பருத்துத்தோன்றும் ஒருறுப்பு.

331. மலை தலை வந்த மரையான் கதழ் விடை—எக்காலமும் போர் செய்து போர்த்தொழில் தன்னிடத்திலேவந்த மரையானினது விரைந்த ஏறும்,

வி - பு. மரையான் - ஒருவகைமிருகம்; விடை அதன் ஆண்.

332 - 5. [மாறு மைந்தி னூறுபடத் தாக்கிக், கோவலர் குறவரோ டொருங்கியைந் தார்ப்ப, வள்ளிதழ்க் குளவியுங் குறிஞ்சியுங் குழைய, நல் லேறு பொருஉங் கல்லென் கம்பலை:]

333. கோவலர் குறவரோடு ஒருங்கு இயைந்து ஆர்ப்ப—முல்லைநிலத் திற்கோவலரும் குறிஞ்சிநிலத்திற்குறவரும் சேரக்கூடி வென்றதன்வெற்றி தோன்ற ஆரவாரிக்கும்படி,

மாறு மைந்தின் ஊறுபட தாக்கி (௩௩௨) பொருஉம் கல்லென் கம் பலை (௩௩௫) —முதுகிடாதவலியுடனே புண்ணுண்டாம்படி முட்டிப் பொரும் கல்லென்கின்ற ஓசையையுடைய ஆரவாரமும்,

ஏறும் விடையும் ஆர்ப்பப் பொருஉம் கம்பலையென்க.

வி - பு. கோவலர் - இடையர். விலங்குகள் ஒன்றோடொன்று பொ ருது வென்றபொழுது உரியவர்மகிழ்வது இயல்பு; "எருமைநா கின்ற செங்க ணேற்றையோ டேற்றை சீற்றத், துருமிவையென்னத் தாக்கி யூழுற நெருக்கியொன்றுய், விரியிரு ளிரண்டு கூறாய் வெகுண்டன வனைய நோக்கி,

அரியினங் குஞ்சி யார்ப்ப மஞ்சுற வார்க்கின் றூரும்" (கம்ப. நாட்டுப். ௧௭) என்பதனால் அஃது அறியலாகும். கோவலர், முல்லைநிலத்திற்கும் குறவர் குறிஞ்சிக்கும் உரியவர். இடபம் முல்லைக்கும் மரையானேறு குறிஞ்சிக்கும் உரியனவாதலின், அவைஅவையும் வெற்றி அவர்வெற்றியாயிற்று. ஊமந்து வலி. ஊறு - புண்.

நல்லேறு (௩௩௫) வள் இதழ் குளவியும் குறிஞ்சியும் குழைய (௩௩௪) பொரூஉம் கம்பலை (௩௩௫) எருமையேறுகள் வளவிய இதழையுடைய குளவியும் குறிஞ்சியும் வாடும்படி தம்மிற்பொருகின்ற ஆரவாரமும்,

வி - பு. குளவி - காட்டுமல்லிகை. குறிஞ்சி - ஒருவகைப்பூமரம் இது திணைமயக்கம்.

336 - 9. [காந்தட் டுடுப்பிற் கமழ்மட லோச்சி, வண்கோட் பலவின் சுளைவிளை தீம்பழ, முண்டுபடு மிச்சிற் காழ்பயன் கொண்மார் கன்று, கடாஅ வுறுக்கு மகாஅ ரோதை :]

337 - 8. வண் கோள் பலவின் விளை தீம்பழம் சுளை உண்டு படு மிச்சில் காம் பயன் கொண்மார்—வளவிய குலைகளையுடைய பலாவினது முற்றின இனிய பழத்திற்சுளையை விரும்பினோரெல்லாரும் தின்று கீழ்வீழ்ந்துகிடக்கும் மிகையான பழத்தின்விதையைப் பயன்கோடற்கு,

கன்று (௩௩௮) காந்தள் துடுப்பின் கமழ் மடல் ஓச்சி (௩௩௬) கடா வுறுக்கும் மகார் ஓதை (௩௩௯) —கன்றுகளைப்பிணைத்துக் காந்தளினது துடுப்புப்போலும் கமழுகின்ற மடலாலேயடித்துக் கடாவிடும் பிள்ளைகளுடைய ஆரவாரமும்,

வி - பு. கோள் - குலை. தீமை - இனிமை. மிச்சில் - மிஞ்சியது. காழ் - விதை; 'அருவிதந்த பழஞ்சிதை வெண்காழ்' (௧௭௪) எனமுன்னும் வந்துள்ளது. துடுப்பு - மரத்தாற் செய்யப்பட்டுள்ள ஒருவகைக் கருவி. கடாவுறுத்தல், கடாவிடுதல் - உழவுதொழிலோர் செய்யும் ஒருவகைதொழில்.

340. [மழைகண் டன்ன வாலைதொறு ஞெரேரென :]

வி - பு. மழை - மேகம். ஆலை - கரும்படிக்குமெந்திரம்; ஞெரேரென விரைவாக.

341. [கழைகண் ணுடைக்குங் கரும்பி னேத்தமும் :] கரும்பின் கழை கண்ணுடைக்கும் ஏத்தமும்—கரும்பின்கோலைச் சாறுகொள்ளும் ஆலையின் ஓசையும்,

வி - பு. கழை, கோல் - தண்டு. எல்லாப்பிரதிகளிலும், 'ஏத்தம்' என்றேகாணப்படுகின்றது; ஏங்குதல் ஒலித்தலாதலின், 'ஏக்கம்' என்று பாடங்கொள்ளினும் பொருந்தும்.

342. இனை குறு மகளிர் இசை படு வள்ளையும்—தினையைக்குறுகின்ற மகளிருடைய இசைமிகுகின்ற வள்ளைப்பாட்டும்,

வி - பு. குறுதல் - குத்துதல். வள்ளை - உலக்கைப்பாட்டு; "உலக்கைப் பாட்டே வள்ளைப்பாட்டென்ப" என்பது, பிங்கலந்தை; "சிறந்தன

இதற்கு உரைகிடைத்திலது.

நாறு கறிந்தன மாயி னவன்றிறங், கொல்யானைக் கோட்டால் வெதிர்நெற் குறுவாநாம், வள்ளை அகவுவம்வா" (கலித்தொகை, ௪௨) என்பதூஉம் அதனை விளக்குகின்றது.

343-4. சேம்பும் மஞ்சளும் ஓம்பினர் காப்போர் பன்றி பறையும்—சேம்பையும் மஞ்சளையும்விதைத்து வளர்ந்தபின்பு பன்றி கிழங்கு அகழாமற் காப்போருடைய பன்றிக்குக்கொட்டும் பறையோசையும்,

வி - பு. பன்றிப்பறை - பன்றியை ஓட்டுதற்காகக் கொட்டும்பறை. அது குடப்பறையெனவும்வழங்கும்; "பன்றிப் பறையே குடப்பறை யாகும்" என்பதனாலறிக.

344. குன்றகச் சிலம்பும்—இவ்வோசைகளால் மலையிடத்தெழும் எதிரொலியும்,

345. என்ற இவ்வனைத்தும்—என்று யான்கூறிய எல்லாஓசைகளும்,

345 [இயைந்தொருங் கீண்டி :] ஒருங்கு இயைந்து ஈண்டி—சேரப் பொருந்தித் திரளப்பட்டு,

346. [அவலவு மிசையவுந் துவன்றிப் பலவுடன் :] அவலவும் மிசையவும் பல உடன் துவன்றி—தாழ்வரையிலுள்ளனவும் உச்சிமலையிலுள்ளனவுமாகிய ஒழிந்த பலவோசைகளும் நெருங்குகையினாலே,

வி - பு. அவல் - பள்ளம். மிசை - மேல்.

347-8. [அலகைத் தவிர்த்த வெண்ணருந் திறத்த, மலைபடு கடாஅ மாதிரத் தியம்ப :] எண்ணரு திறத்த அலகை தவிர்த்த மலைபடு கடாம் மாதிரத்து இயம்ப—எண்ணுதற்கரிதாகிய கூறுபாட்டையுடையவாகையினாலே எண்ணையொழிந்த மலைகளாகிய யானைக்குண்டாகின்றவொலி திசைகளெல்லாமொலிப்ப,

கடாம் - ஆகுபெயராய் அதனாற்பிறந்த ஓசையையுணர்த்திற்று.

வி - பு. திறம் - கூறுபாடு. அலகு - அளவு. கடாம் - மதம்.

வரி நிழலிருப்பின் (௨௯௦), இன்னிசையும் (௨௯௬) பூசலும் (௨௯௧) அழுகையும் (௩௦௧) பாடலும் (௩௦௪) பூசலும் (௩௦௬) குரலும் (௩௧௦) பூசலும் (௩௧௪) கொள்ளையும் (௩௧௭) உவகையும் (௩௧௮) குரவையும் (௩௨௨) இசையும் (௩௨௪) ஓதையும் (௩௨௭) பூசலும் (௩௨௯) கம்பலையும் (௩௩௫) ஓதையும் (௩௩௯) எத்தமும் (௩௪௧) வள்ளையும் (௩௪௨) பறையும் (௩௪௪) என்றிவ்வனைத்தும் (௩௪௫) குன்றகச்சிலம்பும் (௩௪௪) ஒருங்கியைந்தீண்டப்பட்டு (௩௪௫) ஒழிந்த ஓசைகளுந் துவன்றுகையினாலே (௩௪௬) மலைகளாகிய யானைக்குண்டாகின்ற வொலி (௩௪௮) பலதிறம்பெயர்பவை (௨௯௧) மாதிரத்தியம்ப (௩௪௮) அவற்றைக்கேட்குவி (௨௯௧) ரென முடிக்க.

இருப்பின், (௨௯௦) கேட்குவி (௨௯௧) ரெனக.

மலைக்கு யானையையுவமித்து அதன்கட்பிறந்தஓசையைக் கடாமெனச் சிறப்பித்தலதனால் இப்பாட்டிற்கு மலைபடுகடாமென்று பெயர்கூறினார்.

வி - பு. 'மலைபடுகடாம்' என்னும் தொடர்மொழிச்சிறப்பால், இந்நூல், மலைபடுகடாமென்று பெயர்பெற்றாற்போலவே, பதிற்றுப்பத்துச்செய்

யுட்களெல்லாம், தம்பாலுள்ள தொடர்மொழியின்பொருட்சிறப்பால் அத்தொடர்மொழிகளையே தம் பெயர்களாகக் கொண்டு விளங்குதலை ஆராய்ந்தறிக. பதிற்றுப்பத்துள், கக - ம்பாட்டின்பெயர்: புண்ணுமிழ்குருதி; க0 ம்பாட்டின்பெயர்: வலிகெழுதடக்கை.

349 - 51. [குரூஉக்கட் பிணையற் கோதை மகளிர், முழவுத் துயி லறியா வியலு ளாங்கண், விழவி னற்றவன் வியன்கண் வெற்பே :]

351. அவன் வியன் கண் வெற்பு—அந்நன்னனுடைய அகன்ற இடத்தையுடையமலை,

349. குரூஉ கண் பிணையல் கோதை மகளிர்—பலநிறம்பொருந்தின இடத்தையுடைத்தாகிய பிணைத்தலைபுடைய மாலையினையுடையமகளிர் ஆடற்கேற்ற,

வி - பு. குரு - நிறம்.

350 - 51. முழவு துயில் அறியா வியலுள் ஆங்கண் விழவின் அற்று—முழவு கண்ணுறக்கமறியாத அகன்ற வூரிடத்துக்கொண்ட திருநாளையொத்துச் சிறந்திருக்கும்;

வி - பு. முழவு - மத்தளம்; இடைவிடாது ஒலித்தலைத் துயிலாமையாகச்சொல்லுவது மரபு; "முழவங்கண்டுயிலாதமுதூநகர் (சீவக. அ௫௬) என்பதனாலுமறிக. இது சமாதியென்னும் குணவணி.

352 - 3. கண் தண்ணென கண்டும் கேட்டும் உண்டற்கு இனிய பல பாராட்டியும்—காண்டற்கினியனவற்றைக் கண்குளிரக்கண்டும் கேட்கப்படுவனவற்றைச் செவிகுளிரக்கேட்டும் உண்டற்கினிய உணவுகளைக் கொண்டாடியுண்டும்,

வி - பு. 'கண்ண்தண்ணென' என்பது ஒற்றளபெடை; (தொல். செய். சூ. கஅ - உரையைப்பார்க்க) முன்னர் வந்துள்ள, "மரங்கொட்டி" (உ00) என்பதும் இதுவே.

354 - 5. [இன்னும் வருவ தாக நமக்கெனத, தொன்முறை மரபினிராகி :] நமக்கு இன்னும் வருவதாக என தொல் முறை மரபினிராகி—நமக்கு மேலும் இந்நுகர்ச்சி உண்டாவதாகவென்று விரும்பிப் பழையஉறவான மக்களைப்போலும் முறைமையினையுடையிராய்ச் சிலநாள் தங்கி,

வி - பு. நுகர்ச்சி - காட்சிமுதலிய அனுபவங்கள்.

355 - 6. பல் மாண் செரு மிக்கு புகழும் திரு ஆர் மார்பன்—பலவாய் மாட்சிமைப்பட்ட வஞ்சிமுதலியபோர்த்தொழில் மிக்குநடத்தலாலே உலகம் புகழுந் திருமகள்நிறைந்திருந்த மார்பினையுடைய நன்னனுடைய,

வி - பு. வஞ்சி - போர்செய்தற்குப் பகைவர் மேற்செல்லுதல். அரசரைத்திருமாலின் கூறென்றும், அவர்மார்பில் திருமகள் உறைகின்றாளென்றும் கூறுவது மரபாதலின், 'திருவார்மார்பன்' என்றார்.

357. உரும் உரறு கருவிய பெரு மலை பிற்பட—உருமேறுமுழங்கும் தொகுதியையுடைய பெரிய மலை நுமக்குப்பின்னாம்படி,

வி - பு. கருவி - கூட்டம்.

369, 368. நின்றுகண் ணோக்கினும் வாள் வெளவும் இடம் பட்ட குன்று—நின்று கண்ணாற்பார்க்கினும் கண்ணினொளியைத் தன்அழகாலே வாங்கிக்கொள்ளும் இடமுண்டாகிய மலையில்,

உம்மை - அவற்றைநுகர மனத்தாற்கருதின் அம்மனத்தையும் வாங்கிக் கொள்ளுமென எச்சவும்மை.

வி - பு. மலை, பார்ப்போருடைய கண்களைக் கவருமென்றபடி. உம்மை, 'பார்க்கினும்' என்பதிலுள்ளது

ஆரிடர் அழுவத்து (௩௬௮) ஊறு தவ பல (௩௭௨)—பொறுத்தற்கரிய வருத்தத்தைச்செய்யும் குழிகளிடத்துப் பிறக்கும்இடையூறுகள் மிகப்பல; அவற்றை,

வி - பு. ஆரிடர் - அருமையான இடர்; பொறுத்தற்கரிய துன்பம். அழுவம் - பள்ளம்.

மண் கனை முழவின் தலை (௩௭௦) தண்டு காலாக (௩௭௧) கொண்டு (௩௭௦)—மார்ச்சனை செறிந்த முழவிடத்திற் காமரத்தை நமக்குக் காலாக வாங்கிக்கொண்டு,

வி - பு. தலை - இடம். காமரம் - முழவை இருபுறத்துங் கட்டித் தொங்கவிட்டுக் கழுத்தின்பின் வைத்துக்கொள்ளும் மரம்; 'நேர்சீர் சுருக்கிக் காய கலப்பையிர்', 'காஅய்க் கொண்ட நும்மியம்' (௧௩, ௩௬௫) என இதனுள் முன்வந்திருத்தல்காண்க.

தளர்தல் ஓம்பிக் (௩௭௧) கோல் (௩௭௦) ஊன்றினிர் கழிமின் (௩௭௨)—அடி உள்ளேவிழுதலைப் பரிகரித்து அத்தண்டாகிய கோலை ஊன்றிப்போவிர்;

373. அயில் காய்ந்தன்ன கூர் கற் பாறை—வேல்காய்ந்தாற்போலும் குடுமிக்கூர்ங் கற்களையுடைய பாறையில்,

வி - பு. "பாத்தி யன்ன குடுமிக் கூர்ங்கல்" என்பது, அகநானூறு, ௬௫.

374. வெயில் புறந்தரூஉம் இன்னல் இயக்கத்து—குளிர்ச்சிவாராமல் வெயில் பாதுகாக்கும் இன்னாமைசெய்யும் வழியிடத்திற் போம்பொழுது,

வி - பு. புறந்தருதல் - பாதுகாத்தல். இயக்கம் - வழி.

375. கதிர் சினம் தணிந்த அமையத்து கழிமின்—ஞாயிறு சினமாறின அந்திப்பொழுதிலே போவீர்;

376 - 8. [உரைசெல வெறுத்தவவ னீங்காச் சுற்றமொடு, புரை தவ வுயரிய மழைமருள் பஃறோ, லரசுநிலை தளர்க்கு மருப்பமு முடைய :]

376 - 8. உரை செல வெறுத்த அவன் நீங்கா சுற்றமொடு புரை தவ உயரிய மழை மருள் பல் தோல் அருப்பமும் உடைய—புகழ் பரக்கும்படி செறிந்த நன்னனுடைய நீங்காத படைத்தலைவரோடே உயர்ச்சிமிகவுயர்ந்த மேகமென்று மருளும் பல யானைத்திரளையுடைய அரண்களையும் அவ்வழியுடைய;

378. அரசு நிலைதளர்க்கும் அருப்பம்—பொரவந்த அரசர் நிலையுடைமையைக் கெடுக்கும் அரண்,

369, 368. நின்றுகண் நோக்கினும் வாள் வெளவும் இடம் பட்ட குன்று—நின்று கண்ணாற்பார்க்கினும் கண்ணினொளியைத் தன்அழகாலே வாங்கிக்கொள்ளும் இடமுண்டாகிய மலையில்,

உம்மை - அவற்றைநுகர மனத்தாற்கருதின் அம்மனத்தையும் வாங்கிக் கொள்ளுமென எச்சவும்மை.

வி - பு. மலை, பார்ப்போருடைய கண்களைக் கவருமென்றபடி. உம்மை, ‘பார்க்கினும்’ என்பதிலுள்ளது

ஆரிடர் அழுவத்து (௩௬௮) ஊறு தலைபல (௩௭௨)—பொறுத்தற்கரிய வருத்தத்தைச்செய்யும் குழிகளிடத்துப் பிறக்கும்இடையூறுகள் மிகப்பல; அவற்றை,

வி - பு. ஆரிடர் - அருமையான இடர்; பொறுத்தற்கரியதுன்பம். அழுவம் - பள்ளம்.

மண் கனை முழவின் தலை (௩௭௦) தண்டு காலாக (௩௭௧) கொண்டு (௩௭௦)—மார்ச்சனை செறிந்த முழவிடத்திற் காமரத்தை நுமக்குக் காலாக வாங்கிக்கொண்டு,

வி - பு. தலை - இடம். காமரம் - முழவை இருபுறத்துங் கட்டித் தொங்கவிட்டுக் கழுத்தின்பின் வைத்துக்கொள்ளும் மரம்; ‘நேர்சீர் சுருக்கிக் காய கலப்பையிர்’, ‘காஅய்க் கொண்ட நுமியம்’ (௧௩, ௩௬௫) என இதனுள் முன்வந்திருத்தல்காண்க.

தளர்தல் ஓம்பிக் (௩௭௧) கோல் (௩௭௦) ஊன்றினிர் கழிமின் (௩௭௨)—அடி உள்ளே விழுதலைப் பரிகரித்து அத்தண்டாகிய கோலை ஊன்றிப்போவீர்;

373. அயில் காய்ந்தன்ன கூர் கற் பாறை—வேல்காய்ந்தாற்போலும் குடுமிக்கூர்ங் கற்களையுடைய பாறையில்,

வி - பு. “பாத்தி யன்ன குடுமிக் கூர்ங்கல்” என்பது, அகநானூறு, ௫.

374. வெயில் புறந்தரூஉம் இன்னல் இயக்கத்து—குளிர்ச்சிவாராமல் வெயில் பாதுகாக்கும் இன்னாமைசெய்யும் வழியிடத்திற் போம்பொழுது,

வி - பு. புறந்தருதல் - பாதுகாத்தல். இயக்கம் - வழி.

375. கதிர் சினம் தணிந்த அமையத்து கழிமின்—ஞாயிறு சினமாறின அந்திப்பொழுதிலே போவீர்;

376 - 8. [உரைசெல வெறுத்தவவ னீங்காச் சுற்றமொடு, புரை தவ வுயரிய மழைமருள் பஃறோ, லரசுநிலை தளர்க்கு மருப்பமு முடைய:]

376 - 8. உரை செல வெறுத்த அவன் நீங்கா சுற்றமொடு புரை தவ உயரிய மழை மருள் பல் தோல் அருப்பமும் உடைய—புகழ் பரக்கும்படி செறிந்த நன்னனுடைய நீங்காத படைத்தலைவரோடே உயர்ச்சிமிகவுயர்ந்த மேகமென்று மருளும் பல யானைத்திரளையுடைய அரண்களையும் அவ்வழியுடைய;

378. அரசு நிலைதளர்க்கும் அருப்பம்—பொரவந்த அரசர் நிலையுடைமையைக் கெடுக்கும் அரண்,

வி - பு. உரை - புகழ்; 'உரைசெல வெறுத்தவவன் மூதூர்' (௯௩) என்றார், முன்னும். 'நீங்காச் சுற்றம்' என்றதனால், படைத்தலைவரென்பது பொருளாயிற்று. தோல் - யானை. அரசு - பகையரசர்.

379. பின்னி அன்ன பிணங்கு அரில் நுழை தொறும்—அவ்வாண்களிற் பின்னிவைத்தாலொத்த கொடிபிணங்கின சிறுகாட்டையுடைய சிறிய வழிகடோறும்,

வி - பு. அரில் - சிறுதூறுகளாலாகிய காடு. நுழை - சிறுவழி.

380 - 83. முன்னோன் வாங்கிய கடு விசை கணை கோல் இன் இசை நல் யாழ் பத்தரும் விசிபிணி மண்ணார் முழவின் கண்ணும் ஓம்பி கைபிணி விடாது பைய கழிமின்—முன்போகின்றவன் முகத்திலடியாமல் வாங்கி விட்ட கடியவிசையையுடைய திரண்டகோல் இனிய இசையைத் தன்னிடத்தேகொண்ட நல்ல யாழின்பத்தரையும் வலித்துக்கட்டின மார்ச்சனைசெறிந்த முழவின்கண்ணையும் கெடாதபடி காத்து அவனைக் கரம்பிடித்துக்கோடலை விடாதே மெல்லமெல்லப் போவீர்;

நாடுகாண்நனந்தலை (உஎ0) முதல், இத்துணையும் மலை (சுக) கூறிற்று.

ர்தன்மையும் சேரக்கூறினார்.

384. களிறு மலைந்தன்ன கண்கூடு துறுகல்—யானைகள் தம்மிற்சேர்ந்து பொருதாலொத்த ஒன்றினிடத்தே ஒன்று கூடிநெருங்கின கல்லிடத்தே.

வி - பு. மலைதல் - போர்செய்தல்; "சுரும்புணக் களித்த புகர்முக வேழ, மிரும்பிணர்த் துறுகற் பிடிசெத்துத் தழூஉம்" (ஐங்குறு. உ௩௧) என்றவிடத்துத் துறுகல் யானையாகக் கருதப்பட்டமை காண்க.

385. தளி பொழி கானம் தலை தவ பலவே—மழைபெய்கின்ற காடுகள் அவ்விடதது மிகபபல;

386 - 7. ஒன்னா தெவ்வர் உலைவிடத்து ஆர்த்தென நல்வழி கொடுத்த நாண் உடை மறவர்—ஏவல்பொருந்தாத பகைவர் முதுகிட்டவளவிலே தமது வெற்றிதோன்ற ஆரவாரித்தாராக, அது பொறாமல் இவ்விடம் உயிர்கொடுத்தற்கு நல்லகாலமென்று மீண்டு உயிரைக்கொடுத்த நாணத்தையுடைய மறவருடைய,

வி - பு. ஒன்னாமை - பொருந்தாமை. தெவ் - பகை. பகைவர் முதுகிட்டபொழுது வீரர் தமது வெற்றி தோன்ற முழங்குதல் மரபு; இஃது 'ஆலங் கானத் தகன்றலை சிவப்ப, வென்றிகொள் வீர ரார்ப்பினும் பெரிது" (அகநா. ௩௬) என்பதனால் அறியலாகும். மறவர் - வீரர்; இவர்கள் பகைவரைச் சார்ந்தோர். இவர் உயிர்விடுதற்கு அஞ்சாரென்பது, "உறினுயி ரஞ்சா மறவர்" (திருக்குறள், எஎஅ) என்பதனால் விளங்கும்.

388 - 9. செல்லா நல் இசை பெயரொடு நட்ட கல் ஏசு கவலை எண்ணு மிக பலவே—கெடாத நல்ல புகழினையுடைய பெயர்களை எழுதிநட்ட கற்கள் முதுகிட்டுப்போனவரை இகழும் பலவழிகள் எண்ணுதல் மிகும்படி பலவாயிருக்கும்;

**வி - பு.** "சுழறு மிசைவேண்டி வேண்டா வுயிரார்" (**திருக்குறள்,** ௭௭௭) என்பதனுல், செல்லா நல்லிசை என்பதற்குப் பொருள் நன்கு விளங்குகின்றது. போரில் உயிர்துறந்த வீரர்களின் பெருமை புலப்படும்படி, ஒரு கல்லில் அவர்களுடைய பெயரையும் அவர்களது அரியசெயல்களையும் எழுதுவித்து அதனைநட்டுத் தெய்வமாகக்கருதி வழிபடுதல், பண்டைக்காலவழக்கம். இன்னும், சிவந்தபூமாலைகளையும் மயிற்பீலிகளையும்சூட்டி மதுவைப்பலிவைத்தலும் அதனைச்சூழத் திண்ணைபோடுவித்தலும் உண்டென்று புறநானூறு, புறப்பொருள் வெண்பாமாலை முதலியவற்றால் நன்கு விளங்குகின்றது. **கவலை** - பிரிவுபட்டவழி.

390 - 91. இன்பு உறு முரற்கை நும் பாட்டு விருப்பாக தொன்று ஒழுகும் மரபின் நும் மருப்பு இகுத்து துனைமின்—இன்பமிகுகின்ற தாளத்தினையுடைய நும்முடையபாட்டு அந்நடுகல்லிற் றெய்வத்திற்கு விருப்பமாகப் பழமைநடக்கின்ற முறைமையினையுடைய நும்முடைய யாழைவாசித்து விரையப் போவீர்;

மருப்பு, ஆகுபெயர்.

**வி - பு.** முரற்கை - முரலுதல்: ஒலித்தல்; இது தாளத்திற்கு ஆனமையின், ஆகுபெயர்; "பாணர் நயமபடு முரற்கையின்" (ஐங்குறு. ௪௦௭) என்பதனுலும் இது விளங்கும். மருப்பு - யாழுறுப்பினுள் ஒன்று; அது, 'கோடு' என வழங்கும். இகுத்தல் - ஒலித்தல்; இங்கே வாசித்தலுக்கு ஆயிற்று; "மழையெதிர் படுகண் முழவுக ணிகுப்ப" (௩௩௨) என்பர் பின்னும்.

392 - 3. பண்டு நற்கு அறியா புலம் பெயர் புதுவிர் சந்து நீவி புல் முடிந்து விடுமின்—முற்காலம் நன்மையறியாத தீயநிலத்தை வழியறியாமற் போய் மீண்டுவந்த புதியவர்கள் பின்வருகின்றவர்களும் அவ்வாறுபோய் மீளாதபடி பலவழிகளுங்கூடின சந்தியைக் கையாலே துடைத்து அடையாளமாக ஊகம்புல்லை முடிந்திட்டுவைப்பீர்;

நற்கு - நன்கின் விகாரம்.

**வி - பு.** புலம் - நிலம். 'நன்கறியாப்புலம்' என்றதனுல், தீயநிலமென்றாயிற்று. புதுவிர் - புதியவர்களாகியநீங்கள். சந்து - சந்தி. நீவல் - நீக்கல் ஊகம்புல் - ஒருவகைப்புல்; வைக்கோல்போல அது வீடுகளின்மேல் வேயப்படும்; "ஊகம் வேய்ந்த வுயர்நிலை வரைப்பு" என்பது, **பெரும்பாணாற்றுப்படை,** ௧௨௨.

**கானம்** பல (௩௮௫); ஆண்டுக்கல் (௩௮௬) நட்ட (௩௮௮) கவலை பல (௩௮௯); அக்கல்லிற்கு மருப்பிகுத்துத் துனைமின் (௩௯௧); அப்பொழுது புதுவிர் (௩௯௨), புன்முடிந்திடுமி (௩௯௩) னெனக் கூட்டுக.

394 செல்லும் தேஎத்து—நீங்கள் போம் தேசத்திலே,

**வி - பு.** தேம் - தேயம்; "செல்லுந் தேஎத்துக் குறுநுணை தேடுமின்" என்பது, **சிலப்பதிகாரம், இறுதிக்கட்டுரை.**

394 - 6 [பெயர்மருங் கறிமார், கல்லெறிந் தெழுதிய நல்லரை மராஅத்த, கடவு ளோங்கிய காடேசு கவலை :]

கல் எறிந்து (௩௩௫) மருங்கு பெயர் அறிமார் (௩௩௪) எழுதிய (௩௩௫) கடவுள் (௩௩௩)—கல்லை இடந்துகொண்டு அதனிடத்தே இவ்வாறேபொருது பட்ட இன்னானென்று அவன்பெயரை உலகம்அறிவதற்கு எழுதிய கடவுள்,

வி - பு. எறிந்து, இடந்துகொண்டு - பெயர்த்து.

395 - 6. நல் அரை மராத்த கடவுள்—நல்ல அரையினையுடைய மராத் திடத்தனவாகிய கடவுள்,

என்றது - மராமரத்தின் நிழலிலே நட்ட கல்லென்றவாறு.

வி - பு. மரா, மராமரம் - ஆச்சாமரம். மரத்தின் அடியில் தெய்வமாகப் பாவித்துக் கற்களைநட்டுப் பூசித்தலை இக்காலத்தும் காணலாகும். முன்பு ௩௮௬ - ம் அடியிலும் ஈண்டும் கூறிய கல், 'வீரக்கல்' என்று பண்டைக் காலத்து வழங்கிவந்ததன்றி, இக்காலத்தும் வீரனென்று வழங்கப்பெற்று ஒருசாரரால் வழிபாடும் செய்யப்படுகின்றது.

396. கடவுள் ஓங்கிய காடு ஏசு கவலை—அக்கடவுளின் தெய்வத்தன்மை மிக்க தன்கொடுமையாற் பிறகாடுகளையிகழும் பலவழிகளில்,

397 - 8. [ஒட்டா தகன்ற வொன்னாத் தெவ்வர், சுட்டினும் பனிக்குஞ் சுரந்தவப் பலவே :]

397 - 8. ஒட்டாது அகன்ற ஒன்னா தெவ்வர் சுரம் தவ பலவே—நன்னனைப் பொருந்தாதே நீங்கின அவன் எவற்குப் பொருந்தாத பகைவரிருக்கும் அருநிலங்கள் மிகப்பல;

இதனால் இகழுநர்ப்பிணிக்கும் ஆற்றல் (௭௩) கூறினார்.

398. சுட்டினும் பனிக்கும் சுரம்—தத்தம் ஊர்களிலேயிருந்து நினைப் பினும் தலைநடுக்குவிக்குஞ் சுரம்,

வி - பு. சுட்டுதல் - நினைத்தல். பனித்தல் - நடுங்குதல்.

399 - 400. தேம் பாய் கண்ணி தேர் வீசு கவி கை ஓம்பா வள்ளல் படர்ந்திகுமெனினே—தேன்சொரிகின்ற கண்ணியினையும் தேரைச்சிதறும் கொடுத்துக்கவிந்த கையினையுமுடைய தனக்கென்று ஒருபொருளும் பேணாத நன்னனைநினைத்துச் செல்கின்றோமென்று கூறுவீராயின்,

வி - பு. கண்ணி - தலையிலணிந்துகொள்ளுமாலை. கவிகை - கவிந்த கை. படர்தல் - நினைதல், செல்லுதல். 'படர்ந்திகும்' என்பதில் இகுமென்பது இடைச்சொல்.

401 - 2. [மேம்பட வெறுத்தவன் றொன்றிணை மூதூர், ஆங்கன மற்றே நம்ம னோர்க்கே :] நம்மனோர்க்கு ஆங்கனம் மேம்பட வெறுத்த அவன் தொல் திணை மூதூர் அற்று—நம்மையொக்கும் பரிசிலர்க்கு அப்பகைப்புலம் எல்லாவூர்களினும் மேலாம்படி செல்வமுண்டான நன்னனுடைய பழைதாகிய உயர்ந்த ஒழுக்கத்தினையுடைய பழையவூர்களை யொக்கும்;

வி - பு. நம் அன்னோர்க்கு-நம்மை ஒத்தவர்க்கு. ஆங்கனம் - அவ்விடம்; மரூஉமொழி. வெறுத்த - மிக்க. திணை - ஒழுக்கம். ஆங்கனம் மூதூர் அற்று.

403. அசைவுழி அசைஇ அஞ்சாது கழிமின்—இளைத்தவிடத்தே இளைப்பாறி அஞ்சாமற் போவீர்;

வி - பு. பகைப்புலமாதலின், அஞ்சவாரென்றுநினைந்து இங்ஙனம் கூறினன். ௪00 - ம் அடி முதலியவற்றின்பொருளும் ௧௩௪ - ம் அடி முதலியவற்றின்பொருளும் ஒத்து விளங்கி, தன்னனுடைய மேம்பாட்டைப் புலப்படுத்தல்காண்க.

404 - 5. [புலியுற வெறுத்ததன் வீழ்பிணை யுள்ளிக், கலைநின்று விளிக்குங் கான மூழிறந்து:] புலி உற வீழ் தன் பிணை உள்ளி வெறுத்த கலை நின்று விளிக்கும் கானம் ஊழ் இறந்து—புலி பாய்கையினாலேபட்ட தன் பிணையை நினைத்து வெறுத்த கலைநின்று கூப்பிடும் அக்காட்டை முறைமைப்படப்போய்,

வி - பு. உறுதல் - பாய்தல். பிணை - பெண்மான். கலை - ஆண்மான். ஊழ் - முறை. இறத்தல் - கடத்தல்.

406. சிலை ஒலி வெரீஇய செங்கண் மரைவிடை—வில்லின்ஓசைக்கு வெருவின சிவந்தகண்ணையுடைய மரையேறு,

வி - பு. சிலை - வில். 'மலைத்தலை வந்த மரையான் கதழ்விடை (௩௩௧) என மரையான்விடை இதில் மூன்றும் கூறப்பெற்றுள்ளது.

407. தலை இறும்பு கதழும் நாறு கொடி புறவின்—முற்பட்ட குறுங்காட்டிலே விரைந்தோடும் நாறுகின்ற கொடிகளையுடைய காட்டிடத்து,

வி - பு. தலை - முன்.

408 - 9. வேறு புலம் படர்ந்த ஏறு உடை இனத்த வளை ஆன் தீம் பால்—வேற்றுப்புலங்களிலே சென்றுமேய்ந்த ஏற்றையுடைய நிரையிடத்தனவாகிய சங்குபோல் வெள்ளிய பசுக்களின் இனிய பாலை,

வி - பு. வேற்றுப்புலம் - வேறிடம். ஏறு - இடபம். நிரை - பசுக்கூடம். வளை - சங்கு.

409 - 10. மிளை சூழ் கோவலர் வளையோர் உவப்ப தருவனர் சொரிதலின்—நிரையைக் காவல் சூழ்கின்ற இடையர் வளையினையுடைய மகளிர் மனமகிழும்படி கொண்டுவந்து சொரிகையினாலே,

வி - பு. மிளை - தலைக்காவல்

411 - 2. பலம்பெறு நசையொடு பதிவயிற் றீர்ந்தநும், புலம்புசேணகலப் புதுவி ராகுவிர்:] பலம் பெறு நசை யொடு நும் பதிவயின் தீர்ந்த புலம்பு சேண் அகல புதுவிர் ஆகுவிர்—பலத்தைப்பெறவேண்டுமென்னும் ஆசையுடனே நும்முடைய ஊரினின்றும் போந்த வருத்தம் விட்டுநீங்குகையினாலே விருந்தாந்தன்மையை யுடையிராகுவிர்;

வி - பு. பலம் - பிரயோசனம். பதி - ஊர். புலம்பு - வருத்தம். சேண் - நெடுந்தூரம். சொரிதலின், புதுவிர் ஆகுவிரென்க.

413 - 6. [பகர்விரவு நெல்லின் பலவரி யன்ன, தகர்விரவு துருவை வெள்ளையொடு விரைஇக், கல்லென் கடத்திடைக் கடலி னிரைக்கும், பல்யாட் டினநிரை:] பகர் பல விரவு நெல்லின் அரி அன்ன தகர் விரவு துருவை வெள்ளையொடு விரைஇ கல்லென் கடத்திடை கடலின் இரைக்கும் பல் யாட்டு இன நிரை—பண்டம்விற்ற பலவுங்கூடும் நெல்லினரிசியையொத்

தனவாகக் கிடாய்விரவுகின்ற செம்மறித்திரள் வெள்ளாட்டுடனேகலந்து கல்லென்கின்ற ஓசையையுடைய காட்டிடத்தே கடல்போலேயொலிக்கும் பல யாட்டின் இனங்களையுடைய திரள்களிலே,

பகர்நெல், வினைத்தொகை.

வி - பு. பகர்தல், விற்றல். பல விரவு - பலநிறமுள்ள நிறங்கள் கலந்த. தகர் - ஆண் ஆடு. துருவை - செம்மறியாடு. வெள்ளை - வெள்ளாடு. கடம் - காடு. பலநிற நெற்களின் தொகுதி பலநிறமுள்ள ஆட்டின்தொகுதிக்கு உவமை.

416. எல்லினிர் புகினே—இராக்காலத்தை யுடையிராய்ச் செல்லின், மனத்தே அக்காலத்தைக் கருதுதலின், உடைமையாயிற்று.

வி - பு. எல் - இராத்திரி.

417. பாலும் மிதவையும் பண்ணாது பெறுகுவிர்—பாலும் பாற்சோறும் நமக்கென்று சமையாமல் தமக்குச் சமைந்திருந்தவற்றைப் பெறுகுவிர்;

வி - பு. 'பண்ணாது பெறுகுவிர்' என்பதற்குச் செய்திருக்கும் பொருள் மிக்க இனிமைபயந்து, "தமக்கென் றுலையேற்றார்" என்னும் ஆசாரக் கோவையின் கருத்தை நினைப்பிக்கின்றது. 'பாலும் விதவையும்' என்றும் பாடம்,

418. துய்மயிர் அடக்கிய சேக்கை அன்ன—மெல்லிய தலைமயிரினையுடைய சேணமிட்ட படுக்கையையொத்த,

வி - பு. துய் - பஞ்சின் நுனியாதலின், மெல்லியதற்காயிற்று. சேணம்-படுக்குமெத்தைக்குரிய பொருள்கள ஐந்தனுள் ஒன்று; "சிறுபூளை செம்பஞ்சு வெண்பஞ்சு சேண, முறுதூவி சேக்கையோ ரைந்து" என்பதனுலறிக.

419. மெய் உரித்து இயற்றிய மிதி அதள் பள்ளி—ஆடுகளின் மெய்யையுரித்து ஒன்றாகத்தைதத வார்மிதித்த தோற்படுக்கையிலே,

வி - பு. அதள் - தோல். "மாண்டோற் பள்ளி மகவொடு முடங்கி" (பெரும்பா. ௮௯) என வேறிடத்து மான்தோற்படுக்கை கூறப்பெற்றுள்ளதாயினும், இஃது இடையரிருப்பிடமாதலின், ஆட்டுத்தோலென்றார்.

420. தீ துணையாக சேர்தனிர் கழிமின்—கொடியவிலங்குகள் வாராதபடி இடையர் ஒளித்த நெருப்புத் துணையாகத் தங்கிப் போவிர்;

வி - பு. சேர்தனிர் - தங்கினீராய். பள்ளியில் தங்கினீராய்.

421 - 2. கூப்பிடு கடக்கும் கூர் நல் அம்பின் கொடுவில் கூளியர் கூவை காணின்—கூப்பிடாத அவ்வெல்லையைக் *கடவாநிற்கும் கூரிய நல்ல அம்பினையும் கொடியவில்லினையுமுடைய நாடுகாக்கும் வேடருடைய திரளைக் கண்டீராயின், அவர்களுக்கு,

வி - பு. கடக்குமென்றதனால், கூப்பிடாத எல்லையைக் கடவாநிற்குமென்று பொருள்செய்தார். கூப்பிடு - கூப்பிடுதூரம். திருமுருகாற்றுப்படையில், "வேறுபல் லுருவிற் குறும்பல் கூளியர்" என்புழி, கூளியரென்பதற்

* கடவாநிற்குமென்றும் பிரதிபேதமுண்டு.

கூச் செலுத்தி நிற்போரென்று பொருள்செய்திருக்கின்றனர். கூவை யென்பது இரவென்னும் பொருளில், "புலவுவிற் பொலிகூவை" (௧௪௨) என மதுரைக்காஞ்சியிலும் வந்துள்ளது. 'கூர்நல் லம்பிற் கொடுவிற் கூளியர்' என்னும் இந்த அடி, புறநானூற்றில், ௨௩-ம் பாட்டிலும் காணப்படுகின்றது.

423-4. படியோர்த் தேய்த்த பணிவு இல் ஆண்மை கொடியோள் கணவன் படர்ந்திகும் எனினே—தன்னை வணங்காதாரை அழித்த தாழ்ச்சியில்லாத பகைவரையாளுந் தன்மையினையுடைய நன்னனை நினைத்துப் போகின்றீரென்று கூறின்,

கொடியோள் கணவன் - கொடியினையுடையோள் கணவன். இதனால் அவன் தேவி கற்புமிகுதி கூறினார்; இது நன்னனென்னும் பொருட்டாய் நின்றது.

வி - பு. படியோர் - படிதலில்லாதவர்கள், பகைவர். ஆண்மையையுடைய கணவனெனக் கல்வி முதலியவற்றிற்கு அறிகுறியாகக் கொடிகட்டுவதுபோலக் கற்புடைமைக்கும் கொடியுண்டென்று 'கொடியோள்' என்பதற்கு இங்கே செய்திருக்கும் பொருளால் தெரிகின்றது. 'கொடியோள் கணவன்' என்னுந் தொடர்மொழி இங்கே இடுகுறிப்பெயர் மாத்திரையாய நன்னனென்னும் துணையாய் நின்றது. பொருட்டாய - பொருளையுடையதாய்.

425-6. தடியும் கிழங்கும் தண்டினர் தரீஇ ஓம்புநர் அல்லது உடற்றுநர் இல்லை—தசைகளையும் கிழங்குகளையும் நும்மை நலிந்து தின்னப்பண்ணிப் பாதுகாப்பாரல்லது வருத்துவார்களில்லை; அவற்றை நுகர்ந்து,

வி - பு. தண்டுதல் - அலைத்தல். தரீஇ - தந்து.

427. ஆங்கு வியம் கொண்மின்—அவ்விடத்து அவர் போகச்சொன்ன வழியை நுமக்கு வழியாகக் கொண்டுபோவீர்;

வி - பு. வியம் - ஏவல்.

427. அது அதன் பண்பே—அக்காட்டின் தன்மை அத்தன்மைத்தாயிருக்கும்;

428. தேம் பட மலர்ந்த மராஅ மெல் இணரும்—தேனுண்டாக மலர்ந்த மராவினது மெல்லிய பூங்கொத்தும்,

வி - பு. மரா - மராமரம்.

429. உம்பல் அகைத்த ஒண் முறி யாவும்—யானை முறித்த ஒள்ளிய தளிர்களையுடைய யாம்பூவும்,

வி - பு. அகைத்தல் - ஒடித்தல். யாம்பூ - யாமரத்தின் பூ. யா - ஒருமரம்; இதனை யானைகள் பிளந்துண்ணுதல் இயல்பு. யா, ஒரு மரமாதல், "யாமரக் கிளவியும் பிடாவுந் தளாவும், ஆமுப் பெயரு மெல்லெழுத்து மிகுமே" (தொல். உயிர். சூ. ௨௭) என்பதனாலும், யானைகள் பிளந்துண்ணுமென்பது, "உரற்கால் யானை யொடித்துண் டெஞ்சிய, யாஅ வரிநிழற் றுஞ்சும்", "பிடிபசி களைஇய பெருங்கை வேழம், மென்சினை யாஅம் பிளக்கும்", "களிறுதன், உயங்குநடை மடப்பிடி வருந்திய நோனாது, நிலையுயர் யாஅந் தொலையக் குத்தி, வெண்ணார் கொண்டு கைசுவைத்து" (குறுந்தொகை. ௨௩௨, ௩௭, ௩0௭) என்பவற்றாலும் விளங்கும்.

**430-31.** [தளிரொடு மிடைந்த காமர் கண்ணி, திரங்கு மர னாரிற் பொலியச் சூடி:]—திரங்கு மரல் நாரில் தளிரொடு மிடைந்த காமர் கண்ணி பொலிய சூடி—உலர்ந்த மரல் நாரிலே தளிர்களோடே நெருங்கக்கட்டின விருப்பமருவின கண்ணியை அழகுபெறச் சூடி,

**வி - பு.** மரல். இக்காலத்து மருளென்று வழங்கப்படுகின்றது. அதன் நாரால் பூவைத்தொடுத்து மாலை கட்டுதலை, "மரல் வகுந்து தொடுத்த செம் பூங் கண்ணி" (புறநா. உகச) என்பதனாலறிக.

**432.** முரம்பு கண் உடைந்த நடவை தண்ணென—பருக்கைகளையுடைய மேட்டுநிலத்திடம் விண்ட சிறுவழி மழைபெய்து குளிருகையினாலே,

**433.** உண்டனிர் ஆடி கொண்டனிர் கழிமின்—அந்நீரைக்குடித்துக் குளித்து வழிக்கு முகந்துகொண்டு போமின்;

**வி - பு.** முரம்பு, பருக்கைக் கற்களாலாகிய மேட்டுநிலமென்பது, "கற்க ணெருங்கு மிடமுரம் பாகும்" (ஊரிச்சொல் நிகண்டு, இடப்பெயர். கச) என்பதனாலும் விளங்குகின்றது.

**434-6.** [செவ்வீ வேங்கைப் பூவி னன்ன, வேய்கொ ளரிசி மிதவை சொரிந்த, சுவல்விளை நெல்லி னவரையம புளிங்கூழ்:]

செவ்வீ வேங்கை பூவின் அன்ன அவரை—சிவந்த பூக்களையுடைய வேங்கைப்பூவினையொத்த நிறத்தையுடைய அவரைவிதை,

வேய் கொள் அரிசி—மூங்கில் தன்னிடத்தே கொண்ட அரிசி,

சுவல் விளை நெல்லின் அரிசி—மேட்டுநிலத்தேவிளைந்த நெல்லினரிசி,

சொரிந்த மிதவைப் புளியங்கூழ்— இவற்றைப் புளிக்கரைத்த உலையிலே சொரிந்துஆக்கின குழைந்த புளியங்கூழை,

**வி - பு.** வேங்கைப்பூ - வேங்கைமரத்தின்பூ. அவரை விதைக்கு வேங்கைப்பூ உவமை. வேய்கொள் அரிசி - மூங்கில் நெல்லின் அரிசி. சுவல் - மேட்டுநிலம்; "வெப்புள் விளைந்த வேங்கைச் செஞ்சுவல்" என்பது, புறநானூறு, கஉ0. "கவைக்கதிர் வரகி னவைப்புறு வாக்க, ருமெருமறுகிற் போதொடு பொதுளிய, வேளை வெண்பூ வெண்டயிர் கொளீஇ, யாய்மக ளட்ட வம்புளி மிதவை, யவரை கொய்புந ரார மாந்தும், தென்னம் பொருப்பன்" (புறநா உகரு) என்பதிலும் இங்ஙனமே ஒருவகைப் புளியங்கூழ் கூறப்பெற்றிருத்தல் காண்க.

**437.** அற்கு இடை உழந்த நும் வருத்தம் வீட—இராக்காலத்துக் காட்டிடத்துப் பகற்பொழுதுவந்த நும்வருத்தம் போம்படி,

**வி - பு.** அற்கு - அல்லுக்கு; இராக்காலத்திற்கு. இடை - இடம்; காட்டிடம்.

**438-9.** [அகலு ளாங்கட் கழிமிடைந் தியற்றிய, புல்வேய் குரம்பைக் குடிதொறும் பெறுகுவிர்:] ஆங்கண் அகலுள் கழி மிடைந்து இயற்றிய புல் வேய் குரம்பை குடிதொறும் பெறுகுவிர்—அவ்விடத்து அகன்ற ஊரிடத்துக் கழிகளால் தெற்றிப்பண்ணின புல்லான்வேய்ந்த குடில்களிலிருக்கும் குடிகடோறும் பெறுகுவிர்;

கூழை அற்குப் பெறுகுவிரென்க

வி - பு. அகலுள் ஊரென்பது, "அகலுள் பதியே, கோட்டம் வசதி, தாவள நியமம், வாழ்க்கை தண்ணடை, மருதநிலத் தூர்ப்பெயர்" (திவாகரம்) என்பதனாலும்விளங்கும். தெற்றி - இறுகக்கட்டி. குரம்பை, குடில் - குடிசை. குடிகள் - குடியிருப்போர்.

440 - 43. [பொன்னறைந் தன்ன நுண்ணே ரரிசி, வெண்ணெறிந் தியற்றிய மாக்க ணமலை, தண்ணெ னுண்ணிழு துள்ளீ டாக, வசையினிர் சேப்பி னல்கலும் பெறுகுவிர் :]

443 அசையினிர் சேப்பின்—இளைப்பாறி அவ்விடத்தே சிலநாள் தங்குவீராயின்,

440 - 41. பொன் அறைந்தன்ன நுண் நேர் அரிசி வெண் எறிந்து இயற்றிய மா கண் அமலை—பொன்னை நறுக்கினாலொத்த நுண்ணிய ஒத்த அரிசியை வெள்ளையெறிந்தாக்கின கரிய இடத்தையுடைய சோற்றுத்தடியை,

வி - பு. 'பொன்னறைந்த நுண்ணேரரிசி' என்றது, தினையரிசியை; "நன்பொ னன்ன புனிறுதீ ரேனல்" (ஐங்குறு. ௨௬௫) என்பதனாலும் தினைக்குப் பொன் உவமையாதல் உணரப்படும். வெண் எறிந்து - வெள்ளை நிறமுள்ள அரிசிகளை எடுத்தெறிந்து. அமலை. தடி - சோற்றுக்கண்டை.

442 - 3. தண்ணென் நுண் இழுது உளளீடாக அல்கலும் பெறுகுவிர்—தண்ணென்ற நுண்ணிய நெய்விழுதை உள்ளேயிட்டுண்ணும்படி நாடோறும் பெறுகுவிர்;

வி - பு. உணவு வகையில், உள்ளீடென்றும் மேலீடென்றும் இருவகையுண்டு; உள்ளீடு - ஒன்றன் உள்ளே வைத்துஉணணபபடுவது; மேலீடு - ஒன்றன்மேலேயிட்டு உண்ணப்படுவது; மேலீடு கண்ணுறையென்றும் வழங்கும்; "புதுநெல் வெண்சோற்றுக் கண்ணுறை யாக" (புறநா. ௬௧, என்பதனாலறிக வேப்பிலைக்கட்டியென்று இக்காலத்துவழங்கப்படுவது மேலீடே.

444. விசயம் கொழித்த பூழி அன்ன—கருப்புக்கட்டியைக் கொழித்த பொடியையொத்த,

வி - பு. விசயுங்கொழிக்க பூழி - சர்க்கரை.

445. உண்ணுநர் தடுத்த இடி நுண் நுவணை—தன்னை நுகர்வாரை வேறொன்றை நுகராமல் தடுத்த இடித்தலால் நுண்ணிதாகிய தினைப்பிண்டியோடு,

சேப்பின் நுவணையோடே அமலையை இழுது உள்ளீடாக அல்கலும் பெறுகுவிரென்க.

வி - பு. நுவணை. தினைப்பிண்டி - தினைமா.

நுவணையோடென ஒடு விரிக்க.

446 - 7. நொய் மர விறகின் ஞெகிழி மாட்டி பனி சேண் நீங்க இனிது உடன் துஞ்சி—நொய்ய மரமாகிய விறகாலாக்கின கடைக்கொள்ளியை எரித்துப் பனி விட்டுநீங்கும்படி இனிதாகச் சேரத்துஞ்சி,

வி - பு. நொய்ய - மெல்லிய.

448 புலரி விடியல் புள் ஓர்த்து கழிமின்—இராக்காலம் நீங்குதலை யுடைய விடியற்காலத்தே நிமித்தம்பார்த்துப் போவீர்;

புள்ளோர்த்தென்றதற்குப் புட்களின்குரல் கேட்டுப் போவீரென்றுமாம்.

வி - பு. நிமித்தம் - பக்ஷிசகுனம். புட்களின்குரல் - கோழிமுதலிய வற்றின் குரல்.

இத்துணையும் கானமும், கானத்து ஆற்றினது நன்மையும், அசையுநற் புலமும், வல்சியும் சேரக்கூறினர்.

449. புல் அரை காஞ்சி—புற்கென்ற அரையினையுடைய காஞ்சிமரத் தினையும், புனல் பொரு புதவின்—நீர்வந்துபொருகின்ற அறுகுகளையும்,

வி - பு. புற்கென்ற - மஞ்சள்நிறமும் வெள்ளைநிறமுங்கலந்தநிறமுள்ள. புதவு, அறுகு - அறுகம்புல்.

450. மெல் அவல்—மெல்லிய விளைநிலங்களையும்,

வி - பு. அவல் - பள்ளம்; விளைநிலத்திற்காயிற்று; ஆகுபெயர்.

450 - 53. [இருந்த வூர்தொறு நல்லியாழ்ப், பண்ணுப்பெயர்த் தன்ன காவும் பள்ளியும், பன்னா ணிற்பினுஞ் சேந்தனிர் செலினு, நன்பல வுடைத்த தவன் றண்பணை நாடே :]

451. காவும்—பொழில்களையும்,

452. பள்ளியும்—இடைச்சேரிகளையுமுடைய,

வி - பு. பள்ளி-முல்லைநிலத்தூர்; இது, "தெய்வ முணவே" (தொல். அகத். சூ. கஅ) என்பதன் விசேடவுரையால் அறியலாகும்.

453. அவன் தண் பணை நாடே—நன்னனுடைய குளிர்ந்த மருதநிலத் தையுடைய நாடு,

452, 50. பல்நாள் நிற்பினும் சேந்தனிர் செலினும் இருந்த வூர்தொறும்—பலநாள் நிற்பினும் ஒருநாள் தங்கிப்போயினும் நீர் நுகர்தற்குக் குடிநீங் காதிருந்த வூர்கள்தோறும்,

நல்லியாழ் (சருO) பண்ணு பெயர்த்தன்ன (சருக) நன் பல வுடைத்து (சருங)—நல்ல யாழின்பண்ணை மாறிவாசித்ததன்மையவாக நன்றாகிய பல பொருள்களை யுடைத்து;

வி - பு. நீர் நுகர்தற்கு நன்பலவுடைத்தென்க.

காஞ்சிமுதலியவற்றை உடையநாடு ஊர்தோறும் நன்பலவுடைத்தென்க.

பண் ஒன்றையொன்று ஒவ்வாது இனிதாயிருக்குமாறுபோல நுகரும் பொருள்களும் ஒன்றையொன்றொவ்வா, இனிமையுடையவென்றார்.

வி - பு. யாழின் பண்ணை மாறி வாசிக்கக்கேட்டல் பலபொருள்களின் நுகர்ச்சிக்கு உவமை; கூத்தனுக்குத் தெரிந்ததாகலின், பண்ணுப்பெயர்ச்சி உவமைகூறப்பெற்றது.

454 - 5. கண்பு மலி பழனம் கமழ துழைஇ வலையோர் தந்த இரு சுவல் வாளை—கண்புநெருங்கின மருதநிலத்தைப் பூக்கள் நாறவளைத்து ஆராய்ந்து வலையைவீசுவார் கொண்டுவந்த பெரிய கழுத்தினையுடைய வாளைத் தடியை,

வி - பு. கண்பு - ஒருவகைக் கோரை; இது நீரிலுண்டாவது; "கழு நீர் பொலிந்த கண்ணகன் பொய்கைக், கள்ளி முமாய் செருந்தியொடு கண்ப மண் டூர்தர" (மதுரைக்காஞ்சி, கஎக - உ) என்பதனாலும், "கண்பகத்தின் வாரணமே" (தேவாரம்) என்பதனாலுமறிக.

456 - 8. நிலையோர் இட்ட நெடு நாண் தூண்டில் பிடிக்கை அன்ன செங்கண் வரால் துடிக்கண் அன்ன குறையொடு விரைஇ—ஓரிடத்தில் நிலை பெற நிற்றலையுடையோரிட்ட நெடிய கயிற்றையுடைய தூண்டிலிற்பட்ட பிடியின்கையையொத்த சிவந்தகண்ணையுடைய வராலினது துடியின்கண்ணை யொத்த தடியோடேகலந்து,

வி - பு. பிடிக்கை - பெண்யானையின்கை; இது வரால்மீனுக்கு உவமை. துடி - உடுக்கை. குறை, தடி - குறைத்த தசைத்துண்டம்.

459. பகன்றை கண்ணி பழையர் மகளிர்—பகன்றைப்பூவாற் செய்த கண்ணியையுடைய கள்விற்கும் வலையருடைய மகளிர்,

வி - பு. பகன்றைக்கண்ணி - சிவதைச்கொடியின் பூவாலாகிய மாலை; "பகன்றை பலாசம் பல்பூம் பிண்டி" (குறிஞ்சிப்பாட்டு, அ அ) என்பதனுரை யால் இது விளங்கும். பழையர் - கள்விற்போர்.

460 - 62. ஞெண்டு ஆடு செறுவில் தராய்க்கண் வைத்த விலங்கல் அன்ன போர் முதல் தொலைஇ வளம் செய் வினைஞர் வல்சி நல்க—ஞெண்டு கள் ஆடித்திரியும் செய்க்கு அருகில் மேட்டுநிலத்தேயிட்ட மலையையொத்த போர்களை அடியிலேவிழ அழித்துக் கடாவிட்டு வளப்பத்தையுண்டாக்கும் உழவர் நெல்லை முகந்துதாரநிற்க,

வி - பு. ஞெண்டு - நண்டு. செறு, செய் - நன்செய். விலங்கல் - மலை; இது நெற்போருக்கு உவமை; "வரைக ளொப்பன போரொழுக் கியபுரி வரையின், அருவி யொப்பன சுற்றுபா கடுபுகை யவைசூழ், கருமு கிற்குல மொப்பன நீங்கழைக் கரும்பின், திரள வற்றினைச் சூழ்ந்தகா டொப்பன செறிந்து" (சீகாளத்திபுராணம், நக்கீரச். கஂ) என இவ்வுவமையைப் பின் பற்றி ஸ்ரீ சிவப்பிரகாசஸ்வாமிகள் நெற்போரைக் கூறியிருக்கும் அழகு மிகப்பாராட்டற்பாலது. வல்சி - உணவு; நெல்லுக்காயிற்று; ஆகுபெயர்; 'நாடுபடு வல்சியும்' என்றார்முன்னும; சு அ.

463. துளங்கு தசும்பு வாக்கிய பசும்பொதி தேறல்—களிப்புமிகுதி யால் அசையும் மிடாவினின் றும்வார்த்த பசிய மூங்கிலாலாக்கின கட்டெளிவை,

வி - பு. கள்வைத்திருக்கும் பாண்டமும் களிப்புமிகுதியால் அசையு மென்பதை, "தசும்பு துளங்கிருக்கை" (பதிற்றுப்பத்து, சஉ) என்பதனு லும், 'தன் களிப்புமிகுதியால் தன்னை உண்டாருடல்போல அத்தசும்பிரு ந்து ஆடும்படியானஇருப்பு' என்னும் அதன் உரையாலும் அறிக. கள் பல வற்றால் ஆக்கப்படுமாயினும் 'பசும்பொதித் தேறல்' என்றதனால், மூங்கிலா லாக்கின கள்ளென்றார். மூங்கில் - நென்மூங்கில்முதலியன.

464. [இளங்கதிர் ஞாயிற்றுக் களங்கடொறும் பெறுகுவிர்:] ஞாயிறு இளங்கதிர் களங்கள் தொறும் பெறுகுவிர்—ஞாயிற்றினது இளைய கதிர்க ளெறிக்குங்காலத்திலே களங்கடோறும் பெறுகுவிர்;

வினைஞர் வல்சிநல்காரிற்கப் பழையர்மகளிர் விரைஇத் தேறல்நல்காரிற்கப் பெறுகுவிர் என்க.

வி - பு. "இளங்கதிர் ஞாயிறெள்ளுந் தோற்றத்து" (மணிமேகலை, பதி. ௧) என இவ்வாக்கியம் வேறிடத்தும் வந்துள்ளது. பழையர்மகளிர் கூத்தர்க்குவார்க்குங்கள்விலையாக உழவர் அம்மகளிர்க்கு நெல்லைஅளக்கின்றனர்.

465 - 8. [முள்ளரித் தியற்றிய வெள்ளரி வெண்சோறு, வண்டுபடக் கமழுந் தேம்பாய் கண்ணித், திண்டேர் நன்னற்கு மயினி சான்மெனக், கண்டோர் மருள :]

466 - 8 வண்டு பட கமழும் தேம் பாய் கண்ணி திண் தேர் நன்னற்கும் அயினி சான்மென கண்டோர் மருள—வண்டுபடியும்படி நாறும் தேன் சொரிந்த கண்ணியினையும் திண்ணிய தேரினையுமுடைய நன்னனுக்கும் உணவாதற்கமையுமென்று கண்டோர்கள் மருளும்படி,

வி பு. தேம் - தேன். கண்ணி - இங்கே தலையிலணிந்துகொள்ளு மாலை. நன்னற்கும், உம்மை - உயர்வு சிறப்புப்பொருளது. சான்மென = சாலுமென.

465. முள் அரித்து இயற்றிய வெள்ளரி வெண்சோறு—முள்ளைக் கழித்துஆக்கின கொழுப்பால் வெள்ளியநிறத்தையுடைய தடிகளையிட்ட வெள்ளிய சோற்றை,

வெள்ளிய நிறத்தையுடைய தடிகளை வெள்ளரியென்றார்; ஆகுபெயராக்கி.

மருள இயற்றியவென்க.

வி - பு. அரி - அரிந்த தசைத்துண்டங்கள். இவற்றோடுகூட்டிச் சோறு ஆக்கப்படுதல், "ஊன்சோற் றமலை பாண்கடும் பருத்தும்" (புறநா. ௩௩) என்பதனாலும் தெரிகின்றது.

468. கடும்பு உடன் அருந்தி—நும் சுற்றத்துடனே யுண்டு,

469, 70. எருது எறி களமர் ஓதையொடு நல் யாழ் மருதம் பண்ணி அசையினிர் கழிமின்—எருத்தையடிக்கின்ற உழவரோசையோடே கூடும்படி நல்லயாழை மருதத்தைவாசித்து இளைப்பாறிப் போவீர்;

வி - பு. களமர் - களத்தே தொழில்செய்பவர். மருதம் - காலைப்பண்; இது, "யாழோர் மருதம் பண்ணக் காழோர், கடுங்களிறு கவளங் கைப்ப" (மதுரைக்காஞ்சி, ௬௫௮ - ௯) என்னும் வைகறைவர்ணனையாலும் அறியப்படுகின்றது.

இத்துணையும் நாடுபடுவல்சியும் அசையுநற்புலமும் சேரக்கூறினார்.

471 - 3. வெள் நெல் அரிநர் தண்ணுமை வெரீஇ செங்கண எருமை இனம் பிரி ஒருத்தல் கனை செலல் முன்பொடு கதழ்ந்து வரல் போற்றி—வெள்ளிய நெல்லையறுப்பார் கொட்டின பறையோசைக்கு வெருவிச் சிவந்த கண்ணையுடைய எருமைத்திரளைப் பிரிந்தகடா ஆரவாரிக்குஞ் செலவினையுடைய வலியோடே நும்மேல் விரைந்து வருதலைப் பேணி,

வி - பு. "வெண்ணெல் லரிநர் தண்ணுமை வெரீஇ" என்னும் இவ்வடி, புறநானூறு, ௩௪௮ - ம் செய்யுளில் முதலடியாகவும் காணப்படுகின்றது.

474 - 5. வனை கலம் திகிரியின் குமிழி சுழலும் துனை செலல் தலைவாய் ஓவிறந்து வரிக்கும்—குயவன்வனைகின்ற மட்கலத்திற் சக்கரம்போலக் குமிழி சுழன்றுதோன்றும் விரைந்தசெலவினையுடைய வாய்த்தலையில் ஒழிவின்றி ஓடும் யாறு (சஎச),

வி - பு. மண்கலம் - மண்ணாற்செய்யப்படும் பாண்டம். வனைகலத்திகிரி - குயவனுடைய சக்கரம். தலைவாய், வாய்த்தலை - வாய்க்காலின் தலைப்பு; "காவிரிப் புதுநீர்க் கடுவரல் வாயத்தலை, ஓவிறந் தொலிக்கு மொலியே யல்லது" (சிலப்பதி. நாடுகாண். க௦அ - கூ) என்றவிடத்து, 'ஓவிறந் தொலிக்குமொலி' என்பதற்கு, 'வாய்த்தலைக்கிட்ட கதவின் மீதெழுந்து குதிக்கின்றன அப்புதுப்புனலொலி' என்று பொருளெழுதினர், அடியார்க்குநல்லார்.

476 - 7. காணுநர் வயாஅம் கட்கு இன் சேயாற்றின் யாணர் ஒரு கரை கொண்டனிர் கழிமின்—காண்பார்விரும்பும் கட்கினிய சேயாற்றினது புதுவருவாயையுடைய ஒருகரையை வழியாகக்கொண்டு போவிர்;

வயாம் - ஈற்றுமிசையுகரம் மெய்யொடுங்கெட்டது. சேயாறு - அவ்வியாற்றின் பெயர்.

வி - பு. வயா - விருப்பம்; "வயாவென் கிளவி வேட்கைப் பெருக்கம்" (தொல். உரி. எரு) கட்கு - கண்ணுக்கு. யாணர், புதுவருவாய் - புதுவரும்படி. ஈற்றுமிசையுகரம் - 'வயாவும்' என்பதிலுள்ள உகரம்; மெய் - வகரமெய்; "செய்யு மென்னும் பெயரெஞ்சு கிளவிக்கு, மெய்யொடுங் கெடுமே யீற்றுமிசை யுகர, மவ்விட னறித லென்மனார் புலவர்" (தொல். வினை. சக) என்பது இதற்கு விதி.

478 - 87. [நிதியந் துஞ்சு நிவந்தோங்கு வரைப்பிற், பதியெழ வறியாப் பழங்குடி கெழீஇ, வியலிடம் பெறாஅ விழுப்பெரு நியமத், தியாறெனக் கிடந்த தெருவிற் சாறெனை, யிகழுநர் வெரூஉங் கவலை மறுகிற், கடலெனக் காரென வொலிக்குஞ் சும்மையொடு, மலையென மழையென மாட மோங்கித், துனிதீர் காதலி னினிதமர்ந் துறையும், பனிவார் காவிற் பல்வண் டிமிரு, நனிசேய்த் தன்றவன் பழவிறன் மூதூர் :]

486. பல் வண்டு இமிரும் பனி வார் காவின்—பலவண்டுகளொலிக்கும் குளிர்ந்த நெடிய பொழில்களையும்,

482, 478. இகழுநர் வெரூஉம் நிவந்தோங்கு வரைப்பின்—நன்னனை இகழ்ந்திருப்பார் அஞ்சும் மிகவோங்கு மதிலையும்,

வி - பு. நிவந்தோங்கு, ஒருபொருட் பன்மொழி.

சாறென (சஅக) கெழீஇ (சஎகூ) கடலென காரென ஒலிக்கும் சும்மையொடு (சஅரு) வியல் இடம்பெறா விழு பெரு நியமத்து (சஅ௦)—திருநாளென்னும்படி மாந்தர் பொருந்திக் கடலெனக் காரென ஒலிக்கும் ஆரவாரத்தோடே திரிதற்கு அகன்ற இடம்பெறாத சீரியபெரிய அங்காடித்தெருவினையும்,

வி - பு. சாறு - திருவிழா. திருவிழாவிற் பலருங்கூடுதல் இயல்பு. அங்காடித்தெரு - கடைத்தெரு.

482. கவலை மறுகின்—பல கவர்த்தன்மையையுடைய குறுந்தெருக்களையும்,

பதி எழவு அறியா பழங்குடி (௪௭௯) துனி தீர் காதலின் இனிது அமர்ந்து உறையும் (௪௮௫) மாடம் மலையென மழையென ஓங்கி (௪௮௪)— ஊரினின்றும் போதலையறியாத பழையகுடி வெறுப்பில்லாத விருப்பத்தோடே நன்றாதல்பொருந்தியிருக்கும் மாடங்கள் மலையென மழையென ஓங்குகையினாலே,

வி - பு 'பதியெழுவறியாப் பழங்குடிகெழீஇய ... ....புகார்' என ஈண்டுள்ளசொல்லும் பொருளும் அமைந்தவாக்கியமொன்று சிலப்பதிகாரத்திலும் காணப்படுகின்றது; (மங்கல.)

481 யாறென கிடந்த தெருவின்—யாறென்னும்படி கிடந்த பெருந்தெருவினையும்,

இரண்டுமருங்கின் மாடமும் தெருவும் யாறும் கரையும் போன்றவென்றார்.

வி - பு. தெருவுக்கு யாறு உவமை; "ஆறு கிடந்தன்ன அகனெடுந் தெரு" என்பது, நெடுநல்வாடை, ௩௰; "நீத்தியாற் றன்ன நெடுங்கண் வீதி" என்பது பெருங்கதை.

நிதியம் துஞ்சும் (௪௭௮) அவன் பழ விறல் மூதூர் நனி சேய்த்தன்று (௪௮௭)—தாவினையும் மதிலினையும் நியமத்தினையும் மறுகினையும் தெருவினையுமுடைய, பொருட்டிரடங்கும் அவன் பழைய வெற்றியையுடைய மூதூர் மிகவும் தூரத்தன்றென்க

வி - பு. "துஞ்சுநீ ணிதியது சுரமை யென்பவே" (சூளா. நாட்டு. ௧) 'நிதியந்துஞ்சும்' என்பது, பாகதத்துள் தற்பவத்திற்கு உதாரணமாகக்காட்டப்பட்டது

இது மூதூர்மாலை (௯௩) கூறிற்று.

488 - 9. பொருந்தா தெவ்வர் இருந்தலை துமிய பருந்து பட கடக்கும் ஒள் வாள் மறவர்—நன்னனைப்பொருந்தாத பகைவருடைய கரிய தலைகள் துணியப் பருந்துகள்படியப் போரைவெல்லும் ஒள்ளியவாளையுடைய மறவர் தம்முடைய,

வி - பு. இருமை - கருமை. துமித்தல் - துண்டமாக்கல் பருந்துகள் படிவது, புலாலை உண்பதற்கு. மறவர் - வீரர்; மறம் - வீரம்

490 - 91. கருங்கடை எஃகம் சாத்திய புதவின் அருங்கடி வாயில் அயிராது புகுமின்—கரிய காம்பினையுடைய வேலைச்சாத்திவைத்துக் காத்திருக்கின்ற பல தெற்றுவாசல்களையுமுடைய அரிய கோபுரவாயிலை ஐயுறாமற் புகுவீர்;

வி - பு. கடை - காம்பு. புதவு - கதவு; தெற்றுவாசலென்பது, இக்காலத்துத் திட்டிவாயிலென வழங்கும்.

492 - 5. [மன்றில் வதியுநர் சேட்புலப் பரிசிலர், வெல்போர்ச் சேஎய் பெருவிற லுள்ளி, வந்தோர் மன்ற வளியர் தாமெனக், கண்டோ ரெல்லா மமர்ந்தினிதி னோக்கி :]

492, 495. மன்றில் வதியுநர் சேண் புலம் பரிசிலர் கண்டோரெல்லாம்—அம்பலங்களிலே தங்குவாராகிய தூரியநிலங்களினின்றும் வந்த கூத்தர்முதலியோராய் நும்மைக்கண்டோரெல்லாம்,

வி - பு. அயலிடங்களிலிருந்துவந்த பரிசிலர் பொதுவிடங்களில தங்குவது மரபாதலின், 'மன்றில் வதியுநர்' என்றார். சேண்புலம் - நெடுந்தூரமான இடம். பரிசிலர் - பரிசில் பெறுதற்குரியவர்.

அளியர் தாம் (௪௯௪) வெல் போர் சேஎய் பெரு விறல் (௪௯௫) மன்ற (௪௯௪) உள்ளி (௪௯௫) வந்தோரென (௪௯௪) அமர்ந்து இனிதின் நோக்கி (௪௯௫)—இவ்வளிக்கத்தக்கவர்தாம் வெல்லும்போரைவல்ல முருகனைப்போலும் நன்னனைப் பரிசிலர்க்குங் கொற்றமாகநினைத்து வந்தோரென்றுகருதி முகம்பொருந்தி இனிதாகப்பார்த்து,

வி - பு. அளிக்கத்தக்கார் - பாதுகாக்கத்தக்கவர். சேய் - முருகக்கடவுள்; என்றது அக்கடவுள்போன்றநன்னனை அமர்ந்து - பொருந்தி. மன்ற - நிச்சயமாக.

496 - 7. [விருந்திறை யவரவ ரெதிர்கொளக் குறுகிப், பரிபுலம் பலைத்தநும் வருத்தம் வீட :] பரி புலம்பு அலைத்த வருத்தம் வீட அவர் விருந்து நும் இறை எதிர்கொள அவர் குறுகி—தரித்தலாலுண்டான தனிமை வருத்தின வருத்தம் போம்படி அவ்விடத்தோர் விருந்தாய் நீங்கள்தங்குதலை எதிரேற்றுக்கொள்கையாலே அவர்களைச் சேரநிருந்து,

வி - பு. பரிபுலம்பு - மிக்கதனிமை; தரித்தல் - தாமதித்தல். இறை—இறுத்தல் - தங்குதல.

498 - 500. [எரிகான் றன்ன பூஞ்சினை
வலிந்தகப் பட்ட, மட நடை யாமான் கயமுனிக் குழவி

498 - 500. எரி கான்றன்ன பூ சினை மராஅத்த தொழுதி போக வலிந்து அகப்பட்ட மடநடை ஆமான்குழவி—நெருப்பைக் கான்றாலொத்த பூங்கொம்புகளையுடைய மராமரத்திடத்தே கிடந்த இனமெல்லாம் கெட்டுப் போகப்போகமாட்டாது அகப்பட்ட மடப்பத்தையுடைய நடையையுடைய ஆமானினதுகுழவி,

வி - பு. கான்றாலொத்த - கக்கினாலொத்த. சினை - கொம்பு. தொழுதி, இனம் - கூட்டம. ஆமானகுழவி - காட்டுப்பசுவின் கன்று.

500. கயமுனி குழவு—யானைக்கன்றாயது,

501. [ஊமை யெண்கின் குடாவடிக் குருளை :] எண்கின் குடாவடி ஊமை குருளை—கரடியின் வளைந்த அடியினையுடைய வாய்திறவாக்குட்டி,

502 - 3 மீமிசை கொண்ட கவர் பரி கொடுந்தாள் வரை வாழ் வருடை வல் தலை மா தகர்—முதுகிடத்தேகொண்ட நிலத்தைக்கைக்கொள்ளும் செலவினையுடைய வளைந்தகாலையுடைய வரையிடத்தேவாழும் எண்காலவருடையில வலிய தலையினையுடைய பெரியகிடாய்,

இனி வருடையுந் தகருமென வேறாகக் கூறலுமாம்.

வி - பு. மீமிசைக் கொண்டதாளென்க. எண்கால்வருடையென்பது ஒருவகை விலங்கு; "மாவுமாக்களும்" (தொல். மர) என்பதன் விசேடவுரையைப் பார்க்க.

504. அரவு குறும்பு எறிந்த சிறு கண் தீர்வை—பாம்பினது வலிகளை யழித்த சிறிய கண்ணிணையுடைய கீரி.

வி - பு. கீரி - கீரிப்பிள்ளை.

505 - 6. அளை செறி உழுவை கோள் உற வெறுத்த மடக்கண் மரையான் பெருசெவி குழவி—முழையிலே செறிந்திருந்த புலி பாய்தலுறுகையினாலே தன்னுடலைவெறுத்த மடப்பத்தையுடையகண்ணிணையுடைய மரையானினது பெரிய செவியினையுடைய குழவி,

வி - பு. மரையான் குழவி - மரையான் கன்று.

507 - 8. அரக்கு விரித்தன்ன செந்நிலம் மருங்கிற் பரல் தவழ் உடும்பின் கொடுந்தாள் ஏற்றை—அரக்கைப்பரப்பினாலொத்த சிவந்தநிலத்திடத்திற் சுக்கான்கல்லிலேதவழும் உடும்பினது வளைந்தகாலையுடைய ஏறு,

வி - பு. உடும்பின் ஏற்றை - ஆணுடும்பு.

509. வரை பொலிந்து இயலும் மடக்கண் மஞ்ஞை—மலையிடத்தே அழகுபெற்று ஆடும் மடப்பத்தையுடைய கண்ணிணையுடைய மயில்,

510 கானம் கோழி கவர் குரல் சேவல்—கானத்திடத்துக் கோழியினது பெடையையழைக்கின்ற குரலையுடைய சேவல்,

வி - பு. காட்டுக்கோழிச் சேவல்.

511. கானம் பலவின் முழவு மருள் பெரும்பழம்—காட்டிடத்துப் பலாவினுடைய முழவென்றுமருளும் பெரியபழம்,

வி - பு. 'சுரஞ்செல் கோடியர் முழவிற் றூங்கி, முரஞ்சுகொண் டிறைஞ்சின வலங்குசினைப் பலவே' என்றார் முன்னும்; 143 - 4

512 - 3 [இடிக்கலப் பன்ன நறுவடி மாவின், வடிச்சேறு விளைந்த தீம் பழத் தாரம் :] நறுவடி மாவின் இடி கலப்பன்ன வடி சேறு விளைந்த தீம்பழம் தாரம்—நறிய வடுக்களையுடைய மாவினது பொடிச்செய்த கண்டின்கலப்பை யொத்த பிழியப்படும் சாறுமுற்றின இனிய பழமாகிய பண்டம்,

வி - பு. கண்டு - கற்கண்டு சேறு - சாறு. பழமாகியபண்டம் - மாம்பழம்

௫ 4. தூவல் கலித்த இவர் நனை வளர் கொடி—மழையாற்செருக்கின பரக்கின்ற அரும்புகளையுடைய மணம்வளருகின்ற நறைக்கொடி,

வி - பு. நறைக்கொடி - ஒருவகைக் கொடி; "தண்கமழ் நறைக்கொடி கொண்டு" (ஐங்குறு. உ௭௬) என்பதனாலுணர்க.

515. காஅய் கொண்ட நுகம் மருள் நூறை—காவிக்கொண்டுவந்த நுகமென்றுமருளும் நூற்றைக்கிழங்கு,

நூறை - மலங்கென்பாருமுளர்.

வி - பு. காஅய், காவி - தோளிற்சுமந்து. நுகம் - நுகத்தடி. மலங்கு - ஒருவகை மீன்,

516. [பரூஉப்பளிங்குதிர்த்த] உதிர்த்த பரூஉ பளிங்கு—மரத்தினின் றும் சிதறியுதிர்த்த பருத்த நிகரமாகிய கற்பூரம்,

வி - பு. கற்பூரமென்று ஒருவகை மாமுண்டு; "இமயச்சாரற் கருப் புரக்கன்று" (சீவக. ௧௨௬௭). நிகரம் - கூட்டம்.

516. பல உறு திரு மணி—பலவிலைபெற்ற அழகிய மாணிக்கம்,

517 - 8 [குரூஉப்புலி பொருத புண்கூர் யானை, முத்துடை மருப்பின் முழுவலி மிகுதிரள்:] குரூஉபுலி பொருத புண் கூர் முழுவலி யானை முத் துடை மருப்பின் மிகுதிரள்—நிறத்தையுடைய புலிபொரப்பட்ட புண்மிக்க குறைவில்லா வலியையுடைய யானைகளினுடைய முத்துடைய கொம்புகளினு டைய மிக்கதிரள்,

வி - பு. யானைக்கொம்புகள் முத்துடையனவென்பதை, "பெருங்களி ற்று, முத்துடைவான் கோடுதழீஇ" (திருமுரு. ௩0௪ - ௫), "யானை, முத் தார் மருப்பு" (குறிஞ்சி. ௩௫ - ௬) என்பவற்றாலுமுணர்க.

519. வளை உடைந்தன்ன வள் இதழ் காந்தள்—வளையுடைந்தாற் போன்ற வளவிய இதழையுடைய காந்தட்பூ,

வி - பு. வளை - மகளிரணிந்துகொள்ளும் கைவளையல். உடைந்தவளை காந்தட்பூவின் இதழிற்கு உவமம்; "அலங்கிதழ்க் கோடல் வீயுகு பவைபோ, விலங்கே ரெல்வளை யிறையூ ரும்மே" என்பது கலித்தொகை, எ.

520. நாகம்—புன்னைப்பூ,

520. திலகம்—திலகப்பூ,

520. நறு காழ் ஆரம்—நறிய வயிரத்தையுடைய சந்தனம்,

521. [கருங்கொடி மிளகின் காய்த்துணர்ப் பசுங்கறி:] மிளகின் கரு கொடி காய்துணர் பசுகறி—மிளகினது கரியகொடிகள்காய்த்த கொத்திற் பசியமிளகு,

முன்னர் மிளகென்றது முதலை; கறி - சினை.

522. திருந்து அமை விளைந்த தேக்கள் தேறல்—நன்றாகிய மூங்கிற் குழாயிலே முற்றிய தேனாற்செய்த கட்டெளிவு,

வி - பு. கட்டெளிவு - கள்ளின் தெளிவு.

523. கான் நிலை எருமை கழை பெய் தீந்தயிர்—காட்டிடத்து நிலைமை யினையுடைய எருமையினது மூங்கிற்குழாயிலேதோய்த்த இனியதயிர்,

524 நீல் நிறம் ஓரி பாய்ந்தெனை—முற்றுகையினுலே நீலநிறத்தை யுடைய நிறம் பிறந்ததாக,

524 - 5. நெடு வரை கோடியின் செல்லும் நெய் கண் இறுல்—நெடிய வரையில் இறுலிடத்தைவிட்டுப்பாயுந் தேனைத் தன்னிடத்தேயுடைய இறுல் கள்,

வி - பு. முற்றுகையினுலே - முதிர்கையினுலே. கோடி, இறுல் - தேன் கூடு. நெய் - தேன்; தேன், நெய்யென்றும், தேனெய்யென்றும் நூல்களில் வழங்கும். "அணிநிற வோரி பாய்தலின் மீதழிந்து, திணிநெடுங் குன்றந் தேன்சொரி யும்மே" (புறநா. ௧0௯) என இப்படியே வந்திருத்தல் காண்க.

526 - 9. [உடம்புணர்பு தழீஇய வாசினி யனைத்துங், குடமலைப் பிறந்த தண்பெருங் காவிரி, கடன்மண் டழுவத்துக் கயவாய் கடுப்ப, நோனாச் செருவி னெடுங்கடைத் துவன்றி :]

526. தழீஇய ஆசினி—நன்றென்று கூட்டிக்கொண்ட ஆசினிப்பலா,

வி - பு. ஆசினிப்பலா - ஈரப்பலா.

527 - 8. குடமலை பிறந்த தண் பெருங்காவிரி கடல் மண்டு அழுவத்து கயவாய் கடுப்ப—குடகமலையிற்பிறந்த குளிர்ந்த பெரியகாவிரி கடலிலே மிக்குச்செல்கின்ற ஆழத்தையுடைய புகார்முகத்தையொப்ப,

வி - பு. குடகமலை - ஒருமலை புகார்முகமென்றது, காவிரி கடலொடு கலக்கும் இடத்தை ; "மலைத்தலையகடற்காவிரி" (பட்டின. ௬).

529. நோனா செருவின் நெடுங்கடை—பகைவர் பொறுத்தலாற்றாத போரினையுடைய தலைவாசலிலே,

வி - பு. நோன்றல் - பொறுத்தல். 'நெடுங்கடை' என்றமையால், தலைவாயிலாயிற்று.

526, 9. * அனைத்தும் உடம்புணர்பு துவன்றி,

வி - பு. அனைத்தும் - மேற்கூறிய யாவும். உடம் புணர்பு துவன்றி - ஒருமிக்கச் சேரப்பெற்று நெருங்கி.

530 - 31. * [வானத் தன்ன வளமலி யானைத், தாதெருத் ததைந்த முற்ற முன்னி :]

வி - பு. வானத்து அன்ன - மேகங்களையொத்த, வளம் மலி யானை - செல்வமிகுந்த யானைகளையுடைய, தாது எரு ததைந்த - தாதாகிய எருக்கள் நெருங்கின, முற்றம் முன்னி - முன்றிலை அடைந்து. யானைகளுக்கு மேகம் உவமை. யானைகளையுடைய முற்றமென்க.

532. மழை எதிர் படு கண் முழவு கண் இகுப்ப—மழைமுழக்கத்திற்கு எதிராகமுழங்கும் கண்ணையுடைய முழவின்கண்கள் ஒலியாநிற்க,

வி - பு. படுதல் - ஒலித்தல். முழவின் ஒலிக்கு மழையொலி உவமை ; "விண்ணதிரிமிழிசை கடுப்பப் பண்ணமைத்துத், திண்வார் விசித்த முழவு" (௨ - ௩) என இந்நூலுள் முன்னும் வந்துள்ளது. இகுத்தல், ஒலித்தலென்பதை, "மருப்பி குத்துத்துனைமின்" (௩௯௧) எனமுன் வந்ததனாலும் அறிக.

533. கழை வளர் தூம்பின் கண்ணிடம் இமிர—மூங்கிலாகிய இசை வளரும் பெருவங்கியத்தினது திறந்தகண்ணிடம் ஒலியாநிற்க,

வி - பு. 'கண்ணிடை விடுத்த களிற்றுயிர்த் தூம்பு' (௬) என முன் வந்தமையாலும் பெருவங்கியத்தினது இயல்பு புலனாகின்றது.

534 - 6. [மருதம் பண்ணிய கருங்கோட்டுச் சீறியாழ், நரம்புமீ திறவா துடன்புணர்ந் தொன்றிக், கடவ தறிந்த வின்குரல் விறலியர் :]

மருதம் பண்ணிய கரு கோடு சீறியாழ் நரம்பு மீது இறவாது உடன் புணர்ந்து ஒன்றி இன் குரல் விறலியர்—மருதத்தை வாசித்த கரிய தண்டினை

யுடைய சிறிய யாழின்நரம்பினோசைக்கு மேற்போகாது அவ்வோசையுடனே கூடி ஓரோசையாய் இனிதாகிய பாட்டினையுடைய விறல்பட ஆடுமகளிர்,

536. கடவது அறிந்த விறலியர்—தலைவனைக்கண்டாற் செய்யக்கடவ தொழிலை யறிந்த விறலியர்,

வி - பு. மருதம் - மருதப்பண். நரம்போசையும் மிடற்றோசையும் ஒன்றுபடப் பாடலின் சிறப்பை, "நரம்பார்த் தன்ன வின்குரற் றொகுதி" (திருமுரு. ௨௧௨), "சுகிர்புரி நரம்பு நம்பி, யூழ்மணி மிடறு மொன்றாய்ப் பணிசெய்த" (சீவக. ௭௨௮) என்பவற்றாலும் அறிக. செய்யக்கடவதொழில் - வழிபாடு.

537. தொன்று ஒழுகு மரபின் தம் இயல்பு வழாஅது—பழையதாய்நடக்கு முறைமையினையுடைய தம்மிலக்கணத்தில்தப்பாமல்,

வி - பு. தொன்று - பழைமை.

538. அருந்திறல் கடவுள் பழிச்சிய பின்றை—பொறுத்தற்கரிய வலியையுடைய கடவுளை முதலில் வாழ்த்தின பின்பு,

வி - பு. 'அருந்திறற் கடவுள்' என்பதன் பொருள், (சீவக. ௪௦௨) "நலம் பொறுக்கலாத பிண்டி நான்முகன்" என்பதை நினைப்பிக்கின்றது.

முற்றத்தையணுகி (௫௩௧) இருப்ப (௫௩௨) விறலியர் (௫௩௬) தேவபாணியைப் பாடினபின்பு (௫௩௮) என்க.

வி - பு. தேவபாணி - தேவர்களைப்பரவும் பாட்டு.

539. விருந்தின் பாணி கழிப்பி—சென்றாற் புதிதாகப்பாடும் பாட்டுக்களைப்பாடி,

539 - 40. நீள் மொழி குன்றா நல் இசை சென்றோர் உம்பல்—வேனிழற்புலவோர்க்குக் (௮௮) கொடுத்தவற்றை வாங்காதபடி தாம்கூறிய வஞ்சினங்களிற் குறையாத நல்ல புகழிலேநடந்தோருடைய வழியில்வந்தவன்,

வி - பு. வேல் நிழல் புலவோர் - வேற் போரின் விளக்கத்தையும் அறிவையும் உடையவீரர். வஞ்சினம் - சபதம்.

இதனாற் கொடைக்கடனிறுத்த அவன் தொல்லோர்வரவு (௮௧) கூறினார்.

541 - 3. [இன்றிவட் செல்லா துலகமொடு நிற்ப, விடைதெரிந் துணரும் பெரியோர் மாய்ந்தெனக், கொடைக்கட னிறுத்த செம்ம லோயென :]

542. இடை தெரிந்து உணரும் பெரியோர் மாய்ந்தென—நன்றிது தீதிதுவென்று ஆராயும் பெரிய உபகாரிகள் இறந்தார்களாக,

வி - பு. இடை - இடம். தெரிந்துணர்தல் - நன்மை தீமைகளை ஆராய்தல்.

541, 543. இன்று இவண் செல்லாது உலகமொடு நிற்ப கொடை கடன் இறுத்த செம்மலோய் என—நின்பேர் இக்காலத்து இவ்வுலகிலே நடந்து விடாதே உலகமுள்ளளவும் நிற்கும்படி கொடையாகியகடனை முடித்த தலைமையை யுடையோயென்றுகூறி,

வி - பு. இந்தப்பகுதியும், "மன்னா வுலகத்து மன்னுதல் குறித்தோர், தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே" (புறநா. ௧௬௫) என்பதும் ஒத்துவிளங்குகின்றன.

544. *வென்றி பல் புகழ் விறலோடு எத்தி*—வெற்றியானுண்டாகிய பலபுகழ்களை ஐம்பொறிகளைத் தன்வசமாக்கின வெற்றியோடே புகழ்ந்து,

வி - பு. வென்றிப்பல் புகழ், பிரதாபமென வழங்கும்.

545. *சென்றது நொடியவும் விடாஅன*—நும்மனத்திற்சென்ற வினைப் புகழ்களை முற்றக்கூறவும் அமையானாய்,

வி - பு. நொடித்தல் - சொல்லுதல்.

545 - 6. *நசை தர வந்தது சாலும் வருத்தமும் பெரிது என*—என் மேலுள்ளநசை கொண்டுவருகையினாலே என்னிடத்தேவந்தது அமையும்; வழிவந்தவருத்தமும் பெரிதென முகமன்கூறி,

வி - பு. நசை - விருப்பம். முகமன் - உபசாரம்.

547 - 8. *பொரு முரண் எதிரிய வயவரொடு பொலிந்து திருநகர் முற்றம் அணுகல் வேண்டி*—பொருகின்ற மாறுபாட்டினை எதிர்கொண்டிருக்கும் படைத்தலைவரோடே பொலிவுபெற்றுச் செல்வத்தையுடைய தன்மனையின் முற்றத்தை நீங்கள்செல்லுதலைவிரும்பி,

பொலிந்தென்னுமெச்சத்தை உடையவென்பதனோடுமுடிக்க.

549. *கல்லென் ஒக்கல் நல் வலத்து இரீஇ*—கல்லென்னும் ஆரவாரத் தையுடைய சான்றோரிருக்கின்ற நன்றாகிய சமயத்திருக்கு மண்டபத்தே யிருந்து,

வலம் - இடம்.

வி - பு. சமயத்திருக்கு மண்டபம் - யாவருக்கும் காட்சிக்கு எளியனாய் வீற்றிருக்கு மண்டபம்.

இதனால், நல்லியினியக்குமவன் சுற்றத்தொழுக்கமும் அவன் நாண்மகிழிருக்கையும் கூறினார்.

550 - 52. *உயர்ந்த கட்டில் உருப்பு இல் சுற்றத்து அகன்ற தாயத்து அஃகிய நுட்பத்து இலமென மலர்ந்த கையராகி*—உயர்ந்த அரசவுரிமையினையும், கொடுமையில்லாத அமைச்சர்முதலியோரையும், அகன்றநாட்டினையும், சுருங்கின அறிவினையுமுடையராய் இரந்துவந்தோர்க்கு யாம் இல்லேமென்றுகூறி இல்லையென்று மறித்த கையினையுடையராய்,

கட்டில் - சிங்காதனமுமாம். தாயம் - உரிமையெல்லாவற்றையுங் கூறிற்றுமாம்.

வி - பு. உருப்பு - உஷ்ணம்; கொடுமைக்காயிற்று; "உருப்பில் சுற்றமோடிருந்தோற்குறுகி" (௪௪௭) என்றார் பெரும்பாணாற்றிலும். தாயம் உரிமை' இங்கே நாட்டிற்காயிற்று.

553. *தம் பெயர் தம்மொடு கொண்டனர் மாய்ந்தோர்*—தம்பெயரை உலகில் நிறுத்தாமல் தம்முடனேகொண்டு பொன்றக் கெட்டுப்போன அரசர்,

வி - பு. பொன்றக் கெடுதல் - முற்றக்கெடுதல்; புகழுக்குரிய செயல்களில்லாதவ ரென்றபடி.

554 - 6. *நெடு வரை இழிதரு நீத்தம் சால் அருவி கடு வரல் கலுழி கட்கு இன் சேயாற்று வடு வாழ் எக்கர் மணலினும் பலரே*—நெடிய மலையினின்றுங்குதிக்கும் பெருக்குநிறைந்த அருவியினது கடியவரத்தினையுடைய

தாகிய பெருக்கினையுடைய கட்கினிய சேயாற்றின் அறல்வீற்றிருந்த இடு மணலாகிய மணலினும்பலர்;

வி - பு. சேயாறு - நன்னனுடைய ஆறு. "வடுவாழெக்கர் மணல்" என்பதற்கு வடு அழுந்திய எக்கர் மணலென்றார், (௬௬) புறநானூற்று உரையாசிரியர்.

557. [அதனால், புகழொடுங் கழிகநம் வரைந்த நாளென :] அதனால் நம் வரைந்தநாள் புகழொடும் கழிக என—ஆகையினாலே நமக்குத் தெய்வம் இத்துணைக்காலமிருவென எல்லையிட்டுவிட்ட நாள் புகழோடே கழிந்துபோவதாகவென்று கருதி,

வி - பு. தெய்வம் - ஊழ்வினை.

558. [பரந்திடங் கொடுக்கும் விசும்புதோ யுள்ளமொடு :]

பரந்து இடம் கொடுக்கும் உள்ளமொடு—கொடுத்தற்றொழிலிலேவிரிந்து அதற்கே இடங்கொடுக்கும் நெஞ்சுடனே,

விசும்பு தோய் உள்ளம்—ஆகாயத்தையொத்த பெரிய உள்ளம்.

வி - பு. மனத்திற்கு ஆகாயம் உவமை; விசும்பு பரந்து இடம் கொடுக்குமென்பதை, "அகலிரு விசும்பு" (பெரும்பா. க) என்பதனுரையாலுமுணர்க.

559 - 60. [நயந்தனிர் சென்ற நும்மினுந் தான்பெரி, துவந்த வுள்ளமோ டமர்ந்தினிது நோக்கி :] நயந்தனிர் உவந்த உள்ளமோடு சென்ற நும்மினும் தான் பெரிது அமர்ந்து இனிது நோக்கி—பரிசில்பெறுதற்கு விரும்பி மகிழ்ந்த நெஞ்சத்தோடே சென்ற நும்மினுங்காட்டில் தான் பெரிதும் முகனமர்ந்து இனிதாகப்பார்த்து,

வி - பு. நும்மினும் காட்டில் - நும்மைக்காட்டிலும்.

561 - 2. [இழைமருங் கறியா நுழைநூற் கலிங்க, மெள்ளறு சிறப்பின் வெள்ளரைக் கொளீஇ :] எள்ளறு சிறப்பின் இழை மருங்கு அறியா நுழை நூல் கலிங்கம் வெள்ளரை கொளீஇ—இகழ்ச்சியற்ற தலைமையினையுடைய இழைபோனவிடமறியாத நுண்ணியநூலாற்செய்த புடைவைகளை அழுக்கேறினசீலைகள் கிடத்தலின் வெள்ளிதாகிய அரையிலே உடுத்தி,

வி - பு. புடைவைகள், சீலைகளென்பன ஆண்பாலுக்கும்வழங்கும். 'இழைமருங் கறியா நுழை நூற்கலிங்கம்' என்பது, "நோக்குநுழை கல்லா நுண்மைய பூக்கனிந், தரவுரி யன்ன வறுவை" (பொருநராறு. அ௨ - ௩) என்பதை ஒத்து விளங்குகின்றது.

563 - 6 [முடுவ றந்த பைந்நிணத் தடியொடு, நெடுவெ ணெல்லி னரிசிமுட் டாது, தலைநா ளன்ன புகலொடு வழிசிறந்து, பலநா ணிற்பினும் பெறுகுவிர் :]

565 - 6. வழி சிறந்து பல நாள் நிற்பினும்—அவ்விடம் நுங்நெஞ்சிற்குச் சிறப்பெய்திப் பலநாள் நின்றீராயினும்,

563. முடுவல் தந்த பைந்நிணம் தடியொடு—பெண்ணாய் கடித்துக் கொண்டுவந்த பசிய நிணத்தையுடைய தசைகளோடே,

564. நெடு வெள் நெல்லின் அரிசி முட்டாது—நெடிய வெள்ளிய நெல்லினரிசியும் முட்டுப்படாமல்,

565, 6. தலைநாள் அன்ன புகலொடு பெறுகுவிர்—முதனாட்போன்ற விருப்பத்தோடே பெறுகுவிர்;

வி - பு. வழி - இடம். மூட்டுப்படாமல் - குறைவுபடாமல். புகல் - விருப்பம். 'பலநாள் நிற்பினும் பெறுகுவிர்' என்பது, "ஒருநாட் செல்லல மிருநாட் செல்லலம், பலநாள் பயின்று பலரொடு செல்லினுந், தலைநாள் போன்ற விருப்பினன் மாதோ" (புறநா. ௧0௧), "பன்னாளுஞ் சென்றக்காற் பண்பிலார் தம்முழை, யென்னாணும் வேண்டுப வென்றிகழ்ப—என்னாளும், வேண்டினு நன்றுமற் றென்று விழுமியோர், காண்டொறுஞ் செய்வர் சிறப்பு" (நாலடி. மேன்மக். ௯) என்பவற்றை நினைப்பிக்கின்றது.

566 - 8. [நில்லாது, செல்வேந் தில்லவெந் தொல்பதிப் பெயர்ந்தென, மெல்லெனக் கூறி விடுப்பின் :] நில்லாது எம் தொல் பதி பெயர்ந்து செல்வேம் தில்ல என மெல்லென கூறி விடுப்பின்—அவ்விடத்து நில்லாதே எம்முடைய பழைய வூரே மீண்டு போவேம்; இஃது எங்களுக்குவிருப்பமென்று அவன்பொறுக்கச்சொல்லி அவனைக் கைவிடின்,

வி - பு. "செல்வ சேறுமெந் தொல்பதிப் பெயர்ந்தென" (பொருநராறு. ௧௨௧) என்பதனுரையில், 'தொல்பதி' என்றூர், இதுவும் தமக்குப் பதியென்பது தோன்ற' என்பது எழுதப்பெற்றுள்ளது.

568 - 9. நும்முள் தலைவன் தாமரை மலைய—நுங்களில் தலைவனானவன் பொற்றாமரையைச் சூட,

569 - 70. விறலியர் சீர் கெழு சிறப்பின் விளங்கு இழை அணிய—விறல்படவாடுமகளிர் அழகுபொருந்தின தலைமையினையுடைய விளங்குகின்ற பேரணிகலங்களைப் பூண,

571. நீர் இயக்கு அன்ன நிரை செலல் நெடு தேர்—நீரின் செலவினையொத்த நிரைத்துச்செல்கின்ற செலவினையுடைய நெடிய தேர்கள்,

வி - பு. நிரைத்து - வரிசையுற்று. செலவு - செல்லுதல்.

572 வாரி கொள்ளா வரை மருள் வேழம்—யானைபடுகின்றவிடத்திற் பிடித்துக்கொள்ளாத மலையென்று மயங்கும் யானைகள்,

என்றது - பகைவர் திறைதந்த யானைகளை.

வி - பு. வாரி - யானையை அகப்படுத்துமிடம்.

573. கறங்கு மணி துவைக்கும் ஏறு உடை பெரு நிரை—ஒலிக்கு மணிகள் ஆரவாரிக்கும் ஏறுகளையுடைய பெரிய பசுத்திரள்கள்,

வி - பு. ஏறு - காளை.

574. பொலம் படை பொலிந்த கொய் சுவல் புரவி—பொன்னாற்செய்த கலனைமுதலியவற்றாற் பொலிவுபெற்ற மனச்செருக்கால் மயிரைப் பலகாலுங் கொய்யும் கழுத்தினையுடைய குதிரைகள்,

வி - பு. கலனை - சேணம். "பொன்னென்கிளவி" (தொல். புள்ளி மயங். ௬௧) என்னும் சூத்திரவுரையில், பொன்னென்பது பொலமென்று வருமென்பதற்கு இந்தஅடியையே மேற்கோளாகக் காட்டினர்.

575. நிலம் தின கிடந்த நிதியமோடு—மண் தின்னும்படி பழைதாய்க் கிடந்த பொருட்டிரளோடே,

575. அனைத்தும்—எல்லாவற்றையும்,

576 - 7. இலம் படு புலவர் ஏற்ற கை நிறைய கலம் பெய கவிழ்ந்த கழல் தொடி தட கையின்—இல்லாமையுண்டான புலவர் ஏற்றகைநிறையும் படி பேரணிகலங்களைச் சொரிகையினாலே கீழ்நோக்கின உழலுந்தொடியணிந்த பெரியகையினிடத்துண்டாகிய,

**வி - பு.** இலம் - வறுமை. "இலமென் கிளவிக்குப் படுவரு காலை, நிலையலு முரித்தே செய்யு ளான" (தொல். புள்ளி. ௨௧.) என்பதற்கு 'இலம் படுபுலவர்' என்னும் அடியே உதாரணமாகக் காட்டப்பெற்றுள்ளது.

இதனாற் புலவோர்க்குச்சுரக்கும் அவன் ஈகைமாரி (௭௨) கூறினார்.

578. வளம் பிழைப்பு அறியாது—தான்கொடுத்தசெல்வம் கெடுதலையறியாதபடி,

578 - 9. வாய் வளம் பழுநி கழை வளர் நவிரத்து மீமிசை—வாய்த்த வளப்பம் முற்றுப்பெற்று மூங்கில்வளர்ந்த நவிரமென்னும் பெயரையுடைய மலையிடத்துச்சியிலே,

579 - 80. ஞெமேரெனமழை சுரந்தன்ன ஈகை—கடுக மழைசொரிந்தாற்போன்ற கொடையாலே,

580 - 81. [நல்கித், தலைநாள் விடுக்கும் பரிசில் :] தலைநாள் பரிசில் நல்கி விடுக்கும்—முதனாளிலே பரிசில்தந்து போகச்சொல்லும்;

581 - 3. மலை நீர் வென்று எழு கொடியில் தோன்றும் குன்று சூழ் இருக்கை நாடு கிழவோனை—மலையினின்றும் விழுகின்ற அருவிகள் வென்றுயர்கின்ற கொடிகள்போலத் தோன்றும் மலைகள்சூழ்ந்த பரப்பினையுடைய நாட்டிற்கு உரிமையையுடையோன்.

**வி - பு.** அருவிகளுக்குத் துகிற்கொடிகள் உவமை; "வேறுபஃறுகிலி னுடங்கி.........இழுமென விழிதருமருவி" (திருமுரு. ௨௯௬ - ௩௧௬) என்பதனாலுமுணர்க.

விடுப்பிற் (௫௬௮) சென்றோரும்பல் (௫௬௦) நாடுகிழவோன் (௫௮௩) தன்கையிடத்துண்டாகிய (௫௭௭) மழைசுரந்தன்ன இயல்பாகிய கொடைத் தொழிலாலே (௫௮௦) வளம்பிழைப்பறியாதபடி (௫௭௮) நிதியத்தோடே (௫௭௫) தேர் (௫௭௧) வேழம் (௫௭௨) நிரை (௫௭௩) புரவி (௫௭௪) இவையனைத்தும் (௫௭௫) உயர்ந்தவன் தாமரைமலைய விறலியர் (௫௬௯) இழையணியத் (௫௭௦) தலைநாளிலே பரிசிலாக (௫௮௧) நல்கி (௫௮௦) விடுக்கும் (௫௮௧) எனமுடிக்க.

இதனால், வீயாதுசுரக்குமவன் வியன்மகிழிருக்கை (௭௬) கூறினார்.

கலப்பையிராய் (௧௩) ஒழுகிச் (௨௦) சுற்ற (௪௧) இருந்த (௪௬) தலைவ (௫௦), யாறுகடற்படர்ந்தாங்கு (௫௨) யாம் அவனைக்கருதிச்சென்று பரிசில் பெற்று வருகின்றேம்; நீயிரும் (௫௩) நன்னற்படர்ந்த கொள்கையொடு (௫௪) சேறிராயின் (௫௫) எற்றாக்குறுதலின் (௫௬) எதிர்ந்தபொழுதையும் (௬௫) புள்ளையும் உடையிராயிருந்தனிர் (௬௬); இனி யாற்றினதளவும் புலமும் (௬௭) வல்சியும் (௬௮) மலையும் சோலையும் கானமும் (௬௯) ஈகைமாரியும் (௭௨) ஆற்றலும் (௭௩) இருக்கையும் (௭௬) சுற்றத்தொழுக்கமும் (௮௦) கடவுளதியற்கையும் (௮௩) அவன் சிறப்பும் (௮௫) தொல்லோர்வரவும் (௮௯) மூதூர்மாலையும் (௯௩) இருக்கும்படி கேட்பாயாக; அவற்றுள் இனிவேளை நீ முன்னியதிசையைக்கேள் (௯௪); பெட்டாங்குவிளைய (௯௮) வானம பொழிகையினாலே (௯௭) முசுண்டை (௧௦௧) முதலாகப் பல (௧௪௪) ஈறுகவெண்ணிய இம் மிகுவளம பழுநியவைப்பாலே (௧௪௫) புதுவதுவந்தன்று; அவ்வழியின்பண்பு இத்தன்மைத்து (௧௪௬); அவற்றைக்கண்டு கானவர் (௧௫௫) சிறுகுடிப்படின் (௧௫௬) ஒக்கலொடும் பதமிகப்பெறுகுவிர் (௧௫௭); அசைஇ அன்று அற்சேர்ந்து அவண் அல்கிப் (௧௫௮) போகிப் (௧௬௦) யாக்கமெய்தி

(௧௬௨) விறல்வேள் வயிரியமெனிற் (௧௬௪) பொம்மல் பெறுவிர் (௧௬௯); அவன் மலைமிசை நாடு அனையதன்று (௧௮௮) ஆண்டுத தேக்கட் டேறலைப் (௧௭௧) பருகி நறவைமகிழ்ந்து (௧௭௨) அனந்தல் தீர் (௧௭௩) மகமுறைதடுப்ப மனைதொறும் (௧௮௫) தாரத்தோடே (௧௭௦) வல்சியைப் (௧௮௩) பெறுகுவிர் (௧௮௫); பெற்றால் பரிசின்மறப்ப நீடலுமுரியிர் (௧௮௭); அங்ஙனநீட்டிப்பிற் பனித்தலு முரியிர் (௧௯௧); ஆதலால் பலநாணில்லாது நாடுபடர்மின் (௧௯௨); படரும்பொழுது அவ்வாறு (௧௯௫) அரும்பொறி (௧௯௪) யுடையவாகையி னுலே கள்ளிருள் (௧௯௫) வைகினிர் விரிந்தவிடியல்கழிமின் (௧௯௯); கழிந்து செப்பந்துணியின் (௧௯௭) வலஞ்செயாக்கழிமின் (௨௦௨); கழிந்து குறவர் (௨௦௩) எறித (௨௦௪) தளர்க்குங்கல் (௨௦௬) கூற்றத்தன்ன (௨௦௯); அவைதாம் இரியக் (௨௦௮) தக்கி (௨௦௭) விசைதவிராது வரும்; அதற்கு மாமறையாக்கழியின் (௨௧௦), கழிந்து கான்யாற்றுநடவை (௨௧௪) வழூஉமருங்குடைய (௨௧௫); அவ்விடத்திற்கு வலந்த பரூஉக் கொடிமதலைபற்றி (௨௧௬) வழாலோம்பி (௨௧௫) ஒருவிரொருவிரோம்பினிர் கழிமின் (௨௧௮); கழிந்து நுண்ணீர்ப்பாசிவழும்பு (௨௨௧) அடிநிலைசளர்க்கு மருப்பமுமுடைய (௨௨௨); அதற்கு வேரலோடு (௨௩௩) மென்கோல் பற்றினிர்கழிமின் (௨௨௪); கழிந்து கடவுட்காணின் (௨௩௦) வெற்புமாரி தலையு (௨௩௩) மாதலின், நும்மியங் தொடுதலோம்புமின் (௨௩௨); ஓம்பி மஞ்ஞைஞதளரினும் (௨௩௫) கடுவன் உகளினும் (௨௩௭) பிரசங்காணினும் (௨௩௯) ஞெரேரெனநோக்கலுரித்தன்று (௨௪௦); நெறிமாறு படுகுவிர் (௨௪௧); அங்ஙனம் நெறிமாறுபடாமற்போய்க் கானத்துப்படின் (௨௪௨) எனாங்காணின் (௨௪௭) மிசைந்து (௨௪௯) பருகிப் (௨௫௧) பொதியினிராய் (௨௫௨) மகாரோடே (௨௫௩) கழிதலோம்பி அற்குக் (௨௫௪) கல்லளைவதிமின் (௨௫௫); வதிந்து விடியலெழுந்து (௨௫௭) செந்நெறிக்கொண்மின் (௨௫௮); கொண்டு விலங்கி (௨௬௧) நோக்கிக் (௨௬௯) குறுகாதுகழிமின் (௨௬௭); கழிந்து நாடுகாணனந்தலை மென்மெல வகன்மின் (௨௭௦); அகன்று குன்றத்துப்படின் (௨௭௫) இயங்தொடுமின் (௨௭௭); தொட்டால் கானவருளர் (௨௭௯); அவரெய்திக் (௨௮௧) காட்டி (௨௮௩) முந்துற (௨௮௪) இனியிராகுவிர் (௨௮௬); அங்ஙனமினியிராய் அவர்கூறிய மாதிரங் கைக்கொண்டு (௨௮௭) இழிந்து (௨௮௮) இருப்பின் (௨௯௦) மலைபடுகடாம் (௩௪௮) பலதிறம்பெயர்பவைகேட்குவிர் (௨௯௧); கேட்டபின் அவன்வெற்புவிழவினற்று (௩௫௧); ஆண்டுத் தொன்முறைமரபினிராகிப் (௩௫௫) பாடிப் (௩௫௯) பழிச்சி (௩௬௦) மலைபிறபடக (௩௫௭) கழிமின்; (௩௬௦) கழிந்து துவலைதுவற்றலின் (௩௬௩) விடரகம்புகுமின் (௩௬௯); புகுந்து குன்றில் ஆரிடாழுவத்து (௩௬௮) ஊறுதவப்பல (௩௭௨); அவற்றைக் கோல்கொண்டு (௩௭௦) ஊன்றினிர்கழிமின் (௩௭௨); கழிந்து இன்னலியக்கத்து (௩௭௪) அமையத்துக் கழிமின் (௩௭௫); கழிந்து அவ்விடம் அருப்பமுமுடைய (௩௭௮); அவ்வரண்களிற்போகில் நுழைதொறும் (௩௭௯) கைபிணிவிடாதுகழிமின் (௩௮௩); கழிந்தாற்கானம்பல (௩௮௫); கல்நட்ட (௩௮௮) கவலைகள்பல (௩௮௯); அக்கல்லிற்கு மருப்பிகுத்துத்துனைமின் (௩௯௧); அப்பொழுது புதுவிர் (௩௯௨) புன்முடிந்திடுமின் (௩௯௩); இட்டுப்போனுற்சுரநதவப்பல (௩௯௮); ஓம்பாவள்ளற் படர்ந்திகுமெனின் (௪௦௦) நம்மனோர்க்கு ஆங்கனம் (௪௦௨) மூதூர் (௪௦௧) அற்று (௪௦௨); அசைவுழியசைஇ அஞ்சாதுகழிமின் (௪௦௩); அக்கானத்தையிறந்து (௪௦௫) கோவலர்பாலைச் (௪௦௯) சொரிகையினுலே (௪௧௦) அவர்க்கு விருந்தாவிர் (௪௧௨); அங்ஙனம்விருந்தாய் ஆட்டினிரையிலேபுகிற் (௪௧௯)

பாலும்மிதவையும் பெறுகுவிர் (௪௧௭); அவற்றைப்பெற்று அதட்பள்ளியிலே (௪௧௯) சேந்தனிர்கழிமின் (௪௨௦); கழித்து கூளியர்கூலைகாணிற் (௪௨௨) படர்ந்திருமெனின் (௪௨௪) தடியுங்கிழங்குந் தரீஇ (௪௨௫) ஓம்புநரல்லது உடற்றுநரில்லை (௪௨௬); அவற்றையருந்தி வியங்கொண்மின்; அதன்பண்பு அஃது (௪௨௭); அப்பண்பைக்கண்டு கண்ணியைச் (௪௩௦) சூடித் (௪௩௧) தண்ணெனை (௪௩௨) உண்டனிர் ஆடிக்கொண்டனிர்கழிமின் (௪௩௩); கழிந்தாற் புளிங்கூழை (௪௩௬) அற்குக் (௪௩௭) குடிதொறும்பெருகுவிர் (௪௩௯); பெற்று அசையினிர் சேப்பின் (௪௪௩) நுவணையோடு (௪௪௫) அமலையை (௪௪௧) இழுதுள்ளீடாக (௪௪௨) அல்கலும் பெறுவிர் (௪௪௩); அவற்றைப்பெற்று ஞெகிழிமாட்டித் (௪௪௬) துஞ்சிப் (௪௪௭) புள்ளோர்த்துக் கழிமின் (௪௪௮); கழிந்தால் அவன் தண்பணைநாடு நன்பலவுடைத்து (௪௫௩); அதனையடைந்தால் வினைஞர்வல்சிநல்கப் (௪௬௨) பழையர்மகளிர் (௪௫௬) விரைஇத் (௪௫௮) தேறலை (௪௬௩) நல்க (௪௬௨) அவற்றைப்பெறுகுவிர் (௪௬௪); அவற்றைப்பெற்றபின்பு அவரவரிட்டவெண்சோற்றை (௪௬௫) யருந்தி (௪௬௮) மருதம்பண்ணிக் கழிமின் (௪௭௦); கழிந்து எருமையொருத்தல் (௪௭௨) கதழ்ந்து வரல்போற்றிச் (௪௭௩) சேயாற்றின் (௪௭௪) ஒருகரைகொண்டனிர்கழிமின் (௪௭௭); கழிந்தால் அவன்மூதூர் சேய்த்தன்று (௪௮௭); அவ்வூரிற்சென்றால் அருங்கடிவாயிலை அயிராது புகுமின் (௪௯௧); புக்காற்பரிசிலர் (௪௯௨) கண்டோரெல்லாம் (௪௯௫) எதிர்கொளக்குறுகிப் (௪௯௯) பின்னர்முற்றமுன்னிக் (௫௩௧) கடவுள் வாழ்த்தியபின்னர் (௫௩௮) விருந்திற்பாணிகழிப்பிச் (௫௩௯) செம்மலோயெனக்கூறி (௫௪௩) யேத்திச் (௫௪௪) சென்றதுநொடியவும் விடாஅய் (௫௪௫) வருத்தமும்பெரிதெனக் கூறி (௫௪௬) அணுகல்வேண்டி (௫௪௮) நல்வலத்திரீஇ (௫௪௯) மாய்ந்தோர் (௫௫௩) மணலினும்பலர் (௫௫௪); அதனால் நம்வரைந்தநாள்புகலொடு கழிகவென்றுகருதிப் (௫௫௭) பரந்திடங்கொடுக்குமுள்ளத்தோடே (௫௫௮) அமர்ந்து நோக்கிக் (௫௬௦) கலிங்கம் (௫௬௧) வெள்ளரைக்கொளீஇப் (௫௬௨) பலநாள்நிற்பினும் (௫௬௬) கடியொடு (௫௬௩) அரிசி முட்டாது (௫௬௪) தலைநாளன்னபுகலொடு (௫௬௫) தரப்பெறுகுவிர்; நில்லாது (௫௬௬) செல்வேமென (௫௬௭) விடுப்பின் (௫௬௮) சென்றோரும்பல் (௫௭௦), நாடுகிழவோன் (௫௮௩), அவன் தன்கையிடத்துண்டாகிய (௫௭௭) மழைசுரந்தன்ன இயல்பாகிய கொடைத்தொழிலாலே (௫௮௦) வளம்பிழைப்பறியாதபடி (௫௭௮) நிதியத்தோடே (௫௭௫) தேர் (௫௭௧) வேழம் (௫௭௨) நிரை (௫௭௩) புரவி (௫௭௪) இவையனைத்தையும் (௫௭௫) தலைவன்றாமரைமலைய விறலியர் (௫௬௬) இழையணியத் (௫௭௦) தலைநாளிலேபரிசிலாக (௫௮௧) நல்கி (௫௮௦) விடுக்கும் (௫௮௧); ஆதலால், அவன்பாற் றாழாமற் கடிதாகச்சென்று பரிசில் பெறுகுவிராகவெனக் கூட்டி வினைமுடிவுசெய்க.

இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் பல்குன்றக்கோட்டத்துச் செங்கண்மாத்துவேள் நன்னன்சேய் நன்னனைப்பாடிய மலைபடுகடாத்திற்கு மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் செய்த உரை முற்றிற்று.

இப்பாட்டுடைத்தலைவனாகிய

# நன்னன் வரலாறு.

இப்பாட்டுடைத்தலைவனாகிய இவன் வரலாற்றை அறிவதற்கு இந்நூலும் இதன் இறுதியிலுள்ள பழையவாக்கியமும், அகநானூறு, குறுந்தொகை, பதிற்றுப்பத்து, புறநானூறு, மதுரைக்காஞ்சி முதலியவற்றின் சிலபகுதிகளுமேயன்றி வேறு கருவிகிடைத்திலது. இவன் வேளிர்குலத்தைச் சேர்ந்தவன்; (94, 163 - 4.) பிறநூல்களில் நன்னன் வேண்மானெனக்கூறப்பெறுபவன் இவனே; (அகநா. 98) வேண்மான் - வேளிர்தலைவன். இவன் தந்தையின்பெயர் நன்னனென்பது (64.).

இவன் நாடு, பல்குன்றக்கோட்டம்; நகர், செங்கண்மா (இப்பாட்டின் இறுதிவாக்கியம்); மலை, நவிரமலை; ஆறு, சேயாறு; இவற்றுள்,

பல்குன்றக்கோட்டமென்பது தொண்டைநாட்டின் பெரும்பிரிவாகிய 24 - கோட்டங்களுள் ஒன்று. பலகுன்றங்களைத் தன்பாற் பெற்றிருத்தலின், இக்கோட்டம இப்பெயர்பெற்றது. கோட்டமென்பது நாட்டின் பெரும்பிரிவிற்குச் சங்கேதமாகவழங்குகின்றது. 'பல்குன்றக் கோட்டத்துச் சிலைநாட்டுத் திருவேங்கடம்' என்னும் சிலாசாஸனவாக்கியத்தால், திருவேங்கடமலை (திருப்பதி)யும் பல்குன்றக் கோட்டத்துள்ளதென்று தெரிகிறது; 'குன்று சூழிருக்கை நாடுகிழவோனே' (583) என்பது இதனை வலியுறுத்துகின்றது.

செங்கண்மா என்னும் ஊர் திருவண்ணாமலைக்கு மேற்றிசையில் உள்ளது. இது செங்கண்மானெனவும், செங்கமா எனவும் இக்காலத்து வழங்கும். இந்நகரில், பண்டைக்காலத்தில், அகழி, கோட்டை, பெரியவீதி, கடைத்தெரு, குறுந்தெரு, சிங்காதனம்அமைந்த இராசசபை, நாளோலக்கம், அரியகாவல்களையும், நன்னனைப் பார்த்தற்குப் பலரும் தத்தமக்குரிய காணிக்கைகளைக் கொணர்ந்து வைத்துக் காத்

இருக்கும் முன்றிலையுமுடைய கோபுரவாசல் இவற்றையுடைய அரண்மனை, அயலூரினின்று வருபவர்கள் கவலையின்றித் தங்குவதற்குரிய பொதுவிடமாகியமன்று ஆகிய இவைகள் இருந்தனவென்று இந்நூல் தெரிவிக்கின்றது.

நவிரமலை. இது மிக்கவளத்தையும் புகழையும் உடையது; (82, 578 - 9.) இதில், 'காரியுண்டிக்கடவுள்' (83) என்று திருநாமம்பெற்ற சிவபெருமானுடைய திருக்கோயிலுண்டு; சேனைகளை அமைத்து நன்னன் அக்கோயிலைப் பரிபாலித்துவந்தனன் (226 - 30). இம்மலை இக்காலத்தில் திரிசூலகிரி, பர்வதமலை என வழங்கப்படுகின்றது. சிவபெருமானுக்கு அங்கே இக்காலத்து வழங்குந் திருநாமம் ஸ்ரீ காளகண்டேசுவரரென்பது; இம்மலை திருவண்ணாமலையின் வாயுதிக்கில் உள்ளது; (ஷை கோயிற்சாஸனம், திரிசூலகிரிப்புராணம்.) இதனால் நன்னனைச் சைவசமயாபிமானியென்று நினைத்தற்கிடமுண்டு.

சேயாறு, இது 'காணுநர் வயாஅங் கட்கின் சேயாறு,' 'கடுவரற் கலுழிக் கட்கின் சேயாறு' (476, 556) என இந்நூலுள்ளே பாராட்டிக்கூறப்படும். இக்காலத்துச் சண்முகநதியென வழங்கும் நதி இதுவே; (அருணாசலபுராணம், திரிசூலகிரிபுராணம்.)

இவன் முன்னோர் பல நற்காரியங்களைச்செய்து புகழ்பெற்றவர்கள். இவன், மென்மையையுடையவன்; மிக்ககொடையாளி; பிறருடையகுற்றங்களை உள்ளடக்கிக் குணங்களையே பாராட்டி அவர்களை மேம்படுத்தும் சிறந்த சுற்றத்தையுடையவன்; பொய்யாவாய்மையினன்; மிக்கவீரன்; ஒவ்வொன்றையும் ஆராய்ந்து செய்பவன். ஐம்பொறிகளையும் வென்றவன்.

மானவிறல்வேள் (163-4), செருச்செய் முன்பிற் குரிசில் (186), திருந்து வேலண்ணல் (319), செருமிக்குப்புகலுந் திருவார்மார்பன் (356), தேம்பாய்கண்ணித் தேர்வீசுகவிகை ஓம்பாவள்ளல் (399-400), வண்டுபடக் கமழுந் தேம்பாய்கண்ணித் திண்டேர்நன்னன் (466-7), வெல்போர்ச்சேய் (493), குன்றுகல்லிசைச் சென்றோரும்

பல் (540) என இந்நூலுட் பாராட்டப் பெற்றிருத்தலின், இவனுடைய மேம்பாடுகள் புலனாகின்றன.

இவன்மனைவி கற்பிற்சிறந்தவள்; கற்பிற்கு அறிகுறியாகக்கொடியைப் பெற்றவள் (424).

இவன் பிறந்தநாட் கொண்டாட்டம் இவன்காலத்தில் மிகச்செவ்வையாக நடைபெற்றுவந்தது; "பேரிசை நன்னன்பெரும் பெயர் நன்னாட், சேரிவிழவி னார்ப் பெழுந்தாங்கு" (மதுரை. 618 - 9).

இந்தவிழா, நாண்மங்கல மென்று பழையநூல்களில் வழங்கும்.

இவன்காலத்துச் சங்கப்புலவர், பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார், பரணர், மாங்குடிமருதனார், மாமூலனார் முதலியோர்.

# நூலாசிரியர் வரலாறு.

இந்நூலாசிரியராகிய இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனாரென்பவர் கடைச்சங்கப்புலவர்களில் ஒருவராகிய நல்லிசைப்புலவர்; இதுவும் இவர்பெருமையும் இந்நூல், 145 - ஆம் அடியின் விசேடவுரையால் விளங்கும். இவர் சாதியால் அந்தணர்; இதனை, 'உறையூர் ஏணிச்சேரி முடமோசி, பெருங்குன்றூர்ப்பெருங் கௌசிகன், கடியலூர் உருத்திரங்கண்ணன் என்பன அந்தணர்க்குரியன' (தொல். மர. சூ. ௭௪, உரை) என்பதனால் அறிக. இந்நூலன்றி நற்றிணையில் இரண்டுசெய்யுட்களும் (௪௪, ௧௩௯.) இவர் செய்தனவாகத் தெரிகின்றன. இவருடைய குணவிசேடங்களும், தாம் அநுபவித்தவற்றைப் பிறரும் அறிந்து இன்புறும்படி செய்யுள் செய்யும் இவருடைய ஆற்றலும் இவர்காலத்து வழக்கங்களும் இந்நூலை மெல்ல ஊன்றிப்படிப்பவர்களுக்கு நன்கு விளங்கும்.

# இந்நூல் உரையாசிரியராகிய
# நச்சினார்க்கினியர் வரலாறு.

## விருத்தம்.

*எவனால வாயிடைவந் தமுதவா யுடையனென வியம்பப் பெற்றோன்*
*எவன்பண்டைப் பனுவல்பல விறவாது நிலவவுரை யெழுதி யீந்தோன்*
*எவன்பரம வுபகாரி யெவனச்சி னார்க்கினிய னெனும்பே ராளன்*
*அவன்பாத விருபோது மெப்போது மலர்கவென தகத்து மன்னோ.*

மலைபடுகடாத்தினுரையாசிரியராகிய நச்சினார்க்கினியர் பாண்டிவளநாட்டுள்ள மதுராபுரியிற் பிராமணகுலத்திற் பாரத்துவாசகோத்திரத்தில் அவதரித்தவர். தமிழ்ப்பாஷையிலுள்ள பலவகையான எல்லா நூல்களிலும் அதிபாண்டித்தியமுடையவர். இவரது சமயம் சைவமே. இவர் இன்னாராதல், "வண்டிமிர் சோலை மதுராபுரிதனி, லெண்டிசை விளங்க வந்த வாசான், பயின்ற கேள்விப் பாரத்துவாச, னான்மறை துணிந்த நற்பொருளாகிய, தூயஞான நிறைந்த சிவச்சுடர், தானே யாகிய தன்மை யாளன்" என்னும் உரைச்சிறப்புப்பாயிரத்தால் விளங்கும். சிவதலங்களுட்சிறந்த சிதம்பரத்தினது திருநாமங்களாகிய 'திருச்சிற்றம்பலம்', 'பெரும்பற்றப்புலியூர்' என்பவற்றை முறையே ஆறெழுத்தொருமொழிக்கும் ஏழெழுத்தொருமொழிக்கும் உதாரணமாக இவர் தொல்காப்பியம் எழுத்ததிகாரத்து மொழிமரபில் "ஓரெழுத் தொருமொழி" என்னுஞ் சூத்திரத்து விசேடவுரையிற் காட்டியிருத்தலாலும், சைவசமயத்துச் சிறந்த நூல்களாகிய திருவாசகம், திருச்சிற்றம்பலக்கோவையார், திருவுலாப்புறம் முதலியவற்றினின்றும் தமது உரைகளிற் பலவிடங்களில் இலக்கிய இலக்கணப் பொருள்களுக்கேயன்றித் தத்துவப்பொருளுக்கும் மேற்கோள்கள் எடுத்து ஆண்டுள்ளதனாலும், அங்ஙனம் மேற்கோள் கொண்ட சிலவிடங்களில் எழுதியுள்ள விசேடவுரைகளாலும், சீவகசிந்தாமணியில், நாமகளிலம்பகத்தில், 'மேகம் மீன்ற' என்னும், ௩௩௩-ம் செய்யுளில், 'போகம்மீன்ற புண்ணியன்' என்பதற்கு எழுதிய விசேடவுரையாலும், திருமுருகாற்றுப்படையுரையிற்காட்டிய சில நயங்களாலும், மற்றுஞ் சிலவற்றாலும் இவரது சைவ சமயாபிமானம் நன்குவெளியாகும்.

நச்சினார்க்கினியர் இந்நூலுக்கன்றிப் பத்துப்பாட்டினுள் மற்ற நூல்களுக்கும், தொல்காப்பியத்திற்கும், கலித்தொகைக்கும், குறுந்தொகையில் பேராசிரியர் பொருளெழுதாதொழிந்த இருபது செய்யுட்களுக்கும் உரைசெய்தருளினர். இன்னுஞ் சிலநூல்களுக்கு இவர் உரையியற்றினரென்பர்; அவை இவையென்று புலப்படவில்லை; இக்காலத்து வழங்கும் திருக்கோவையாருரை பேராசிரியராற் செய்யப்பட்டதென்று தெரிகின்றமையாலும், இவர் அந்நூற்குச்செய்த வேறுரை கிடையாமையாலும் அதற்கும் திருக்குறள் முதலிய மற்றுஞ் சிலவற்றிற்கும் இவர் உரைசெய்திருப்பதாக இவருடைய உரைச்சிறப்புப்பாயிரத்திலேனும் வேறொன்றிலேனும் கூறப்படாமையாலும், அவைகள் இங்கே எழுதப்பட்டில.

சீவகசிந்தாமணிக்கு நச்சினார்க்கினியர் முதன்முறை ஒருரையெழுதி, அக்காலத்துப் பிரசித்திபெற்றிருந்த சைனவித்துவான்கள் சிலருக்குக்காட்ட, அவர்கள் அவ்வுரையை அங்கீகரியாமை கண்டு,

> "அறுவர்தந் நூலு மறிந்துணர்வு பற்றி
> மறுவரவு மாற்றன நீக்கி - மறுவரவின்
> மாசா ரியனாய் மறுதலைச்சொன் மாற்றுதலே
> யாசா ரியன தமைவு" (ஏலாதி, எக)

என்றபடி, பின்பு ஆருகதநூல்கள் பலவற்றையும் நலமுற ஆராய்ந்து இரண்டாமுறை ஒருரை யெழுதி அவர்களுக்குக் காட்டவே, அவர்கள் உற்றுநோக்கி வியந்து அவ்வுரையை அங்கீகரித்துக்கொண்டார்களென்று சைனர் கூறுகின்றனர். இது ஷை சிந்தாமணி யுரையையும், தொல்காப்பியம் நச்சினார்க்கினியத்தையும் படிப்பவர்களுக்கு நன்றாக விளங்கும்.

தொல்காப்பியவுரைமுதலியவற்றில் இவரால் எடுத்துக்காட்டப்பட்டுள்ள மேற்கோள்களமைந்த நூல்களுள் இதுகாறும் விளங்கியவை வருமாறு:—

1. அகத்தியம்.
2. அகநானூறு (நெடுந்தொகை.)
3. அணியியல்.
4. அவிநயம்.
5. ஆசாரக்கோவை.
6. இராமாயண வெண்பா.
7. இறையனாரகப்பொருள்.
8. ஏலாதி.
9. ஐங்குறுநூறு.
10. ஐந்திணையெழுபது.
11. ஐந்திணையைம்பது
12. ஔவையார்பாடல்.
13. கடகண்டு.
14. கலித்தொகை.

15. களவழிநாற்பது.
16. காக்கைபாடினியம்.
17. கார்நாற்பது.
18. காரைக்காற்பேயார்பாடல்.
19. குணநாற்பது.
20. குறிஞ்சிப்பாட்டு.
21. குறுந்தொகை.
22. கூத்தநூல்
23. கைந்நிலை.
24 கொன்றைவேந்தன்.
25. சிலப்பதிகாரம்.
26. சிறுகாக்கைபாடினியம்.
27. சிறுகுரீஇயுரை.
28 சிறுபஞ்சமூலம்.
29. சிறுபாணாற்றுப்படை.
30. சினேந்திரமாலை.
31. சீவகசிந்தாமணி.
32. தகடூர்யாத்திரை.
33. தந்திரவாக்கியம்.
34. திணைமாலைநூற்றைம்பது.
35. திணைமொழியைம்பது.
36. திரிகடுகம்.
37. திருக்குறள்.
38 திருக்கோவையார்.
39. திருப்பாட்டு.
40. திருமுருகாற்றுப்படை.
41. திருவாசகம்.
42. திருவாய்மொழி.
43. திருவுலாப்புறம்.
44. தொல்காப்பியம்.
45. நற்றிணைநானூறு.
46. நாடகநூல்.
47. நாலடியார்.
48. நெடுநல்வாடை
49. பட்டினப்பாலை.
50. பதிற்றுப்பத்து.
51. பரிபாடல்.
52. பல்காப்பியம்.
53. பல்காயம்.
54. பழமொழி
55. பன்னிருபடலம்.
56. பாரதவெண்பா.
57 புறநானூறு.
58. புறப்பொருள்வெண்பாமாலை.
59. பூதத்தாரவையடக்கு.
60 பூதபுராணம்.
61. பெருங்கதை.
62. பெரும்பாணாற்றுப்படை.
63. பெரும்பொருள்விளக்கம்.
64. பொய்கையார் முதலாயினோர் செய்த அந்தாதி.
65 பொருநராற்றுப்படை.
66. மணிமேகலை.
67. மதுரைக்காஞ்சி.
68. மலைபடுகடாம்.
69. மாபுராணம்.
70. முத்தொள்ளாயிரம்.
71. முதுமொழிக்காஞ்சி.
72 முல்லைப்பாட்டு.
73. மூதுரை.
74. மோதிரப்பாட்டு.
75. யாப்பருங்கலம்.
76. யாழ்நூல்
77. வசைக்கடம்.
78. வசைக்கூத்து.
79. வளையாபதி.
80. விளக்கத்தார்கூத்து.

இன்னும் விளங்காத நூல்கள் பல.

தொல்காப்பியவுரைமுதலியவற்றில் வேதம், வேதாங்கம் முதலிய பல நூல்களிலிருந்தும், பல உரைகளிலிருந்தும் பற்பல அரிய விஷயங்களை ஆங்காங்கு எடுத்துக்காட்டி நன்குவிளக்கிப்போகின்

றமையின், இவரை வடமொழியிலும் மிக்க பயிற்சியுள்ளவராகச் சொல்லுதற் கிடமுண்டு.

உரையாசிரியர், சேனாவரையர், பேராசிரியர், ஆளவந்தபிள்ளையாசிரியர் முதலிய உரையாசிரியர்கள் இவருடைய உரையில் எடுத்துக் கூறப்பட்டிருத்தலின், அவர்களுக்கு இவர் காலத்தினாற்பிற்பட்டவரென்று தெரிகின்றது.

அமிழ்தினுமினிய தமிழ்மடவால்செய் அருந்தவத்தின் பெரும் பயனாக அவதரித்தருளிய இம்மகோபகாரியின் அருமைபெருமைகள் விரிவஞ்சி விடுக்கப்பட்டன.

"பாரத்தொல்காப்பியமும்", "தொல்காப்பியத்தில்", "பாற் கடல்போல", "பச்சைமால்" என இவருடைய மேம்பாட்டைப் பாராட்டி அக்காலத்துள்ள ஆன்றோராற் செய்யப்பட்ட நான்குசெய் யுட்கள் உரைச்சிறப்புப் பாயிரங்களாக வழங்குகின்றன.

## மலைபடுகடாம்

# அரும்பதமுதலியவற்றின் அகராதி.*

[எண்கள், அடிகளைப்புலப்படுத்துவன.]


அகடு - நடு இடம், 33.
அகப்பட்ட - கிடந்த, 258; சிக்கிக்கொண்ட 499.
அகம் - இடம், 366; உள், 344; நெஞ்சு, 184 [259, 276,
அகல் - அகன்ற (விசாலித்த), 133,
அகல - நீங்க, 412
அகலறை - அகன்ற பாறை, 133.
அகலிருவிசும்பு - மற்றப்பூதங்கள் தோன்றுதற்குக் காரணமான பெரிய ஆகாயம், 100; தன்னையொழிந்த நான்குபூதங்களும் தன்னிடத்தே அகன்று விரிதற்குக் காரணமான பெரிய ஆகாயமென்பதும் பொருந்தும், [பெரும்பா. 1. உரை]
அகலுள் - அகன்ற ஊர், 438
அகழ் - அகழி; தோண்டி உண்டாககப்படுவது, 214.
அகழ்தல் - தோண்டுதல், 91.
அகளம் - நீர்ச்சால். 104.
அகனறை - அகன்ற இடத்தையுடைய பாறை, 276.
அகன்மலை - அகன்றமலை, 205
அகன்மின் - போமின், 270.
அகன்ற - நீங்கின, 397.
அகைத்த - முறித்த, 429.
அங்கண் - அழகிய விழி, 259.
அசை - இளைப்பு; முதனிலைத்தொழிற்பெயர், 251.
அசைஇ இளைத்து, 44; இளைப்பாறி, 158, 403.
அசைதலோம்பி - இளைப்பாறி, 256.
அசையினிர் - இளைத்து, 290; இளைப்பாறி, 443, 470.
அசையும் தங்கும், 67.
அசைவுழி - இளைத்த இடத்தே, 403.
அசோக மரம், 160.
அஞ்சு - அஞ்சுதல்; முதனிலைத்தொழிற்பெயர், 81.
அடர் - தகடு, 4.
அடி நிலை தளர்க்கும் - அடி ஊன்றியிட்ட நிலையை ஓடப்பண்ணும், 222.
அடுக்கம் - பக்கம், 141; மலைப்பக்கம், 239, 289, 359.
அடுக்கல் - மலை, 19
அடைமொழிச்சிறப்புள்ள அடிகள், 13, 14, 16, 17, 20, 23, 31, 35, 37, 39, 42, 47, 48, 54, 60, 70, 82, 90, 91, 105-6, 107-8, 114, 120, 126-8, 130 31, 135, 138, 140, 153, 178, 204, 208, 209, 237, 245-7, 250, 271, 272, 289, 295, 308, 311, 312, 313, 316, 419, 422, 423, 442, 520, 527, 550, 558, 561, 573, 575, 578-9
அண்ணல் - பெருமையிற்சிறந்தவன், 319
அணங்கிய - பின்னிவளர்ந்த, 223.
அணுகல் - செல்லுதல், 548.
அதள் - தோல். 419.
அதிர்தல் - நடுங்குதல், 2.
அம் - அழகு, 121, 259.
அமர்ந்த - பொருந்தின, 45.
அமர்ந்து - பொருந்தி, 485, 495; விரும்பி, 560.
அமரா - அமைதி பிறவாத (திருப்தி பிறவாத), 74
அமலுதல் - நெருங்குதல், 219.
அமலை - சோற்றுருண்டை, 441.
அமன்ற நெருங்கி விளைந்தன, 123.
அமை - மூங்கில், 57, 522.


* இதில் தொடர்மொழிகளும் விஷயங்களும் பிறவும் கலந்துவரும்.

அமைகல்லா - அமையாத, 263.
அமைச்சர் (சுற்றம்), 550.
அமைத்து - பொருந்தச்செய்து, 28.
அமைதல் - பொருந்துதல், 38.
அமையம் - சமயம், 273, 375.
அமைவர - பொருந்துதல்வர, 38.
அயரும் - செய்யும், 322.
அயிராது புகுமின் - ஐயுறாமல் போவீராக, 491.
அயில் - வேல், 373.
அயினி - உணவு, 467.
அரக்கு - சாதிலிங்கம், 507.
அரசு நிலை தளர்க்கும் - (போர்செய்ய வந்த) அரசருடைய நிலையைத் தளரச்செய்யும், 378.
அரம் - அராவுதற்குரிய கருவி, 35.
அரமகளிர் - தெய்வப்பெண்கள், 190, 294,
அரலை - குற்றம், கொடுமுறுக்கு, பருக்கைக்கல், 24, விதை, 139.
அரவு - பாம்பு, 504.
அரி - அரிசி, 180; அரித்தெழுதல், 9; அரியப்பட்டதசை, 465; இரேகை, 45; நரம்பு, 9.
அரித்து - கழித்து, 465.
அரிந்து - வெடித்து, 138.
அரிநர் - (நெல்) அறுப்பார், 471.
அரில் - சிறுகாடு, 379.
அருகு - பக்கம், 220.
அருங்கடிவாயில் - அரிய காவலையுடைய கோபுரவாயில், 491.
அருங்கலம் - பெறுதற்கரிய ஆபரணம், 71.
அருணெறி=அருள்நெறி - நூலிற் சொல்லிய வழி, 38.
அருந்தி - உண்டு, 468.
அருந்திறற்கடவுள் - பொறுத்தற்கரிய வலியையுடைய தெய்வம், 538.
அருப்பம் - அரண், 378; அருமை, 19, 222.
அருவி, 174, 278, 294, 554, 581.
அருவிதந்தபழம், 174.
அருவிநுகரும் - அருவியாடும், 294.
அருளுதல் - சொல்லுதல், 38.
அரை-மரத்தின் நடு, 395; வயிறு, 307.
அல் - இராத்திரிப் பொழுது, 158, 256.
அல்கலும் - நாடோறும், 448.
அல்கி - தங்கி, 158, 256.
அலகு - அளவு, 347; பலகறை (சோழி) 234.
அலகைத்தவிர்த்த எண்ணருந்திறத்த, 347.
அலங்குதல் - அசைதல், 144, 161.
அலமருதல் - அசைதல், 119, 133, 219.
அலர் - பூ, 290.
அலரி - சூரியன், 195.
அலைத்த - வருந்தச் செய்த, 497.
அவ்வாய் - அழகிய இடம், 32.
அவண் - அவ்விடம், 53, 158.
அவரை, 110.
அவல்-உண்ணுதற்குரிய அவல், 121; பள்ளம், 198, விளைநிலம், 450.
அவல - தாழ்வரையிலுள்ளன, 346.
அவலம் - கேடு, 285.
அவற்பதம் - அவலிடித்தற்குரிய பக்குவம், 121.
அவிழ் - சோறு, 183.
அவை - சபை, 77.
அழுகை, 301.
அழுந்துபட்டு - (கிழங்கு)தாழவீழ்ந்து, 219; [மதுரை. 342.]
அழுவம் - ஆழம், 528; குழி, 368.
அளியர் - பாதுகாக்கத்தக்கவர், 494.
அளை - குகை, 255, 300, 505.
அளைஇ - கலந்து, 184.
அளைச்செறியுழுவை - குகையிலேநெருங்கிவாழும் புலி. 505.
அற்கு - இராத்திரிகாலத்திலே, 254, 437.
அற்று - அத்தன்மையது, 402.
அற - நீங்க, 250.
அறல்வாழ்கூந்தல், 304.
அறிஞர் - அறிபவர், 287.
அறிமார் - அறிவதற்கு, 394.
அறை - அறுத்தல், பாத்தி, 118; பாறை, 133, 150.
அறைந்தன்ன = அறைந்தால்அன்ன - நறுக்கினாலொத்த, 440.
அறையுற்று - வெட்டுதலுற்று, 118.
அன்மையின் - அல்லாமையால், 148.
அன்று அவண் - அற்றைநாள் அவ்விடத்தே, 158.

அன்ன - ஒத்த.
அனந்தல் - மதம், 173.
அனைத்தும் - அவ்வளவும், 22; எல்லாம், 345, 526, 575.
அஃகிய நுட்பம் - சுருங்கிய அறிவு, 551.
ஆஅல்=ஆல் - கார்த்திகைநட்சத்திரம்; தொகுத்தல்விகாரம்; (ஆரல்) 100.
ஆக்கிய - சமைத்த, 183.
ஆகம் - மார்பு, 31.
ஆகாயம், 558.
ஆகுளிப்பறை - சிறுபறை, 3, 140.
ஆங்கண் - அவ்விடம், 438.
ஆங்கணம் - அவ்விடம், 402.
ஆங்கு-அவ்விடத்து, 427, உவமவுருபு, 52, 98.
ஆசினி - ஈரப்பலா, 139, 526.
ஆட்டுத்தோற்படுக்கை, 419.
ஆடி - நீராடி, 433.
ஆண்மை - ஆளுந்தன்மை, 423.
ஆணிமுடுக்கி - சுள்ளாணிகளை இறுகத்தைத்து, 27.
ஆமான்குழவி-காட்டுப்பசுவின்கன்று, 500
ஆர்த்தென - ஆரவாரித்தாராக, 386.
ஆர்ப்ப - ஆரவாரிக்க, 333.
ஆர்வம் - ஆசை, 184.
ஆரம் - சந்தனம், 520.
ஆரிடர்=அரு + இடர் - பொறுத்தற்கு அரிதாகிய வருத்தம், 368.
ஆரிப்படுகர் - அரிதாய்இறங்கும்வழி. 161.
ஆலம் - ஆலமரம், 268.
ஆலை - கரும்பாலை, 119, 340.
ஆற்ற - வழியிடத்தனவாகிய, 254.
ஆற்றல் - வலி, 73.
ஆற்றினளவும் - வழியினது நன்மையின்அளவும் தீமையினளவும், 67.
ஆறு - வழி, 67, 195.
ஆன் - பசு, 409.
ஆனாது - அமையாமல், 97.
இகந்தனவாயினும் - கடந்தனவாயினும், 86.
இகந்து - இருக்குமிடத்தைக்கடந்து, 262.
இகழுநர் - இகழ்ந்திருப்போர், 73, 482.
இகழுநர்ப்பிணிக்கும்ஆற்றல் - தன்னை இகழ்ந்திருக்கும் பகைவரைச்சுருக்கும் அறிவின்வலி, 73.
இகுத்து - தாழ்த்து, 44; வாசித்து, 391.
இகுதரு - தாழ்ந்துவிழும், 226.
இகுப்ப - ஒலியாநிற்க, 532.
இகுப்பம் - திரட்சி, 367.
இகும், தன்மைப்பன்மை, 400, 424.
இசை - இராகம், 342, 381; ஓசை, 2, 324; புகழ், 60, 70, 388, 540.
இசைபெறுதிருவின்வேந்தவை - சங்கீதத்தை எக்காலமுங்கேட்கின்ற செல்வத்தினையுடைய அரசர்களுடையஅவைக்களம், 39.
இஞ்சி-ஒருவகைக்கிழங்கு,126; மதில், 92.
இஞ்சிசெய்யாப்பாவைவளர்ந்து - இஞ்சியானது செய்யப்படாத பாவைபோன்றகிழங்கு வளரப்பெற்று, 125 - 6.
இட்ட - போகட்ட (போட்ட), 456; - விதைத்த, 98.
- சிறுமை, 16.
ங்கர் - முதலை, 211.
இடம் - சமயம். 386.
இடர் - வருத்தம், 368.
இடன் - இடப்பக்கம், 266.
இடி - இடித்த, 445; பொடி, 512, மேகத்தின் இடி, 310.
இடிச்சுரம் - கல்லையிடித்த அருநிலம், 20.
இடுக்கண் - வருத்துதல், 18.
இடூஉம்=இடும் - கூப்பிடும், 306.
இடை - இடம், 254, 437, 542.
இடைதெரிந்துணரும், 542.
இடையர், கொடியவிலங்குகள் கிட்டாதபடி இரவில் நெருப்பை வளர்த்து வைத்துக்கொண்டிருத்தல். 420.
இணர் - பூங்கொத்து, 159, 305, 428.
இதணம் - பரண், 204.
இதழ் - பூவிதழ், 149, 189, 334.
இம்மென்கடும்பு-இம்மென்னும் ஓசையுண்டாகியசுற்றம்(தாமேஆலாபனஞ்செய்துகொண்டிருப்பவர்), 286.
ர - ஒலிக்க, 533.

இமிழும் - ஒலிக்கும், 7, 486.
இமில் - காளையின் முன்முதுகிலுள்ள கொண்டை, 330.
இமிழ் - ஒலித்தல், முதனிலைத்தொழிற்பெயர், 296; முழங்குதல், 2.
இயக்கம் - வழி, 374.
இயக்கு - செல்லுதல், 571.
இயக்கும் - நடத்தும், 18, 80.
இயங்கல் - போதல், 277.
இயங்கள்தொடுமின் - வாத்தியங்களை வாசிப்பீர், 277.
இயங்குநர் - வழியேபோகிறவர், 18.
இயர்தொடுதல் - வாத்தியங்களைவாசித்தல், 232.
இயம் - வாத்தியம், 232, 269, 277, 296, 365.
இயம்ப - ஒலிப்ப, 348.
இயல் - இயல்பு, 43.
இயவு - வழி, 20, 111, 229, 323.
இயற்கை - இயல்பு, 83.
இயற்றிய - ஆக்கின, 441, 465; பண்

இயைந்து - பொருந்தி, 345.
இரங்குதல் - ஒலித்தல், 324.
இரட்டும் - மாறிக்கூப்பிடும், 141.
இராத்திரியுணவு, 435 - 6.
இரிய - கெட, 208.
இரிவு - கெடுதல், 116.
இரீஇ - இருத்தி, 25; இருந்து, 549.
இரு=இருமை - கருமை, 157, 488; பெருமை, 99, 100, 455.
இருக்கை - இருப்பிடம், 76; இருப்பு, 190; பரப்பு, 583.
இருங்கால்வீ - நீண்டகாம்பையுடையபூ, 265.
இருஞ்சுவல்வாளை - பெரியகழுத்தினையுடையவாளை, 455.
இருந்தலை - கரியதலை, 488.
இரும்பு - அரிவாள், 113,
இரும்பேரொக்கல் - கரியபெரியசுற்றம், 157.
இருமை - கருமை, 246, நீட்சி, 265; பெருமை, 207, 367.
இருவி - தினையரிந்ததாள், 109.
இருவெதிர் - பெரியமூங்கில். 207.
இரை - விலங்கின்உணவு, 90.
இல் - வீடு, 151, 165, 255.

இலங்குதல் - விளங்குதல், 27, 46.
இலஞ்சி - மடு, 228.
இலம் - இல்லாமை, 576; இல்லேம், 552.
இலமெனமலர்ந்தகையராகி - இரந்து வந்தோர்க்கு யாம் இல்லேமென்று கூறி இல்லையென்று மறித்தகையையுடையராகி. 552.
இவ்வனைத்தும் - இவைகளெல்லாம், 345
இவண் - இவ்வுலகம், 541.
இவர்தல் - பரத்தல், 514.
இவரும் - உலாவும், 90.
இழிதரும் - குதிக்கும், 554.
இழிந்தன்ன=இழிந்தாலன்ன - இறங்கினாற்போன்ற, 214.
இழிபு - இறங்கி, 288.
இழுக்கிய - இறந்த, 301.
இழுது - நெய்விழுது, 244, 442.
இழை - ஆபரணம் (இழைக்கப்பெற்றது), 570, நூலிழை, 561.
இழைந்த - உரிஞ்சிய, 248.
இளி - ஒருசுரம்; அது பஞ்சமத்துக்கு மேற்பட்டது, 7.
இறடி - தினை, 169.
இறந்து - கடந்து, 263, 405.
இறாஅ=இறா - முறியாத, 274.
இறாஅல்=இறால் - தேன்கூடு, 525.
இறாயினிர் - வக்கி (வதக்கி), 249.
இறுகுகுலை - (காய்) நெருங்கினகுலை, 132.
இறுத்த - கொடுத்த, 89; முடித்த, 543.
இறும்பு - குறுங்காடு, 205, 271, 407.
இறும்பூது - ஆச்சரியம், 358.
இறுவரை - இற்றமலை, 367.
இறை=இறுத்தல் - கொடுத்தல், 319; தங்குதல், 496.
இறைஞ்சி - வளைந்து, 112, 117.
இறைஞ்சின - வளைந்தன, 144.
இன் - உவமவுருபு, 44, 75, 143, 226, 228, 238, 281, 474, 582.
இன்குரல் - இனியபாட்டு, 536.
இன்குரல்விறலியர் - இனியயாழையுடையவிறலியர், 358.
இன்புறமுரற்கை - இன்பமிகுகின்ற தாளம், 390.
இன்றி - இல்லாமல், 79.

இன்று - இல்லாமல்; எச்சம், 41, 172.
இன்னல் - துன்பம், 374.
இன்னிசை - இனியஓசை, 296.
இன்னிசைநல்லியாழ், 381.
இன்னும்வருவதாகநமக்குஎன - நமக்கு இந்நுகர்ச்சி மேலும் உண்டாவதாக என்றுவிரும்பி, 354.
இனம் - கூட்டம், 55, 408, 472; சாதி, 297; பசு நிரை, 330.
இனி - இப்போது, 94.
இனிதமர்ந்து - நன்றாகப்பொருந்தி, 485.
இனிதினோக்கி - இனிதாகப்பார்த்து, 495, 560.
இனியிர் = இனிமையையுடையிராகுவிர் - மனமகிழ்வீர், 286.
ஈகை - கொடை, 580; பொன், 72.
ஈகைமாரி - பொன்மழை, 72.
ஈண்டி - திரண்டு, கூடி, 345.
ஈண்டுதல் - திரளுதல், 116.
ஈர்எண் - பசியஎள், 106.
ஈர்ங்கழை = ஈரம்கழை - பசியகோல், 207.
உக்கன - சிந்தின, 139.
உக்கு - உதிர்ந்து, 109.
உகளினும் - பாய்ந்தாலும், 237.
உகுத்தென - சிந்த, 148.
உடம்புணர்பு - ஒருமிக்கச்சேரப்பெற்று, 526.
உடற்றுநர் - வருத்துவார், 426.
உடன் - கூட, 346; சேர, 447.
உடன்புணர்ந்து - ஒன்றுசேர்ந்து, 535.
உடும்பு, 508.
உடைக்குங்கரும்பு, 341.
உடைந்த - விண்ட, 198, 432.
உண்டற்கினியபலபாராட்டி, 353.
உண்டற்கினியபழன், 282.
உண்டனிர் - உண்டு, 433.
உண்டி - உணவு, 83.
உண்டோர்மறந்தமைகல்லாப்பழன், 262 - 3.
உண்ணுநர் - உண்பவர், 445.
உண்ணுநர்த்தடுத்த நுண்ணிடி நுவணை, 445.
உணரும் - அறியும், 542.
உணவு, 168 - 169, 171, 174 - 183, 425, 440 - 442, 465.
உணீஇய - உண்ணுதற்கு, 54.
உந்தி - யாழின்உறுப்புக்களுள்ஒன்று, 34.
உந்தூழ் - பெருமூங்கில், 133, [குறிஞ்சி. 65.]
உம், உயர்வுசிறப்பு, 275, 467; எச்சம், 53; எண், 352 - 3.
உம்பல் - யானை, 429; வழியில்தோன்றியவன், 540.
உமிழ் - ஓசை; ஆகுபெயர், 310.
உயர்ந்தோங்கு - உயர்ந்துவளர்ந்த, 41.
உயர்நிலை - உயர்ந்தநிலை, 204.
உயர்நிலைமாக்கல் - உயர்ந்தநிலைமையையுடைய பெரியமலை, 225.
உயர்வுசிறப்பும்மை, 275, 467.
உயரிய - உயர்ந்த, 377.
உயவை - ஒருவகைக்கொடி, 186.
உயிர் - ஓசை, 37, காற்று; யானைக்கைக்கு ஆகுபெயர், 6.
உயிர்செல - உயிர்போக, 191.
உரவு - வலிமை, 211, 326.
உரறுதல் - முழங்குதல், 357.
உரித்தன்று - உரியதன்று, 240.
உரீஇ - உருவி, 24.
உரு - நிறம், 36.
உருப்பு - கொடுமை, 550.
உரும் - இடி, 357.
உரை - புகழ், 93, 376.
உலை - சமைத்தற்கு அடுப்பில்வைத்த பாத்திரத்திற்சேர்த்தநீர், 180.
உலைவிடம் (உலைவு + இடம்) - தோற்றுஓடினசமயம், 386.
உலைவு - உலைதல், முதுகிடுதல், 386.
உவகை - மகிழ்ச்சி, 184, 318.
உவந்த - மகிழ்ந்த, 560.
உழந்த - வருந்தின, நடந்துவந்த, 487.
உழவர் - உழுதலையுடையார், 60.
உழுவை - புலி, 505.
உள்ளி - நினைந்து, 404, 493.
உள்ளினிர் - நினைத்தீராய், 65.
உள்ளீடு - உள்ளேயிட்டுண்பது, 442.
உளர் - உள்ளார், 279.
உளி, பகுதிப்பொருள்விகுதி, 153; [பெரும்பா. 462].
உற - பாய்கையினாலே, 404.
உறையும் - தங்கும், 485.
ஊஉன் = ஊன் - தசை, 146, 148.

ஊகம் - குரங்கு, 208.
ஊமைக்குருளை - வாய்திறவாத (கரடிக்) குட்டி, 501; வாய்திறக்கப்படாத குடத்தை ஊமைத்தசும்பென்பது மரபு,
ஊர், 450.
ஊழ் - முறைமை, 130, 133, 263, 288, 405.
ஊழ்த்து - அழுகி, 180.
ஊழ்மலரொழிமுகை - முறைப்படமலர்தலையொழிந்த அரும்பு, 130.
ஊழிறந்து - முறைமைப்படப்போய், 405.
ஊழுற்றலமருமுந்தூழ் - முற்றுதலுற்றுஅசையும் பெருமூங்கில், 133.
ஊறு - இடையூறு, 41, 284, 372; புண், 332.
எக்கர் - இடுமணல், 556.
எச்சவும்மை, 53.
எண் - எள், 106; ஒன்று முதலிய எண்கள், 347.
எண்கு - கரடி, 501.
எண்ணும்மை 352 - 3.
எண்ணுமிகப்பலவே, 389.
எதிர் கொள - ஏற்றுக்கொள்ள, 496.
எதிரி - ஏற்றுக் கொண்டு, 142.
எதிரிய - எதிர் கொண்ட, 547.
எய் - முள்ளம்பன்றி, 301.
எரியொள்ளிணர் - நெருப்பைப்போலும் பூங்கொத்து, 159.
எருத்து - கழுத்து, 246.
எருது - உழுதற்குரிய எருது, 469.
எருமைக்கடாவின் வெருட்சி, 472 - 3.
எருமைத்தயிர், 523.
எருவைமென்கோல் - கொறுக்காந்தட்டையினது மெல்லிய கோல், 224.
எல் - இராத்திரி, 416.
எல்லரி - சல்லியென்னும் வாத்தியம், 10.
எல்லாம் - உயர்திணைப்பன்மை, 495.
எழவு - எழுதல், 479.
எழில் - அழகு, எழுச்சி, 31, 57, 323.
எழுதரு - தோன்றுகின்ற, 84.
என், 106.
என்றுதல் - இகழுதல், 562.
ஏற்றுக்குறுதலின் = என் தாக்குறுதலின் - என்னை எதிர்ப்படுகையினாலே, 66.
ஏறிந்து - இடந்து, 395, நீக்கி, 441.
ஏஃகம் - வேல், 129, 490.
ஏஃகு - கூர்மை, 300.
ஏசுதல் - இகழுதல், 389, 396.
ஏத்தம் - ஒலி, (ஏக்கம்) 341.
ஏத்தி - புகழ்ந்து, 544.
ஏமம் - இன்பம், பாதுகாப்பு, 306.
ஏர், 60.
ஏவு - அம்பு, 243.
ஏற்ப - ஏற்றுக் கொள்ளும்படி, 39.
ஏற்றகை - யாசித்தகை, 576.
ஏற்றெழுந்து - துயிலுணர்ந்து எழுந்து, 257.
ஏற்றை - ஆணுடும்பு, 508.
ஏறு - இடபம், 330, 408, 573; எருமைக்கடா, 335.
ஏறுடையினம் - ஏற்றையுடைய பசுக்கூட்டம், 408.
ஏனம் - பன்றி, 247.
ஏனல் - தினை, 108.
ஐம்பால் - மகளிர் கூந்தல்; ஐந்து பகுதியாக வனைதற்குரியது, 30.
ஐயவி - வெண்சிறு கடுகு, 123.
ஐவனம் - ஒருவகை நெல், 115.
ஒக்கல் - சுற்றம், 50, 157, 549.
ஒட்டாது - பொருந்தாமல், 397.
ஒரீஇ=ஒருவி - நீங்கி, 202.
ஒருகண்மாக்கிணையென்னும் பறை, 11.
ஒருங்கு - ஒருமிக்க, சேர, 333, 345.
ஒருத்தல் - ஆண்யானை, 297; எருமைக்கடா, 472.
ஒருவிர், 218. [புறநா. 58.]
ஒழுகி - நடந்து, 20.
ஒழுகிய-ஒழுங்குபடக்கிடக்கின்ற, 32.
ஒழுகின - படர்ந்தன, 136; வளர்ந்தன, 106
ஒள்வாள் - ஒள்ளியகத்தி, 489.
ஒன்றி - கூடி, 535.
ஒன்னு - பொருந்தாத, 386, 397.
ஒன்னுத்தெவ்வர் - தன்வலிலைப் பொருந்தாத பகைவர், 386, 397. [பெரும்பா. 419.]
ஓ - ஒழிதல், 475 [திருமுருகு. 3.]

ஓச்சி - அடித்து, 336.
ஓதை - ஓசை, 327, 339, 467.
ஓம்பல் - பாதுகாத்து நீங்கல், 308.
ஓம்பாவள்ளல் - தனக்கென்று ஒரு பொருளையும் பேணுதநன்னன், 400.
ஓம்பி - ஒழித்து, 371; ஒழிந்து, 277; காத்து, 382; நீக்கி, 215, 254; நீங்கி, 256.
ஓம்பினர் - பாதுகாப்போர், 343.
ஓம்பினிர் - பாதுகாத்து, 218.
ஓம்புநர் - பாதுகாப்பவர். 426.
ஓம்புநரல்லதுடற்றுநரில்லை, 426.
ஓம்புமின் - பாதுகாப்பீர், 232, 240.
ஓர்த்து - ஓர்ந்து பார்த்து, 23, 448.
ஓரா - நினையாத, 62.
ஓரி - தேன்முற்றினூற் பிறக்கும் ஒரு வகைக்கரியநிறம், 542. [புறநா. 109.]
ஓவிறந்து - ஒழிவின்றி. 475. [சிலப். நாடு, 109.]
கஞலிய - நெருங்கின, 358.
கட்கின் சேயாறு-கண்ணுக்கினிய சேயாறு, 476, 555.
கட்சி - காடு, 235.
கட்டில் - அரசவுரிமை, சிங்காதனம், 550.
கடக்கும் - வெல்லும், 421, 489.
கடகப்பெட்டியில் ஊனை வைத்துக் கொண்டு செல்லல், 152.
கடந்து - வென்று; எதிர்நின்று அழித்து, 87.
கடம் - காடு, 415.
கடமான் கொழுங்குறை - கடமானினது கொழுவியதசை, 175.
கடல், 483.
கடவது அறிந்த - செய்யக்கடவதையறிந்த, 536.
கடவுள் - தெய்வம், 83, 230, 538.
கடன் - உரிமை, 89, 543.
கடாஅம்=கடாம் - மதம், ஒலி; ஆகுபெயர், 348.
கடாவுறுக்கும் - பிணைத்தடிக்கும், 339.
கடி - கடுமை, 189; காவல், 491; பேய், 22; விளக்கம்: தாளம், 10.
கடிப்பகை - வெண்சிறுகடுகு; பேய்களுக்குப் பகையாகவுள்ளதென்றபடி, 22.
கடு - கடுமரம், 14.
கடுக்கும் - ஒக்கும், 150, 261.
கடுங்கண் - அஞ்சாமை, 325.
கடுப்ப - ஒப்ப, 2, 12, 32, 107, 127, 140, 528.
கடும்பரிக்கடும்பு - கடியசெலவினையுடையசுற்றம், 364
கடும்பறை - கடியவாச்சியம், 236.
கடும்பு - சுற்றம், 159, 286, 364.
கடும்புடனருந்தல், 468.
கடுமரம், 14.
கடுமை, 81; விரைவு, 206, 226, 364, 380, 555.
கடுவரல் - விரைந்துசெல்லல், 555.
கடுவன் - ஆண்குரங்கு, 237.
கடை - காம்பு, 490; தலைவாசல், 529.
கண் - இடம், 99, 252, 257, 276, 349, 441; கணு, 6; வடிவு, 169; வாத்தியத்தில் அடிக்கப்படும் பக்கம், 140, 382, 533.
கண்கூடு - ஒன்றினிடத்தே ஒன்று கூடுதல், 384.
கண்டோர்மருள, 468
கண்டோர்மலைதற்கினியபூ, 282 - 3.
கண்டனெனக்கண்டு - காண்டற்கினியவற்றைக் கண்குளிரக்கண்டு, 352.
கண்ணகல் - இடம்அகன்ற, 14.
கண்ணி - தலையிலணிந்துகொள்ளும் மாலை, 399; 430, 459, 466.
கண்ணிடம் - இடப்பக்கத்துக்கண். 533.
கண்ணுடைக்கும் - கரும்பினின்றும் சாறுகொள்ளும், 341.
கண்ணுடைந்த - இடம்விண்ட, 432.
கண்ணுளர் - கூத்தர், 50.
கண்ணேணி - ஒருவகையேணி, 316.
கண்பு - ஒருவகைக்கோரை, 454.
கண்புதைத்த-இடத்தைமறைத்த, 221
கணம் - கூட்டம், 44.
கணவன் - ஆண்யானை, 308.
கணை - அம்பு, 226; திரட்சி, 380.
கதழ்தல் - விரைதல், 36, 331, 478.
கதழ்ந்துகிளர்உரு - கடுகித்தோன்றுகின்றநிறம், 36.
கதழும் - விரைந்தோடும், 407.
கதிர் - தானியக்கதிர், 112.

கதிர்சினந்தணிந்த அமையம் - சூரியன்வெம்மை ஆறினசமயம், 375.
கதுப்பு - கூந்தல், 44.
கம்பலை - ஓசை, 335.
கமழ்தல் - மணத்தல், 30, 466.
கமழ - மணக்க, 181.
கமழாது - நாறுமல், 249.
கமழும்பால் - இயல்பாகவேமணக்குங்கூந்தல், 30.
கயந்தலை = கய தலை - மெல்லியதலை, 307.
கயம் - ஆழமானகுளம், 47, 20, 259; நீராருதமடு, 213
கயம்புக்கன்னநிழல், 47.
கயமுனி - யானைக்கன்று, 107, 500.
கயமுனிக்குழவி - யானைக்கன்றில் இளையது, 500.
கயவாய் - புகார்முகம்; காவிரி கடலொடுகலக்குமிடம், 528.
கரக்கும்-மறைக்கும்; விழுங்கும், 211.
கரடி, 501.
கரடிகை - ஒருவகைவாத்தியம், 9.
கரந்து - மறைந்து, 199.
கருங்கடையெஃகம் - கரியகாம்பினையுடையவேல், 490.
கருநெய்தற்பூ, 124.
கருப்பூரமரம், 516.
கரும்பு, 119.
கரும்பை ஆலையிற்கொடுத்துச்சாறெடுத்தல், 340 - 341.
கருவிய - தொகுதியையுடைய, 357.
கல் - மலை, 111, 225.
கல்யாறு - கல்லின்மேலேவரும் ஆறு, 324.
கல்லகழ்கிடங்கு - கல்லை அகழ்ந்துஉண்டாக்கிய அகழி, 91,
கல்லாப்பார்ப்பு - தனக்குரியதொழிலையன்றி வேறொன்றையும் கல்லாத (குரங்கின்) குட்டி, 312.
கல்லெறிந்து - கல்லைத்தோண்டி, 395.
கல்லென் - கல்லென்கின்ற, 335.
கல்லென்ஒக்கல் - கல்லென்னும்ஆரவாரத்தையுடைய சுற்றம், 549.
கல்லென்கடம் - கல்லென்னும் ஓசையையுடைய காடு, 415.
கல்லென - கல்லென்னும் ஓசைபட, 207, 276, 321.
கல்லேசுகவலை - (வீரக்) கற்கள் முதுகிட்டுப்போனவரை இகழும் பல வழிகள். 389.
கலப்பன்ன - கலத்தலையொத்த, 512.
கலப்பை - கலங்கள் அல்லது வாத்தியமுட்டுக்களையுடையபை, 13.
கலம் - ஆபரணம், 50, 72, 577; மண்பாண்டம், 474.
கலம்பெறுகண்ணுளர் - பேரணிகலங்களைப் பெறுதற்குரியகூத்தர், 50.
கலவம் - கலாபம்; மயிலின்தோகை, 235.
கலிங்கம் - ஆடை, 561.
கலித்த - செருக்கிவளர்ந்த, 146, 514.
கலித்து - மிக்கு, 14.
கலுழி - நீர்ப்பெருக்கு, 555.
கலை - ஆண்மான், 405; முசுக்கலை (ஒருவகைக்குரங்கின் ஆண்) 292, 315.
கலைதொடுபெரும்பழம் - முசுக்கலை தோண்டின பெரிய (பலாப்) பழம், 292.
கவ்வை - எள்ளுப்பயிரின் இளங்காய், 105.
கவடு - பகுப்பு, 34.
கவண், 206.
கவண்கல், 206.
கவணுமிழ்கடுங்கல், - கவண் கல் உமிழுகின்ற வேகமானகற்கள், 206.
கவர்தல் - அழைத்தல், 510.
கவர்பரிக்கொடுந்தாள் - கைக்கொள்ளும்செலவையுடைய வளைந்ததாள், 502.
கவர்பு - கைக்கொண்டு, 10.
கவர்வு = கவர்தல் - அரிதல், 113.
கவலை - கவர்த்தவழி, 389, 396, 482; கவலைக்கொடி, 128.
கவலைமறுகு - பலகவர்த்தன்மையையுடைய குறுந்தெரு, 482.
கவிகை - கொடுத்துக்கவிந்தகை, 399.
கவிழ்க்கனைத்து - கவிழ்தலோடேதிரண்டு, 117; கவிழ், முதனிலைத்தொழிற்பெயர்.
கவின் - அழகு, 125.
கவைஇய = கவவிய - அகத்திட்ட 34.
கவைக்கதிர் - இரட்டித்தகதிர், 112.

கழறொடி - உழலுந்தொடி, 577. [சிறு பா. 195].
கழி - கம்பு, 438.
கழிதல் - போதல், 254.
கழிப்பி - கழித்து, 539.
கழிமிடைந்தியற்றிய புல்வேய்குரம்பை - கழிகளால் நெருக்கிப்பண்ணியபுல்லால் வேய்ந்த குடில், 438-9.
கழீஇய - கழுவிய, 48.
கழுது - பரண், 243.
கழை - கோல். 119, 180, 207, 341; மூங்கில், 161, 237, 248, 328, 523, 533, 579.
கழைக்கரும்பு-கோலாகியகரும்பு, 119.
கழைபெய்தீந்தயிர்-மூங்கிற்குழாயிலே பெய்துதோய்த்த இனியதயிர், 523.
கழைவளர்தூம்பு-மூங்கிலாகிய, இசைவளரும் பெருவங்கியம், 533.
களங்களிற்கூத்தர்க்குக்கொடுத்தல், 464.
களங்கனி - களாப்பழம், 36.
களம் - நெல்லடிக்குங் களம், 464; வெறியாடுகளம், 150.
களமர் - உழவர்: களத்தில் வேலைசெய்வோர், 469.
களமர் தொழில், 469.
களிற்றுயிர்த் தூம்பு=களிறு உயிர் தூம்பு - யானையின் கைபோலும் நெடுவங்கியம், 6, 533.
களிறு - ஆண்யானை, 129, 211, 260.
களையாப்பூசல் - விலக்கப்படாத ஆரவாரம், 314.
கற்பொறி - கல்லாலாகிய யந்திரம், 194.
கறங்குதல் - ஒலித்தல், 321, 573.
கறி - மிளகு, 521.
கன்று - கொதித்த, 159; யானைக்கன்று, 339.
கனிபொழிகானம் - பழங்களைச்சொரிகின்ற காடு, 54.
கனை - ஆரவாரம் 473; செறிவு, 370.
கனைசெலவு - ஆரவாரிக்குஞ் செலவு, 473.
கனைத்து - திரண்டு, 117.
கா - சோலை, 451, 486.
காஅய்=காய் (காவி) - தோளிற்சுமந்து, 365, 515.
காஞ்சிமரம், 449.
காட்சி - அறிவு, 49.
காட்டாறு, 214.
காட்டுக் கோழி, 510.
காட்டெருமை, 523.
காடுகாத்துறையுங் கானவர், 279.
காடேசுகவலை, 396.
காண்பு - காட்சி, 315.
காணுநர் - பார்ப்போர், 476.
காதல் - விருப்பம், 485.
காந்தள் - ஒருவகைப்பூ, 336, 519.
காப்பு - காவல், 303.
காமர் - விருப்பம், 430.
காய்த்துணர் - காயையுடைய கொத்து, 12, 521.
காய்ந்தன்ன=காய்ந்தால் அன்ன - காய்ந்தால் ஒத்த, 373.
காய - தோளாற் சுமந்த, 13, 155.
காயம் - உறைப்பு, 126.
கார் - கருமை, 359, 362; மழை, 142; மேகம், 483.
கார்கோட்பலவு - கார்காலத்தாலே பழுத்தலையுடைய பலா, 12.
காரி - விஷம், 83.
காரியுண்டிக்கடவுள் - நஞ்சுண்டேசுவரர், 83.
கால் - காம்பு, 265; காற்று, 117, 135.
காலமன்றியு மரம்பயன் கொடுத்தல், 134.
காவற்காடு, 212.
காவிக் கொண்டுவரல், 515.
காவிரி, 527.
காவிரி கடலொடு கலக்குமிடம், 528.
காவுமரம் - தோளாற் சுமக்குமரம், 13, 154.
காழ் - காம்பு, 129; விதை, 174, 338; வைரம், 520.
காழ்மண்டெஃகம் - காம்பிலேதைத்த வேல், 129.
கான் - காடு, 214, 258.
கான்யாறு - காட்டாறு, 214.
கானக்கோழிச் சேவல், 510.
கானம் - காடு, 54, 69, 242, 385, 405, 510, 511.
கானவர் - வேடர், 17, 155, 279, 298, 301, 318.

கானவர் வழிகாட்டல், 284.
கானவரின் நற்குணம், 279 - 286, 422 - 426.
கிடங்கு - அகழி, 91.
கிழங்கு, 425.
கிழவிர் - உரிமையையுடையீர் [கிழமை - உரிமை] 166.
கிழவோன் - உரிமையையுடையோன், 583.
கிளர்தல் - தோன்றுதல், 36.
கிளிகடிமகளிர் - தினைக்கொல்லையிற் கிளியையோட்டுகின்ற மகளிர், 329.
கிளை - சுற்றம், 54, 309, 313.
குட்டியின் மரணத்தால் குரங்கு துன் பமுறுதல். 311 - 4.
குடமலை - குடகமலை, 527.
குடா - வளைவு, 501.
குடாவடி - வளைந்தகால், 501.
குடிஞை - பேராந்தை, 141.
குடைதல் - நீரைக்கையாற்குடைதல், 295.
குண்டு - ஆழம், 213, 220.
குதிரை, 574.
குமிழி, 213, 474.
குயவன் சக்கரம், 474.
குரம்பை - குடிசை, குடில், 439.
குரல் - ஓசை, 23, 269; தானியக் கதிர், 25, 108; பாட்டு, 536; யாழ்; ஆகுபெயர், 358.
குரவைக் கூத்து, 319 - 322.
குரிசில் - பெருமையிற் சிறந்தவன்; நன்னன், 186,
குருளை - [காடிக்]குட்டி, 501.
குரூஉ=குரு - நிறம், 169, 349, 517.
குலவுதல் - பிணைதல், 108.
குவளைப்பூ, 189, 251.
குழல் - புல்லாங்குழல், 8.
குழவி - ஆமான், யானை இவற்றின் குட்டி, 500; மரையான்குட்டி, 506.
குழாம் - கூட்டம், 265.
குழிந்த - ஆழ்ந்த, 91.
குழீஇய=குழுவிய - திரண்ட, 77, 137.
குழைய - வாட, 334.
குளவி - காட்டுமல்லிகை, 334.
குளிர் - அரிவாள், கிளிகடி கருவி. 110.
குறமகள், 183.
குறவர், 203, 275, 320, 333.
குறவரு மருளுங்குன்றம், 275.
குறி - குறித்தல், முதனிலைத்தொழிற் பெயர், 200.
குறிஞ்சி - ஒருவகைப்பண், 359; ஒருவகைப்பூமரம், 334.
குறிஞ்சிபாடி - குறிஞ்சிப் பண்ணைப் பாடி, 359.
குறியவு நெடியவும், ஊழிழிபு, 288.
குறியறிந்து - குறிகளையறிந்து, 267.
குறுதல் - உரலிற்குற்றுதல், 342.
குறுந்தூம்பு - ஒருவகை வாத்தியம், 7.
குறும்பு - சிற்றரண், 318; வலி, 504.
குறுமகளிர் - உலக்கையால் தானியங்களைக் குற்றுமகளிர், 342.
குறை - குறைக்கப்பட்ட தசை, 168, 175, 458.
குறையறை வாராநிவப்பின் - குறைபடுதல் பாத்தியில் உண்டாகாதவளர்ச்சியோடே, 118.
குன்றகச்சிலம்பு=குன்று அகம் சிலம்பு - மலையிடத்தெழும் எதிரொலி, 344.
குன்றம் - மலை, 275.
குன்றாநல்லிசை - குறையாத நல்ல புகழ், 540.
குன்று - மலை, 344, 368, 583.
கூடியத்தன்ன - கூடிய வாச்சியத்தையொத்த, 269.
கூத்தர்ஒக்கலோடுண்ணல், 157, 159.
கூத்தர் தலைவன் பொற்றாமரைப் பூவைச்சூடல், 569.
கூத்தர் மத்தளங்களைச் சுமந்து வழி போதல், 143.
கூப்பிடு - கூப்பிடுதூரம், 421.
கூர் - மிகுதி, 289, 517.
கூர்ங்கற்பாறை - குடுமிக் கூர்ங்கற்களையுடைய பாறை, 378.
கூர்ந்த - மிகுந்த, 245.
கூர்ந்து - மிகுந்து, 292.
கூர்நல்லம்பு, 421.
கூவல் - கிணறு, 366.
கூவை - ஒருவகைக்கிழங்கு, இதன் மேற்பாகம் புதல்வடிவாக இருக்கும், 137; திரள், 422.
கூளியர் - நாடுகாக்கும் வேடர், 422.

கூற்றம் - யமன், 209.
கெழீஇ=கெழுவி - உறவுகொள்ளுகையினாலே, 166; செறிந்து முற்றி, 114; பொருந்தி, 479.
கெழு - பொருந்திய, 278, 570.
கேட்டு - கேட்டற்கினியவற்றைச் செவிகுளிரக் கேட்டு, 352.
கேழ் - நிறம், 309.
கேழல் - பன்றி, 193
கேள்விபோகா - கேள்வி முற்றுப்பெற்ற, 22.
கை, 311; செயல், 315.
கைக்கொள்பு - கைக்கொண்டு, உட்கொண்டு, 287.
கை தொழூஉ - கைகுவித்து, 201.
கை தொழூஉப்பரவி - கை குவித்து வாழ்த்தி, 360; [திருமுருகு. 252.]
கை தோய் வன்ன கார்மழைத் தொழுதி - கை சென்று பிடிக்குந்தன்மையையொத்த அணுகுதலையுடைய கரியமேகத்திரள், 362.
கைபிணி விடாது - கை பிடித்துக் கொள்ளுதலைவிடாமல், 383; [குறிஞ்சி. 177.]
கைபுடையூஉ-கையைக்கொட்டி, 204.
கையுறை=கையுறுத்தல் - காணிக்கை, 500 - 529.
கொட்கும் - சுழன்று திரியும், 274.
கொட்டி - கையாற் கொட்டி, 200
கொடி - படரும் கொடி, 216.
கொடிச்சியர் - வேடர்மகளிர், 304.
கொடியோள் கணவன் - கொடியினையுடையோள் தலைவன். (நன்னன்.) 424.
கொடுந்தாள் - வளைந்த கால், 90.
கொடுமை - வளைவு, 110, 422, 522.
கொடுவரி - புலி; வளைந்த வரிகளையுடையது, 302.
கொடுவில் - வளைந்தவில், 422.
கொடைக்கடன் - கொடுத்தலாகிய உரிமை, 89, 542.
கொடைக்கடனிறுத்த - கொடையாகிய கடனைமுடித்த, 542.
கொடையாற்புகழுண்டாகுமென்பது, 541 - 2. [திருக்குறள். ௨௩௨.]
கொண்டனிர் - கொண்டு, எச்சம், 224, 477.
கொண்மார் - கொள்ளுதற்கு, 338.
கொம்பர் - கவடு; கிளை, 237.
கொய்சுவற்புரவி, 574.
கொய்பதம் - கொய்யும்பக்குவம், 108.
கொல்லையை அழிக்கவந்த யானைகளைக் குரவர் கவண்கல்லால் அடித்துத் துரத்தல், 203 - 6.
கொழித்த - தெள்ளிய, 444.
கொழுநர் - கணவர், 302.
கொள்கை - கோட்பாடு, 64.
கொள்ளை, 317.
கொளீஇ=கொளுவி - உடுத்தி, 562.
கோடியர் - கூத்தர், 143, 236.
கோடு - கொம்பென்னும் வாத்தியம், 5 [பு. வெ கரந்தை. 3]; மரக்கொம்பு, 268; யாழுறுப்பினுள் ஒன்று (தண்டு) 534; யானைத்தந்தம், 154.
கோதை - மாலை, 349
கோல், 223; ஊன்றுகோல், 370, 380.
கோவலர் - இடையர், 333, 409.
கோழி, 510.
கோள் - குலை, 337; கொள்ளுதல், 12, 311.
கோளி - கொண்டது, 268.
கோளியாலம் - பழங்களைக்கொண்டதாகிய ஆலமரம், 268.
கோளுற - பாய, 505.
ஙனம் - இடம், 402.
சந்தனமரம், 520.
சந்து-பலவழிகளும்கூடின சந்தியான இடம், 393.
சமயமிருக்குமண்டபம், 549.
சல்லிகைப்பறை (எல்லரி) 10.
சாயல் - மென்மை, 61.
சாரல் - பக்கமலை, 219; மலைப்பக்கம், 151.
சால் - நிறைந்த, 554
சாலும் - அமையும், 546.
சாறு - திருநாள், 481.
சான்மென = சாலுமென - அமையுமென, 319, 467.
சிலம்பு - ஒலித்தல், முதனிலைத்தொழிற்பெயர், 26; பக்கமலை, 14, 162.
சிலம்புதல் - ஒலித்தல், 344.
சிலை - வில், 274, 406.
சிறந்து - மிகுந்து, 137.

சிறப்பு - தலைமை, 85, 562, 570.
சிறுகுடி - சிறியவூர், 156.
சிறுபறை - ஒருவகைவாத்தியம், 321.
சிறுமை - நோய், 314.
சினம் - கோபம், 261, 326 ; வெம்மை, 375.
சினை - கிளை, 144, 498.
சீர் - அழகு, 570 ; கனம், 13 ; காமரம், (காவடித்தண்டு) 154.
சீர்கெழுசிறப்பு - அழகுபொருந்தின தலைமை, 570.
சீறடி = சிறுஅடி - சிறியஅடி, 43.
சீறியாழ் - சிறியயாழ், 534.
சுகிர்புரிநரம்பு - வடித்து முறுக்கின நரம்பு, 23.
சுட்டினும் - நினைப்பினும், 398.
சுடர்ப்பூ - ஒளியையுடையபூ, 223.
சும்மை - ஆரவாரம், 483.
சுரக்கும் - இடைவிடாது சொரியும், 72 ; சொரியும், 76 ; மாறுமற்கொடுக்கும், 68.
சுரந்தன்ன = சுரந்தால்அன்ன - சொரிந்தாற்போன்ற, 580.
சுரபுன்னை, 181.
சுரம் - அருநிலம், 20, 398 ; வழி, 143.
சுவல் - கழுத்து, 455, 574 ; மேட்டுநிலம், 436.
சுழலும் - சுழன்றுதோன்றும், 474.
சுழிப்பட்டயானை - சுழியில்அகப்பட்டயானை, 325.
சுற்றம் - அமைச்சர் (அரசர்க்குரிய உறுதிச்சுற்றம்), 550 ; சுற்றத்தார், 80, 376 [சுற்றியிருப்பவர்].
சுனை, 104, 251.
சூர் - தெய்வம், 239.
சூழ்ச்சி - ஆராயும்நினைவு, 62.
சூழ்தல் - சுற்றுதல், 409.
சூழி - யானையின்முகபடாம், 228.
செகுத்தல் - போக்கல், 209.
செங்கண்வரால் - சிவந்தகண்ணையுடையவரால்மீன், 457.
செங்காந்தள், 145.
செத்து - கருதி, 146.
செந்நெறிக்கொண்மின் - செவ்வியவழியைப்போவீராக, 258.
செப்பம் - செவ்வியவழி, 160 ; வழி, 197.
செம்மலோய் - தலைமையையுடையோய், 543.
செய்யா - செய்து, 84.
செயலை - அசோகமரம், 160.
செயா = செய்யா - செய்து, 202.
செரு - சண்டை, 163, 186, 356, 529.
செருக்கி - செருக்க, செருக்கும்படி, 244.
செருக்கு - மகிழ்ச்சி, 173.
செல்லாநல்லிசை - கெடாதநல்லபுகழ், 388.
செல்லுதல் - போதல், 394.
செல = செல்ல - பரக்க, 93.
செவ்வீவேங்கை - சிவந்தபூக்களையுடையவேங்கைமரம் ; உதிரவேங்கை, 434.
செறிதல் - நெருங்குதல், 201, 505.
செறிதொடிவிறலியர் - நெருங்கிய வளையல்களையுடையவிறலியர், 201.
செறு - பாத்தி, 123 ; வயல், 460.
சென்றதுநொடியவும்விடான், 545.
சென்று - உயர்ந்து, 34.
சேஎய் = சேய் - முருகக்கடவுள், இங்கே நன்னன், 493.
சேக்கை - படுக்கை, 418.
சேட்கமழும்பூ - சேண்கமழும்பூ, 262.
சேட்புலப்பரிசிலர் - தூரியநிலங்களினிருந்துவந்த கூத்தர் முதலியோர், 492.
சேண் - தூரியநிலம், 243, 262, 492; நெடுந்தூரம், 167, 243, 262, 412, 447, 492.
சேணோன் - நெடுந்தூரத்திலுள்ளான், 243.
சேந்தசெயலை - சிவந்த அசோகமரம், [செம்மை, பகுதி] 160.
சேந்தனிர் - தங்கி, 420 ; தங்கினீர் [சேத்தல் - தங்குதல்], 452.
சேப்பின் - தங்கினால், 443.
சேம்பு, 343.
சேய் = சேய்மை - நெடுமை, 300 ; பிள்ளை, 64.
சேய்த்து - தூரிது [சேய்மை-பகுதி], 487.
சேயரி = செம்மையரி - செவ்வரி, 45.

சேயளைப்பள்ளியெய் - நெடியகுகையாகிய இருப்பிடத்தில்தங்கும் முள்ளம்பன்றி, 300-301.
சேயாறு, 476, 555.
சேர்பு - சேர்ந்து, 33.
சேவல் - ஆண்கோழி, 510; பருந்து, 147.
சேறிர் - செல்வீர்; [செல், பகுதி;] 65.
சேறு - சாறு, 137, 513.
சேனைத்தலைவரோடே கூத்தரையழைப்பல், 547 - 8.
சோர்வு - தப்புதல், 79.
சோலை, 69, 131.
ஞமலி - நாய், 42.
ஞாயிறு - சூரியன், 85, 272, 464.
ஞெகிழி - கடைக்கொள்ளி, 446.
ஞெண்டாடுசெறு - நண்டுகள் ஆடித்திரியும் வயல், 460.
ஞெரேரென - விரைவாக, 240, 340, 460, 579.
தகர் - ஆட்டுக்கிடாய், 414; எண்கால் வருடைக்கிடாய், 503.
தசும்பு - மிடாவென்னும் பாண்டம், 463.
தட்டை - கரடி கைப்பறை, 9, 32.
தட - பெருமை, 63, 577.
தடி - தசைத்துண்டம், 177, 425, 563.
தண்டினர் - நலிந்து, வற்புறுத்தி, 425.
தண்டு - காவடித்தண்டு, 371.
தண்ணுமையை நெல்லறுக்கும்பொழுது கொட்டுதல், 471.
தண்ணென் - தண்ணென்ற 442.
தண்ணென - குளிருகையிலே, 432.
தண்பணைநாடு - தண்ணியமருதநிலத்தையுடைய நாடு, 53.
தணிமார் தணித்தற்கு, 303.
தத்தி - கடந்து, 207.
ததைந்த - நெருங்கின, 530.
தம்பெயர் தம்மொடு கொண்டனர் மாய்ந்தோர், 553.
தம் பெரியோர்களுடைய தொழில் போன்றதொழிலைச் சிறியவர்செய்தல், 336 - 9.
தயிர், 109, 523
தராய் - மேட்டுநிலம், 460.
தரீஇ - தந்து, 71, 425.
தருவனர் - கொண்டுவந்து, 410.
தரூஉம்=தரும் - கொண்டுவரும், 170.
தலை - இடம், 331, 385; முதன்மை, 407.
தலைஇய - பெய்த, 1.
தலைநாள் - முதல்நாள், 305, 565, 581.
தலைநாளன்ன புகலொடு - முதல்நாள் போன்ற விருப்பத்தோடே, 565.
தலையும் - மழையைப் பெய்யாநிற்கும், 233.
தலைவன் பெயரைக் கூறியவுடன் அவன் நாட்டார் பாராட்டல், 163-9.
தலைவனிடத்து அன்பு, 426.
தலைவனுடைய மலையிற் பெய்யுமழையை அவன் கொடைக்கு உவமை கூறல், 579 - 80.
தலைவாய்=வாய்த்தலை - வாய்க்காலின் தலைப்பு, 475.
தவ - மிக, 377.
தவப்பல - மிகப்பல, 372, 385, 398.
தவிர்த்த - ஒழித்த, 347.
தழங்குதல் - முழங்குதல், 310.
தழால் - தழுவுதல், 103 [திருக்குறள், சுற்றந்தழால்.].
தழீஇய=தழுவிய - நன்றென்று சேர்த்துக்கொண்ட, 526.
தழை - மயிலின் தோகை, 5.
தளர்க்கும் - கெடுக்கும், 378; தளரச்செய்யும், 206, 222, 378.
தளி - துளி, 385.
தளிர்களை மரல்நாரால்தொடுத்தமாலை, 430 - 31
தனித்தயானையைப்பிடித்தல், 297-9.
தாஅய்=தாய் - பரந்து, 149.
தாக்கி - முட்டி, 332.
தாக்குறுதல் - எதிர்ப்படுதல், 66.
தாதெருத்ததைந்த முற்றம் - தாதாகிய எருக்கள் நெருங்கிய முற்றம், 530.
தாம் உண்ணவைத்திருந்த பாலையும் பாற்சோற்றையும் பிறருக்குக் கொடுத்தல், 417.
தாய - பரந்த, 290.
தாயம் - உரிமை, நாடு, 551.
தார் - மார்பின்மாலை, 56, முன்படை, 227.

தாரம் - பண்டம், 170, 513.
தாள் - அடி, 139; முயற்சி, 163.
தானம் - [பாண்டில்] 4
திகிரி - (குயவன்) சக்கரம், 474.
திண்டேர் நன்னற்கும் அயினிசான் மென, 467.
திண்மை - வன்மை, 3.
திணை - ஒழுக்கம், 401.
திணைமயக்கம், 330 - 35.
திரங்குதல் - உலர்தல், 431.
திரன் - தொகுதி, 518.
திரியாது - தப்பாமல், 38; வேறுபடாமல், 33.
திரிவு - உறழ்ச்சி, மாறுபாடு, 216.
திரு - 1, 356, 548.
திருநகர்முற்றம் - அரண்மனைவாயில், 548.
திருமழை - செல்வத்தையுண்டாக்கு மழை, 1.
திருவார் மார்பன் - திருமகள் நிறைந்திருந்த மார்பன், 356.
திரை - அலை, 91.
தில்லை, 567.
திலகம் - மஞ்சாடிமரம், 520.
திவவு - வார்க்கட்டு, இது யாழ்நரம்பைக் கட்டுதற்குரியது, 21.
திறம் - கூறுபாடு, 291, 347.
திறல் - வலி, 81, 538.
தினை, 108.
தினைக்கதிர், 112.
தினைக்கொல்லையிற் கிளிகள் வாராமற் குறமகளிர் தட்டையைவைத்துக் கொண்டு ஒலிப்பித்துக் காத்தல், 328 - 9.
தினைகுறல் - தினையை உரலிற்குற்றுதல், 342.
தீங்கழைக்கரும்பு - இனியகோலாகிய கரும்பு, 119.
தீங்குழல் - இனியபுல்லாங்குழல், 8.
தீந்தயிர் - இனியதயிர், 523.
தீம்பழம் - இனியபழம், 337, 513.
தீம்பால் - இனியபால், 409.
தீமை - இனிமை, 119.
தீர்தல் - நீங்குதல், 485.
தீர்ந்த - நீங்கிய, 411.
தீர்வை - தீரிப்பின்னை, 504.
துகள் - கலக்கம், குற்றம்; 250.

துஞ்சி - தூங்கி, 447.
துஞ்சும் - நிலைபெற்றிருக்கும், 477.
துஞ்சுமரம்- விழுந்துகிடக்கின்றமரம், 261.
துடவை - தோட்டம், 122.
துடி - உடுக்கை, 457, 458.
துடுப்பு - ஒருவகைக்கருவி, 336.
துணர் - காய்க்கொத்து, 12, 521.
துணிந்த - தெளிந்த, 250
துணைபுணர்கானவர்- தம்மனைவியரோடுசேர்ந்திருக்கின்ற வேடர், 17.
துதைஇ = துதைந்து - நெருங்கி, 8.
துப்பு - வலி, 59.
துமிய - துண்டமாக, 488.
துய் - ஆரம், [புளியம்பழத்தின் ஓட்டின் உள்ளேயுள்ள ஆர்க்கு.] 178; மெல்லிய தலைமயிர், 418.
துரு - செம்மறியாடு, 217.
துருவை - செம்மறியாடு, 414.
துவலை - திவலை, 363.
துவற்றல் - தூவுதல், 363.
துவன்றி - குவிந்து, 276; நெருங்கி, 313, 346, 526.
துவன்றிய - நெருங்கிய, 51; நிறைந்த, 205.
துவைக்கும் - ஒலிக்கும், 573.
துவைப்பு ஆரவாரம், 117.
துழைஇ = துழாவி - வளைத்து ஆராய்ந்து, 181, 454
துளங்குதகசும்பு - (கள், தன்களிப்பு மிகுதியால்) அசையும் மிடா, 463.
துளங்குதல் - அசைதல், 43, 330, 463.
துளர் - களைக்கொட்டு, 122.
துளி - நீர்த்துளி, 75, 103.
துளை - பத்தலிற்றுளை, 25, 27.
துறுகல் - குண்டுக்கல், 384; நெருங்கின மலை, 131.
துறை - நீர்த்துறை, 280.
துறைபல - சங்கீதமார்க்கங்கள் பல, 40.
துன்னரு-கிட்டுதற்கரிய,[துன்னுதல்-கிட்டுதல்] 59.
துன்னர் - அணுகார், 264.
துனி - வெறுப்பு, 485.
துனைசெலல் - விரைந்து செல்லுதல், 475.
துனைதல் - விரைதல், 55, 391.

துனைமின் - விரையப்போவீர், 391.
தூ - ஊன், 155 ; பரிசுத்தம், 51, 75.
தூஉயன்ன=தூய்அன்ன - வலியத் தூவினால் ஒத்த, 363.
தூங்கி - தொங்கி, 143,
தூங்குதல் - செறிதல், 212.
தூண்டில், 456.
தூம்பு - வங்கியமென்னும் ஒருவகை வாத்தியம், 6, 7, 533.
தூவல் - மழை, 146, 514
தூவற் கலித்த - மழையாலே செருக்கின, 146, 514
தெரிந்துணரும்-ஆராய்ந்தறியும்,542
தெவ்வர் - பகைவர், 86, 386, 397, 488 [தெவ், பகுதி.].
தெற்றி - இறுகக்கட்டி, 438.
தெற - கொல்ல, 301.
தெறுஅ - சுடப்படாத, 272.
தேஎத்து - தேசத்தில், 394.
தேஎம்=தேம் - திசை, 86 273, 364.
தேக்கட்டேறல் - தேனலாக்கின கள்ளின்தெளிவு, 171, 522 [திருமுருகு. 195.]
தேம் - தேன், 317, 399, 428, 466.
தேம்பாய்கண்ணி - தேனொழுகும்மாலை, 399, 466.
தேமாமரம், 138.
தேய்த்த - தேயச்செய்த ; அழித்த, 423.
தேர், 323, 571.
தேர்ந்து - தேடி, 90.
தேர்பு - ஆராய்ந்துநின்று, 274.
தேறல் - தெளிவு, 171, 463, 522.
தேறு - துணிந்துகொள்ளமாட்டாத, 364.
தேன், கிழங்கு, ஊன்வட்டிகளைக்காவிவரல், 152.
தேனலாக்கியகள், 171, 522 [குறிஞ்சி. 155.]
தேனலாக்கினகள்ளை மூங்கிற்குழாயில்வைத்தல், 522.
தொஇ றிணை=தொல்திணை - பழையதாகிய உயர்ந்தஒழுக்கம், 401.
தொகுத்த - திரட்டிவைத்த, 317.
தொடி - ஒருவகைவளை, 577.
தொடித்திரிவு - தொடியினது உறழ்ச்சி, 216.
தொடுத்த - வைத்த, 238.
தொடுத்தவாளியர், 17.
தொடுதல் - தீண்டுதல், 232; தோண்டுதல், 291, 292.
தொடுமின் - வாசிப்பீர், 277.
தொண்டு - ஒன்பது, 21.
தொய்படுதல் - நனைதல், 365.
தொய்யாது - உழாமல், 122.
தொல்லோர்வரவு, 86 - 9.
தொலைஇ = தொலைத்து - அழித்து, 461.
தொலைச்சிய - தொலைத்த, கொன்ற, 176.
தொலையா - கெடாத, 70.
தொழா - தொழுது, வணங்கி, 231.
தொழுதி - இனம், கூட்டம், 116, 362, 499.
தொழூஉ - தொழுது, 201, 360.
தொறும், இடப்பன்மைப்பொருளையுணர்த்துவதோரிடைச்சொல்,109, 127, 185, 328, 340, 379, 450; தொழிற்பன்மை, 295.
தொன்முறைமரபினிர் - பழைய உறவானமக்களைப்போலும் முறைமையினையுடையீராய், 355.
தொன்று - பழமை, 391, 537.
தொன்றொழுகுமரபு - பழமையாகநடக்கின்றமுறைமை, 355, 391, 537.
தோகை - கலாபம் ; மயில், ஆகுபெயர், 44.
தோய், உவமவுருபு, 558.
தோய்வன்ன=தோய்வுஅன்ன - தோய்தலையொத்த, 362
தோய - தீண்ட, 130.
தோரை - மூங்கில், 121.
தோல் - யானை, 88, 377.
தோல்வரைப்பு - யானையணி, 88.
தோற்றரவு, 89.
தோறும், இடப்பன்மையையுணர்த்தும் ஓர்இடைச்சொல், 150.
நகர் - அரண்மனை, 548.
நசை - ஆசை, 60, 411, 545.
நடவை - சிறுவழி, 214, 432.
நம்மனோர்க்கு=நம் அன்னோர்க்கு - நம்மை ஒத்தவர்க்கு, 402.
நயந்தனிர் - விரும்பி, 559.
நரம்பு - தந்தி, 23, 535.

நாலும் - முழங்கும், 161.
நல்க - முகந்துகொடுக்க, 462.
நல்கி - கொடுத்து, 580.
நல்லபொருளைக்கண்டபொழுது தலை வணிகினைத்தல், 319.
நல்லிசைச்சென்றோர்உம்பல் - நல்ல புகழிலேநடந்தோருடைய வழியில் வந்தவன், 540.
நல்லிது - நன்றாக, 80
நல்லேறு - எருமைக்கடா, 335.
நல்வழி - நல்லகாலம், 387.
நவிரமலை, 82, 579.
நவில் - பழகிய, 227.
நவிலுதல் - சொல்லிச்சொல்லி அடிப்படுதல், இடைவிடாமற்பழகுதல், 63, 77, 227 [திருக்குறள், 783.]
நள்ளிருள் = நளி இருள் - செறிந்தஇருள், 195.
நளி - செறிவு, 249.
நளிந்து - செறிந்து, 197.
நற்கு - நன்கு; விகாரம், 392.
நற்புலம் - தங்குகின்றநன்றாகிய இடம், 67.
நறவு - கொல்லாற்சமைத்தகள், 172, 320.
நறவுமகிழ்ந்து - கள்ளையுண்டுமகிழ்ந்து, 172 [மதுரை. 679.].
நறு = நறுமை - நன்மணம், 182, 359, 512, 520.
நறுங்காழாரம் - மணமுள்ளவைரத்தையுடையசந்தனம், 520.
நன்பல - நன்றாகிய பலபொருள்கள், 453.
நன்முகூர்த்தம், 65.
நன்று - ஆக்கம், 62.
நன்னன், 64 [மதுரை. 618.].
நனந்தலை = நனதலை - அகன்றஇடம், 270, 272.
நனி - மிக, 489.
நனிசேய்த்து - மிகவும்தூரித்து, 487.
நனை - அரும்பு, 514.
நாகம் - புன்னை, சுரபுன்னையுமாம், 520.
நாட்செய்த - காலையிலேகுடித்த, 320.
நாட்டம் - கண்; நாடுதற்குக்கருவி, 45.
நாட்டுவளம்பரிசிலையுமறப்பிக்குமென்றல், 187.
நாடுகாணனந்தலை - நாடுகளையெல்லாம் காணலாயிருக்கின்ற அகன்றஇடத்தையுடைய மலை, 270.
நாடுபடுவல்சி - நாட்டில்விளைகின்றஉணவுகள், 68.
நாண்மகிழிருக்கை - நாளோலக்கம், 76.
நாணுடைமறவர், 387.
நாவல்மரம், 135.
நாறு இருமுச்சி - மணக்கின்ற கரிய மயிர்முடி, 182.
நாறு கொடி - மணக்கின்றகொடி, 407.
நிணப்பிளவை - நிணத்தையுடைய பிளக்கப்பட்டதசை, 176.
நிணம் - கொழுப்பு, 176, 244, 563.
நிதியம் - பொருளின்திரள், 477, 575.
நியமம் - கடைத்தெரு, 480.
நிர் - நீர், 231.
நிரை - ஆட்டின்திரள், 416; நிரைத்த, 189; பசுக்கூட்டம், 573; வரிசை, 571.
நிரைசெலல் - நிரைத்துச்செல்லுதல், 240.
நிலந்தின்மருப்பு - மண்தின்றுதேய்ந்த கொம்பு, 245.
நிலவளத்தால் அகாலத்திலும் மரங்கள் பலங்கொடுத்தல், 134.
நிலஞெடு, 192.
நிலை, 204, ?22, 225, 280, 316, 378, 456.
நிலைத்துறை - நிலையானநீர்த்துறை, 280.
நிலைபெய்திட்ட - நிலைபேறுண்டாகக் கூட்டிநட்ட, 316.
நிலையோர் - ஓரிடத்துநிலைபெறநிற்றலையுடையோர், 456.
நிவக்கும் - ஓங்கும், 55.
நிவந்தோங்கும் - மிகஓங்கும், 478.
நிவப்பு - உயர்ச்சி, 20, 51, 92; வளர்ச்சி, 118.
நிழத்தல் - குறையச்செய்தல், 193.
நிழல் - விளக்கம், 88.
நிற்புறஞ்சுற்ற = நின்புறம்சுற்ற - நின்னைப்புறத்தேசூழ, 46.
நிறம் - உரு, 36; மார்பு, 245.
நிறத்தன்ன - நிறத்தினைற்போன்ற, 16.
நிறை - நீர்ப்பெருக்கு, 61.

நினைவினிர் - நினைந்து, 266.
நீங்காச்சுற்றம் - படைத்தலைவர், 376.
நீடல் - தாமதித்தல், 187.
நீண்மொழி - வஞ்சினம், 539.
நீத்தம் - நீர்ப்பெருக்கு, 554.
நீயிர் - நீங்கள், 53.
நீர் - நீர்மை, 35.
நீரகம் - கடல்சூழ்ந்தஉலகு, 81.
நீலம் - நீலமணி, 102.
நீவி - துடைத்து, 393.
நுகம் - நுகத்தடி, 515; வலி, 87.
நுட்பம் - அறிவு, 551.
நுடங்குதல் - அசைதல், 31.
நுண்ணீர் - நுண்ணியதன்மை, 35.
நுண்ணீர்ப்பாசி - நுண்மையானநீர்மையையுடையபாசி, 21.
நுண்ணுருக்குற்ற- கரையஉருக்குதலுற்ற, 4.
நுணங்கு - நுண்மை, 35.
நும்மின் - உங்களுடைய, 285.
நுவணை - தினைமா, 445.
நுவலுதல் - சொல்லுதல், 60.
நுவறிய - அராவின, 35.
நுழை - சிறுவழி, 379; நுட்பம், 561.
நூழிலாட்டி - கொன்றுகுவித்து, 87.
நூறு - நீறு, பொடி, 136, 137.
நூறை - நூற்றைக்கிழங்கு; மலங்குமீன், 515.
நெடுங்கடை - தலைவாசல், 529.
நெடுங்கழை - நெடியமூங்கில், 287.
நெடுநாண்தூண்டில் - நீண்டகயிற்றையுடையதூண்டில், 456.
நெடுமை - நீட்சி, 303.
நெடுவங்கியம்-பெருவங்கியமென்னும்வாத்தியம், 6. 533.
நெடுவரை - நெடியமலை, 315, 554.
நெடுவரையிழிதருமருவி, 554
நெய் - தைலம்; 106; தேன், 525.
நெய்க்கண்வேவை - நெய்க்கண்வெந்தபொரியல், 168.
நெய்தல் - கருநெய்தற்பூ, 124.
நெல்லரிசி, 564.
நெல்லறுப்போர், 471
நெறி - வழி, 16, 38, 202, 223, 241, 246, 316.
நேமி - தேருருள், 238; வட்டம்; ஒக்குஆகுபெயர், 525.
நேர்கொள்நெடுவரை - செம்மையைத்தன்னிடத்தேகொண்டநெடியமலை, 238.
நொடி - மாத்திரை, சொல்லுதல், 11.
நொடிய - சொல்ல, 545.
நொய்யரம் - மெல்லியஅரம், 446
நோக்கம் - அறிவு, 74,
நோன்மை - வன்மை, 163.
நோனு - பொருத, 163, 529.
பஃறோல்=பல்தோல் - பலயானை, 377.
பகர்தல் - விற்றல், 415.
பகன்றைக்கண்ணி - சிவதைக்கொடியின்பூவாலாகியமாலை, 458.
பகனிலை - பகற்பொழுதேநிற்கின்றநிலை, 206, 222.
பகைமையுள்ளவை, 504, 505, 506.
பச்சை-தோல், யாழின் ஒருறுப்பு, 29.
பசும்பொதித் தேறல் - பசியமூங்கிலையாலாக்கின கள்ளின் தெளிவு, 463.
பசை - பற்று; ஒன்றோடொன்றைப் பற்றச் செய்வது, 26.
பட - உண்டாக, 91.
படர்தல் - செல்லுதல், 52.
படர்ந்த - சென்ற, 408; நினைத்த, 64.
படர்ந்தாஅங்கு-படர்ந்தால் ஆங்கு, 51.
படர்ந்திகும் - நினைத்துச் செல்லுகின்றோம், 400 - 424.
படர்மின் - செல்லுமின், 192.
படியோர் - வணங்காதபகைவர், 423.
படின்-சென்றால், 275; தங்கின், 156.
படுக்கை, 419.
படுகர் - வழி, 161.
படுத்துவைத்தன்ன - தளவரிசைசெய்தாற்போன்ற, 15.
படுதல் - உண்டாதல், 21, 56, 248, 348; ஒலித்தல், 532; முழங்குதல், 140.
படை - கலனை (சேணம்) முதலியவை, 574.
பண் - இராகம், 451; ஏழுசுரத்தையுமுடைய இசை, 2.
பண்டங்களை விற்று நெல்லை வாங்கல், 413. [பண்டமாற்று.]
பண்டு - முற்காலம், 392.
பண்ணமைத்து - பண்கள் உண்டாக்கப்பெற்று, 2.

# மலைபடுகடாம்

பண்ணி - சமைத்து, 38; வாசித்து, 470.
பண்ணிய - வாசித்த, 534.
பண்பு - செய்தி, 96.
பணவை - பரண், 298.
பணிவு - தாழுதல், 423.
பணைநாடு - மருதநிலத்தையுடையநாடு, 453.
பத்தர் = பத்தல் - யாழுறுப்பினுளொன்று, 26, 381.
பத்தலிற்றுளை, 25 - 7.
பதம் - உணவு, 157, 252; பக்குவம், 108, 121.
பதலை - ஒருகண்மாக்கிணை யென்னும் பறை, 11.
பதி - ஊர், 411, 479.
பதியெழுவறியாப் பழங்குடி, 479. [சிலப்.]
பயம் - பயன், 47, 264, 278; பயன்படுந்தன்மை, 132.
பயம்பு - குழி, 199.
பயிர் - ஓசை, தழைத்தல், 7.
பயிலுதல் - நெருங்குதல், 271.
பரண், 204, 298.
பரம் - மேல், 7.
பரல் - சுக்கான்கல், 508; பருக்கைக் கல், 198.
பரவி - துதித்து; வரங்கொண்டு, 360.
பரற்றவழுடும்பின் கொடுந்தாளேற்றை, 508.
பராவுதல் - துதித்தல், 230.
பரி - செல்லுதல், 364, 502.
பரிசில், சம்மானம், 186, 187, 581.
பரிசிலர் - கூத்தர் முதலியோர், 492.
பரிசிலர் தங்குதற்கு ஊரில் மன்று செய்வித்தல், 492.
பரிபுலம்பு - 497.
பருகி - குடித்து, 251; நிரம்பவுண்டு, 172.
பருந்துபடக் கடக்கும் - பருந்துகள் படியப்போரை வெல்லும், 489.
பருஉ - பருமை, 168, 216, 252, 516
பருக்கொடி - பருத்தகொடி, 216.
பல்கவர்வளி - பலவாய்க் கவர்த்தகாற்று, 114.
பல்வண்டு - பலசாதிவண்டுகள், 486.
பலம் - பிரயோசனம், 411.
பலர்புறங்கண்டு - பகைவர் பலரையும் முதுகுகண்டு, 71.
பலவுறுதிருமணி - பலவிலைபெற்ற அழகிய மாணிக்கம், 516.
பலாப்பழம், 337, 511.
பலாமரம், 12, 144.
பழங்குடி - பழையகுடிகள், 479.
பழஞ் செருக்கு, 173.
பழவிறன்மூதூர் - பழையவெற்றியையுடையமூதூர், 487.
பழன் - பழம், 263, 281.
பழனம் - மருதநிலம், 454.
பழிச்ச - வாழ்த்த, 201.
பழிச்சிய - வாழ்த்தின, 538.
பழிச்சினிர் - வாழ்த்தி, 360.
பழுது, 153.
பழுநி - முற்றுப்பெற்று, 578.
பழுநிய - முற்றுப்பெற்ற, 95.
பழையர் - கள்விற்கும்வலையர், 459.
பள்ளி - இடைச்சேரி, 451; இருப்பிடம், 300; படுக்கை, 419.
பளிங்கு - கருப்பூரம், 516
பறை - பறத்தற்றொழில், 55; வாத்தியம், 236, 321.
பன்றிகளைப்பிடிக்குங்கற்பொறி, 194;
பன்றித்தசை, 153.
பன்றிப்பறை - பன்றிகளையோட்டுவதற்காகக் கொட்டும்பறை, 344.
பனிக்காலத்தில் விறகெரித்துக்குளிர்காய்தல், 446 - 7.
பனிக்கும் - தலைநடுங்கும், 81, 289. நடுங்கச்செய்யும், 398.
பனித்தல் - நடுங்குதல், 191.
பனிவார்கா - குளிர்ந்தநெடியசோலை, 486.
பனுவல் - எஃகினபஞ்சு, 361.
பாக்கம் - சீறூர், 162.
பாகர் - யானைப்பாகர், 327.
பாசி - பசுமையையுடையது, 221.
பாட்டு - இசைப்பாட்டு, 390.
பாடு - ஓசை, 278.
பாண்டில் - வட்டம்; வெண்கலத்தாளம்; ஆகுபெயர், 4.
பாணர், 40.
பாணி - பாட்டு, 539.
பாம்பு, 199.
பாய்தல் - சொரிதல், 399.

பைய்ந்தென - பாய்ந்தெனை, 129; பா
ய்ந்ததாக, 302, 309, 524.
பாயிருள் - பரந்தஇருட்டு, 84.
பார்ப்பு - குரங்கின்குட்டி, 208; 312;
["பார்ப்புடை மந்தியகாடிறந்தோ
ரே" குறுந். 278]
பாராட்டி - கொண்டாடி, 353.
பால் - பயிர்களின் பசுங்காய்களிற்கட்
டும்பால், 114, பால், 417.
பாவை - பிரதிமை, 125.
பாழ் - ஒன்றுமில்லாமை, 59.
பாறை, 276, 373.
பிடி - கையின்பிடி, 105; பெண்யா
னை, 127, 307.
பிடியேழ் - ஒருகைப்பிடியில் ஏழுகாய்,
105.
பிணங்குதல், 379.
பிணர் - சருச்சரை, 246.
பிணவுநாய் - பெண்ணாய், 177, 563.
பிணவுநாய்முடுக்கியதடி - பெண்ணாய்
ஒடிக்கடித்தஉடும்பின்தசை, 177.
பிணி - பிணித்தல்; முதனிலைத்தொ
ழிற்பெயர், 383.
பிணிக்கும் - சுருக்கும், 73.
பிணித்தல் - கட்டுதல், 381.
பிணிமார் - பிணித்தற்கு, (கட்டுதற்கு),
326.
பிணை - பெண்மான், 404.
பிணையற்கோதை - பிணைத்தலையுடைய
மாலை, 349
பிதிர்வு - பிதிர்ச்சி, சிதறுதல், 109.
பிரசம் - தேனடை, 239.
பிழைப்பு - பிழைத்தல், கெடுதல், 578.
பிளவை - பிளக்கப்பட்டதசை, 176.
பிற்பட = பின்பட - பின்னாக, 357.
பிறங்குதல் - பெருத்தல், 111.
பின்னற - பின்பு, 538.
பின்னியன்ன - பின்னினாலொத்த, 379.
பீலி - மயிலின்கலாபம், 234.
பீலியணிதழை - பீலியாகியஅழகிய
தழை, ௩.
புகனென் - புக்கால்இனை, 4, 47.
புக்கு - புகுந்து, 132, 165, 299.
புகர்முகம் - புள்ளியையுடையமுகம்,
225.
புகல் - விருப்பம், 565.
புகலுதல் - விரும்பித்திரிதல், 69, 239.
புகலும் - புகழ்ந்துசொல்லும், 356.
புகழுநர் - புகழ்பவர், 73.
புகழுநர்க்குநாடுமுதலியனகொடுத்தல்,
73 - 6.
புகழொடுங்கழிகம்வரைந்தநாள், 557.
புகுமின் - புகுவீர், 366, 491.
புட்குரலைக்கேட்டு விடியலையறிந்து
பிரயாணப்படல், 448.
புட்கை போகிய மகார், 253.
புடையுநர் - புடைப்பவர்கள், 328.
புடையூஉ - கொட்டி, 204.
புண்கூர்ந்து - புண்மிகுந்து, 292.
புண்ணரிந்து - புண்ணும்படி வெடி
த்து 138, 292
புணர்பு - புணர்ந்து, 526, 535.
புதவு - அறுகம்புல், 449; தெற்றுவா
யில், 490.
புதுநிறை - புதுப்பெருக்கு, 61.
புதுவது - புதியதாகிய தன்மை, 28,
29, 96.
புதுவிர் - புதியீர், 392; விருந்தாந்
தன்மையையுடையீர், 412.
புதுவோர் - புதியமாந்தர், 288.
புதைத்த - மறைத்த, 221.
புதைய - மறைய, 225.
புயல் - மழை, 120.
புயற்புனிறுபோகிய - மழையால்ஈன்
றணிமை தீர்ந்து முற்றிய, 120.
புரவி - குதிரை, 574.
புரிசை - மதில், 229.
புரிதல் - முறுக்குதல், 23; விரும்பு
தல், 299.
புரை - உயர்ச்சி, 68, 377; ஒப்பு, 92, 110.
புரைதவ உயரிய - உயர்ச்சி மிகஉயர்
ந்த 377.
புல் - அறுகம்புல், 393; புற்கள், 439.
புல்லரை = புற்கென்ற அரை - சிவந்த
அரை, 449.
புல்லாங்குழல், 8.
புலந்து - வெறுத்து, 203.
புலம் - இடம், 67, 392, 492; சொல்
லை, 299.
புலம்பு - வருத்தம், 49, 167, 412.
புலரிவிடியல் - இராக்காலம் நீங்குதலை
யுடைய விடியற்காலம், 448.
புலவர், புலவோர் - அறிவுடையோர்,
72, 576. [புலம் - அறிவு.]

வேரல் - சிறுமூங்கில், 223.
வேல் - வேலாயுதம், 116, 319.
வேவை - வெந்தபொரியல், 168.
வேழம் - யானை, 325, 572
வேள் - சிற்றரசன், 164.
வேளை - நன்னனை, 94.
வேறுபுலம் - வேறிடம், 408.
வேனிழற்புலவோர் - வேற்போரின் விளக்கத்தையுடைய அறிவுடையோர், 88.
வைகறை - விடியற்காலம், 172.
வைகிய - தங்கிய, 99.
வைகினிர் - தங்கினீராய், 196.
வைத்தன்ன - வைத்தால் அன்ன, 15
வைப்பு - ஊர், 95.
வௌவும் - வாங்கிக்கொள்ளும், 369.

---

# பிழையும் திருத்தமும்.

| பக்கம். | வரி. | பிழை. | | திருத்தம். |
|---|---|---|---|---|
| 1 | 4 | விண்ணிதி | ... | விண்ணதி |
| 5 | 35 | ககூரு | ... | கசுரு |
| 13 | 10 | விதவை | ... | மிதவை |
| ,, | 23 | காமர் | ... | காமரு |
| ,, | 24 | மாநா | ... | மானா |
| ,, | 28 | விதவை | ... | மிதவை |
| 25 | 29 | தலைவனெ | ... | தலைவவெ |
| 28 | 28 | அவ்வெ | ... | " அவ்வெ |
| 35 | 10 | முந்தூழ் | ... | உந்தூழ் |
| 36 | 16 | 141 | ... | 144 |
| 39 | 19 | தசையை | ... | தசை |
| 46 | 14 | வெருக்கு | ... | யெருக்கு |
| 53 | 27 | குசலோ | ... | குசேலோ |
| 57 | 7 | கையினாலே | ... | கையிலே |
| 71 | 40 | பெருகு | ... | பெறுகு |
| 77 | 37 | களையுமு | ... | களையு |
| 83 | 15 | தைத | ... | த்தே |
| 84 | 30 | பாலுக்கு | .. | பாலுடைக்கு |
| 88 | 8 | பெருகு | .. | பெறுகு |